[illegible]

[illegible]

[illegible] 2002

D
V211,31'P'2
P02.23.1
224374.

ரியீடு 4-12-2002 Issued 4-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை ஏப்ரல் 22, 2002 – தொகுதி 23 – எண் 1

**Monday the 22nd April, 2002 – Volume 23 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai-600 009**

லை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 22-4-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| *வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-43 |
| *தகவல் கோரல்—* | |
| (அ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான கருத்துரு உருவான வரலாறு | 43-47 |
| (ஆ) வேலூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிப் பாதைச் சாலையை இடித்தல் | 47-48 |
| (இ) சென்னை, எழும்பூர் தொகுதி, கொள்ளைச் சம்பவம் | 48 |
| (ஈ) தாம்பரம் தொகுதி, தொடர் கொள்ளைச் சம்பவம் | 48 |
| *கவன ஈர்ப்பு—* | |
| விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள் | 48-58 |
| *அறிக்கை அளித்தல்—* | |
| பொதுக் கணக்கு குழு | 58 |

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 59

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 59,65

*பேராசிரியர் க. அன்பழகன் — 60,63-64

திரு. ஜி. பழனிசாமி — 60

*திரு. என். நன்மாறன் — 61

திரு. ஜெக. வீரபாண்டியன் — 61

திரு. ஜி.கே. மணி — 61

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 61-62,62-63

*திருமதி டி. யசோதா — 64

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 65,67

திரு. வை. சிவபுண்ணியம் — 65-66

திரு. லா. சந்தானம் — 66

*திரு. துரைமுருகன் — 66,67

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 67,69

திரு. ஜி. பழனிசாமி — 68

திரு. ஜி.கே. மணி — 68

*திரு. என். நன்மாறன் — 68

திரு. ஜெக. வீரபாண்டியன் — 68

*திரு. துரைமுருகன் — 68





பக்கங்க

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை — 69-14

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் — 69,83,86,87,8 90-91, 117,14 141,142,14

திரு. கு. பிச்சாண்டி — 83-86, 87, 8 89-90, 92, 9 94-9

செல்வி சி. கனகதாரா — 97-10

திரு. எம். ராம்குமார் — 107-11

*திரு. அ. இரா. மலையப்பசாமி — 115-12

*திரு. கு. ஜெயக்குமார் — 125-127,129-13

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— — 147-14

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

4. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

224374
நூலகம்

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்று கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்ப சமூக நலன், மதிய சத்துண ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ் இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்று குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியின கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்று முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட் போக்குவரத்து, மோட்டார் வண்டிக சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பா

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்கு கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்க மின்னணுவியல் மற்றும் வணிக வரிக

**17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**

*வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.*

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**

*குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.*

**19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**

*வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**

*கால்நடை பராமரிப்பு.*

**21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.*

**22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.*



**23. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் செய்தித்தாள் கட்டுப்பாடு.*

**25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**26. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**

*மீன்வளம்.*

**27. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## *பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்*

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

*மாற்றுத் தலைவர்கள்**

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு. செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

*முதன்மைச் செயலாளர்*

திரு. செ.சு. ஜானகிராமன்

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

---

*-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல்., | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்., | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ., | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ஜி. அலீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., (விடுப்பு) | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், | .. | தலைமை நிருபர் |



| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி தா. இந்திரா பாய், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என். எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வ.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதிரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வ்ளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் ( |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவா்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறி |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 9, சித்ரபானு — திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 22, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 185, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**185—**

### சாலை மேம்பாடு

***3983—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் ஒன்றியம், இராமசாமியாபுரத்திலிருந்து பாறைக்குளம் வரையுள்ள சாலையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினாவிற்குண்டான விடை தற்சமயம் இல்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நெல்லை மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியத்திலே ஓர் இல்ல நிகழ்ச்சிக்கு நான் சென்றபோது— இராமசாமியாபுரத்திலிருந்து பாறைக்குளம் வரை ரோடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்த இல்ல நிகழ்ச்சிக்குச் சென்றபோது, பொதுமக்கள் எல்லாம் இந்தச் சாலையைச் செப்பனிட வேண்டும். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு வந்துதான் இதைச் செய்ய வேண்டுமென்று என்னிடம் முறையிட்டார்கள். சுமார் 5 ஆயிரம் பேர் இராமசாமியாபுரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலையை இந்த ஆண்டே செப்பனிட்டால்,—அது முக்கியத்துவமான சாலை—பொதுமக்களுக்கு அத்தியாவசியமாக சென்று வருவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு இந்த ஆண்டிலேயே அதைச் செய்து தர முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, இது வாசுதேவநல்லூர் பற்றியது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலை கிலோமீட்டர் 0/0-7/0 நீளம் கொண்ட மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையைச் சீரமைக்க தோராயமாக ரூ. 35 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயலாக்கப்பட்டு வரும் அரசு திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. வருமாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 186, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 ஏப்ரல் 22]

**186—**

## விளையாட்டு உள்ளரங்கம்

***16449—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் விளையாட்டு உள்ளரங்கம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவையில் விளையாட்டரங்கம் கட்ட தகுந்த இடம் கிடைக்கவில்லை. தகுந்த இடம் கிடைத்தபின் விளையாட்டரங்கம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் விளையாட்டரங்கங்களிலே விளையாடக்கூடிய சிறகுப் பந்து—Table Tennis, Tennis—போன்ற விளையாட்டுகளிலே ஆர்வம் உள்ள இளைஞர்கள் ஏராளமாக கோவையிலே இருக்கின்றார்கள். அவர்கள் அதிலே பயிற்சி பெற்று தங்களுடைய திறமையை வெளிப்படுத்துவதற்கு சொந்தமாக செலவு செய்து பயில வேண்டிய நிலைமையிலே இருக்கின்றார்கள். எனவே, அவர்களை ஊக்குவிப்பதற்காக— கோவையிலே பல இடங்கள் இருக்கின்றன. கோவை அரசினர் கலைக் கல்லூரியினுடைய வளாகத்திலே இதைக் கட்டுவதாக அரசு தீர்மானித்திருந்தது. அங்கு இல்லையென்றாலும்கூட— கோவை சிறைச்சாலை வளாகத்திலே 190 ஏக்கர் இடம் இருக்கிறது. அங்குள்ள காலி இடத்திலே இந்த விளையாட்டு உள்ளரங்கம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களெல்லாம் புரட்சித் தலைவி அரசால் 1991-96-க்குட்பட்ட காலங்களிலே செய்யப்பட்டன. அதேபோல, மீண்டும் அரசானது பொறுப்பேற்ற உடனேயே இந்த விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம்

கொடுத்து பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள மாணவர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கு நல்லதொரு பயிற்சி தந்து அதன்மூலமாக அவர்களை சிறந்த விளையாட்டு வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் உருவாக்குவது இந்த அரசினுடைய கொள்கையாகும். ஆகவே இடம் கிடைத்தால் செய்வதாக நாம் சொல்லியிருக்கின்றோம். கோவை மாநகராட்சியிலே ஒரு தீர்மானம் போட்டிருக்கின்றார்கள். அந்தத் தீர்மானமானது 2.23 ஏக்கர் நிலத்தை ரங்கநாதபுரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், விளையாட்டுத் திடலைத் தருவதற்காக ஒரு தீர்மானம் போட்டிருக்கின்றார்கள். அவர்கள் அதற்கு வேண்டிய பணத்தையும் கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக அரசானது பல திட்டங்களை வகுக்கும்போது நிலத்தை அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் இலவசமாகக் கொடுக்க வந்தால் நன்றாக இருக்கும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு. ஒரு பள்ளி வர வேண்டுமென்றால்கூட அந்தப் பொதுமக்கள் நிலம் தருகின்றார்கள். கிராமப்புற மக்களே 5 ஏக்கர் நிலம், 10 ஏக்கர் நிலத்தைத் தந்து ஒரு கல்வி நிறுவனத்தைத் தருகின்றார்கள். ஆகவே மாநகராட்சியானது ஆர்வத்துடன் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கின்றார்கள். இருந்தாலும் அதற்குப் பணம் கேட்பதைக் காட்டிலும், அந்த நிலத்தை அரசுக்கு இலவசமாகக் கொடுத்தார்கள் என்றால் மத்திய அரசினுடைய மற்ற உதவியுடனும் தமிழக அரசும் சேர்ந்து மற்ற வழியிலும் பணத்தைத் திரட்டி நல்லதொரு விளையாட்டு உள்ளரங்கத்தையும்— நீச்சல் குளம் வேண்டுமென்றுகூட கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்—அதையும் கட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அந்த நிலத்தை மட்டும் இலவசமாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தார்கள் என்றால் அது நன்றாக இருக்குமென்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தை அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட அதற்குரிய சந்தை விலையைப் பெற்றுக் கொண்டுதான் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறது. எனவே, அது இயலுமா என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட கோவை சிறைச்சாலைக்கு வெளியிலே ஏராளமான



காலியிடங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. எனவே, அந்த இடத்தை இந்த விளையாட்டு உள்ளரங்கிற்கு அரசு பயன்படுத்துமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை என்று சொல்லியிருக்கிற பகுதியில் விளையாட்டு அரங்கங்கள் மற்றவை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார். அங்கு செக்யூரிட்டியைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தைப் பெறுவதற்கு—அங்கு பிரச்சினைகள் இல்லாமல் இருக்குமென்றால்—அது என்ன என்பதை அரசானது சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள் விளையாட்டரங்கம் என்பது கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீண்டகால கோரிக்கை. கோவை மாநகராட்சி 15, 20 இலட்சம் ஜனங்கள் வாழ்கின்ற ஒரு பெரிய நகரம். ஆகவே, அவசியம் தேவைப்படுகிறது. அமைச்சர் சொல்லியிருக்கின்ற அடிப்படையிலே இடத்தை ஏற்பாடு செய்து கொடுத்தால், அரசு கட்டுவதற்குத் தயார் என்று சொன்னால், ஏற்கெனவே, சொல்லப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தில் இருக்கக்கூடிய அரசு கலைக் கல்லூரி இடம், அதேபோல் இப்போது இன்டெக் தொழில் வளாகம் கட்டப்பட்டிருக்கக்கூடிய இடத்தில் காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே அரசும் கல்வி இலாகாவும் முயற்சி பண்ணினால் கட்டாயம் அதை வாங்கமுடியும்; கட்டித் தரவும் முடியும். அது அல்லாமல் மாநகராட்சியோ அல்லது தனியார் நிலங்களோ வேண்டுமென்று சொன்னால் அதற்கும் அரசு நிதியில் என்ன முயற்சி எடுக்கிறோமோ அதைப் பொறுத்துதான் அது நடைபெறும். அதைத் திரும்பவும் எங்களிடமே திருப்பித் தள்ளுகிற மாதிரி அமைச்சர் அவர்களுடைய பதில் இருக்க வேண்டாம். ஆகவே, அரசு இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று நானும், திரு. வி.கே. லட்சுமணன் கோரிக்கையை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசானது வெளிப்படையாக சில திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது. இதிலே எந்த ஒரு கண்ணோட்டமும் சொல்லப்படவில்லை. பொதுவாக அரசுக்கு சில திட்டங்கள் வரும்போது

பொதுமக்கள் முன்வந்து அந்த சில திட்டங்கள் வேண்டுமென்று சொல்லும்போது, நிலம் போன்றவற்றைக் கொடுக்க முன்வருகின்றார்கள். அந்த அடிப்படையில் மாநகராட்சி தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. ஆகவே அந்த மாநகராட்சியானது அதைக் கொடுப்பதற்கு முன்வந்தால் மிகவும் நன்றாக இருக்குமென்ற கருத்தை வெளிப்படுத்தினேனே ஒழிய, நிலம் கொடுத்தால்தான் செய்ய வேண்டுமென்று திட்டம் கிடையாது. இப்போது இருக்கும் நிதி நெருக்கடியின் காரணமாக சில திட்டங்களைச் செய்வதற்கு அந்தப் பகுதியிலும் எதிர்த் தரப்பிலும், சிலர் ஒத்துழைத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதுதான் என் கருத்தாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இலவசமாக இடம் கொடுத்தால் உள் விளையாட்டரங்கம் அமைப்பதற்கு ஏதுவாக இருக்குமென்று சொன்னார்கள். கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட பொள்ளாச்சி நகரத்திலே நகராட்சிக்குச் சொந்தமான 5 ஏக்கர் இடத்தை இலவசமாகக் கொடுத்தால். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி நகரத்திலே கோவை விளையாட்டு அரங்கம் எப்படிக் கட்ட முடியும்?

**திரு. வி. ஜெயராமன்:** கோவை என்பதும் பொள்ளாச்சி என்பதும் பிரிக்க முடியாதது. ஒன்றோடொன்று இரண்டறக் கலந்தது. ஆகவே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் தனித்தனி ஊர்.

வினா எண் 187, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**187—**

**சட்டக் கல்லூரி**

***3670—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு நகரில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியானது வேலூருக்குப் பக்கத்தில் அமைந்து இருப்பதாலும், அப்பகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும், இப்பகுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லூரி அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்வித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தற்போது, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. Bar Council of India-வின் சட்ட விதியின்படி Section B(1)-ன்படி "A Law College shall be located at a place where there is atleast a district Court or Circuit District Court or within such distance thereof as the Bar Council of India permits" என்றிருக்கிறது. எனவே, மாவட்ட நீதிமன்றம் இல்லாத பேரணாம்பட்டு என்ற இடத்தில் சட்டக் கல்லூரி அமைத்திட வாய்ப்பே இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 188, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**188—**

**உயர்கோபுர விளக்குகள்**

***10355—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 22

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப்பாதையிலுள்ள சாலை சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணமாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப்பாதையிலுள்ள சாலை சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

முற்பகல் 10-10

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரிலே பல உயர்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பௌர்ணமி தினத்திலே பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மலையைச் சுற்றுவதற்காக வருகிறார்கள். அவ்வாறு வருகின்ற நேரத்திலே அவர்களுக்கு வசதியாக மலையைச் சுற்றும் பாதையிலே இப்படிப்பட்ட உயர்கோபுர விளக்குகளை அமைத்தால், வருகின்ற பக்தர்களுக்கு வசதியாக இருக்கும். இன்றைக்கு திருப்பதியைப் போல் திருவண்ணாமலை நகர் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வரக்கூடிய தலமாக மாறியிருக்கின்ற காரணத்தால், அதிலேயும் மலை சுற்றுவதுதான் முதல் இடமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அதற்கு முதலிடம் கொடுத்து, அப்படி அதிக அளவிலே மக்கள் கூடுகின்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மலைப் பாதையிலுள்ள கிரிவலப் பாதைச் சாலைச் சந்திப்புகளில் உயர்கோபுர விளக்குகள் —Flag Mast Light— என்று சொல்லக்கூடிய அந்த உயர்ந்த கோபுர விளக்குகள் அமைக்கக்கூடிய அளவிற்கு தற்சமயம் உபயதாரர்கள் மூலமாக 148 சோடியம் ஆவி விளக்குகள் 11-12-1997 ஆம் தேதியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கின்றன. கிரிவலப் பாதை அமைந்துள்ள இடம் கோயிலின் பெயரில் பட்டா இல்லை. 14 கிலோ மீட்டர் தூரம் 5 பஞ்சாயத்துகளுக்கும், திருவண்ணாமலை நகராட்சிக்கும் தொடர்புடைய எல்லையாகும். இவை யாவும் அந்தந்த ஊராட்சிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2002 ஏப்ரல் 22]

அதோடு மட்டுமல்லாமல், ஆணாய்பிறந்தான் ஊராட்சி, அந்தியந்தல் ஊராட்சி, அடிமண்ணாமலை ஊராட்சி, வேங்கைக்கல் ஊராட்சி போன்ற பகுதிகளிலே நன்கொடையாளர்களைக் கொண்டு, பஞ்சாயத்து மூலமாகவும் 193 சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே தனியாக அதற்கு இப்போது அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் மூலமாக அதற்கு விளக்குகள் போடப்பட்டிருப்பது உண்மை. ஆனாலும் இன்றைக்கு அதனுடைய மின்சாரக் கட்டணத்தையெல்லாம் அந்த ஊராட்சிகள் கட்டமுடியாமல் மின்சார விளக்குகள் எரியமுடியாத ஒரு நிலை இருக்கிறது. கோயிலிலே அதிக அளவு வருமானம் வந்து 3 கோடி ரூபாய்க்கு மேல் டெபாசிட் உள்ள ஒரு கோயிலாக இன்றைக்கு அந்தக் கோயிலினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்து சமய அறநிலையத் துறை இப்படிப்பட்ட வருமானம் வரக்கூடிய கோயிலிலாவது மக்களின் அடிப்படைத் தேவைகளை அதிலே இருக்கின்ற நிதியிலிருந்து செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பௌர்ணமி நிலவிலேதானே நடக்கிறார்கள். பிறகு எதற்கு விளக்கு? (சிரிப்பு)

வினா எண் 189, திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**189—**

### மருத்துவமனையில் வசதி

***5209—திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 22

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தற்போது படுக்கை வசதி எண்ணிக்கை 166ஆக உள்ளதை 400ஆக உயர்த்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்த அரசு நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தற்போது 166ஆக உள்ள படுக்கை வசதியை 400ஆக உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்கி என்னுடைய கேள்விக்கான பதிலை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். உடுமலைப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளிகள் அதிகமாக வருகின்றனர். மகப்பேறு நோயாளிகளும் அதிகமாக வருகின்றனர். தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அரசு அதிகப்படுத்தித் தர முன்வருமா? அதுவும் நடப்பாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்துதர முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் எங்களுடைய பொங்கலூர் தொகுதியிலே அரசுக்குச் செலுத்த வேண்டிய 10,000 ரூபாயைக் கட்டி 2 ஏக்கர் நிலமும் கொடுத்திருக்கின்றோம். ஆகவே ஆரம்ப சுகாதார நிலையம் மலையடிப்பாளையம் கிராமத்திலே அமைத்துக் கொடுக்க நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளோடு, ஆசியோடு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருமை அண்ணன் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையிலே 400 படுக்கைகளாக உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லையென்றுதான் சொன்னேனே தவிர, அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே படுக்கை வசதியை நாங்கள் உயர்த்த மாட்டோம் என்று சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு உள்நோயாளிகளாக



2002 ஏப்ரல் 22]

தினந்தோறும் 215 பேர் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால், தற்போது இருக்கிற படுக்கையின் எண்ணிக்கை 166 மட்டும்தான். எனவே, உயர்ந்திருக்கிற உள் நோயாளிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் படுக்கை வசதி கூட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலேயுள்ள அரசு மருத்துவமனையிலே உள் நோயாளிகள் அதிகமாக வந்து செல்கின்றார்கள். தினந்தோறும் 215 என்பது குறைவு, அதிகமான உள் நோயாளிகள் வந்து செல்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோதுகூட அங்கே தரையிலே படுத்து இருந்ததைப் பார்த்தார்கள். ஆகவே, வெளி நோயாளிகளும், தினந்தோறும் 1,500-க்கு மேல் வருகிறார்கள். மகப்பேறு மருத்துவ அறுவை சிகிச்சையானது கோவை மாவட்டத்திலேயே 12 சதவிகிதத்திற்கும் அதிகமாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதேபோல வெளி நோயாளிகளும் அதிகமாக வருகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே படுக்கை வசதியை—உள் நோயாளிகளுக்கும், மகப்பேறு சம்பந்தப்பட்டவர்களுக்கும் அந்தப் படுக்கை வசதியை—அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் படுக்கை எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல நம்முடைய அரசானது டாக்டர்களை நியமனம் செய்கிறதா என்கிற ஒரு கேள்வியையும் எழுப்பி— அங்கே பணிபுரிகின்ற டாக்டர்கள், கண் டாக்டர், தொண்டை டாக்டர் போன்ற டாக்டர்கள் தொடர் விடுப்பிலே சென்றுள்ளார்கள். அதனால் அங்கே உள்ள நோயாளிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. அதை நம்முடைய அரசு கவனத்திலே கொண்டு— அங்கே நோயாளிகளுக்கு படுக்கை வசதியை அதிகப்படுத்துவதற்கும், டாக்டர்களை நியமிப்பதற்கும் ஆவன செய்ய முடியுமா? செய்து தருவார்களா என்று நம்முடைய அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை படுக்கைகளுக்கு இத்தனை டாக்டர்கள்தான் இருக்க வேண்டுமென்ற strict-ஆன Rule-ஐயோ Norms-ஐயோ நாம் கடைப்பிடிப்பதில்லை. இருந்தாலும் மருத்துவக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறபோது Medical Council of India ஓர் இலக்கை நிர்ணயித்து இருக்கிறது. அதாவது 10 படுக்கைகளுக்கு ஒரு டாக்டர் என்றும், 8 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்றும் ஓர் இலக்கை நிர்ணயித்திருக்கிறது. இருந்தாலும் நிதி வசதிக்கு ஏற்ப படுக்கை வசதிகள் கூடுதலாக ஆக்கப்படுகிறபோது அதற்குரிய வகையிலே டாக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே 60 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவப் பிரிவுக்கும், பெண்கள் பகுதி மருத்துவப் பிரிவுக்கும் முன்மொழிவுகளை அனுப்பச் சொல்லி அந்தப் பகுதியினுடைய இணை இயக்குநர் அரசாலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த முன்மொழிவு கிடைக்கப்பெற்றவுடன் கூடுதலாக படுக்கை வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் அப்படி கூடுதலாக படுக்கை வசதியைச் செய்து கொடுக்கிறபோது அதற்கேற்ப அங்கே கூடுதலாக டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆகு. முருகேசன்.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகேசன், உங்களுடைய தொகுதி பற்றியதற்கு எல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். திரு. ப.வெ. தாமோதிரன்.

**திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளோடு, ஆசியோடு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்கள் நல்ல பல காரியங்களை எங்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல இந்த மாமன்றத்திலே 3 தாமோதரன்கள் இருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுடைய பெயருக்கு முன்னால் எங்களுடைய



2002 ஏப்ரல் 22]

தொகுதியைச் சேர்த்துச் சொல்ல வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சேர்த்துக் கொண்டீர்களேயானால் உங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு அடையாளம் எல்லாம் நன்றாகத் தெரிகிறது. (சிரிப்பு)

வினா எண் 190, திரு. ப. அரசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**190—**

**ஒன்றியங்களைப் பிரித்தல்**

***5946—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஆகிய ஒன்றியங்களைப் பிரித்து முறையே, கீரமங்கலம், நாகுடி என்று புதிய ஒன்றியங்கள் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஆகிய ஒன்றியங்களைப் பிரித்து முறையே கீரமங்கலம், நாகுடி என்று புதிய ஊராட்சி ஒன்றியங்கள் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவரங்குளம் ஒன்றியம் 26 ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட ஒன்றியமாகும். அதைப்போல அறந்தாங்கியும் 26 ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட பகுதி ஆகும். ஏற்கெனவே, தமிழகத்தில் 13, 14 ஒன்றியக் கவுன்சிலர்களைக் கொண்ட பகுதிகளெல்லாம் தனி ஒன்றியங்களாக இயங்குகிறபோது, இந்த இரண்டு ஒன்றியங்களையும்.....

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், 58, 59 எல்லாம் இருக்கிறதே? (சிரிப்பு).

**திரு. ப. அரசன்:** தலைவர் அவர்களே, அதையும் பிரிக்க வேண்டும். எனவே இந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரிப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கறிவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது புதுக்கோட்டை மாவட்டம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** அவ்வாறு தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்பு ஒரு ஊராட்சியையோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தையோ பிரிப்பது என்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து தேர்தல் நடத்துகின்ற சமயத்தில், இன்னும் 4½ ஆண்டு உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் இருக்கிறது. அடுத்து வருகின்ற உள்ளாட்சித் தேர்தலுக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பு, இப்படிப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கின்றபோது, பிரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்டு அரசுக்கு வருகின்றபோது, அதைப் பிரித்தல் தொடர்பாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வி இன்னும் 4 வருடங்கள் கழித்துக் கேளுங்கள். அப்புறம் சொல்வார்கள்.

வினா எண் 191, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



.002 ஏப்ரல் 22]

**91—**

**பணியாளர்கள் தேர்வு**

***9221—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் ுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு பிடையளிப்பாரா—

(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களை தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் பழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பணியாளர்களை தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பணியாளர்களை நியமனம் செய்கிற நேரத்திலே ஒரு வரையறையில்லாமல் போய்விடுகிறது. அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய வரவு எவ்வளவு; அல்லது எவ்வளவு பணியாளர்கள் தேவை என்று வரையறையில்லாமல் கூட்டுறவு வங்கிகளிலே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் விருப்பத்திற்கேற்ப பணியாளர்களை நியமனம் செய்துகொள்கிறார்கள். பிறகு ஆடிட் வருகின்ற நேரத்திலே அல்லது சில நாட்கள் கழித்து, அவர்களையெல்லாம் பணி நீக்கம் செய்யப்படக்கூடிய நிலை எல்லாம் வருகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் மனதிலே வைத்து நம்முடைய

[2002 ஏப்ரல் 2.

அரசு ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு எத்தனை பணியாளர்கள் தேவை என்று எப்ப வரைமுறைப்படுத்தப்படுகிறது? அவர்களை நியமனம் செய்வதற் ஏதாவது விதிமுறைகள் விதிக்கப்படுகின்றனவா? அல்லது நம்முடை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலமாகத் தேர் செய்யப்பட உள்ளதா என்பதையும், இதை அரசு வரைமுறைப்படுத்தும என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இதுபோன்ற நியமனங்களெல்லாம் ஒரு வரைமுறை இல்லாம நடந்ததைத்தான் ஏற்கெனவே உங்களுடைய கவனத்திற்குக் கொண் வரப்பட்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கும் நியமனம் செய்வதிலே சில வரைமுறைகள், சி விதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையிலே இந்த அர அமைந்ததற்குப் பின்னாலே இப்போது ஒரு புதிய G.O.-வினை இந் அரசு போட்டு, 20-9-2001 அன்றைக்கு, 1:10 என்ற அளவில் பணியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத்தா தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு ஓர் உறுதியா உத்தரவும் கொடுத்தது. அதனடிப்படையிலே, வேலையிடங்க காலியாகிறபோது அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பட்டியலைப் பெற்று அந்த தகுதியின் அடிப்படையிலே பணி நியமனங்கள் நடைபெற ஏற்பா செய்யப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமீபத்திலே, இந்த வேலை நியமன சம்பந்தமாக ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த உத்தரவு வருவதற்கு முன்னா 3 விதமான பணி நியமனங்கள் நடந்திருக்கின்றன. Employmer Exchange மூலமாகவும் எடுத்திருக்கின்றார்கள்; தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மூலமாகவும் எடுத்திருக்கின்றார்கள்; தனி அதிகாரிக மூலமாகவும் எடுத்திருக்கின்றார்கள். எனவே அந்த 3 முறைகளையு ஒருமுகப்படுத்தாமல் இன்னும் நாம் அதிகப்படியான பணியாளர்கள எடுக்கின்றபோது இந்தச் சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன



2002 ஏப்ரல் 22]

இதற்கிடையில் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. எனவே ஒரு கூட்டுறவுத் துறைக்கு எந்த அளவிற்குப் பணியாளர்கள் வேண்டுமென்பதை நிர்ணயம் செய்தபின், அவர்களை நிரந்தரப் படுத்தியபிறகு, அதற்கு மேலும் தேவையானால் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலமாக எடுத்துக்கொள்வதுதான் பிரச்சினைகள் வராமல் இருப்பதற்கு ஏதுவாகும். அந்த அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படிப்பட்ட முறையற்ற பணி நியமனங்களை நீக்குவதற்காகத்தான், அதை ஒழுங்குபடுத்துவதற்குத்தான் 1:10 என்ற G.O. இப்போது புதியதாக இந்த அரசாணை போடப்பட்டு இருக்கிறது. முறையற்ற பணி நியமனங்களை நீக்குவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த 1:10 என்ற அந்த G.O. அடிப்படையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்துதான் பட்டியலைப் பெற்று பணி நியமனம் செய்ய வேண்டும் என்ற இந்த உத்தரவினை அமல்படுத்துகிறபோது, ஏற்கெனவே இருந்த குழப்பங்களை எல்லாம் போக்கிவிட்டுதான் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது முறையற்ற நியமனங்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த முறையற்ற நியமனங்கள் என்பதற்கு அடிப்படைக் காரணங்கள் என்னென்ன என்பதை விளக்குவதோடு இன்றைக்கு முறையற்ற நியமனங்கள் செய்யப்பட்ட சிலர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையற்ற நியமனங்கள் என்பதற்கு, அந்தந்த சொசைட்டியினுடைய குழுக்கள், தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டபோது, அவர்கள் எந்தவித விதிமுறைகளையும் பயன்படுத்தாமல், பார்க்காமல் தங்களுக்கு வேண்டியவர்களை பணி நியமனம் செய்வதுதான் முறையற்ற

[2002 ஏப்ரல் 22

நியமனங்கள் என்ற அடிப்படையிலே வருகிறது. அவற்றையெல்லாம் அறிந்ததினாலேதான் இந்த அரசு அவற்றை நீக்குவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. வெகு விரைவிலே அப்படிப்பட்ட முறையற்ற நியமனங்களை நீக்கிவிட்டு இந்த 1:10 என்ற G.O. அடிப்படையிலே பணியிடங்களை, காலியிடங்களுக்கேற்ப வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பெற்று முறையான நியமனங்கள் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயன்று கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியிலே 10 ஆண்டுகள். 20 ஆண்டு காலமாக பணிபுரிந்து கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல அப்படி நீண்ட காலமாக பணியாற்றக்கூடியவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறபோது, புதிய முறையிலே அதைப்பற்றி பரிசீலித்து பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று சொல்கிறபோது ஒட்டுமொத்தமான பாதிப்பு ஏற்படாத வகையிலே பாதுகாக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா? அதேபோல் இப்போது பணியாளர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளம் போதுமானதாக இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே குறைபாடுகள், தவறுகளுக்குரிய வாய்ப்பு அதிகமாகியிருக்கிறது. ஆகவே இன்றைக்கு இருக்கிற விலைவாசி நிலைகளுக்கேற்ப ஊதிய உயர்வு வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையற்ற நியமனங்கள் என்கிறபோது அவர்கள் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினார்கள் என்று வருவதல்ல. அவர்கள் முறையாக பணி நியமனம் செய்யப்பட்டார்களா என்பதைப் பார்த்ததற்குப் பின்னாலேதான் முறையற்ற நியமனங்கள் அடிப்படையிலே பணியில் இருக்கிறவர்களை நீக்கிவிட்டு முறையான நியமனங்களைச் செய்கிறபோதுதான் உறுப்பினர் கேட்கிற அந்த ஊதிய உயர்வு, மற்றவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்கிற நிலைமை வரும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.



2002 ஏப்ரல் 22]

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வேலை செய்பவர்களுக்கான சம்பள விகிதங்களை அரசு நிர்ணயிக்கிறதா? பெரும்பாலும் கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களே அவர்களுக்கு சம்பள விகிதங்களை நிர்ணயிக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊதிய உயர்வைப் பொறுத்தவரை தனியாக அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் அதற்குரிய bye-law பிரகாரம் அந்த சங்கத் தலைவர்களாலே அங்கங்கே நிர்ணயிக்கப்பட்டு ஒரு வரன்முறை இல்லாமல் செய்த காரணத்தால்தான் இந்தச் சங்கங்கள் எல்லாம் நலிவுற வாய்ப்பாக அமைந்துவிட்டது. அதைப் போக்குகிற வகையிலேதான் இப்போது அப்படிக் கொடுக்கப்பட்ட ஊதிய உயர்வுகளை எல்லாம் பரிசீலிக்க இந்த அரசு அதிகாரிகளை நியமித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணி நியமனம் செய்தபோது முறையற்ற பணி நியமனம் செய்த அந்தப் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி முறையற்ற நியமனங்களை செய்த அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுடைய தலைவர்கள், அந்த நிர்வாகக் குழு இவற்றின்மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படி எடுக்கவில்லை என்றால் இனிமேலாவது எடுக்கப்படுமா? அப்படி எடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தலைவர்களுடைய பட்டியலைச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையற்ற நியமனங்களைச் செய்த தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 81 என்கொயரி என்று சொல்லக்கூடிய அந்த என்கொயரியைப் போட்டு, அதற்குப்பின் அந்த விசாரணையின் அடிப்படையிலே வருகிற அறிக்கையின் அடிப்படையிலே கிரிமினல்

வழக்குகள், மற்ற வழக்குகளைத் தொடர்கிற பணியை இந்த அரசு தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது. அந்தப் பட்டியல் வேண்டுமென்று சொன்னால், அன்றைக்கு நான் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே சொன்னேன். 400, 500 பேர்கள் மீது நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று. இனியும் தொடர்ந்து இதுபோன்ற முறையற்ற நியமனங்களை நீக்குவதற்கும், அப்படித் தவறு செய்த தலைவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்தவர்கள் யாரோ இருக்கின்றபோது, முறையற்ற முறையில் பணியமர்த்தப்பட்டிருக்கிற அந்தத் தொழிலாளர்கள்மீது, பணி நீக்கம் என்கின்ற அந்தக் கடுமையான ஆயுதம் பயன்படுத்தப்படுமேயானால் அந்தக் குடும்பங்கள் நட்டாற்றிலே விடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே அரசு கருணையோடு, அவர்களுடைய நிலையினைக் கூர்ந்து கவனித்து, அவர்களுடைய நிலையைப் பரிசீலித்து அவர்களுக்குப் பணி உறுதி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, முறையற்ற நியமனங்கள் என்கின்ற மிகப் பெரிய, ஒரு தீமையான பணியை நன்மைப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு முயற்சிக்கிறபோது நிச்சயமாக அதிலே சரியான நடவடிக்கையைத்தான் எடுக்க வேண்டி இருக்கிறது. முறையற்ற நியமனங்களுக்குப் பதிலாக முறையான முறையில் நியமிக்கப்பட்டு பணியில் இருக்கிற தொழிலாளர்களைப் பாதுகாப்பதிலே இந்த அரசாங்கம் அக்கறையோடு இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறையற்ற நியமனம், முறையற்ற நியமனம் என்ற சொற்றொடரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக தொழிலாளர் சட்டத்திலே 300 நாளைக்கு மேலே ஒருவர் பணியாற்றினால் அவரை நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று தொழிலாளர் சட்டத்தின் ஒரு பகுதியிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே, கோ-ஆப்பரேடிவ் அமைப்பைப் பொறுத்த அளவுக்கு Board-தான் அவர்களை நியமனம் செய்கிறது. Board-லே இருக்கிற மெஜாரிட்டி





உறுப்பினர்கள் கையெழுத்துபோட்டு அவர்களை நியமனம் செய்கிறார்கள். கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்த அளவில், ஒரு காலத்திலே சென்ட்ரல் வங்கியில் இருந்துதான் செயலாளரைப் போடுவார்கள். அவையெல்லாம் நாளடைவில் நிறுத்தப்பட்டு, ஒரு காலத்திலே தமிழக அரசு ஆணை பிறப்பித்து, அந்த போர்டே செயலாளர்களை நியமித்துக்கொள்ள அனுமதித்து, இப்போது Board-தான் செயலாளர்களை நியமித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் கீழே வருகிற பதவிகள்தான் இந்த salesman என்று சொல்லப்படுகிற பதவிகள். எனவே, Board கூட்டப்பட்டு அந்த இயக்குநர்கள் அவர்களை நியமனம் செய்கிறபோது, இந்த இடத்திலே சட்டச் சிக்கல்—தொழிலாளர்கள் 300 நாளைக்கு மேலே பணி செய்தால் சட்டத்திலே ஒரு பாதுகாப்பு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். வேலு, கேள்வி வாலு மாதிரி நீண்டு கொண்டே போகிறது.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. அதைச் சொல்ல வேண்டும். தெளிவுபடுத்த வேண்டும் இல்லையா? கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்புப் பிரகாரம், Board அவர்களை நியமனம் செய்கிறபோது, முறையற்ற என்கிற சொற்றொடர் எங்கேயிருந்து வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணி காலியிடம் ஏற்படுகிறபோது, ஒன்று பத்திரிகைகளிலே விளம்பரம் செய்து மனுக்கள் பெற்று, அந்தக் குழுக்கள் முறையான இன்டர்வியூ நடத்தி, நியமனம் செய்வது ஒரு பக்கம். இன்னொன்று, வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பட்டியலைப் பெற்று, அந்தப் பட்டியலின் அடிப்படையிலே செய்ய வேண்டுமென்பது இன்னொரு பக்கம். இந்த இரண்டுமே இல்லாமல் அவர்கள் விருப்பத்திற்கேற்ப, அந்தக் குழு நினைத்த அடிப்படையிலே, அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப செய்யப்படுகிற நியமனங்கள்தான் முறையற்ற நியமனங்கள். ஆகவே, அப்படிப்பட்ட முறையற்ற நியமனங்களை இந்த அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 22

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல முறையற்ற நியமனங்கள் நடைபெறுகின்றன. அதோடு இதுமாதிரியான நியமனங்களிலே ஒரேமாதிரியான நடைமுறைகள் பின்பற்றப் படுவதில்லை. அதற்காகத்தான் 1983 ஆம் ஆண்டு நாம் இயற்றிய கூட்டுறவுச் சட்டத்திலே Common Cadre, Common Selection Board இருக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. அதற்கான விதிகள் 1988 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. ஆனால் 17 ஆண்டுகள் ஆகியும் இதுவரை அது கடைப்பிடிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட முறையற்ற நியமனங்களுக்கு முறையான, அடிப்படையான தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிற Common Cadre, Common Selection Board கொண்டு வரத்தான் வேண்டும். அதைச் செய்ய இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பணி நியமனங்களை ஒழுங்குபடுத்த, Common Cadre கொண்டுவர வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய முக்கிய நோக்கம். Common Cadre-ஐக் கொண்டு வருவதிலே மிகுந்த ஆர்வத்தோடு இந்த அரசு இருக்கிறது. இடையிலே உயர் நீதிமன்றத்திலே இந்தச் செயலாளர்கள் எல்லாம் சென்று தடையாணை பெற்றிருக்கிற காரணத்தினாலே, அந்தத் தடையாணையை நீக்குவதற்கு இந்த அரசு முனைப்போடு இருக்கிறது. இந்தத் தடையாணை நீக்கப்பட்ட உடனே இந்த Common Cadre உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**192—**

### பேருந்து நிறுத்தம்

***6642—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 22]

(அ) பாபநாசம்-திருநெல்வேலி எல்.எஸ்.எஸ். பேருந்து பத்தமடை, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையம், வீரவநல்லூர் வரை வந்து செல்ல அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாபநாசம்-திருநெல்வேலி வழித்தடத்தில் இயக்கப்படும் எல்.எஸ்.எஸ். பேருந்துகள் அனைத்தும் பத்தமடை, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் வீரவநல்லூர் திரையரங்கு ஆகிய இடங்களில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம், திருநெல்வேலி செல்லும் எல்.எஸ்.எஸ். பேருந்துகள் திருநெல்வேலியிலிருந்து பத்தமடை, வீரவநல்லூர் திரையரங்கம் மற்றும் கல்லிடைக்குறிச்சியிலுள்ள புதிய பேருந்து ஆகிய இடங்களுக்குச் செல்கின்றன என்றாலும் வீரவநல்லூர் நகரப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரை அங்கே பொதுமக்கள் பயன்பெற வேண்டுமென்றால் திரையரங்கிற்கு அடுத்தாற்போலுள்ள வீரவநல்லூர் பேருந்து நிலையத்தில் எல்.எஸ்.எஸ். பஸ் நிற்க வேண்டும். வீரவநல்லூர் அதிகமான ஜனத்தொகையைக் கொண்ட நகரப் பஞ்சாயத்து. ஆகவே வீரவநல்லூர் பேருந்து நிலையத்தில் மக்கள் நலன் கருதி எல்.எஸ்.எஸ். பஸ் வீரவநல்லூர் ஊருக்குள் இருக்கும் பேருந்து நிலையத்தில் நின்று செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையத்திலும், பத்தமடை பேருந்து நிலையத்திலும் பேருந்துகள் நின்று செல்கின்றன. வேண்டுகோள், நிறுத்த இடங்களாக ஏற்கப்பட்டு, அவ்வாறு எல்லாப் பேருந்துகளும் அங்கு நின்று ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. அதேபோல் வீரவநல்லூர் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் சென்று வரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். வீரவநல்லூர் திரையரங்கிற்கு முன்பாக அந்தப் பேருந்துகள் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. இதனை வீரவநல்லூர் பேருந்து நிலையத்திற்குச் சென்று

[2002 ஏப்ரல் 22

திரும்புகின்ற நிலையில் இயக்கினால் பாபநாசம், திருநெல்வேலி பிரதான தடத்தில் தற்போது இயக்கப்பட்டுவரும் சுற்றுகள் குறைவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் வீரவநல்லூர் பேருந்து நிலையத்தின் வழியாக இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகள், மற்ற பேருந்துகள், விரைவுப் பேருந்துகள், சாதாரண புறநகர்ப் பேருந்துகள் எல்லாம், அந்தப் பேருந்து நிலையத்திற்குச் சென்று பயணிகளை ஏற்றி வருகின்றன. இந்த நிலையில் எல்.எஸ்.எஸ். பேருந்தை அங்கு சென்று வரப் பணித்தால் அதன்மூலமாக, இயக்கப்படுகின்ற சுற்றுகள் குறைந்து அதனால் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அதனை தற்போது இயக்க முடியாத சூழ்நிலை, அந்தப் பேருந்திற்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மக்கள் நலன் கருதி 2275 புதிய பேருந்துகளை இயக்க அனுமதி அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசிற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியில் பல பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுப்பதுடன் தொகுதியைச் சுற்றுப்பயணம் செய்தபோது, சில வழித்தடங்களில் பேருந்துகள் இல்லாமல் இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் வழித்தடங்களில் இரண்டு அல்லது மூன்று வழித்தடங்கள் இயக்க புரட்சித் தலைவி அம்மா அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்ற நிலை முன்பு இருந்தது. சென்ற ஆட்சிக்காலத்திலே இருந்தது உண்மைதான். ஏற்கெனவே இருந்த அந்த நிலையையெல்லாம் மாற்றி பழுதடைந்த பேருந்துகளை புதிய பேருந்துகளாக மாற்றி வருகின்ற சூழ்நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது செய்திருக்கிறார்கள். அதனால் புதிய பேருந்துகள் இப்பொழுது படிப்படியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததற்கிணங்க வாங்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக அந்தப் பழைய பேருந்துகள் எல்லாம் மாற்றி புதிய பேருந்துகள் இன்று கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் பரிசீலனை செய்து அந்தப் பகுதிக்குத் தேவையான புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 22]

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்ற வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, சூழ்நிலைக்கு ஏற்ப நமது சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

**193—**

### ஒப்பந்தத் தொழிலாளர்கள்

***9075—திரு. த. ஆறுமுகம்:**

*மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவொற்றியூர், எண்ணூர் அனல் மின் நிலையத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சுமார் 1,200 பேர் மின் வாரியத்தில் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பணி நிறுத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை மீண்டும் பணியமர்த்துவது தொடர்பாக தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளன. நிலுவையில் உள்ள மேற்படி மேல்முறையீடு வழக்கின் தீர்ப்பிற்கேற்ப இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த

[2002 ஏப்ரல் 22

1998 ஆம் ஆண்டு திருவொற்றியூரில் உள்ள எண்ணூர் அனல் மின்நிலையத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சீனியாரிட்டி அடிப்படையிலே 647 நபர்களை, 1998 மே மாதம் 4 ஆம் தேதி பணியில் அமர்த்தினார்கள். ஆனால் அவற்றிலும், தி.மு.க. ஆட்சியின் குளறுபடிகள் காரணமாக, அந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே 6 மாதங்கள் பணிபுரிந்த அந்தத் தொழிலாளர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். இதனால் அந்தக் குடும்பங்கள் இன்று வரையிலும் மிகக் கடுமையான வகையிலே பாதிக்கப்பட்டு, பசி, பட்டினியோடு சாகின்ற நிலைமை உள்ளது. அவற்றிலே 12 நபர்கள் இதுவரையில் மரணம் அடைந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்து, தொழிலாளர்களின் குறைகளைப் போக்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டி, மின்சார வாரியத்திலே அவர்களை மீண்டும் பணியமர்த்தித் தருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதோடு மட்டுமல்லாமல்-- 647 தொழிலாளர்கள் தவிர்த்து—மீதமுள்ள தொழிலாளர்களையும் பணியமர்த்துவதற்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து, வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதன் காரணமாக, வழக்கு முடிந்த பிறகு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 194, திரு. க. பாரமலை, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**194—**

**ஊதியம் வழங்குதல்**

***6056—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 22]

(அ) தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்களுக்கான கல்வித் தகுதி, அனுபவம் ஆகியவை ஒரேமாதிரியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தும் ஒரேமாதிரியான ஊதியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஊதியம் வழங்கப்படுவதில் உள்ள குறைபாடுகளைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உண்மை இல்லை. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒரே பதவி, கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் பணியமைப்புகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்களுக்கு அந்தந்தப் பணிக்கேற்ப ஒரே ஊதிய விகிதம்தான் வழங்கப்படுகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரே கல்வித் தகுதி, ஒரேமாதிரியான வேலை, ஆனால் இருதரப்பின மக்கள் இதிலே இருக்கிறார்கள். ஒன்று, Common Cadre Selection-லே வந்தவர்கள். இன்னொன்று Wage Board System-கீழ் வந்தவர்கள். இரண்டும் ஒரேமாதிரியான வேலை. கல்வித் தகுதியும், ஒரேமாதிரியான கல்வித் தகுதி. அப்படிப்பட்ட இந்த இருபிரிவினர் இருப்பதை பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஒரேமாதிரியான சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை இருக்கிறது. 1999 ஆம் ஆண்டு இதுசம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. 'The Committee shall be called as a Pay Revision Committee of Co-operative/Public Sector Sugar Mills' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6 மாதங்களுக்குள்ளாக அந்தக் கமிட்டியின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கமிட்டி கூடியதா; அரசுக்கு ஏதாவது பரிந்துரை செய்திருக்கிறதா; இல்லையென்றால் அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை நியமித்து அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இதேமாதிரியான பிரச்சினை பாண்டிச்சேரியிலே வந்தபோது, தமிழகத்திலே இருப்பதைப்போல, அவர்களுக்கு வேண்டுமென்று கேட்டு, அது அங்கே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நீண்டநாள் கோரிக்கையை நிவர்த்தி

செய்கின்ற வகையிலே, மீண்டும் கமிட்டி அமைக்கப்படுமா? ஏற்கெனவே அமைக்கப்பட்ட கமிட்டியின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் தலைமை மற்றும் துணைத் தலைமை பதவி வகிக்கும் அலுவலர்களுடைய அனுபவத்தை, அவர்களுக்குள்ள திறமையை மட்டும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகளில் பயன்படுத்தும்பொருட்டு, பொதுத் தொகுப்பு முறை கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில் முதலில் தலைமை மற்றும் துணைத் தலைமைப் பதவிகள் பொதுத் தொகுப்பு முறையின்கீழ் கொண்டு வரப்பட்டன. இம்முறையில் மேற்கண்ட அலுவலர்கள் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிடையே மாறுதல் செய்யப்பட்டு வந்தனர். இதன்படி பொதுத் தொகுப்பு முறை விரிவுபடுத்தப்பட்டபோது ஆய்வக இரசாயனர், மெக்கானிக்கல் சூப்பர்வைசர், எலெக்ட்ரிக்கல் சூப்பர்வைசர், சிவில் சூப்பர்வைசர் மற்றும் உற்பத்தி மேற்பார்வையாளர்கள் பதவிகள் 1-1-1990 முதல் பொதுத் தொகுப்பு முறையின்கீழ் கொண்டு வரப்பட்டன. ஆனால் இப்பதவிகள் பருவகால பதவிகளாக இருந்ததாலும், ஊட்டப் பதவிகளாக இல்லாததாலும் மேற்கண்ட பதவிகளை பொதுத் தொகுப்பு முறையிலிருந்து நீக்கம் செய்து, சர்க்கரைத் துறை ஆணையரால் 1994-ல் ஆணையிடப்பட்டது. ஆயினும், ஏற்கெனவே பொதுத் தொகுப்பு முறையின்கீழ் கொண்டு வரப்பட்ட மேற்கண்ட பதவியில் பணிபுரிந்து வந்தவர்கள் பொதுத் தொகுப்பு அலுவலர்களுக்கான ஊதிய விகிதம் பெற்று வந்தமையாலும், அவர்களுக்கு அந்த அடிப்படையில் எந்த மாற்றமுமின்றி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பதவிகளைப் பொதுத் தொகுப்பு முறையிலிருந்து நீக்கம் செய்த பின்னர், பணியமர்த்தப்பட்டவர்களுக்கு சர்க்கரை ஊதியக் குழுவால் — Wage Board — நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில், தொழில் தாவா சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் ஊதிய விகிதம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால், பொதுத் தொகுப்பு முறையிலிருந்த சில பிரிவினருக்குக் கூடுதல் விகிதத்தில் ஊதியமும், சுமார் ரூ.5000-லிருந்து—ஊதிய உயர்வாக ரூ.150 வரை—ரூ.8,000 வரையிலும், இதேபோன்று நீக்கப்பட்ட பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு





மாற்று விகிதத்தில் ஊதியம் ரூ.2,300— ஊதிய உயர்வு ரூ.55— என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 834, தொழில் துறை, நாள் 8-12-1997-ன்படி பொதுத் தொகுப்பு முறை இரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதையும், மேலும் சர்க்கரை ஆலைகளில் போதுமான வருமானம் இல்லாத சூழ்நிலையில் விலை இருக்கின்ற காரணத்தாலும், இன்றையதினம் பொதுத் தொகுப்பு முறை இரத்து செய்யப்பட்ட பின்னர், பணியில் சேர்ந்தவர்களுக்கு முன்னாள் தொகுப்பு அலுவலர்களுக்கு இணையான ஊதியம் வழங்க இயலாது.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் கொடுத்தார்கள். நான் கேட்டுக்கொள்வது, இந்த இரண்டு உத்தியோகமும் — படிப்பு, தகுதி, ஒரே தகுதி; வேலையும் ஒரேமாதிரியான வேலை. ஒரு தரப்புக்கு 5,000 ரூபாய் அடிப்படைச் சம்பளம். ஒரு தரப்புக்கு 2,300 ரூபாய் சம்பளம். இதில் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட ஆணைகள், அரசு உத்தரவு, சேர்த்ததெல்லாம் 1997-உடன் முடிந்துவிட்டது. 1999 ஆம் ஆண்டு ஓர் ஆணை பிறப்பித்து, ஒரு குழுவை அமைத்திருக்கிறது. அந்தக் குழுவின் முடிவு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அதைத்தான் நான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பாரமலை. நீங்கள் கேட்ட கேள்விக்கான விளக்கத்தை மட்டும்தான் அமைச்சர் வைத்திருப்பார். நீங்கள், இந்த கமிட்டி என்பதற்கு தனிக் கேள்வி போடுங்கள். அப்போதுதான் அந்தப் பதில் வரும்.

**திரு. க. பாரமலை:** பொதுவாக ஒரு கேள்வி சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருந்தால், அதற்கு நிச்சயமாக அந்தப் பதிலில் வந்திருக்க வேண்டும். ஆனால் அது இல்லை என்று சொல்கிறபோது, இனிமேலாவது ஒரு கமிட்டி அமைத்து — மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. வேலையும் ஒரேமாதிரியான வேலை. ஆகவே நான் கேட்டுக்கொள்வது, மீண்டும் அவர்களுடைய நிலைமையை கருத்தில் கொண்டு, கமிட்டி அமைத்து— பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் தொகுப்பு முறை விரிவுபடுத்தப்பட்டபோது, அந்த நிலை இருந்தது. அதற்குப் பின்னர் சர்க்கரைத் துறையின் ஆணையரால் 1991-ல் சர்க்கரை ஊதியக் குழு — Wage Board—

கொண்டு வந்ததற்குப் பின்னர் வேலைக்கு எடுத்தவர்களுக்கு இப்போது நான் குறிப்பிட்டபடி ரூ.2,300 என்ற அளவில்தான் அடிப்படைச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கமிட்டி குறித்து, தாங்கள் தனியாகக் கேள்வி கேட்டால் அதற்கு விரிவான பதிலைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 195, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**195—**

**மூலிகை மருந்துத் தொழிற்சாலை**

***8202—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் பயிராகும் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதியில் பயிராகும் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி— எனது இராஜபாளையம் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஐயனார் கோயில் மலை அருகில் நோய் தீர்க்கும் மூலிகைச் செடிகளும், மரங்களும் அதிகமாக உள்ளன. மூலிகையைப் பாதுகாக்க— மூலிகைத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய முன்வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும்



தொழிற்சாலைகளை அமைக்க நல்ல திட்டங்களுடன் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் அளித்து தொழில் தொடங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டாரப் பகுதிகளில் அமையுமாயின் அந்த நிறுவனங்களுக்கு தகுதியின் அடிப்படையில், 15 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும் என்பதையும், மிக்வும் பின்தங்கிய பகுதிகளிலே 20 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்து அரசு சார்புடைய தொழிற்பேட்டையில் தொழில் வளாகங்கள் மற்றும் கூட்டுறவு தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கும் 15 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு குறிப்பாக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்திய முறை மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்கின்ற உணர்வோடு பல்வேறு நல்ல திட்டங்களை ஆளுநர் உரையிலே கூறி இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்திய முறை மருத்துவத்தினுடைய வளர்ச்சியைக் கருத்திலேகொண்டு, தமிழகம் முழுவதும் மூலிகைகள் எங்கெங்கே நிரம்பக் கிடைக்கின்றன; எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன தரமான மூலிகைகள் கிடைக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மட்டுமல்லாமல், அவற்றைப் பதப்படுத்தி இங்கேயே தரமான மருந்துகளை விநியோகிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தமிழக அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 50 ஆயிரம் ஹெக்டேர் நிலம் மேம்படுத்தப்படுவதாக அறிவித்திருக்கிறீர்கள். தரிசு நிலங்களிலே உற்பத்தியாகின்ற நூற்றுக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளிலே அந்த மூலிகைகளைப் பயிரிட்டு அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சியையும், தரமான மருந்துகளை வழங்குவதற்கான முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், ஒன்று வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், ஒன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 196. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**196—**

**மாணவர் விடுதி**

***6294—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான தங்கும் விடுதி அமைக்க நடப்புக் கல்வி ஆண்டில் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதாலும் தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க தற்போது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 22]

என்னுடைய மேல்மலையனூர் தொகுதி' முழுமையாக கிராமங்கள் நிறைந்த பகுதி. கிராமப்புறங்களுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும். கிராமப்புற கல்விக்கும் முக்கியத்துவம் தரும் அம்மா அவர்களினுடைய அரசு என்னுடைய தொகுதிக்குட்பட்ட நல்லான்பிள்ளைபெற்றாள் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி அமைப்பதற்கு வரும் நிதியாண்டிலாவது அரசு பரிசீலனை செய்ய வேண்டுகிறேன். அதேநேரத்திலே இந்த விடுதிகளைத் தொடங்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்திலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக எத்தனை விடுதிகள் உள்ளன என்பதையும் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான 11 விடுதிகளும், மிக பிற்படுத்தப்பட்டோர் நல வகுப்பினருக்கான 32 விடுதிகளும் ஆகமொத்தம் 43 விடுதிகள் இயங்கி வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் பரிந்துரையின்படி, புதிய விடுதிகள் திறக்க இடங்களைத் தேர்வு செய்யும்போது அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகள், மேற்படி கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ மாணவிகள் போதிய எண்ணிக்கையில் உள்ளனரா, மற்றும் விடுதி தொடங்க அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும் மேலும் இந்த வட்டாரத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் இரண்டுக்கு மேல் இருந்தால், கூடாது என்றும், 8 கி.மீ. சுற்று வட்டாரத்தில் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினருக்கு, ஒரே பாலினத்தவருக்கு முன்னதாகவே விடுதிகள் இருப்பின் அப்பாலினத்தவர்களுக்கு புதிய விடுதிகள் தொடங்கப்படக்கூடாது என்பதன் விதிமுறையின் அடிப்படையில் இடங்கள் சீர் செய்யப்படுகின்றன. மேலும் இடம் தெரிவு செய்தபின், பொதுப் பணித் துறை மூலமாக அந்தக்

[2002 ஏப்ரல் 22

கட்டடங்களைக் கட்ட ஹட்கோ மூலமாக அதிகப்படியான நிதி ஒதுக்கப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைச் சேர்ந்த மாணவர்களுக்காக தங்கும் விடுதி அமைக்கப்படுகிறது. அதற்கு மேற்கொண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 19 இலட்சம் ரூபாய்க்கு மேலாக பல விடுதிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படியென்றால், இது பரவலாகக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிதி ஹட்கோ மூலமாக ஒதுக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அதுபோன்று ஒதுக்கப்படாத இடங்கள் யாவை என்று உறுப்பினர் அவர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 197, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**197—**

### தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம்

***13123-திருமதி மல்லிகா சின்னசாமி :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



2002 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முசிறி தொகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத் தர அரசுக்கு உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** நம்மையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் தங்கத் தலைவி, தானைத் தலைவி, சிங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது முதல் வினாவினைத் தொடங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். ஒவ்வோர் ஆண்டும், இப்பகுதியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் +2 படித்து வெளியே செல்கின்றார்கள். அந்த மாணவ மாணவியர்கள் முசிறியிலிருந்து திருச்சிக்கு தினமும் சென்றுவருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மாணவர்களின் நலன் கருதி முசிறியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர மறுபரிசீலனை செய்து அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மாணவர்களின் நலன் காக்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு, ஏழை எளிய மாணவர்களின் நலன் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எங்கள் பகுதியில் தொழில்நுட்பப் பயிற்சிக்கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த முசிறி தாலுகாவில் ஏ.டி.எம். தொழிற்பயிற்சி மையம் மற்றும் திருச்சி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி என்ற இரண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. மேலும் திருச்சி மாவட்டத்தில் திருச்சியில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், புள்ளம்பாடியில் ஒரு மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், மொத்தம் 26 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவையனைத்தும், திருச்சி மாவட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால், மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அவசியம் இல்லையென அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 198, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

198—

**பால் குளிரூட்டும் நிலையம்**

***7032-திருமதி காசாம்பு பூமாலை:**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்படுமா?*

*(ஆ) சங்கராபுரம் பகுதியில் தனி பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா?*

*(இ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் குளிரூட்டும் திறன் அதிகரிக்கப்படவுள்ளது.

(ஆ) சங்கராபுரம் பகுதியில் தனியாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான சின்னசேலம் பகுதி பால் மிக மிக அதிகமாக உற்பத்தி ஆகின்ற பகுதி. எனவே அப்பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தின் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்படுமா? மேலும், சங்கராபுரம் பகுதியில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காசாம்பு, அதிகரிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்.

**திருமதி காசாம்பு பூமாலை:** உற்பத்தி அதிகமாகின்ற காரணத்தால், சில கிராமங்களில், மஞ்சப்புத்தூர், நெடுமானூர், பாலப்பட்டு, இப்படிப்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற



காரணத்தினால் அங்கு தனி குளிரூட்டும் சாதனம் அமைக்க முடியுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையமானது விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் திறன் என்கிற அளவில் நிறுவப்பட்டு, தற்போது 86,000 லிட்டர் பால் இந்நிலையத்தில் குளிர்விக்கப்பட்டு வருகிறது. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் இதனை மேம்படுத்தி நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டராக மாற்றியமைக்கவும், அடிப்படை வசதிகளை உருவாக்கவும், இருக்கும் வசதிகளை நவீனப்படுத்தவும், தேசிய பால்வள வாரியத்தின் தொழில் நுட்ப ஆலோசனைக்குட்பட்டு மைய அரசின் ஒன்றியங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய-மாநில அரசின் நிதியுதவியின்கீழ் ஒரு திட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்புத் திட்டமானது ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் அடங்கிய திட்டமாகும். எனவே விழுப்புரத்தில் ஈரோடு ஒன்றியத்தையும் சேர்த்து மாநில அரசின் பங்கான 50 விழுக்காடு ரூ.6.50 கோடி ஏற்கெனவே இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுவிட்டது. மைய அரசின் பங்கான 50 விழுக்காடு ரூ.6.50 கோடி பெறுவதற்கு இணையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்தொகை பெறப்பட்டவுடன் பணி விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் தரம் உயர்த்தப்படவுள்ளதாலும், புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் உருவாக ரூ. 4 கோடி நிதி ஆதாரம் தேவைப்படுவதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, சங்கராபுரம் பகுதியில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க, தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 199, திரு. கா. கந்தசாமி, திரு. ஐ. கணேசன், திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 22

**199—**

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

***1609—திரு. கா. கந்தசாமி:**
**திரு. ஐ. கணேசன்:**
**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**
**திரு. சோ. இராசேந்திரன்:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த இச்சங்கங்களில் துணி வகைகளைக் கூடுதல் கழிவு அளித்து விற்பனை செய்தல், கண்காட்சியில் பங்கேற்றல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆம் என்று சொன்னதற்கு நன்றி. கைத்தறித் துணிகள், இன்றையதினம் விசைத்தறித் துணிகளோடும் மில் துணிகளோடும் போட்டி போட முடியவில்லை. முன்பெல்லாம் ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவதற்காக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து ஏராளமான துணிகளைக் கொள்முதல் செய்து வந்தது. ஆனால் இன்றையதினம் அவர்கள் குறைவாகக் கொள்முதல் செய்கிறார்கள். இதனால் கைத்தறித் துணிகள் தேக்கம் அடைந்து நெசவாளர் சங்கங்கள் வங்கிகளிடம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை.*



2002 ஏப்ரல் 22]

*வட்டி கூட கட்டமுடியாமல் இருக்கிறது. எனவே நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தனித்தனியாக ஆய்வு செய்து அந்தச் சங்கங்களை மேம்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதை இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஐ. கணேசன்.*

**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள்.....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மிக்க நன்றி திரு. கணேசன்.*

**திரு. ஐ. கணேசன்:** *அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தோளிலே கைத்தறித் துணிகளைச் சுமந்து வீதி வீதியாக—திராவிட இயக்கத்தினுடைய மூத்த தூண்கள் எல்லாம் இந்தக் கைத்தறித் துணியைச் சுமந்து—விற்று அந்த ஏழை கைத்தறி நெசவாளர்களை அன்றைய காலத்திலே வாழ வைத்த வரலாறு, தமிழகத்திற்கு உண்டு. அப்படி, பேரறிஞர் அண்ணா அவர்களும், திராவிட இயக்கத்தின் மூத்த தூண்களும் கட்டிக்காத்த அந்தக் கைத்தறி நெசவாளர்கள் இன்று மிகவும் நலிந்து, நொடித்து, நூலாகத் தேய்ந்திருக்கிறார்கள். அவர்களை வாழவைக்க இந்த அரசு கைத்தறிச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட எத்தனையோ கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை விற்கமுடியாமல், வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்ட முடியாமல் அந்த ஏழை கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி கொடுக்க முடியாத அவல நிலை இருக்கிறது என்பதை அரசு உணருகிறதா? அப்படி உணர்ந்திருந்தால், உடனடியாக அந்த நலிந்த சொசைட்டிகளுக்கு அரசு சிறப்பு நிதி அளித்து அதை வாழவைக்க முயற்சி எடுக்குமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல்* 11-05

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த சங்கங்களில் தேங்கியுள்ள ஜவுளிகளுக்கு*

சிறப்புக் கழிவு வழங்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் சங்கங்களில், விற்பனையாகாமல், ஓராண்டுக்கு மேலாக இருப்பிலுள்ள பட்டுச் சேலைகளையும், அடக்க விலையில் 95 சதவிகிதத்திற்குக் குறையாமல், 2 ஆண்டுகளுக்கு மேல் இருப்பிலுள்ள பட்டுச் சேலைகளை 80 சதவிகிதத்திற்குக் குறையாமலும் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. சங்கங்களில் தேங்கியுள்ள ஜவுளிகளை விற்பனை செய்வதற்கு ஏதுவாக, சென்னை மற்றும் பிற முக்கிய நகரங்களிலே loom world அமைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஏற்றுமதி இரகத் துணிகளை உற்பத்தி செய்ய சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து தொழில் வழங்க நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நலிவடைந்த சங்கங்களை மேம்படுத்த ஏதுவாக மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் தீனதயாள் செறிவுத் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த கைத்தறி நெசவாளர் சங்கங்களை மேம்படுத்த உத்தரவிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில், வீரவநல்லூர், புதுக்குடி, கல்லிடைக்குறிச்சி, கடையம் ஆகிய பகுதிகளில், சுமார் 10 ஆயிரம் நெசவாளர் குடும்பங்கள் தொழில் கிடைக்காமல், மிகுந்த நலிந்த நிலையில் உள்ளன. ஆகவே தமிழ்நாட்டில், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள துணிகளை அரசு கொள்முதல் செய்யவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய rebate தொகையை, ஆண்டு முழுவதும் வழங்கவும், 'கைத்தறித் துணி விற்பனை நிலையம்' என்று board மாட்டிக் கொண்டு, விசைத்தறித் துணியை விற்பனை செய்வதைத் தடுக்கவும், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகளை இந்த அரசு செயல்படுத்தும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழில் நசிவதற்கான அடிப்படைக் காரணம், தமிழ்நாட்டில், விசைத்தறித் துணியைக் கைத்தறித் துணிபோல் தயாரித்து, 'கைத்தறி' என்று அதிலே முத்திரையிடுவதன் மூலமாக, அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது; ஏற்றுமதி குறைக்கப்பட்டு வருகிறது. Design Committee என்ற ஒரு கமிட்டி, தமிழ்நாட்டிலேயிருந்து அதைத்தான் அங்கீகரித்துக்கொண்டிருக்கிறது. அந்தக் கமிட்டி இதுபோன்ற தவறுகளைச் செய்யாமல், அரசு தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா? நசிந்துபோன அந்தக் கைத்தறித் தொழில், அதனுடைய தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை, என்னிடத்திலே ஒரு வாரத்திற்கு முன்பாகவே கூறியிருந்தார்கள். அதன் அடிப்படையிலே, இப்போது, விசைத் தறியில் நெய்யப்படும் துணிகளுக்கும், கைத்தறியில் நெய்யப்படும் துணிகளுக்கும் ஒரு trade mark-ஐ எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களிடத்திலே ஆலோசனையைப் பெற்ற பிறகு, போடுவது குறித்துத் தெரிவிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்து—இலவச வேட்டி-சேலைகளை நெய்வதற்குப் பொதுவாக அந்த சொசைட்டிகளிலே கொடுத்துதான் அவர்கள் உற்பத்தி செய்து—கொடுத்ததை மீண்டும் கொள்முதல் செய்து எல்லா ஊர்களிலும், வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு இலவச வேட்டி-சேலைகளை பல கோடி ரூபாய்க்கு அரசாங்கம் கொடுத்து வந்தது. இப்போது அவை நிறுத்தப்பட்டுவிட்ட

[2002 ஏப்ரல் 22

காரணத்தாலே, நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள், இன்னும் நலிவடைந்துவிட்டிருக்கின்றன. ஆகவே, அரசு அந்த இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிற முகத்தான், அந்தச் சங்கங்களுக்குத் துணி நெய்து கொடுப்பதற்கு order கொடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகள் குறித்து இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** தேங்கிக் கிடக்கும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கிக் கிடக்கும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரே தேங்கிக் கிடக்கிறார் என்கிறீர்களா? (சிரிப்பு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளால், இன்றையதினம் வாடிக் கிடக்கின்ற கைத்தறி நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்காக, சிறப்புக் கழிவு அளித்து, மாவட்டந்தோறும் கண்காட்சி மையங்களை அமைத்து, விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தவிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையிலே தெரிவித்தார்கள். அப்படி மாவட்டங்கள்தோறும் கண்காட்சி மையங்களை, விற்பனைக் கூடங்களை ஏற்பாடு செய்கின்றபோது வட சென்னை மாவட்டத்திலும் ஒரு சிறப்புக் கழிவு அளித்து, விற்பனைக் கண்காட்சிக் கூடத்தை ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகளின் அடிப்படையிலே இன்று எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசானது பல்வேறு இடங்களில் கைத்தறிக் கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மாண்புமிகு



2002 ஏப்ரல் 22]

உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே வாடகை குறைவான இடத்தை எடுத்துக் கொடுப்பார்களேயானால் உடனடியாக நாளை முதலே அந்த இடத்தில் கைத்தறிக் கண்காட்சி தொடங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் நெசவாளர்கள் 25 ஆயிரம் பேர் நெசவுத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். அவர்களிடமிருந்து ஜனதா சேலை கொள்முதல் நடைபெறாமல் இருப்பதால், அதிக சேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. அதுமட்டுமல்லாமல் காடா நூலும் குறைவாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை அதிகப்படியாக வழங்கவும், ஜனதா சேலை கொள்முதல் நடைபெறவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான கருத்துரு உருவான வரலாறு

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

[2002 ஏப்ரல் 22

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன்; உட்காருங்கள்; திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் கூப்பிடுகிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற சட்டக் கல்லூரி என்பது மிகப் பழமையானது; அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்ட ஒன்று; அதாவது 1891 ஆம் ஆண்டே அந்த சட்டக் கல்லூரி நிறுவப்பட்டது. அதன் வாயிலாக இந்த மாநிலத்திலே இருக்கின்ற வழக்கறிஞர்களும், மக்களும் ஒரு சட்டப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்பதை பல ஆண்டுகளாக தங்களுடைய கோரிக்கைகளாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்பட்டது? எப்போது அந்தக் கருத்துரு உருவாக்கப்பட்டது என்பதனை அறிகின்ற அவசியம் இருக்கின்ற காரணத்தினால், அரசு அதற்குரிய அந்த கருத்துரு உருவாக்கப்பட்டது எப்பொழுது என்கின்ற நிலையை இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தி.மு.க. ஆட்சியில்தான் அமைக்கப்பட்டது என்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கூறி இருக்கிறார்கள். அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இந்தக் கேள்வியை இங்கே எழுப்பி இருக்கிறார் என்று கருதுகிறேன். இதுகுறித்து திரு. கருணாநிதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கடந்த 19-04-2002 அன்று நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நான் இதுபற்றிக் கூறிய சில கருத்துகளை குறை கூறியும் அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

முதன்முதலாக தமிழ்நாட்டில் சட்டப் படிப்பிற்காக சட்டப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணம் எந்த ஆட்சியில் உருவாகியது? அதற்கான ஆரம்பகட்ட



2002 ஏப்ரல் 22] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நடவடிக்கைகள் எப்போது எடுக்கப்பட்டன என்பதைப்பற்றி தற்போது நான் பேரவைக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் என்னுடைய உரையை நான் ஆங்கிலத்தில்தான் நிகழ்த்தினேன். திரு. கருணாநிதி குறை கூறியிருக்கும் பகுதி என்னுடைய உரையில் எவ்வாறு அமையப்பெற்றிருந்தது என்பதை நான் அப்படியே தற்போது என்னுடைய உரையிலிருந்து படித்துக்காட்டுகிறேன்:-

"A University meant exclusively for Legal Education was first thought of by my Government as early as in 1995 and in pursuance of that aim, the Law University Act was enacted" என்று சொல்லியிருக்கிறேன். ஆக என்னுடைய உரையில் முதன்முதலாகச் சட்டப் படிப்பிற்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்திற்கு வித்திட்டது 1995 ஆம் ஆண்டு நான் தமிழக முதலமைச்சராக இருந்தபோதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையே என்னுடைய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். மேலும், அதனையடுத்து அந்த எண்ணத்தை ஈடேறச் செய்வதற்காக பின்னர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்று பொதுவாகத்தான் நான் என்னுடைய உரையில் கோடிட்டுக் காட்டினேன். சட்டப் பல்கலைக்கழகத்திற்கான சட்டம் என்னுடைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்று நான் என்னுடைய உரையில் குறிப்பிடவே இல்லை. ஆனால் திரு. கருணாநிதி நான் ஏதோ தவறான விவரங்களை என்னுடைய உரையில் கூறியிருப்பதாகச் சொல்லியிருப்பது அவருக்கு ஆங்கிலம் அந்த அளவுக்குச் சரியாகப் புரியவில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் பட்டமளிப்பு விழா உரையை நான் ஆங்கிலத்தில் அல்லவா நிகழ்த்தினேன்!

முற்பகல் 11-15

தமிழ்நாட்டில் சட்டப் படிப்பிற்காகத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று என்னுடைய ஆட்சியில்தான் 1995 ஆம் ஆண்டு நவம்பர் ஏழாம் நாள் அதாவது, 07-11-1995 அன்று தமிழக சட்டப் பேரவையில் இதற்காக ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டது. அன்றைய சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அதற்குரிய சட்டமுன்வடிவை-அதாவது, Tamil Nadu Legislative Assembly Bill No.34 of 1995 என்ற சட்டமுன்வடிவை

பேரவையில் அறிமுகப்படுத்தினார். அதுமட்டுமின்றி, நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் 1995 ஆம் ஆண்டு தனி சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கு சிறப்பு அலுவலராக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி, திரு. ஏ. பால்ராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டார்.

ஆக உண்மைகள் இவ்வாறு இருக்க, திரு. கருணாநிதி தேவையற்ற முறையில் நான் தவறான தகவல்களை என்னுடைய பட்டமளிப்பு விழா உரையில் அளித்தேன் என்று அவதூறு அறிக்கையை விடுத்துள்ளார். நான் முதலமைச்சராக இருந்தபோது, அறிமுகப்படுத்தி உருவாக்கிய தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகத்திற்குத்தான், 1996-ல் தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது உரிய சட்டமுன்வடிவு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, அது பின்னர் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் 1997-ல் திரு. கருணாநிதி கூறியிருப்பதுபோல டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்குத் தொடக்க விழா நடைபெற்றது.

நான் இதுவரை இங்கே அளித்த விளக்கத்தை வைத்துப் பார்க்கும்போது, திரு. கருணாநிதி நான் ஆங்கிலத்தில் நிகழ்த்திய என்னுடைய உரையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், என்மீது களங்கம் கற்பித்து, என்னுடைய உரையில் நான் குறிப்பிட்ட கருத்துகளைத் தேவையின்றி குறை கூறி, அனாவசியமான சர்ச்சை ஒன்றை வழக்கம்போல உருவாக்கியுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் (குறுக்கீடு) பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கு மாறாக ஓர் அறிக்கையை இங்கே வழங்கினார்கள். ஒரு பல்கலைக்கழகம் தொடங்குவது குறித்த எண்ணம் ஏற்படுவது என்பது எந்தக் காலகட்டத்திலும் ஏற்படலாம். அதற்கான முன் முயற்சிகள்கூட நடைபெறலாம். தொடக்க விழா என்பதை வைத்துத்தான் பல்கலைக்கழகம் தொடங்கியது என்று சொல்வது வழக்கம். குடியரசுத் தலைவரைக்கொண்டு தொடக்க விழா நடைபெற்ற அந்தக் காரணத்தால்





அதற்கு ஏற்படுகிற முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவ்வாறு பேசப்பட்டது தவறு அல்ல. இந்த எண்ணம் குறித்து இங்கே பேசிய திரு. சந்தானம் அவர்கள்கூட குறிப்பிடுகிறபோது பல ஆண்டுகளாக அப்படி ஓர் எண்ணம் இருந்தது என்றார். அதுபோல இன்றைய முதலமைச்சருடைய மனதிலே அந்த எண்ணம் இருந்தது, அதற்கு ஒரு வடிவம் தந்து இருக்கலாம். ஆனால் பல்கலைக்கழகத் தொடக்கம் என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவரே வந்து, அதுவும் டாக்டர் அம்பேத்கர் பெயர் வைத்து அந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காரணத்தால் அப்படித் தொடங்கியதாக ஒரு கருத்து பெறப்பட்டது. கருத்து மாறுபாடு இருக்கலாம்; ஒருவேளை இன்றைய முதல்வர் நான்தான் தொடங்கினேன் என்று சொல்லலாம்; அன்றைய முதல்வர், தான் தொடங்கியதற்கான காரணத்தைச் சொல்லலாம். அதற்காக தனது ஆங்கிலம் விளங்காதது காரணமாக அவர் சொன்னார் என்று சொல்வது, முறையாகத் தெரியவில்லை. ஏனென்றால் இங்கு முதலமைச்சராக இருந்த பெருமக்கள் பலர் ஆங்கிலத்திலே தேர்ச்சி பெறாதவர்கள். ஆனால் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரைச் சொல்வது, இந்த அவையிலே அவர்களை குறைவுபடுத்துவதாக ஆகிவிடும் என்ற காரணத்தால் நான் சொல்லவில்லை. அப்படி ஒரு கருத்தை இன்றைய முதலமைச்சர் பேசுவது 14 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு அம்மையாருடைய ஆங்கிலப் பேச்சு புரியவில்லை என்றால் ஒருவேளை அம்மையாருடைய ஆங்கிலம் அவ்வளவு சிறந்தது என்ற காரணத்தால் புரியாமல் இருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்வது மூலம் இந்த அவையில் ஒரு கருத்தை மறுப்பதற்காக முன்னாள் முதல்வருடைய தகுதியைக் குறைத்துச் சொல்வதற்கு நியாயம் இல்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

### (ஆ) வேலூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிப் பாதைச் சாலையை இடித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல நாட்களுக்கு முன்பாகத் தங்களிடம் என்னுடைய வேலூர் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை 4 வழிப் பாதையிலே, ரோடை இடிப்பதற்காக ....

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். நீங்கள் இன்றைக்கு ஒரு நாள்தான் என்னுடைய அறைக்கு வரவில்லை. நாளைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி.

### (இ) சென்னை, எழும்பூர் தொகுதி, கொள்ளைச் சம்பவம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 4, 5 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம் குறித்து .. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடு) திரு. மீ.அ. வைதியலிங்கம், என்ன சொல்லுங்கள்.

### (ஈ) தாம்பரம் தொகுதி, தொடர் கொள்ளைச் சம்பவம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற தொடர் கொள்ளைச் சம்பவம் குறித்து தங்களிடத்திலே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் தந்து இருக்கிறேன். பத்து நாட்களாகிறது. கவன ஈர்ப்பு அறிவிப்பு தந்து. இதுவரை அதை எடுத்துக்கொள்ளவில்லை.

## 3. கவன ஈர்ப்பு

### விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. அ. அசோகன், திரு. எ.வ. வேலு, திரு. தி. வேல்முருகன், திரு. ப. அரசன், திரு. ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயத் தொழிலாளர் நலன் கருதி சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு இயங்கி வந்த நல வாரியத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து இயங்கக்



2002 ஏப்ரல் 22] [திரு. எ. வ. வேலு]

கோருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

விவசாயத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் அரசு ஆணை எண் 600, வருவாய், நாள் 27-11-2000-ல் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு அதில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், நிலச் சீர்திருத்த இயக்குநரை உறுப்பினர்–செயலராகவும் கொண்ட அலுவல் சார்புள்ள 9 உறுப்பினர்களையும் மற்றும் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக, நில உரிமையாளர்களின் பிரதிநிதிகளாக 9 உறுப்பினர்களையும் விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளாக 9 நபர்களையும் நியமித்து ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் அல்லது ஒரு ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 2.50 ஏக்கர் புன்செய் நிலம் வைத்து நேரடியாகப் பயிர்சாகுபடி செய்துவரும் 18 வயதடைந்தவரும், 60 வயது பூர்த்தியாகாதவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும், இவ்வாரியத்தின் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள ஒரே தடவையில் பங்களிப்புத் தொகையாக ரூ.100 செலுத்த வேண்டும். இவ்வாறு பதிவு செய்துகொண்ட விவசாயத் தொழிலாளர்கள் கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து நிவாரணம் முதலிய உதவிகளைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களாகின்றனர். இத்திட்டம் 09-02-2001-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 31-01-2002 வரையில் 7,21,447 நபர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளார்கள். அவர்களிடமிருந்து ரூ.7.21 கோடி பங்களிப்புத் தொகையாகப் பெற்று வாரியத்தின் நிதிக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

2. இவ்வாரியத்தின் செயல்பாட்டினை மேலும் செம்மைப்படுத்தித் தொடர்வது குறித்து அரசு ஏற்கெனவே பரிசீலித்து வருகிறது.

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு. உங்கள் இனிய குரலில் சுருக்கமாக ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நல வாரியம் என்பது திரு. கோலப்பன் அவர்கள் தலைமையிலே அமைந்து, இதே சட்டமன்றத்திலே கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே அறிவிக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளிகளாக இருப்பவர்களுக்கு மகப்பேறு உதவி, திருமண உதவி, ஈமச்சடங்கு உதவி, இயற்கையாக மரணம் அடைந்தால் ரூ.10,000, ஓர் உறுப்பு [illegible]ந்தால் ரூ.50,000, உயிரே இழந்தால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி, அமைச்சரிடம் கேட்க வேண்டுமோ கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** உயிரே இழந்தால் 1 இலட்சம் என்கிற அடிப்படையிலே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 30-02-2001 அன்றுதான் இந்த வாரியக் குழு, நிர்வாகக் குழு கூட்டப்பட்டது. ஓர் ஆண்டு காலமாக அது கூட்டப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், அந்த உறுப்பினர்களுக்கு 100 ரூபாய் கொடுத்தால் கிராமத்திலே இருக்கிற V.A.O. பதிவு செய்து, அதற்கு அடையாள அட்டை கொடுத்தார்கள். இந்த ஓராண்டு காலமாக V.A.O.-க்களைக் கேட்டால் அரசிடமிருந்து எங்களுக்கு எந்த ஆணையும் வரவில்லை. எனவே நாங்கள் பதிவு செய்ய முடியாது என்கிற அடிப்படையில்தான் இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அறிக்கையிலே சொல்லப்பட்டு இருப்பது 30-01-2002 அன்றோடு 7,21,447 நபர்கள் மூலம் 7 கோடியே 21 இலட்ச ரூபாய் பங்கு கொடுக்கப்பட்டு, - அந்தப் பங்குத் தொகை டெபாசிட் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள், எனவே— ஓராண்டு காலமாக எந்தவித உதவியும் தொழிலாளர் வாரியத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்கு இதுவரை - பணமோ - கொடுக்கப்படவில்லை. எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் இதே மன்றத்திலே கலைஞருடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட காரணத்தினால் அது காற்றோடு காற்றாக மறைந்துவிட்டதோ என்கிற ஐயப்பாடு தொழிலாளர்கள் மத்தியிலே நிலவி வருகிறது. எனவே இந்த அரசு தொடர்ந்து உதவித் தொகைகளை அளித்து, அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் நல வாரியம் தொடர்ந்து செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் செயல்படுமா, செயல்படாதா என்று கேட்டிருக்கிறார். இன்று - அதனுடைய சட்ட திட்டங்களைப் படிக்கிறேன். நீங்கள் இயற்றிய சட்ட திட்டம்தான். 13-வது - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யும் நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1 வீதம் அக்கழகம் மூலம் வசூல் செய்வது. 1 அ.

2. தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில் கரும்பு விற்பனை செய்வதில் டன் ஒன்றுக்கு ரூ.1 வீதம் அந்த ஆலையின் மூலம் வசூல் செய்வது.

அடுத்தபடியாக தனியார் மற்றும் கூட்டுறவு ஆலைகளில் — இங்கே தான் அந்தச் சட்டத்தைப் பார்க்க வேண்டும் — சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூ.1 வீதம் அந்த ஆலையில் இருந்து வசூல் செய்வது. சட்டத்தை நீங்கள்தான் இயற்றி இருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தை இயற்றும்போது இதிலே என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்பதை நாங்கள் கடந்த 3 மாதங்களாக ஆராய்ந்து, சட்டத் திருத்தத்தை கொண்டு வர வேண்டும். இந்த 3-வது சட்டத்திலே எவ்வளவு பிழையான சட்டத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் மற்றும் கூட்டுறவு ஆலைகளில் சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூ.1 வீதம் அந்த ஆலைகளில் வசூல் செய்வது.

Employer-க்கும் employee-க்கும் relationship எங்கே இருக்கிறது என்று எனக்கே தெரியவில்லை. உங்கள் சட்டத்தைப் பார்த்தேன்; படித்துப் பார்த்தேன். இதற்கு amendment கொண்டுவராமல் எப்படி இதை இயக்க முடியும்? நடக்கவில்லை, நடக்கவில்லை என்கிறீர்களே? நீங்கள் சட்டத்தைப் போடும்போது தவறாகக் கொண்டு வந்துவிட்டீர்கள். இதை எப்படி நாங்கள் பண்ண முடியும் என்கிறீர்கள் நீங்கள்?

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், கோபப்பட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கோபப்படவில்லை. அதாவது ஒரு சட்டத்தை இயற்றும்போது அந்தச் சட்டத்தில் என்னென்ன இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அவர் என்ன சொன்னார் என்றால், இயங்கவில்லை, ஒன்றும் நடக்கவில்லை, நாங்கள் கேட்டோம், கேட்டோம் என்றா சட்டம் இயற்றியதே தப்பாகப் போய்விட்டதே இங்கே. நான் படித்துப் பார்த்தேன். அவர்கள்தான் பண்ணியிருக்கிறார்கள். Amendment கொண்டுவர வேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் படியுங்கள். உங்களிடம் book இருந்தால் படித்துப் பாருங்கள். உங்கள் ஆட்சியில் தவறான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, நடக்கவில்லை, நடக்கவில்லை என்று கூறுகிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே கண்டிப்பாக இதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவந்து, இந்த வாரியம் கண்டிப்பாக நடைபெறும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்தவர்கள்தான் கேட்கலாம். நீங்கள் கேட்கக் கூடாது. (குறுக்கீடு) கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்தவர்கள்தான் கேட்கலாம். அவரிடம் சொல்லி கேட்கச் சொல்லுங்கள். உட்காருங்கள், திரு. வேலு. திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நல வாரியம் மூலம் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது? எந்தெந்த வகையில் நலக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அதேநேரத்திலே கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து இவற்றிற்காக நிவாரணம் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதுவரையிலும் 100 ரூபாய் வீதம் தொழிலாளர்கள் மத்தியிலேயிருந்து ரூ.7.21 கோடி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை எத்தனை நபர்களுக்கு அந்த நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுக்க முழுக்க இதிலே—நான் ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன்.—இன்னும் நிறைய தவறுகள் இருக்கின்றன. சட்டத் திருத்தம் கொண்டுவந்து, இந்த வாரியம் நல்ல முறையிலே செயல்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்திலே முரண்பாடு இருக்கிறது என்பதைப்போன்ற ஒரு தோற்றத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாண்டு காலம் ஆண்டுகொண்டிருந்தபோது, அப்போதே கட்டடத் தொழிலாளர்களுக்கென்று சட்டம் கொண்டு வருகிறபோது இப்படித்தான் ஒரு amendment கொடுத்தார்கள். அந்தக் கட்டடத்தை யார் கட்டுகிறார்களோ அவர்களிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட percentage வாங்கி, அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இப்படி விவசாயத்தை ஒட்டியிருக்கிற ஓர் உற்பத்தி, அது கரும்பாக இருந்தாலும், உரமாக இருந்தாலும், அந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒரு corpus fund வாங்கி வைத்து, deposit செய்து, அதிலேயிருந்து வருகின்ற வட்டியைத்தான் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், நீங்கள் ஏற்கெனவே கட்டடத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கு என்ன சொன்னீர்களோ அந்த வழிமுறையை ஒட்டித்தான் நாங்கள் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, ஓராண்டு காலமாக இருக்கிற இந்த ஆட்சி அதற்கு வேண்டிய பெரிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். ஓராண்டு காலமாக, நாங்கள் முயற்சிக்கிறோம், சிந்திக்கிறோம் என்று சொன்னால், அது பலனளிக்காது. எனவே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, கேள்வி கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு அமைச்சரவர்கள், விரைவாக, தொடர்ந்து இந்த விவசாயத் தொழிலாளர்கள் நலம் பெறுகின்ற வகையில், உடனே அதற்கு வேண்டிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். எது எதற்கெல்லாம், உடனே, உடனே என்று சொல்லும்போது, தொழிலாளர்களுடைய துயரைத் துடைப்பதற்கு உடனடியாகக் கொண்டு வரவேண்டும். கொண்டுவர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக நான் உங்களிடம் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இ) ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயப் பொருள்கள் மீது வசூல் செய்யப்படும் செஸ் தொகையில் 1 சதவிகிதம், அந்த விற்பனைக் கூடங்கள் மூலம் வசூல் செய்வது.

இதிலேயும் நாங்கள் சட்டத் திருத்தம் கொண்டு வரவிருக்கிறோம். ஆகவே சட்டத் திருத்தம் கண்டிப்பாகக் கொண்டுவரப்படும். இந்த வாரியம் நல்ல முறையில் நடத்தப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 09-02-2001-லிருந்து விவசாயத் தொழிலாளர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது என்று கூறியிருக்கிறார்கள். 31-01-2002 வரையில் 7,21,447 நபர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளார்கள் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தந்துள்ளார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் புதியதாக — ஓராண்டு காலமாகப் போகிறது. — எவ்வளவு உறுப்பினர்களை இந்த அரசு சேர்த்திருக்கின்றது? அப்படி விவசாய மக்களை இந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அரசு என்ன முயற்சி செய்திருக்கிறது? அதோடுமட்டுமல்ல. ரூபாய் 7 கோடியே 21 இலட்சம் தற்போது நிதி கையில் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற இந்த நிதியில் இந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-01-2002 வரையில் 7,21,447 நபர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ரூ.7.21 கோடி பங்களிப்புத் தொகையைப் பெற்றிருக்கிறது. இது விவசாயத் தொழிலாளிகளிடமிருந்து. They are the employees. Employer-ஐ நான்கு category-ஆகப் பிரித்திருக்கிறார்கள். முதலாவதாக வருபவர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



2002 ஏப்ரல் 22] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

மூலம் கொள்முதல் செய்யும் நெல் அளவில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1 வீதம் அக்கழகம் மூலம் வசூல் செய்வது. Number one.

முற்பகல் 11-30

(2) தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில் கரும்பு விற்பனை செய்வதில் டன் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் அந்த ஆலைகளின் மூலம் வசூல் செய்வது,

(3) தனியார் மற்றும் கூட்டுறவு ஆலையில் சர்க்கரை விற்பனையில் டன் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் அந்த ஆலைகள் மூலம் வசூல் செய்வது,

(4) ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயப் பொருட்கள் மீது வசூல் செய்யப்படும் செஸ் தொகையில் 1% அந்த விற்பனைக் கூடங்கள் மூலம் வசூல் செய்வது.

ஆக இதன் மூலமாக 4 கோடி வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த 3, 4-ல் சட்டத் திருத்தம் கொண்டு வந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வாரியத்திலே அலுவல் சார்பிலே 9 உறுப்பினர்கள்; நில உரிமையாளர் 9 பேர், விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகள் 9 பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்று இரண்டு அல்லது மூன்று பேரை நல வாரியத்திலே உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்கிற எண்ணம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேபோல, இதிலே பயன்பெறுபவர்களுடைய அடிப்படைத் தகுதியாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் அல்லது ஒரு ஏக்கர் நன்செய் நிலம், அல்லது இரண்டரை ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருப்பவர் என்று இருக்கிறது. இப்பொழுதுகூட நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களில், 5 ஏக்கர் வைத்திருப்பவர்களெல்லாம் சிறு விவசாயிகளாகக் கருதப்பட்டு கடன் வழங்கப்படுகிறது. ஆகவே நிலமற்ற விவசாயத் தொழிலாளர் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம், 2½ ஏக்கர் நன்செய் நிலம் என்று சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[திரு. ப. அரசன்] [2002 ஏப்ரல் 22

அதேபோல 7,21,447 பேர் பதிவு செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பதிவு செய்தவர்களிலே இதுவரைக்கும் பலன் அடைந்தவர்கள் எத்தனை பேர்? கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து நிவாரணம் போன்றவற்றிலே பயன்பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதை அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உரிமையாளர் பிரதிநிதிகள் யார் என்பதையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே டாக்டர் கே.பி. இராமலிங்கம், முன்னாள் எம்.பி., திருமிகு இராசமாணிக்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்; டி.எஸ்.என். சங்கரலிங்கம், திண்டுக்கல் மாவட்டம்; சி.பி. சீனி அய்யா, கன்னியாகுமரி மாவட்டம்; திரு. குட்டி அருணாசலம், திருவண்ணாமலை மாவட்டம்; போடி இராமநாதன், தேனி மாவட்டம்; பெரிய உதயகுமார், பெரம்பலூர் மாவட்டம்; சந்திரஹாசன், தஞ்சாவூர் மாவட்டம்; ஹைதர் அலி, திண்டுக்கல் மாவட்டம்; இவர்கள்தான் விவசாயிகளுடைய நில உரிமையாளர் பிரதிநிதிகள்.

அடுத்தாற்போல் பாருங்கள். விவசாயத் தொழிலாளர்களுடைய பிரதிநிதியாக யார் என்று நீங்கள் கவனியுங்கள். திரு. கே.எஸ். விஜயன், எம்.பி.; விவசாயத் தொழிலாளியினுடைய பிரதிநிதி, திரு. செல்லமுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. இரா. முத்தரசன், திரு. நடராசன், திரு. மு. கந்தசாமி, திரு. லட்சுமணன், திரு. சிவசுப்ரமணியன், திரு. லோகநாதன். ஆக விவசாயிகளுடைய நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட வாரியத்திலே நில உரிமையாளர் பிரதிநிதிகள் யார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நில உரிமையாளர்கள் மட்டுமல்ல, நிலத் தொழிலாளர் பிரதிநிதிகள் யார் என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் இதற்காக amendment சீர்திருத்தம் கண்டிப்பாகக் கொண்டுவரப்படும் என்று சொல்லி, நல வாரியம் கண்டிப்பாக சீர்திருத்தப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இங்கே விளக்கம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இதுவரையிலே 7.21 கோடி உறுப்பினர் தொகையாகப் பெறப்பட்டிருக்கிறது. இதனாலே பயனடைந்தவர்கள் எவ்வளவு பேர்?



2002 ஏப்ரல் 22] [திரு. ஜி. கே. மணி]

கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை போன்ற பல்வேறு நிவாரணங்கள் வழங்குவதாக அமைச்சரவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதுவரையிலே பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர்? அப்படி பயன் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்று சொன்னால், இல்லையென்று சொல்லவும். அதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** திரு. மணி அவர்களுக்கு Employer and Employee Relationship தெரியவில்லை என்று நினைக்கிறேன். தொழிலாளிகளிடமிருந்துதான் இப்போது ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் Employers-களிடமிருந்து நாங்கள் Collect பண்ணி வாங்கவில்லை. ஆகவே உங்களுக்கு நன்றாகத் தெரியும். தொழிலாளர் நல வாரியத்திற்காக, தொழிலாளர் நலனுக்காக இந்த அரசாங்கம் இருக்கிறது. இப்போது விவசாயிகளிடத்தில்தான் நாம் வாங்கியிருக்கிறோம். அவர்கள் தொழிலாளிகள். They are the employees. Employer-இடமிருந்து—முதலாளிகளிடமிருந்து—வாங்கவில்லை. அதற்காக சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. கடந்த கால ஆட்சியிலே செய்த சட்டத்தின் விளைவாகக் கொண்டுவரப்படுகிறது. மீண்டும் அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மணி; (குறுக்கீடு) பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற கருத்தும், திரு. கோலப்பன் குழுவிற்கு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிற உறுப்பினர்களுடைய கருத்துக்கும் முரண்பாடு இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். கோலப்பன் குழுவினுடைய அறிக்கையைத் தனியாக, விவசாயத் தொழிலாளர்கள் நல வாரிய அறிக்கையைத் தனியாகச் சமர்ப்பிக்க வேண்டும். நல வாரியம் என்பது வேறு; கோலப்பன் குழுவினுடைய நல வாரியம் என்பது தனி. இந்தச் சிபாரிசுகள் என்பது வேறு. இரண்டையும்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 22

போட்டு குழப்பி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆகவே அந்த வாரியத்தினுடைய அறிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குழப்பவில்லை. நான் படிப்பதை நன்றாகக் கவனியுங்கள். "Contribution payable under the scheme shall comprise the contribution payable by the employer". 'Employer' என்றுதான் சொல்லியிருக்கிறது. அதாவது கடந்த கால ஆட்சியிலே - நான் கடந்த கால ஆட்சியிலே கொடுத்த Notification-ஐத்தான் இங்கே படிக்கிறேன். நீங்கள் அறிக்கையைப் படிக்கிறீர்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள். (குறுக்கீடு). முடிந்துவிட்டது அது. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** கொஞ்சம் விளக்கம் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நல்ல healthy argument, கொஞ்சம்......

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 49 முதல் 55 வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



2002 ஏப்ரல் 22]

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) இது முடிந்துவிடட்டும். (குறுக்கீடு) முடிந்துவிடட்டும். அறிமுகம் பண்ணிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை இப்பேரவையில் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லலாம்.

[2002 ஏப்ரல் 22

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை - சட்டத்தினுடைய முன்வடிவை — இந்த அவையில் முதல் முதலாக அறிமுகப்படுத்துகிறபோதே அதனுடைய நோக்கத்தில் மாறுபாடு இருக்குமானால், சட்டத்திலேயே மாறுபாடு இருக்குமானால் இந்த அவையிலே உள்ள உறுப்பினர் அல்லது அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதற்கு எதிர்ப்பு அல்லது மாறுபாடு தெரிவிக்க உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) உரிமை உண்டு.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அதற்கு..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்று சொல்லவில்லை. திரு. துரைமுருகன் வேறு ஏதோ கேட்கிறார் என்பதாகத்தான் நினைத்தேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** தாங்கள் அவைத் தலைவர் என்ற முறையில் அது நிறைவேறியதாகவே சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (சிரிப்பு) திரு. துரைமுருகன் எழுந்து அதை எதிர்க்கிறோம் என்று சொல்லியிருந்தால் எனக்குத் தெரியும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அதை நிறுத்தி வைத்துக்கொண்டு மாறுபட்ட கருத்தைச் சொல்ல.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அவையினரை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி அமைப்புகளிலே ஒரு நபருக்கு ஒரு பொறுப்பு என்கிற சட்டத் திருத்தம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் வருவதிலே எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எந்த ஓர் உறுப்பினரையும் பாதிக்கக்கூடாத அளவுக்குத்தான் இந்தச் சட்டம் இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. ஆக அப்படிக் கொண்டுவருவது என்பதை நாங்கள் ஆட்சேபிக்கின்றோம். ஆக எதிர்வரும் தேர்தலிலேதான் ..... (மணியடிக்கப்பெற்றது)



2002 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பழனிசாமி. இதிலே சொற்பொழிவு கிடையாது. ஆய்வுக்கு வருகிறபோதுதான் கருத்து சொல்லலாம். எதிர்க்கிறோம் என்பதைத்தான் சொல்லலாம். (குறுக்கீடு) எதிர்க்கிறோம் என்று சொல்லுங்கள்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து, தற்போது இது தேவையில்லை. இப்போது நடப்பில் இருப்பது தொடரட்டும். வருகின்ற தேர்தலிலேயிருந்து இதை நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** பாரதிய ஜனதா கட்சியின் கருத்தும் இதையொட்டித்தான் அமைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதையொட்டி?

**திரு. ஜெக. வீரபாண்டியன் :** நம்முடைய பொதுவுடைமைக் கட்சி இதை ஏற்கவில்லை. மற்ற எல்லா எதிர்க்கட்சிகளும் இதை ஒரு பொது விவாதத்திற்கு விடவேண்டும். இதற்கு retrospective effect கொடுக்கக்கூடாது. பின்தேதியிட்டு என்கிற சலுகையும் அதற்கு இருக்கக்கூடாது என்று கூறி இருக்கின்றன. அதைப்போல அவையிலே யாராவது உறுப்பினர்கள் இருந்தால் அவர்களைப் பாதிக்கின்றவகையிலே - இந்தக் கருத்து - சட்டமுன்வடிவு இருக்கக்கூடாது என்பது பாரதிய ஜனதா கட்சியினுடைய கருத்து.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட ஊராட்சிகள் திருத்தச் சட்ட மசோதாவை அறிமுகநிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு ஆழ்ந்த ஆய்வுக்குப் பின்னாலே கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதே சந்தேகத்திற்குரிய ஒன்று. காரணம், இம்மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலே ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக இருந்தால், நபர் எவரும் இருப்பாரேயானால், அந்நபர் மேயராகவோ அல்லது துணை மேயராகவோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு இருப்பதற்குத் தகுதியுடையவராக ஆகமாட்டார்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 22

அதுவே கீழேயும் வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினராக ..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. என்ன objection என்று சொல்லலாம். என்ன objection என்று தாராளமாகச் சொல்லலாம். What is our objection? சும்மா அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று சொன்னால் அர்த்தமே கிடையாது எங்களுடைய ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் உங்களுக்கு அடுத்தவர். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, நான் அரை நிமிஷம்கூட எடுத்துக்கொள்ளமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரை நிமிஷம்கூட எடுத்துக்கொள்ளமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சொல்கிற கருத்து அடுத்த திருத்தத்தை ஒட்டியது. (குறுக்கீடு) சரி, சரி, சரி, சரி.

முற்பகல் 11-40

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாடாளுமன்ற உறுப்பினராகவோ சட்டமன்ற உறுப்பினராகவோ இருக்கின்ற ஒருவர் நகராட்சியினுடைய ஏதாவது ஒன்றில் அல்லது பேரூராட்சியினுடைய தலைவராக, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அல்லது அவ்வாறு இருப்பதற்குத் தகுதி உடையவராகமாட்டார் என்று சொன்னால் என்ன பொருள் வருகிறது என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் மேயர் பதவிக்கு நிற்கமுடியாது. நாடாளுமன்ற உறுப்பினராக நிற்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் அதை எடுக்கவே இல்லையே

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாடாளுமன்ற உறுப்பினராக முடியாது. ஆனால் மேயராக இருப்பவர் சட்டமன்றத்திற்கு நிற்கலாம்.



2002 ஏப்ரல் 22] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

நாடாளுமன்றத்திற்கும் நிற்கலாம். அதுதான் இதனுடைய பொருள். ஆக முழுமையான கவனம் செலுத்தப்படவில்லை. எனவே இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்ப்பதோடு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதல் சட்டத் திருத்தம் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் அவற்றுக்குத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் அது ஏற்கப்பட மாட்டாது என்ற முறையில் அமைந்திருப்பதால், இதற்காக வந்திருக்கிற இந்தத் திருத்தம், இன்று இரண்டிலும் இருக்கிறவர்கள் பதவியைவிட்டு விலக்கப்படுவார்கள் என்ற முடிவிற்கு வழி செய்கிறது. ஏற்கெனவே மிகப் பெரிய அளவிலே தேர்தல் நடைபெற்று உள்ளாட்சி மன்றங்களிலே பல பேர் வெற்றிபெற்று வந்திருக்கிறார்கள். அப்போது இந்த விதிமுறைகள் இல்லாத ஒரு நிலைமையில் அவர்கள் பல பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சில இடங்களில் இப்போது உள்ளவர்கள் விலகினால் இன்னொருவர் வருவதுகூட சில இடங்களில் தடைப்படும். தடைப்படுகிற அளவிற்கு சமூகச் சூழ்நிலைகள் இருக்கக்கூடும். மற்றும் ஒன்று. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அடுத்து வரவிருக்கிற சட்டத் திருத்தத்திற்கும் மறுப்பு சொன்னார்கள். ஏற்கெனவே சட்டமன்ற மேலவை இருந்த காலத்தில் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக ஆறுபேர், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றம் சார்பாக 6 பேர் இடம் பெறுவார்கள். தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி மன்றங்களிலே உள்ள உறுப்பினர்களால் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்டு 6 பேர் இடம் பெறுவார்கள். இப்போது மேலவை இல்லை. ஆகவே ஒருவர், இருவர் உள்ளாட்சி மன்றங்களிலே இடம் பெற்றவர்கள் இங்கேயும் இடம் பெறுவதோ அல்லது இங்கே இடம் பெற்றவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் இடம்பெறுவதோ ஒரு பாதகம் அல்ல. ஒருவருக்கே இரண்டு பதவி கூடாது என்று சொல்கிற கருத்து ஒரு உயர்ந்த கருத்து. எனக்குத் தெரியும், ஒரு பதவி வைத்துக்கொண்டு எல்லாப் பதவியையும் அடக்கி ஆளக்கூடிய வல்லவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். ஒரே பதவிதான் எனினும் அதை வைத்துக் கொண்டு எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அது அல்ல பிரச்சினை. ஒருவேளை இரண்டு பதவியில் சிறந்த முறையில் பணியாற்ற முடியாது என்று சொல்லப்படுகிற கருத்து உண்மையானால் இனி வரவிருக்கிற தேர்தல்களுக்கு இந்த

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 22

விதிமுறைகளைக் கையாளுவதை நான் வரவேற்கிறேன். ஒருவருக்கு இரண்டு பதவி அளிக்கிற வாய்ப்பை உருவாக்கக் கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஏற்கெனவே இடம்பெற்று விட்டவர்கள் உடனே நீக்கப்பட வேண்டும் என்று சொல்வதும் குறிப்பாக அடுத்து வருகிற அந்தச் சட்டத் திருத்தத்தில் மாநகராட்சி மன்றங்களைக் குறிப்பிடுகின்றபோது நான் பார்த்தவரையில் ஒரே ஒரு மாநகராட்சி மன்றத்தில் மேயர் ஒருவர் மட்டுமே இதனால் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறதே தவிர வேறு எங்கேயும் அந்த நிலைமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதுவும் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் அப்படி ஒரு கருத்தைச் சொல்லியுள்ள காரணத்தால் இதற்கு ஒரு நோக்கம் இருப்பதாகக் கருத இடம் இருக்கிறது. ஆகவே நான் இந்தத் திருத்தங்களை ஒட்டி வரவிருக்கிற அந்த மசோதாவையும் நான் முன்கூட்டியே இம்மன்றத்தில் வருவதற்கு முன்னதாகவே எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேர[illegible] அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமை[illegible] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முன்மொழிந்த இந்தத் தீர[illegible] மீது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அறிமுகம்தான் செய்திருக்கிறார்.

**திருமதி டி. யசோதா:** அறிமுகம் செய்வதற்கு எடுத்துக் கொண்ட இந்தத் தீர்மானத்தில் எங்களுடைய கட்சியினுடைய சார்பாக ஒருவருக்கு இரண்டு பதவிகள் கூடாது என்று இருந்தாலும்கூட ஏற்கெனவே நடந்து முடிந்துவிட்ட ஒரு தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு வருங்காலத்திலே இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான கால அவகாசம் நீட்டித்து தனி அதிகாரிகளை நியமிப்பதற்கான சட்டம் இது.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வு இல்லை இது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆய்வு இல்லை. இப்போது தேர்தல் நடத்தியதாக சொல்லப்பட்டிருக்கிற கீரிப்பட்டி, பாப்பாபட்டியில், பாப்பாபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் இராஜினாமா

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 22

பண்ணிவிட்டார். இப்போது இருப்பதைப் போன்ற அர்த்தத்தோடுதான் இந்தச் சட்டத்திலே வந்திருக்கிறது. அதனால் தேர்தல் நடத்துவதற்கான முயற்சியை எடுக்கிற அதே வேளையிலே அதை உறுதி செய்வதற்கான முயற்சியும் இல்லாதபோது வெறும் தனி அலுவலர்களைப் போட்டு நீட்டித்துக்கொண்டிருப்பது என்பது ஜனநாயக ரீதியான தேர்தல் நடத்தி உத்தரவாதப்படுத்துவதற்கான முயற்சியாக இல்லாமல் இருக்கிறது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்து தேர்தலை நடத்தியிருக்கிறது. அந்தத் தேர்தலை நடத்தி அதிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) சந்தானம் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** தேர்தலை நடத்தி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் உண்மைதான். இன்றைக்குக் குரல் கொடுக்கின்ற இவர்கள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக அங்கே தேர்தலை நடத்தி ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்குக்கூட முடியாத நிலை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) என்ன துரைமுருகன்?

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியும். இந்த மன்றத்திலே ஒரு மசோதாவை அறிமுகம் செய்கிறபோது அதை நாங்கள் எதிர்க்கிறோம், ஏன் எதிர்க்கிறோம் என்று இரண்டு வரிகளிலே காரணங்களைச் சொல்லலாம். ஆனால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்திருக்கின்றார்கள். அதன்மீது இப்போது விவாதம் அல்ல. ஆனால், இருவரும் விவாதத்தை நடத்துகிறார்கள், அதை அனுமதிப்பது இந்த மரபுக்கு உகந்தது அல்ல என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அவ்வளவுதான்.



2002 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சியின் சார்பாக ஒரு கருத்தைச்சொல்கிறார், அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** கருத்து accept-ஆ இல்லையா என்றுதான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்....

[2002 ஏப்ரல் 22

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுகப்படுத்துகிறபோதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்டிருக்கிற 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

* **திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தைத் தொடக்க நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

* **திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா தேவையற்ற ஒன்று. காரணம், இதனாலே மிகப் பெரிய ஒரு பிரச்சினை உருவாகாது. இந்த மாமன்றத்தில் தெரிவித்ததைப்போல, ஸ்டாலின் என்கிற ஒரு தனி மனிதனை வீழ்த்துவதற்காக கொண்டுவரப்பட்டதா என்று நாங்கள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வுக்கு வரட்டும். இப்போது எதிர்க்கிறோம் என்று சொன்னால் போதும்.

**திரு. துரைமுருகன்:** எனவே, இதை எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது அறிமுக நிலையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க்கணக்கில் ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,69,86,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 5283, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனத்திற்கு என தரக்கூடிய மானியத்தைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 707, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 என விலை நிர்ணயம் செய்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4858, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3824, திரு. என். நன்மாறன்,

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7396, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3800, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3908, திரு. எச்.எம். ராஜு.

* **திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4013, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1323, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் முந்திரிப் பழத்தைக் கொண்டு முந்திரி பழச்சாறு ஆலை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7990, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4205, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1939, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5308, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7532, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5848, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5336, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 817, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7186, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல், கரும்பு, தேயிலை போன்ற விளைபொருள்களை கட்டுப்படியாகும் விலைக்கு விற்பதில் விவசாயிகள் படும் துயரங்களை கருத்தில் கொண்டு அதனைப் போக்குவதற்காக நிரந்தரமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1898, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6991, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 999, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6955, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7031, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5945, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆயுர்வேத சித்த மருத்துவமுறைகள் மேலைநாடுகளில் மிக வேகமாகப் பரவி வருவதால் மூலிகைச் செடிகளை அதிக அளவில் பயிர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,99,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1507, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7800, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6042, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1267, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5134, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளின் விளைபொருட்களைப் பாதுகாத்திட குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க். கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5537, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல் பயிரினைத் தொடர்ந்து பத்தாண்டுகளாகத் தாக்கிவரும் குலைநோய் மற்றும் குருத்துப் பூச்சியினைத் தடுத்து, நெல்பயிரினைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2362, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீண்டநாள் கோரிக்கையான பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4645, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 422, திரு. கோவை தங்கம்.





**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள விவசாயிகளின் நன்மையை முன்னிட்டு அவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய்களை அரசே கொள்முதல் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8123, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6310, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் தரமான பருத்தி சாகுபடி செய்யப்படுவதால் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தரமான பருத்தி விதைகளையும் பூச்சி மருந்துகளையும் மானிய விலையில் கிடைக்கச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6018, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்திலுள்ள பழங்கள் பதப்படுத்தும் யூனிட்டை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8188, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொன்னேரி தொகுதியில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். இவர்களின் உற்பத்திப் பொருட்களைக் கெடாமல் பாதுகாக்க குளிர்சாதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3853, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னை மரத்தில் செவந்திப் பூச்சி தாக்குதலால் விவசாயிகள் பாதித்துள்ள நிலை அதைப் போக்குவது பற்றி விவாதிக்க, தென் பகுதியில் மதுரை மாவட்டத்தில்தான் அதிகம் தேங்காய் விளைகின்றது. அங்கு ஏற்கெனவே இருந்த கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையத்தைத் திறக்க வேண்டுமென' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,99,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7348, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 913, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5238, திரு. ப. அரசன்.



2002 ஏப்ரல் 22]

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2061, திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 340, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள சிறிய தேயிலை விவசாயிகளுக்கு தாமதம் இல்லாமல் உரம் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,99,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6411, திரு. டிகே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கு உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை அரசு மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7109, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7730, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7119, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.599,76,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,69,86,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னால் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம், திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை வழங்குகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்பதற்கேற்ப தமிழகத்தின் அச்சாணியாக அமைந்துள்ளவர்கள் உழவர் குடிமக்கள். இவர்கள் வாழ்க்கை வளம் பெற, வேளாண்மை சிறப்புற, தேவை நீர் வளமும், நில வளமும் ஆகும். இதைச் செய்து தருவதுதான்—இந்த அரசினுடைய முக்கியக் கடமையாக எடுத்துச் செய்ய வேண்டும் என்றுதான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை வளர்ச்சி பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் குறித்து ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2001-2002 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் சராசரி வளர்ச்சி 1991–96 ஆம் ஆண்டு காலகட்டத்தில், ஆண்டு ஒன்றுக்கு 4.33

@ 149 முதல் 270 வரையிலான பக்கங்களில் இணை அச்சிடப்பட்டுள்ளது.

சதவிகிதமாக இருந்தது என்றும், 1996–2001 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 2.66 சதவிகிதமாகச் சரிந்துள்ளது எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 2002–2003 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே, 1996–2001 ஆம் ஆண்டு வேளாண்மை வளர்ச்சி, 2.72 விழுக்காடாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி, புள்ளிவிவரங்களைத் தயாரிப்பதிலும் இந்தத் துறை எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டு— கடந்த ஆண்டு எங்கள் ஆட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு புள்ளிவிவரத்தையும் இன்றைக்கு இந்த ஆட்சியில், மீண்டும் எங்கள் ஆட்சியைக் குறை சொல்வதற்கு— ஒரு தவறான புள்ளிவிவரத்தையும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தந்திருக்கிறார்கள் என்றால், இதுதான் வேளாண்மைத் துறை வளர்ச்சியிலே அந்தத் துறை காட்டுகின்ற அக்கறையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை அவர்கள் வழங்கினார்கள். 1996-97-ல் வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் மீதான அபராத வட்டி 50 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தார்கள். குறுகிய காலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டதால் ரூபாய் 62.32 கோடி; தவணை தவறிய கடன் செலுத்திய 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெரிய விவசாயிகளுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டதால் ரூபாய் 13.20 கோடி. இவ்வாறு வட்டித் தள்ளுபடி மற்றும் கடன்களின் கால அளவு மாற்றம் செய்யப்பட்டதால்— அரசு ஏற்ற செலவு மட்டும்—மொத்தம் 200 கோடி ரூபாயை தலைவர் கலைஞருடைய ஆட்சி விவசாயிகளுக்காக கடந்த 5 ஆண்டுகாலத்திலே வழங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக கோலப்பன் கமிட்டி அமைத்து, அந்தப் பரிந்துரையை ஏற்று, தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபாயும், ஏர், மாடு இல்லாத தொழிலாளர்களுக்கு 54 ரூபாய் என்றும் கூலி உயர்வை நிர்ணயம் செய்து விவசாயத் தொழிலாளர்களுக்காக நல வாரியத்தையும் கடந்த ஆட்சியிலே நாங்கள் உருவாக்கித் தந்தோம். இப்படி பல்வேறு திட்டங்கள் விவசாயத் துறையின் வளர்ச்சிக்காக எங்களுடைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன. ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? தஞ்சாவூர் முதற்கொண்டு 5, 6 மாவட்டங்களிலே புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, மழையினால்



பாதிக்கப்பட்ட விவசாயிகள் இன்றைக்கு நெல்லை விற்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 1995-96 ஆம் ஆண்டு ஆட்சியிலே நீங்கள் கொள்முதல் செய்த அளவு 2.45 இலட்சம் டன்தான்; உங்களுடைய ஆட்சியிலே, கடைசி காலத்திலே கொள்முதல் செய்தீர்கள். ஆனால், இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பாக நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசுகின்ற நேரத்திலே புள்ளி விவரங்களைத் தந்தார். 1996-97-லே 9.77 இலட்சம் டன்னும், 1997-98-லே 11.37 இலட்சம் டன்னும், 1998-99-லே 11.81 இலட்சம் டன்னும், 1999-2000-ல் 12.13 இலட்சம் டன்னும், 2000-2001-ல் 19.74 இலட்சம் டன்னும், 2001-2002-ல் 10.50 இலட்சம் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று இன்றைக்கு நீங்கள் சொன்னீர்கள். ஆகவே, கடந்த 5 ஆண்டுகாலமாக கலைஞர் ஆட்சி— விவசாயிகள் மேல் எந்த அளவு அக்கறை எடுத்துக்கொண்டால்— உற்பத்தி செய்த அத்தனை நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அந்த விவசாயிகளிடம் கொள்முதல் செய்தது என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இன்றைக்கு நெல் கொள்முதலை நிறுத்திவிட்டீர்கள். இந்த நெல் கொள்முதலை நிறுத்திவிட்டதால் என்ன நிலைமை? இன்றைக்கு விவசாயிகள் நெல்லை விற்க முடியாமல் இந்த 5 மாவட்டங்களிலே மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெல்லினுடைய விலை இன்றைக்கு மிகக் குறைந்திருக்கிறது. ஆனால் உங்களுக்கு சத்துணவுத் திட்டத்திற்கும், ரேஷன் கடைகளுக்கும் அரிசி வழங்க வேண்டுமானால் இந்த அரசு அந்தப் பகுதிகளிலே எல்லாம் கட்டாயக் கொள்முதல் செய்கிறது. அப்போது விவசாயிகள் தாங்கள் விளைவிக்கக்கூடிய பொருளை விற்பதற்கு உரிமை இல்லை. ஆனால் இன்றைக்கு அவர்கள் உற்பத்தி செய்த, அதிகமாக உற்பத்தியான நெல்லை வாங்குவதற்கு இந்த அரசு தயாராக இல்லையென்றால் எதற்காக இரட்டை வேடத்தை இந்த அரசு போடுகிறது என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

இன்றைக்கு விவசாயிகள் சொல்கிறார்கள். 'காடு வௌஞ்சென்ன மச்சான் நமக்கு கையுங் காலுந்தானே மிச்சம்' என்கிற நிலை இன்றைக்கு தமிழகத்திலே உருவாகி இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தலைவர் கலைஞர் ஆட்சியிலே கொள்முதலுக்காக கூடுதல் ஊக்கத் தொகையைக்கோரி எங்கேயும் போராட்டம் இல்லை. ஆனால் இன்றைக்கு விவசாயிகள் எல்லா மாவட்டங்களிலும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கொடுத்த நெல்லுக்கு பணம் கிடைக்கவில்லை, கொள்முதல் செய்யப்படவில்லை, நெல் தேங்கியிருக்கிறது, மிகக் குறைந்த விலையிலே வியாபாரிகள் கேட்கிறார்கள் என்ற அவலக்குரல் இன்றைக்கு தமிழகத்திலே எங்கெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது என்றால் அதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா, கொள்ளாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளைந்த நெல்லுக்கு விலை கொடுக்கவில்லை என்றும், விவசாயிகள் விளைந்த நெல்லை கொண்டு சென்று விற்றாலும் பணம் கிடைக்கவில்லை என்றும் தவறான கருத்துகளைச் சொல்கிறார்கள். எங்கே அதுபோல நடந்திருக்கிறது, எங்கே அவர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்பதை நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியிலே-ஒரு வாரத்திற்கு முன்பு பத்திரிகையிலே நீங்கள் படித்திருக்கலாம். சாலை மறியல் செய்து—எங்கள் நெல்லுக்கு பணம் கொடுக்கவில்லை என்று விவசாயிகள் சாலை மறியல் செய்து அந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதையும் அதேபோல தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலே எல்லாம் இன்றைக்கு 150 ரூபாய்க்கு நெல் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியிலே நடைபெற்றது, மார்க்கெட்டிங் கமிட்டியிலே நடைபெற்றது. நீங்கள் சொல்வது நெல் கொள்முதலில் எங்காவது பணம் அவர்களுக்கு—அது வியாபாரிகள் வாங்கியது. வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் உள்ளது. அதிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் எங்காவது—நெல் கொள்முதல் நிலையங்களிலே பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொள்முதல் செய்யாததன் காரணமாகத்தான் வியாபாரிகள் இன்றைக்கு வாங்குகின்ற நெல்லுக்கு பணம் தராத ஒரு நிலைமை தமிழகத்தில் உருவாகியிருக்கிறது. நல்ல விலை இன்றைக்கு நெல்லுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் அரசாங்கம் கொள்முதலை நிறுத்தியதன் காரணமாகத்தான் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழுப்பூசணிக்காயை சோற்றிலே மறைக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) யார் கொள்முதல் செய்யவில்லை? கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யவில்லை என்று நீங்கள் தவறான கருத்துகளைச் சொல்லக்கூடாது.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டதால் அந்தப் பகுதிகளிலே எல்லாம் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே போராட்டம், லத்தி சார்ஜ் இவை எல்லாம் இன்றைக்கு தஞ்சாவூர்ப் பகுதியிலே நடந்துகொண்டிருக்கின்றன. (குறுக்கீடு) ஆகவே, கண்டிப்பாக விவசாயிகள் வாழ்க்கையில் அக்கறை கொண்டிருக்கிற ஓர் அரசாக இந்த அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமானால் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமானால், இந்தக் கொள்முதலைத் தொடர்ந்து நடத்தினால்தான் விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல நிலை கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கரும்பு இனிப்பானது; ஆனால் அதைப் பயிரிடும் விவசாயிகள் வாழ்வு இன்றைக்கு கசப்பானதாக இருக்கிறது. ஏனென்றால் பயிரிட்டு ஆலைக்கு அனுப்பிய கரும்புக்கு இன்று வரை பணம் கிடைக்காத சூழ்நிலை பல்வேறு கரும்பு ஆலைகளிலே இருக்கிறது. ஆனால் தேர்தலுக்கு முன்பாக உங்கள் தேர்தல் அறிக்கையிலே நீங்கள் சொன்னீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னீர்கள், இன்றுவரை 8.5 சதவிகிதம் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்குத் தந்தீர்களா என்றால், இல்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவருடைய கருத்தைச் சொல்லி முடித்தபின் கடைசியாக அமைச்சர் பதில் சொல்வார்கள். திரு. பிச்சாண்டி, பேசி முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 10 சதவிகிதம் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்த நேரத்திலே, நீங்கள் இந்தக் கோரிக்கையை தேர்தல் அறிக்கையிலே எல்லாம் சொல்லியிருந்தீர்கள். ஆனால் இன்று வரை வழங்கப்படவில்லை. அதைவிட கொடுக்க வேண்டிய பணத்தையே கொடுக்காத நிலைதான் விவசாயிகளுக்கு இன்றைக்கு அதிக அளவில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பிச்சாண்டி, உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னது உங்களுடைய கட்சியின் தலைவர். அவர் சொல்லவில்லை என்று சொன்னால், நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள். ஒன்று, என்ன சொன்னார்கள் என்று சொன்னால், தேர்தல் அறிக்கை என்பது வேறு; மாநாட்டிலே போடுகிற தீர்மானம் வேறு என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். சட்டமன்றத்தினுடைய குறிப்பேட்டிலேயே ஏறி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நீங்கள் ஆண்ட கடந்த 5 ஆண்டுக்காலத்தில் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்களா? (குறுக்கீடுகள்) கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) தவறான கருத்துகளைச் சொல்லாதீர்கள்; அவையிலே சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் வந்து கொடுத்திருக்கிறோம். தவறான கருத்துகளை அவையிலே சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) முன்னாள் முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்; என்ன, சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், எல்லாவிதமான அறிவிப்புகளுக்கும் 5 ஆண்டுகள் பொறுத்தவுடன் நாங்கள் தருகிறோம். 5 ஆண்டுகாலம் பொறுத்துக்கொள்ளக்கூடாதா என்று உங்களுடைய தலைவர் கேட்டிருக்கிறார்; சொல்லியிருக்கிறார்; அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, Point of Order.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பிச்சாண்டி பேசட்டும். (குறுக்கீடு) சரி. திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.



**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பலமுறை குரல் கொடுத்த எங்களுக்கு, எங்களுடைய கேள்விக்குக் கிடைத்த விடைதான் அது. அதேபோல அப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய நண்பர்கள் எங்களோடு கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட என்னுடைய கேள்விக்கு ஆயிரம் ரூபாய் டன் ஒன்றுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னபோது அரசு அதை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்கிற கருத்தை, இதே அவையிலே இப்போதுகூடச் சொன்னார்கள். ஆகவே, இரண்டுபேரும் மாறி மாறிச் சொல்வதைவிட விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் நீங்கள் எப்போது கொடுக்கப் போகிறீர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சியிலே 10 சதவிகித கரும்புக்கு ஆயிரம் ரூபாய் பண்ணாரி சுகர்ஸ், அரூர் சுகர் மில்ஸ் என்று பல்வேறு சர்க்கரை ஆலைகளிலே நாம் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னது, ஒன்று, அன்றைக்கு தேர்தல் நேரத்திலே நீங்கள் சொன்ன அந்த வாக்குறுதியை விவசாயிகளுக்கு நிறைவேற்றவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள் இன்றைக்கு சர்க்கரை ஆலைகளினுடைய இழப்பு 985.14 கோடி ரூபாய் என்று. அதனால்தான் கரும்புக்குப் பணம் தருவது காலதாமதம் ஆகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் இனிமேல் கரும்பைக் கொண்டு வந்தால் அவர்களுக்குப் பணம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற கேள்விக்குறி விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. அதுமட்டுமல்ல. அதற்கான மாற்று ஏற்பாடு ஏதேனும் இந்த அரசாங்கம் செய்திருக்கிறதா என்று இதுவரை தெரிவிக்கவில்லை. ஆனால் என்ன நிலைமை என்றால், ஆலையிலே கரும்புக்கான பணம் தரப்படுவதில்லை. ஆனால் அவன்

வாங்கிய கூட்டுறவுக் கடன்களுக்கு மட்டும் அரசாங்கம் வட்டி வசூலித்துக் கொண்டிருக்கிறது. அவன் கரும்பு ஆலைக்கு கரும்பைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டாலும் அதற்குப் பணம் தராமல், அவன் வாங்கிய கூட்டுறவுக் கடனுக்கு வட்டி வாங்கிக்கொள்வது இரண்டு தண்டனையாக விவசாயிகளுக்கு இந்த அரசு தருகிறதா, இல்லையா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, விவசாயிகள் கரும்பு பயிரிடுவார்களா என்பதே இன்றைக்கு கேள்விக்குறியாக இருக்கிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும். அதற்குப் பணம் உரிய நேரத்திலே கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தியா விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட நாடு. 70 இலட்சம் மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். ஆனால், இந்த விவசாயிகளுக்கு இந்தியாவிலே வேறு எந்தவொரு ஆட்சியும் செய்யாத அளவிற்கு இலவச மின்சாரம் என்று 15 இலட்சம் பம்புசெட்டுகளுக்குத் தந்த ஒரே அரசு தலைவர் கலைஞருடைய ஆட்சி. தமிழகத்திலேதான் இப்படிப்பட்ட ஒரு சிறப்பான திட்டம் நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட ஒரு திட்டம் விவசாயிகளுக்காக வழங்கப்படவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, கடைசியிலே பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** அந்த அளவுக்கு சிறப்பான ஒரு திட்டம், இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு விவசாயிகள் வாழ்க்கையில் வளம் கொழிக்கின்ற ஒரு திட்டத்தை வழங்கினோம். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை...

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும்



ஒலி) தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறார். இலவச மின்சாரம் என்பது சிறு, குறு விவசாயிகளுக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நீங்கள் விவசாயத் துறை அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். தவறான தகவலைத் தரக்கூடாது.

**THIRU C. GNANASEKARAN**: Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடையிலே குறுக்கிட்டுப் பேசக்கூடாது. திரு பிச்சாண்டி, பேசுங்கள்.

**THIRU C. GNANASEKARAN**: Point of Order, Speaker Sir, (Interruption) Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்தில் இருந்தபோதுதான் 2 நயா பைசா மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காக பெருமாநல்லூரில் இரண்டு பேரைச் சுட்டுக் கொன்றது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதை மறந்துவிடக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சக்ரபாணி:** எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே திருச்சியிலே அடித்தீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புவது எல்லாம், இலவச மின்சாரத்தை யார் ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்தோம் என்கிற பட்டிமன்றமே இந்த அவையில் பலமுறை நடைபெற்றிருக்கிறது. நீங்களே அப்போது அமைச்சராக இருந்தவர்கள். ஆகவே, தயவுசெய்து ஒரு விளக்கத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு— ஏன் என்றால் இரண்டு பேருமே, இது ஒரு பட்டிமன்றமாகப் போய்க் கொண்டிருக்கிறது— இலவச மின்சாரத்தை யார்தான் முதன் முதலில் விவசாயிகளுக்கு அளித்தார்கள் என்பதை ஒரு தீர்ப்பாகச் சொல்லிவிட்டு இனி பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்றாவது சொல்லிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-10

***திரு. துரைமுருகன்:** இந்த இலவச மின்சாரத்தைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகமா அல்லது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியா, யார்தான் கொண்டு வந்தார்கள் என்று பட்டிமன்றம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தீர்ப்பு என்ன என்று கேட்டார்கள். ஆக, யார் கொண்டு வந்தார்கள் என்ற தீர்ப்புக்கு முன்னால் காங்கிரஸ் கொண்டு வரவில்லை என்பது உங்களுக்கே தெரியும். (சிரிப்பு) சிறு விவசாயிகளுக்கு அன்றைக்கு இருந்த அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். சிறு கட்டணத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) அதை எல்லா விவசாயிகளுக்கும் எத்தனை Horse Power வைத்து இருந்தாலும் இலவச மின்சாரம் கொண்டு வந்தவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களுடைய கருத்தை நான் அங்கீகரிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பிச்சாண்டி:** 16 இலட்சம் விவசாய பம்ப்செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி இந்தியாவிலே இன்றைக்கு விவசாயிகள் மிகப் பெரிய பயனை அனுபவிக்கிறார்கள் என்றால் அது தமிழகத்திலே தான் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடம் ஆகிறது. வேறு யாரும் பேச முடியாது. இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவிர மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டாமா? (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேர் கொண்டு வந்ததிலே துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்கள் எல்லாம் நாங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி இன்னும் இரண்டு மணித் துளிக்குள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், அவருடைய நேரத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** விவசாயிகளுக்கு எல்லாம் இலவச மின்சாரத் திட்டத்திலே மீட்டர் வைக்கப்படும் என்ற துயரமான செய்தி இன்றைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அவர் பேசி முடித்துவிடட்டும். அவர் பேசி முடித்தவுடனே உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** விவசாய பம்ப்செட்களுக்கு மீட்டர் அமைப்பதற்கு மட்டும் 400 கோடி ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலையிலே அரசு இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலவச மின்சாரத் திட்டம் தொடரும் என்றும் சொல்லும் இந்த அரசு தேவையில்லாமல் 400 கோடி ரூபாயில் எதற்காக மீட்டரை வைக்கிறார்கள் என்பது விவசாயிகள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு உணவுப் பொருட்களின் மீதான வரியை இரத்து செய்ய வேண்டும். அதனால், ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் உணவுப் பொருட்கள் மீதான வரிகளை எல்லாம் இரத்து செய்ய வேண்டும்.

அதுபோல் உழவர் சந்தைகள். கிராமச் சந்தைகள் என்பது வியாபாரிகள் வியாபாரம் செய்வதுதான் கிராமச் சந்தைகள். அதை மேம்படுத்துவதாக இந்த அரசு சொல்லியிருக்கிறது. விவசாயிகள் நேரடியாக தங்கள் பொருட்ளை விற்பதற்கும், நுகர்வோர்கள் அதை வாங்கி பயன்பெறுவதற்காகவும் உழவர் சந்தைகள் ஒரு சிறப்பான திட்டமாக நடைபெற்றது. அந்தத் திட்டம் பல்வேறு இடங்களிலே இன்றைக்கு நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒட்டன்சத்திரத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் குளிர்பதனத்தோடு 3 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். இன்னும் அந்த உழவர் சந்தையை சீரமைக்கின்ற பணி நடைபெறவில்லை. உழவர் சந்தை என்பது, பயனாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், உழவர் சந்தையை இந்த அரசு தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் நடுவர் நீதிமன்றத்தைக் கொண்டு வந்து அன்றைக்கு ஆணையத்தைப் பெற்று, ஆணையக் கூட்டத்தை கூட்டி அதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித் துளிகளுக்குள் நீங்கள் பேசி முடித்துவிட வேண்டும்.

**திரு. கு. பிச்சாண்டி:** இன்றைக்கு குறுவை சாகுபடி பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் காவிரி நதி நீர் ஆணையத்தை உடனடியாகக் கூட்டி அந்த விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அளவிற்கு, தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி கர்நாடகத்திலே அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து அந்தப் பிரச்சினையை அணுகுகிறார்களோ, அதுபோல் தமிழகத்திலும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்தோடு இந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல செங்கம் தொகுதியிலே குப்பனத்தம் அணை கட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டது. சாத்தனூர் அணையிலிருந்து சமுத்திரம் ஏரிக்கு மேல்மட்டக் கால்வாய் அமைக்கப்படுவதாக கலைஞர் ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. அவையெல்லாம் இன்றைக்கு இல்லாமல் இருக்கக்கூடிய நிலை. ஆகவே, விவசாயத்தை நம்பி இருக்கின்ற மாவட்டங்களிலே குறிப்பாக அணைகளும் இப்படிப்பட்ட பாசனக் கால்வாய்களும்தான் விவசாய உற்பத்தியைப் பெருக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே, அவற்றுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து மிருகண்டா நதித் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய அமைச்சர் சொட்டு நீர்ப்பாசனத்திற்கு 19 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். ஆனால் 9 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது என்று சொன்னார்கள் ஒரு கேள்வியிலே. இன்றைக்கு நீரை நாம் பாதுகாக்க வேண்டும், மழை நீரைச் சேமிக்க வேண்டும் என்று சொல்கிறோம். விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய நீரை, எப்படி இஸ்ரேல் போன்ற நாடுகள் குறைந்த தண்ணீரிலே ஒரு சிறப்பான விவசாயத்தைச் செய்து கொண்டிருக்கின்றனவோ அதுபோல் நம்முடைய பகுதியிலேயும் அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக வேண்டுமானால் அவர்களுக்கும் இந்த் விளக்கத்தை எல்லாம் எடுத்துச் சொல்லி, சொட்டு நீர்ப் பாசனத்தின் மூலம் அனைத்துப் பயிர்களையும் அவர்கள் பயிர் செய்யக்கூடிய அளவிற்கு பணத்தைச் செலவிடக்கூடிய அளவிற்கு அதை மிகக் துரிதமான திட்டமாக இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதுபோல் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு ஒன்றியத்திலே விளையும் விளைபொருட்களை வைத்து ஒரு தொழிற்சாலை தொடங்குவதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற TANCOF தொழிற்சாலையை இன்றைக்குத் தனியாருக்குத் கொடுப்பதாக அறிகிறோம். அங்கிருக்கின்ற விவசாயிகள் மணிலா உற்பத்தி செய்கின்றார்கள். அவர்கள் எல்லாம் அந்த ஆலையைக் கொடுக்கக்கூடாது என்று கோரிக்கை வைக்கிறார்கள். அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கட்டாயமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்த நிவாரணத்தை எந்த ஒரு தடையும் இல்லாமல் பெற முடியும். அரசை நம்பியிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, எந்த ஒரு கூட்டுறவுக் கடனைக் கொடுத்தாலும், அதிலே பயிர் இன்சூரன்சைக் கட்டாயமாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள். பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். செல்வி கனகதாரா. (குறுக்கீடு) மணி. என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி :** ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவே சொல்லி அதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெல் விவசாயிகளும், கரும்பு விவசாயிகளும் அதிக அளவில் உற்பத்தி செய்தும், அவர்கள் உற்பத்தி செய்ததற்கான விலை, அதை விற்பதற்கான சூழ்நிலை இல்லாமல் இருந்தால் வருங்காலங்களில் எல்லாம் நகரங்களை நாடி வந்து கொண்டிருப்பார்கள். நிலத்தை விற்றுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதே நிலை நீடித்தால் நல்ல விளைநிலங்கள் எல்லாம் தரிசு நிலங்களாக மாறிவிடும். இன்றைக்கு தரிசு நில மேம்பாட்டிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற நாம், அந்த நிலங்கள் எல்லாம் தரிசு நிலங்களாக மாறாது, விவசாயிகள் வாழ்க்கையைப் பாதுகாக்கின்ற

பணிகளை நாம் அக்கறையோடு செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கத்திலே ஒரு விவசாயக் கல்லூரியை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, இதோடு பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடு) அதை அப்புறம் பேசலாம். (குறுக்கீடு) 20 மணித் துளிகளுக்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. கு. பிச்சாண்டி:** விவசாயக் கல்லூரியை உருவாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போல பழங்கள், காய்கறிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி, கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** பழங்கள், காய்கறிகள் உற்பத்தியிலே சிறப்பான முறையிலே கடந்த ஆட்சியிலே நடந்ததைக் குறித்து பிசினஸ் லைன் பத்திரிகை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய முப்பெரும் சாதனையைச் சொல்லி இருக்கிறது. அதைப்போல வருகின்ற விவசாய உற்பத்தியிலேயும் நீங்கள் அந்த நிலையை எடுக்க வேண்டுமென்று சொல்லி, வறுமையைப் போக்கவும், விவசாயிகளுடைய பாசன வசதிகளைச் சீரமைக்கவும் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லி, என்னுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி, விவசாயிகளின் காதில் பூ சுற்றாதீர்கள், விவசாயிகளின் வாழ்வில் வளம் சேருங்கள் என்று உரைத்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, என்ன சொல்லுங்கள்?

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்பு இலவச மின்சாரத்தைப் பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு இலவச மின்சாரம் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு வந்த சில தினங்களுக்குப் பிறகு தஞ்சையிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெறக்கூடிய அந்த நிகழ்ச்சியும் நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒரே சலுகை இலவச மின்சாரம், அதை இரத்து



செய்துவிட்டால், விவசாயிகள் தூக்கிலேதான் தொங்க வேண்டுமென்று சொல்லி, எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் தூக்குக் கயிறு போராட்டத்தையும், சாலை மறியல் போராட்டத்தையும் அறிவித்த பிறகு அன்றைய முதலமைச்சர் அவர்கள் இலவச மின்சாரத்தை மீண்டும் அறிவித்தார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னதைப்போல, விவாதம் இல்லாமல் ஓரிரு ஹார்ஸ் பவருக்கெல்லாம் இலவச மின்சாரத்தை அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்து, அதற்குப் பிறகு எத்தனை ஹார்ஸ் பவர் வைத்திருந்தாலும், அத்தனை பேருக்கும், எவ்வளவு நேரம் ஓட்டினாலும் இலவசம் என்று கலைஞர் அறிவித்தார். அதற்குப் பிறகு 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் ஆட்சியில்தான், ஆட்சிக்கு வந்த பிறகு இலவச மின்சாரத்தை இரத்து செய்தார்கள். அதை எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சி போராடியது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் நாடு தழுவிய ஒரு போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி, சிறை நிரப்புகிற போராட்டத்தை நடத்தி, பலர் சிறைச்சாலைக்குச் சென்ற பிறகு, எங்கள் இரு கட்சிகளினுடைய கோரிக்கையினை ஏற்று, மீண்டும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வந்தது என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, விவசாயிகளுக்குச் செய்த மிகப் பெரிய நன்மை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** ஏழை விவசாயிக்கு ஆடை தந்த வள்ளலே, தமிழ்த்தாயே, தங்கத் தலைவியே, தமிழே, எங்கள் உயிர் மூச்சே, தங்க நிலவே, தமிழகத்தின் தாகம் தீர்க்க வந்த தாயே, தர்மத்தின் கருவறையில் பிரசவித்த முழு நிலவே, தமிழகம் போற்றும் தானைத் தலைவியே, தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவியே, நீவிர் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே வேளாண்மை மானியக் கோரிக்கை எண் 5 என்ற

தலைப்பினையொட்டிப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்கின்ற குறளுக்கேற்ப உலகிற்கு அச்சாணி போல் செயல்பட்டுவரும் விவசாயிகளின் வாழ்வு செழிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செயல்பட்டு வருகிறது என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று குறை கூறினார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அரியணையிலே ஏறிய அந்த மறு நிமிடத்திலேயே ஏழை விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க 311 கோடி ரூபாய்க்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து அவர்கள் வாழ்க்கையிலே ஒளி ஏற்றி வைத்தார் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

தமிழக மக்களின் வாழ்வாகவும், தொழிலாகவும் வேளாண்மை இருந்து வருகின்றது. தமிழ்நாட்டில் 70 விழுக்காடு மக்கள் கிராமத்திலே வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். கிராமப்புறப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால்தான் தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும் என்பதைக் கருதி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை விவசாயிகளைப் பாதுகாக்கவும், வளர்ந்துவரும் விஞ்ஞானத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும், தரத்தையும் மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி தமிழகத்தில் 5 ஆண்டுகளில் 20 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளார் என்பதை இந்த நேரத்திலே மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். 10 மாவட்டங்களில் 1,35,095 ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே உழவர்



சந்தை என்று ஒன்று வைத்திருந்தார்கள். அந்த உழவர் சந்தை எவருக்கும் உதவாத சந்தையாகும் என்பதை இந்த நேரத்தில் மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை முடிவு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையின்கீழ் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண்மைக் காடுகள், மருத்துவப் பயிர்கள், எரிசக்திக்குத் தேவையான மரங்கள், தீயணைப்புப் பயிர்கள் போன்ற வர்த்தகப் பயிர்களை விளைவிக்க அம்மா அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணை உற்பத்தித் திறன் தொடர்ந்து நிலைத்திருக்கும் வகையில் அதிகரிக்கச் செய்யவும், ஒவ்வொரு மழைத்துளியைச் சேமிக்கவும், குறைந்த அளவு நீரைக் கொண்டு, அதிக அளவு உற்பத்திச் செய்யவும் அம்மா அவர்கள், தொடர் பசுமைப் புரட்சி என்கின்ற கோட்பாட்டின்மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களை நான் மிகவும் வணங்கி வரவேற்கின்றேன்.

அதைப்போலவே மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றிக்காட்டுவேன் என்று அறிவித்து அதை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். கடந்தகால ஆட்சியிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகளின் நிலைமையைச் சொல்ல நான் வேதனைப்படுகின்றேன். "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பது போல ஏழை விவசாயிகள் கடனுக்காக தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட அவலம், கடனுக்காக சிறுநீரகத்தை விற்ற கொடுமை கடந்தகால திமுக ஆட்சியிலே நடந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஆனால் அம்மா அவர்கள் ஆட்சியேற்ற பிறகு, 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு தமிழகத்தில் எந்த ஒரு குடும்பமும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இல்லாமல் இருக்க அம்மா உறுதி செய்து, அநேக பல சத்தான திட்டங்களை, முத்தான திட்டங்களை வேளாண்மைத் துறையிலே ஏற்படுத்தி வருகின்றார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[செல்வி சி. கனகதாரா] [2002 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-2000 ஆண்டின் வேளாண்மை வளர்ச்சி ஆண்டிற்கு 2.72 விழுக்காடாக இருந்தது. ஆனால் 10-வது நிதிக்குழு காலத்தில், 2002-2007 ஆண்டிற்குப் பிறகு 4 விழுக்காடாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. 1980-1981 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உற்பத்தி வளர்ச்சி Domestic products உற்பத்தியின்கீழ் 25 விழுக்காடு அளவிற்கு வேளாண்மை பகிர்ந்து கொண்டது. அதுமட்டுமல்லாமல் 1999-2000 ஆண்டில் 17 விழுக்காடாகக் குறைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டில் 60 இலட்சமாக இருந்த வேளாண்மைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2001 ஆம் ஆண்டில் 86.65 இலட்சமாக உயர்ந்துள்ளது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதோடு மட்டுமல்ல. More yield, more employment, more income with low cost and no cost என்ற அடிப்படையில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக தோட்டக்கலை உருவாகி வருவதைக் கருத்தில்கொண்டு காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், பதப்படுத்தி மதிப்பு கூட்டி, அவற்றை விற்பனை செய்வதற்கும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மிக நல்ல முறையிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. Mission for Horticulture Development என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் மகசூலை அதிகரிக்க பல சத்தான திட்டங்களை, முத்தான திட்டங்களை அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். மேற்கண்ட இலக்கினை அடைவதற்கு பின்வரும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது:-

அதிக சாக்கரை சத்து இரகங்களை அதிக அளவில் பயிரிடுதல், கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளைச் செயல்படுத்துதல், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து நிர்வாகங்களை மேம்படுத்துதல், நிர்வாகத்தை மேம்படுத்துதல், உயிரின உரங்கள் பயன்படுத்துதல், ஆலை அழுக்கினை உயிர் உரமாகவும், மண்புழு கழிவை உபயோகமாகவும் மாற்றியமைத்தல், இவை யாவற்றையும் நான் பெரிதும் வரவேற்கின்றேன். இவை யாவும்



2002 ஏப்ரல் 22] [செல்வி சி. கனகதாரா]

ஏழை விவசாய, சிறு குடிமக்களின் துயர் துடைக்க அம்மா வகுத்த அற்புதத் திட்டங்களாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கரும்பு பயிரிட சொட்டு நீர்ப் பாசனம். நீர்வளம் தற்போது அரிதாகி விட்டதாலும், வழக்கமான நீர்ப்பாசன முறைகளால் அதிக அளவில் தண்ணீரை உபயோகப்படுத்துவதாலும், தண்ணீரைச் சேகரித்து அதிக பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக கரும்புக்கு சொட்டுநீர்ப் பாசன முறையைப் பின்பற்றவும் அம்மா அவர்கள் அனேக திட்டங்களை வகுத்துள்ளார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அளவிற்கதிகமாக இரசாயன உரங்களை உபயோகித்ததாலும், மண்ணின் மக்குத் தன்மை குறைந்ததாலும், நாட்டின் வேளாண் சுற்றுச் சூழலில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாகவும், இயற்கைப் பண்ணையும் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம், சிங்சல்பேட் உரம் விநியோகித்தல், உரங்கள், உர விநியோகம், பூச்சிநோய்க் கண்காணிப்பு, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, பயிர் வகைகளில் உழவர் வயல்வெளிப் பள்ளி இவற்றினை அமைத்து, இவற்றின் மூலம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பின் அவசியத்தை அம்மா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

தென்னை மேம்பாட்டுத் திட்டங்கள். தமிழ்நாட்டில் தற்போது 3.4 இலட்சம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேரில் சுமாராக 2000 தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. இதற்கென விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தித் திட்டங்களை அம்மா அவர்கள் செயலாக்கி வருகிறார்கள். அம்மாவின் ஆட்சியில் இவையாவும் போற்றுவதற்கும், புகழ்வதற்கும் உரிய திட்டங்களாகும். ஆனால் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் நலன் குறித்து எதுவும் செய்யப்படவில்லை. அவர்கள் வாழ்வு நசுங்கி விட்டது. அவர்கள் துயரைப் போக்குவதற்கு அம்மா அவர்கள்தான் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் வாழ்விலே ஒளியேற்றி வைத்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

224374. சென்னை-600 008

உயிர் உரம் மற்றும் தாவர பூச்சிக் கொல்லி மருந்தின் உபயோகம். தாவரங்கள் மண்ணிலுள்ள சத்துக்களை எடுத்துக்கொள்வதற்கு உயிர் உரங்கள் ஊக்குவிக்கின்றன. உயிர் உரங்கள் தாவரங்களுக்குக் கிடைக்காத நிலையிலுள்ள சத்துக்கள் கிடைக்கும்வண்ணம் இந்த நிலையினை மாற்றி, அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் வகையில் அம்மா அவர்கள் அரிய பெரிய சாதனைகளைச் செய்து வருகிறார்கள். இதற்கென தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளை உள்ளிட்டு 1,000 ஏக்கர் அளவில் மத்திய அரசின் "சுபாக்ஸ்" திட்டத்தின்கீழ் இதற்கான மானியத்தினைப் பெற்று சொட்டு நீர்ப் பாசன வசதியை அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

2002-2003 ஆம் ஆண்டு - 300 ஏக்கர்

2003-2004 ஆம் ஆண்டு - 300 ஏக்கர்

2004-2005 ஆம் ஆண்டு - 400 ஏக்கர்

மொத்தம் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். இது எந்த ஓர் அரசும் செய்ய முடியாத சாதனையாகும்.

பிற்பகல் 12-30

வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம். 1985 முதல் வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தை, மிகச் சிறப்பான முறையிலே மாநிலம் முழுவதும், அமலில் இருந்த விரிவான இந்தத் திட்டத்தை, தேசிய வேளாண்மைக் காப்பீடு என்னும் புதிய திட்டத்தை அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். இத்திட்டத்தில் உணவு தானியங்கள் மட்டுமல்லாமல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பிற வணிகப் பயிர்களுக்கும் செயல்படுத்தப்படுகிறது. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு எந்த ஒரு குறையும் நிவர்த்திக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் உலகிலே மிகக் சிறந்த விஞ்ஞானியான எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை—இந்த உலகத்திலே மிகவும் பெரிய விஞ்ஞானிகள் 13 பேர்தான். அந்த 13 பேர்களில் ஒருவர்தான் எம்.எஸ். சுவாமிநாதன், சீனாவிலே, Asia Food Conference என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள். அந்த சீனாவிலே எந்த ஒரு விஞ்ஞானியையும் அழைக்கவில்லை. ஆனால், எம்.எஸ். சுவாமிநாதனைத்தான் அழைத்து, அந்த விழாவிலே



அவர், தலைமைப் பொறுப்பை ஏற்று, அவர் கருத்தினை வழங்க வாய்ப்பு கொடுத்தார்கள். ஆனால், அம்மா அவர்கள்—அத்தகைய ஒரு பெரிய விஞ்ஞானியை அழைத்து, அவரிடத்தில் இருக்கிற திறமையை அடையாளம் கண்டு, எங்கெங்கெல்லாம் திறமை இருக்கிறதோ, எவரிடத்திலெல்லாம் உண்மை இருக்கிறதோ அவற்றையெல்லாம் அடையாளம் கண்டு, அம்மா அவர்கள் மிக நல்ல முறையிலே—இந்தத் தமிழகத்தை, வேளாண்மைத் துறையிலே—தன் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிற அந்த வேளாண்மைத் துறையிலே, அம்மா அவர்கள், பல விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை, விஞ்ஞானத்தினுடைய அரிய சாதனைகளை, தமிழகத்தினுடைய அடித்தட்டு விவசாய மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் வகையில் அவருடைய தலைமையிலே ஒரு மாபெரும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மிகப் பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன். இது எந்தவொரு தலைவரும், எந்தவொரு அரசியல் தலைவரும் செய்யாத ஒரு சாதனையாகும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் கொஞ்சமாக இருப்பதால், சில கருத்துகளை மட்டுமே நான் முன் வைத்திருக்கிறேன். மத்திய அரசு திட்டங்கள் 2002-2003 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் திட்டம், ஒருங்கிணைந்த வெப்ப வறட்சித் திட்டம், குளிர் மண்டலப் பகுதி அபிவிருத்தித் திட்டம், வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த கோகோ அபிவிருத்தித் திட்டம், காய்கறிகள் மற்றும் கிழங்குப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், காளான் வளர்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த மூலிகைப் பயிர்கள் மற்றும் நறுமணப் பயிர்கள் திட்டம், பசுமைக் குடில்கள் மற்றும் நறுமணப் பயிர்கள் அமைக்கும் திட்டம், இவற்றிற்கெல்லாம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே அதிகமாக வலியுறுத்தப்பட்டு அவை நல்லமுறையில் செயல்படுத்தப்பட உள்ளன என்பதை இந்த நேரத்தில் மிகவும் பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு நான் வந்து விடுகிறேன். அம்மா அவர்கள் அறிவது, தாயே, தமிழே, மொட்டாக இருந்த என்னை பூங்கொத்தாக மலரச் செய்து, மணம் பரப்பி, ஏழை ஆசிரியையாக இருந்த என்னை,

[செல்வி சி. கனகதாரா] [2002 ஏப்ரல் 22

சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்திலே அழகு பார்த்த என் தெய்வமே, பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதியானது, என்றென்றும் புரட்சித் தலைவியின் எஃகுக் கோட்டையாக இருந்து வருகிறது. என்னைச் சார்ந்துள்ள தொகுதி தனித் தொகுதியாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். கண்ணியமிக்க இஸ்லாமியப் பெருமக்கள், சிறுபான்மையினர் வாழ்கின்ற பகுதியாகும். புரட்சித் தலைவி அம்மாவின் எஃகுக் கோட்டையாக இருந்த காரணத்தினால் மட்டுமே எனது தொகுதிக்கு நிறைய வஞ்சனைகளைக் கடந்த கால தி.மு.க. ஆட்சி செய்துவிட்டது. வஞ்சகர்கள் வாழ்ந்ததில்லை; வரலாறு அவர்களை மன்னிக்காது. அம்மா, கடந்தகால ஆட்சியில் 80 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. அந்த நிலையை மாற்றி, இப்போது 20 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. அடுத்த வேளைக்கு உண்ண உணவின்றி, அம்மா, அடுத்த வேளைக்கு டீ கூட அருந்துவதற்கு வழியின்றி என் தொகுதி மக்கள் மிகவும் அல்லல்பட்டு வருகிறார்கள். ஆகவே, கருணை மனம் கூர்ந்து, அன்பின் தெய்வம், கருணையின் தெய்வம், என் தொகுதியில் மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி, தங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

பீடி சுற்றும் தொழிலானது என் தொகுதியில் குடிசைத் தொழிலாகவே இன்று வரையிலும் இருந்து வருகிறது. சம ஊதியம் பெண்களுக்குக் கிடைக்க அம்மா அவர்கள் வழிவகுக்க. வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். "கல்வி கரையில" என்பார்கள். பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் நெடுந்தூரம் சென்று, பஸ் கட்டணம் கொடுத்து, எனது தொகுதியில் உயர்கல்வி தொடரமுடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். அதோடுமட்டுமல்ல. ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் ஆகிய முப்பெரும் எல்லைகளும், சந்திக்கின்ற ஒரு தொகுதியாக எங்கள் தொகுதி இருந்து வருகிறது. மலையின் மீது எனது மாணவர்கள் எல்லாம் சென்று அங்கு சட்டக்கல்வி படித்து வருகிறார்கள். எங்கள் ஊரிலிருந்து கர்நாடகம் செல்ல வேண்டுமென்றால், இரண்டு மணி நேரத்திலே பஸ் ஏறிச் சென்று விடலாம். ஆகவே, அம்மா அவர்கள்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்......

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"



2002 ஏப்ரல் 22] [செல்வி சி. கனகதாரா]

என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழக்கமிட்டு, எங்களையெல்லாம் இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாக அமர வைத்திருக்கிறார். ஆகவே, எனது தொகுதிக்கு அம்மாவின் திருப்பெயரால், ஜெ.ஜெ. அரசு ஆடவர் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

அம்மா, மலட்டாறு திட்டத்தின்கீழ்—இதைச் சொல்கின்றபோது, என் கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. அம்மா, உங்கள் திருக்கரங்களால் அந்த மலட்டாறு திட்டத்தின்கீழ்—பத்திரப்பள்ளி அணைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே, மலட்டாறு திட்டத்தை அவர்கள் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். இங்கே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். கடந்த கால, தி.மு.க. ஆட்சியிலே 121 கோடி ரூபாய் கொடுத்து, மோர்தானா அணையைக் கட்டினார்கள். இந்த மோர்தானா அணை யாருக்கு சோர்தானா, மோர்தானா என்ற வகையிலே பயன்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அம்மா அவர்கள் அறிவது, ஒரு சொட்டுத் தண்ணீர்கூட எனது தொகுதி மக்களுக்குப் பயன்படவில்லை. ஆனால், இந்த அணை யார், யாருக்கு முழுமையாகப் பயன்பட்டது என்று கேட்டால் காட்பாடித் தொகுதிக்கு மட்டுமே, இந்த மோர்தானா அணையானது பயன்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள், இந்த மலட்டாறு திட்டத்தின்கீழ் பத்திரப்பள்ளி அணையைக் கட்டினால், குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் என் சிறுகுடி விவசாயப் பெருமக்கள் வாழ்வில் பயனடைவார்கள். எனது தொகுதியை அம்மா அவர்கள் கருணை மனம் கொண்டு வறட்சித் தொகுதியாக அறிவித்து மறுமலர்ச்சியைக் கொண்டு வரவேண்டுமென்று அம்மாவின் பாதக் கமலங்களைத் தொட்டு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனகதாரா, மற்றவற்றையெல்லாம் எழுதி அம்மாவிடம் கொடுத்து விடுங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** ஒன்றே ஒன்று ஐயா, கடைசியாகச் சொல்லிவிடுகிறேன். அம்மா அவர்கள் அறிவது, கருணையின் தெய்வம்,

அன்பின் வடிவம், தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவி, பெண் இனத்தின் பேரொளி, அன்னை உலகத்தின் அமுதசுரபி, அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, அம்மா அவர்களே, எனது ஊரிலே பெரிய கம்மேஸ்வரத்தில்— சாத்தப்பாக்கம் ஆற்றின் குறுக்கே— ஒரு புதிய மேம்பாலத்தை அமைத்துத் தரவேண்டுமென்று இருகரங்கூப்பி வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலம் வந்துவிட்டால், அந்த ஆற்றின் குறுக்கே, நடந்து செல்வதற்கு பாலம் கேட்டு கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே, 100 பேர் தாய்மார்கள் அங்கே போராட்டம் நடத்தினார்கள். அவர்களையெல்லாம் கைது செய்து காவலிலே வைத்தார்கள். அம்மா அவர்கள் நிச்சயமாக அந்தப் பெரிய கம்மேஸ்வரத்தில் புதிய பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, பேரணாம்பட்டு நகரப்புற நெடுஞ்சாலை கேட்பாரற்றுக் கிடக்கிறது ஐயா. மிக மிக மோசமான நிலையில் இருந்து வருகிறது ஐயா. அம்மா அவர்கள் வருகின்றபோது, என் தொகுதிக்கு வந்தார்கள். அம்மா அவர்கள் கால்கடுக்க 19 இடங்களிலே நின்று, நின்று அம்மா என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அப்பொழுதுகூட, அம்மா கடைசியிலே என்னுடைய தொகுதிக்கு வந்துவிட்டார்கள். ஆனால், அப்போது பாருங்கள், அந்த ரோடு எல்லாம் எப்படி இருந்தது ஐயா. நீங்கள் கூட வந்து பாருங்கள் ஐயா, என் தொகுதிக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குத் தெரியும், கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா :** எனவே கருணை மனம் கூர்ந்து என் தொகுதி நெடுஞ்சாலையை சீர்படுத்தித் தர அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, அம்மா, உண்மைகள் சாவதில்லை, சாவதெல்லாம் உண்மைகளாக இருப்பதில்லை. உண்மைகள் சாவதில்லை.

காரிருளால் நிலவுதான் மறைவதுண்டோ?
கரை சேர்ந்தால் தாமரையின் வாசம் போய்விடுமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாகிவிடுமோ?
பேரழகே, தீந்தமிழே, பெரியோய், திரையிட்டு
மறைத்துவிட்டால் நீங்கள் மறைந்தா போய்விடுவீர்கள்,
இல்லை, இல்லை. அம்மா.



உங்கள் பொற்காலப் பயணம் தொடங்கி விட்டது.
அம்மா அவர்களின் ஆட்சி இந்தியாவிலே நம்பர்-1 ஸ்டேட்.

We take it as a challenge also. - நிச்சயமாக அம்மா எல்லாத் துறைகளிலும் வேளாண்மையை உயிர்மூச்சுக் கொள்கையாக நடத்தி வருகிறார். நடத்தி தம் மனதிலே வைத்திருக்கின்றார். ஆகவே, அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சி, பொற்காலங்களின் பொற்கால ஆட்சியைக் காட்டிலும், குப்தர் காலத்து பொற்கால ஆட்சி, பொற்காலங்களின் பொற்கால ஆட்சியாக விளங்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு, வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு மீண்டும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துகளை எடுத்துரைப்பதற்கு அனுமதி அளித்தமைக்காக எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர், பாராளுமன்ற மேலவை உறுப்பினர், மக்கள் தளபதி ஐயா, திரு. ஜி.கே. வாசன் அவர்களை வணங்கி இந்த மானியக் கோரிக்கையின் மீதான எனது விவாதத்தினைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் விவசாயத் தொழிலைச் சார்ந்தே வாழ்க்கையை நடத்துகின்றனர். ஆகவே, கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால்தான் தமிழகத்தினுடைய பொருளாதாரம் வளர்ச்சியடையும். நம்முடைய வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டதைப் போல

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்கின்ற குறளுக்கேற்ப உலகிற்கு அச்சாணி போல் செயல்பட்டு வரும் விவசாயிகளின் வாழ்வு செழிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு செயல்படும் என்கின்ற கருத்தினை வரவேற்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல வரும் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு எந்தவொரு குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இல்லை என்கின்ற அளவிற்கு தமிழக அரசு செயல்படும் என்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இலட்சியத்தினை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். அதேநேரத்தில் கடுமையான நிதிநெருக்கடி நிலவுகின்ற சூழ்நிலையில் அந்த இலட்சியத்தை அடைவது என்பது எவ்வளவு கடினமான பணி என்பதையும் நான் உணர்ந்திருக்கின்றேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்கின்ற குறளுக்கேற்ப உழவர்களை மற்றவர்கள் எல்லாம் வாழ்த்தி, வரவேற்று, வணங்கி வந்த காலம் மாறி மற்றவர்களை உழவர்கள் வணங்கி குறுகி வாழக்கூடிய நிலையில் உழவர் பெருமக்கள் இன்று இருக்கின்றார்கள். இந்த ஆண்டு பருவம் தவறி, பெய்த பெரும் மழையின் காரணமாக, தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர் போன்ற மாவட்டங்களில் விவசாயிகள் தங்கள் கையில் இருந்த பணத்தையும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாகப் பெற்ற கடனையும் செலவழித்து அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர் எல்லாம் நீரிலே மூழ்கி பெருத்த பாதிப்பிற்கு உள்ளானார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசின் சார்பாக ரூ.48.1 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். இருந்தாலும்கூட, விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பில் பத்தில் ஒரு பங்கைக்கூட ஈடு செய்ய முடியாத அளவிற்கு நிவாரணத் தொகை உள்ளது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியைக் கோரி பெற்று விவசாயிகளுக்கு உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை 2.72 சதவிகிதமாக இருந்த வேளாண்மை வளர்ச்சி விகிதத்தை 2002-2007ஆம் ஆண்டிற்குள் 4 சதவிகிதமாக உயர்த்த உத்தேசித்து அதற்கான செயல்திட்டங்களைத் தீட்டியுள்ளதையும், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் வரவேற்கின்றேன். வேளாண்மைத் துறையில் தோட்டக்கலை மிக



முக்கியமாக இருக்கின்ற காரணத்தினால், காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், அவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்வதற்கும் ஊக்கப்படுத்துகின்ற வகையில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் Mission for Horticulture Development ஒன்று அமைக்கப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன்.

மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சியில் 1980ஆம் ஆண்டுவாக்கில் 25 சதவிகிதமாக இருந்த வேளாண்மையின் பங்கு 2001ஆம் ஆண்டில் 17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஆனால் 1990ஆம் ஆண்டு 60 இலட்சமாக இருந்த விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2001 ஆம் ஆண்டு 86 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதன் அடிப்படையில், தமிழக அரசின் வேளாண்மைத் துறை, more yield, more employment, more income with low cost and no cost என்ற அடிப்படையில் செயல்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கு பாதுகாப்பு அளிக்க முன்வந்திருப்பதை நான் மனதார வரவேற்கின்றேன்.

"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு."

மிக்க பொருள் வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத்தக்கதாய் மிகுதியாய் விளைபொருள் தருவதே நாடாகும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கேற்ப தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பாடுபடும் என்கின்ற அறிவிப்பினை நான் வரவேற்கின்றேன். 5 ஆண்டுகளில் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தி, விளை நிலங்களை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் "தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம்" ஏற்படுத்தியுள்ளதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். அதேநேரத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து முனைப்புடன் நடைபெற்று 5 ஆண்டுகளில் அதன் நோக்கத்தை எட்டுவதற்கு செயல்படுத்துகின்ற அதிகாரிகள் முழுமனதாக அத்திட்டத்தில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில், இந்தச் சபையிலே பல்வேறு உறுப்பினர்கள் கூறியிருந்தாலும்கூட, காவிரி டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி என்கின்ற முறையிலும், அந்தப் பகுதியினைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலும்,

[திரு. எம். ராம்குமார்] [2002 ஏப்ரல் 22

காவிரி டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, கடந்த மாதம் 15 ஆம் தேதியுடன் நேரடிக் நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டு, தாலுகா தலைமையிடங்கள் மற்றும் நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டு அதுவும் கடந்த 15 ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களின் கடைமடைப் பகுதிகளாகவுள்ள பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விற்க முடியாமல் அங்குள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டு 10 அல்லது 20 தினங்களுக்காவது தாலுகா கொள்முதல் நிலையங்களை மட்டுமாவது திறந்து தொடர்ந்து நெல் கொள்முதல் செய்ய உத்தரவிடுமாறு, விவசாயிகளினுடைய கவலையைப் போக்கிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு விலை குறித்து எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களெல்லாம் சொல்லி, அது ஒரு விவாதப் பொருளாகக்கூட இங்கே பேசப்பட்டது. ஆனால் கரும்பு விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற 8.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூ.1,000 கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை நானும் ஒரு கரும்பு விவசாயி என்ற அடிப்படையிலே இந்தச் சபையிலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் திரு. பிச்சாண்டி அவர்கள்கூட, 10 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு ரூ.1,000 கடந்த காலங்களில் அவர்கள் கொடுத்ததாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்து நம்முடைய தமிழகத்திலே, 10 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பு விளைவதாக நான் நினைக்கவில்லை. ஒருவேளை அப்படிப்பட்ட 10 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பு விளைவதாக இருந்தாலும்கூட, மிகக் குறுகிய பரப்பளவில்தான் அந்தக் கட்டுமான சத்துள்ள கரும்பு விளையும். அதுவும், தமிழகத்தைப் பொறுத்தவரை 8.5 சதவிகிதம் கட்டுமானம் உள்ள கரும்புதான் மிக அதிக அளவிலே இன்றைக்குப் பயிரிடப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் அதற்குக் குறைவாக சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்புதான் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலே, சர்க்கரைக் கட்டுமானத்தை அதிக அளவிலே ஈட்டக்கூடிய தரமான கரும்பு பயிரிடப்படுவதை ஊக்குவித்திருந்தாலும்கூட, நீண்டநாள் கோரிக்கையாக விவசாயிகளுடைய மத்தியில் வலியுறுத்திச் சொல்லப்படுகிற இந்த 8.5



2002 ஏப்ரல் 22] [திரு. எம். ராம்குமார்]

சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்புக்கு ரூ.1000 கொடுக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் கொடுப்பதாகச் சொன்னவர்கள் கொடுக்காவிட்டாலும்கூட விவசாயிகள் நலனில், விவசாயிகள் வளர்ச்சியில் அக்கறையுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கரும்புக்கு டன் ஒன்றிற்கு ரூ.1000 வழங்க வேண்டும் என்கிற கரும்பு விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை தாயுள்ளத்தோடு நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, தொடர்ந்து காவிரியாற்றில் தண்ணீர் சரிவர கிடைக்காத காரணத்தினால், விவசாயிகள் இன்றைக்கு ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து மின்சார பம்ப்செட்டுகள் மூலமாகத் தண்ணீர் எடுத்து முன்கூட்டியே குறுவை நெல் நடவு செய்வதற்கும் ஆண்டு முழுவதும் கரும்பு, பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களை விவசாயம் செய்வதற்கும் இலவச மின்சாரம் பயன்படுகிறது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இலவச மின்சார்ம் என்பது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஆகவே மத்திய அரசு எவ்வளவு வற்புறுத்தினாலும்கூட இலவச மின்சாரம் தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்கின்ற அரசின் உறுதியினைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தரமான விதை. 1980 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தின் மொத்த விதை உற்பத்தி என்பது 18 ஆயிரம் மெட்ரிக் டன்களாக இருந்தது. இன்றைக்கு 42 ஆயிரத்து 881 மெட்ரிக் டன்களாக விதை உற்பத்தி உயர்ந்துள்ள போதிலும், விவசாயிகளுக்குத் தேவையான விதையில் 10 சதவிகிதத்தினைக்கூட இந்த விதை உற்பத்தி பூர்த்தி செய்ய முடியவில்லை. விவசாயிகள் அதிக மகசூல் அடைவதற்கும் விவசாயத்தின் மூலமாக அதிக வருமானத்தை ஈட்டுவதற்கும் அடிப்படையாக இருப்பது தரமான விதைகளே ஆகும். கடந்த காலங்களில் தனியாரிடமிருந்து சான்று விதைகளைப் பெற்று வேளாண்மைத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அதனைச் சரியாகப்

பரிசோதிக்காமல் விவசாயிகளுக்குக் கொடுத்ததன் காரணமாக பாபநாசம், கும்பகோணம், அம்மாப்பேட்டை, திருவையாறு போன்ற பகுதிகளில் குறுவை நாற்றுகள் சரியாக முளைக்காமல் விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளானார்கள். ஆகவே தற்போது தரமான விதை உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு பயிற்சிகளின் வாயிலாக குறிப்பாக, புத்தூட்டப் பயிற்சி, விதை உற்பத்தியாளர் பயிற்சி, விதை விற்பனையாளர் பயிற்சி போன்ற பயிற்சிகளின் மூலமாகக் கடந்த ஆண்டு 26,990 நபர்களுக்குப் பயிற்சி அளித்ததோடு மட்டுமல்லாமல், விதை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.850.66 இலட்சத்தை இதற்காக ஒதுக்கீடு செய்து விதை உற்பத்தியைப் பெருக்கிட அரசு எடுத்துள்ள முயற்சிக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம்பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம் என்கின்ற புதிய திட்டத்தினை 2000 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வந்தாலும்கூட, அதனைப் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் ஏற்படாமல் உள்ளது. எனவே, மாநில அரசின் சார்பாக வேளாண்மைத் துறை அலுவலர்களைக் கொண்டு இத்திட்டத்தின் பலனை விவசாயிகள் முழுமையாக அறிந்துகொள்வதற்கு ஒரு முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியல் துறையினைப்பற்றி பல்வேறு திட்டங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, வேளாண்மைப் பொறியியல் துறையினைப் பொறுத்தவரை அந்தந்தப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளோடு — அது சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அந்த மக்கள் பிரதிநிதிகளோடு— கலந்து பேசி, உங்களுடைய தொகுதியில், உங்களுடைய பகுதிகளில் எந்த வேலைக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தினைக் கேட்டறிந்து அதற்குத் தகுந்தாற்போல அதன் அடிப்படையில் வேளாண்மைப் பொறியியல் துறையில் மக்கள் பிரதிநிதிகள் சொல்கின்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலையைப் பொறுத்தவரையில், மாநில அரசின் சார்பாக தோட்டக்கலை அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, பரப்பு விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ.333.22 இலட்சமும், சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு ரூ.11.80 இலட்சமும், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை மேம்படுத்த ரூ.658.16 இலட்சமும், பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டிற்காக ரூ.104.11 இலட்சமும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூ.165 இலட்சமும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.302.27 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு என்பது அந்தத் திட்டங்களுக்கு எந்த அளவிற்கு முழுமையாக போதுமானதாக இருக்கும் என்கின்ற கருத்து ஒரு பக்கம் இருந்தாலும்கூட, தோட்டக்கலை அபிவிருத்திக்காக மாநில அரசு எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சி வெற்றி பெற்று விவசாயிகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் முழு மனதோடு செயல்படவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளினுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருப்பது, அந்தப் பகுதியிலே, டெல்டா மாவட்டங்களில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்பது. தங்களுடைய பிள்ளைகளை, விவசாயம் சார்ந்த பட்டப் படிப்பு படிக்க வைக்க, அந்த மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைவது மிகவும் அவசியமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 நிமிடங்களிலே பேசி முடித்து விடுங்கள்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மிகக் கடுமையான நிதி நெருக்கடி உள்ளதாலும், மேலும் புதிதாக வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு ரூ.40 கோடி வரை செலவாகும் என்பதாலும், அரசு அதுபற்றி சிந்திக்கும் என்று கடந்த வாரம் எனது கேள்விக்குப் பதிலளித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டெல்டா மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற அந்த விவசாயக்

கல்லூரியை, அடுத்த நிதியாண்டிலாவது அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் சார்பாக ஓரிரு கோரிக்கைகளை முன்வைக்க நான் கடமைபபட்டுள்ளேன். எனது தொகுதியின் சார்பாக, பாபநாசம் தொகுதியைச் சார்ந்த நீலத்தநல்லூர் என்ற ஊராட்சியையும், ஜெயங்கொண்டம் தொகுதியின் சார்பாக, அங்குள்ள மதனத்தூர் என்ற ஊராட்சியையும் இணைக்கின்ற வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த 15 ஆண்டு காலமாக பாபநாசம் தொகுதியின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களும், ஜெயங்கொண்டம் தொகுதியின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களும் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், கும்பகோணம், தஞ்சைப் பகுதியிலேயிருந்து சென்னை செல்வதற்கு சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் குறையும் என்பதோடு, கும்பகோணம் பகுதியும், புதியதாக அமைக்கப்பட்டிருக்கின்ற பெரம்பலூர் மாவட்டமும் முன்னேறுவதற்கு இந்தப் பாலம் ஒரு சரியான வழிமுறையாக இருக்கும் என்ற காரணத்தினாலும், அணைக்கரையிலே இப்போது இருக்கின்ற பாலம் மிகவும் பலவீனப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பாலத்திலே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, குடந்தையிலிருந்து, தஞ்சைப் பகுதியிலேயிருந்து சென்னை செல்பவர்கள் சிரமப்படுகின்ற காரணத்தினாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கனிவோடு இந்தத் திட்டத்தினைப் பரிசீலித்து, இந்தப் பாலம் அமைவதற்கு உதவிட வேண்டும்.

அதேபோல எனது தொகுதியிலே உள்ள அய்யம்பேட்டை மற்றும் கபிஸ்தலத்தினுடைய காவல் நிலையக் கட்டடங்கள் மிக நீண்ட காலமாக வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. மேற்படி காவல் நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கும், அங்கு பணியாற்றுகின்ற காவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் அரசுத் தரப்பிலே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பாபநாசம் நகரினைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர்—கும்பகோணம் மாநில நெடுஞ்சாலையில் அந்த நகரம் அமைந்துள்ள



காரணத்தினாலே, தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பல மணி நேரம் போக்குவரத்து தடைப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. கடந்த பல வருடங்களாக இந்த மன்றத்திலே, அந்த மக்களுடைய கோரிக்கையாக, அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துவைத்ததைப்போல, பாபநாசம் நகருக்கு ஒரு புறவழிச்சாலையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அவசியம் அமைத்துக் கொடுக்கவேண்டும். எனது தொகுதிக்குட்பட்ட அனைத்து நெடுஞ்சாலைத் துறை சாலைகளும், கடந்த மழை வெள்ளத்தால் முழுமையாக பாதிக்கப்பட்டு பெருத்த சேதம் அடைந்துள்ளன. அதற்கான பட்டியலையும் நான் ஏற்கெனவே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலும் அளித்து இருக்கிறேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பட்டியலிலே இருக்கிற சாலைகளை, அவர்களுடைய துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தச் சாலைகளை இந்த ஆண்டிலேயே முன்னுரிமை கொடுத்து அவற்றைச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், 15 மணித் துளிகளுக்கு மேலாகிவிட்டது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. எம். ராம்குமார்:** முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிநாத சுவாமி கோயில், மலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, வயதானவர்கள் செல்வதற்கு ஒரு Winch car வசதியை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவிற்கு இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கிய பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி.

***திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டின் விவசாய மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில் ஒரு விவசாயப் பட்டதாரியான எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதி மக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்து, உணவு

தரும் உழவருக்கு உயர்வு அளிக்கும் உறுதி வேண்டி விவாதத்தை ஆரம்பிக்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவின் முதலாவது மாநிலமாக்க மாண்புமிகு முதலமைச்சர் வகுத்துள்ள 15 அம்சத் திட்டத்தில், வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள வேளாண்மைத் துறையில் நான்கு சதவிகித வளர்ச்சி விகிதத்தை அடைதல், விரிவான வேளாண்மைக் கொள்கையைக் கொண்டு வருதல், தரிசு நில மேம்பாட்டை ஊக்குவித்தல், தோட்டக் கலை வளர்ச்சி இயக்ககம் ஒன்றை ஏற்படுத்துதல், பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம் ஆகிய இம்முயற்சிகளுக்காக பாட்டாளி மக்கள் கட்சி, அரசுக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது. இருப்பினும், நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறிப்பிட்ட இலக்கினைக் கொண்ட திட்டங்களாக அமையவில்லை என்பது குறைபாடாகவே தெரிகிறது.

*பிற்பகல் 12-55*

சென்ற ஆண்டில் அறிவிக்கப்பட்ட தரிசு நில மேம்பாட்டுத் திட்ட இலக்கில் நான்கில் ஒரு பகுதியைக்கூட அடைய முடியவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு ஓராண்டில் 10 மாவட்டங்களில் சுமார் 1.36 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களில் மட்டுமே திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் புதிய வேளாண்மைக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் ஒரு விரிவான வேளாண்மைக் கொள்கைத் தொடர், பசுமைப் புரட்சிக்கு இன்றியமையாதது என்று கூறப்பட்டுள்ளது. வேளாண்மைக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளதில் உள்ள உண்மை நிலவரம் என்ன என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2001-2002 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைத் துறைக்காக ரூ.683 கோடி ஒதுக்கப்பட்டு, அவ்வாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.579 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.80.52 கோடி குறைக்கப்பட்டு,



11.8 சதவிகிதம் குறைவாக உள்ளது. இந்நிலையில் அரசு உத்தேசித்துள்ள 4 சதவிகித வளர்ச்சியை அரசால் எட்ட முடியுமா என்பது சந்தேகமாக உள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள நிதியளவைக் கவனிக்கும்பொழுது அடுத்த ஆண்டில் வேளாண்மைத் துறை 2.5 சதவிகித வளர்ச்சியைக்கூட எட்டுவதற்கு வழி இருக்குமோ என்று அச்சப்படுகிறோம். எனவே, வேளாண்மைத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.900 கோடியாக உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டைவிட வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கிய நிதி குறைந்துள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சார ஒதுக்கீடு ஏற்கெனவே வேளாண்மைத் துறையின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது வேளாண்மைத் துறையின் மூலமாக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வேறு ஒரு துறையின் மூலமாக, அதாவது மின்சாரத் துறையின் மூலமாக செய்யப்படுகிற காரணத்தினால், அது இங்கே குறைந்து இருக்கிறது; அவ்வளவுதான்; வேறு ஒன்றுமில்லை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதுகெலும்பான இத்துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் குறைவாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது மிகுந்த ஏமாற்றம் தருகிறது. உதாரணமாக 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் செலவிடப்பட்ட ரூ.25,000 கோடியில் வேளாண்மைத் துறைக்கென்று ரூ.3,061 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 12.2 சதவிகிதம்தான். 65 சதவிகித மாநில மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும், மாநில வருவாய்க்கு 22 சதவிகிதத்தை அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான துறைக்கு 12.2 சதவிகித முதலீட்டை மட்டும் ஒதுக்கியுள்ளது பொருத்தமாகப்படவில்லை. இந்த மூலதனச் செலவினால்தான், முதுகெலும்புத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். அரசாங்கமே தனது முதலீட்டுச் செலவை குறைத்துக் கொள்ளும்போது தனியார் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். இப்படி இருக்கும்போது வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கான ஆதார சக்திகளை எவ்வாறு உருவாக்குவது? வேளாண்மைத் துறையை வளர்க்காமல், தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க முடியும் என்பது இயலாத காரியமாக ஆகிவிடும்.

[திரு. அ.இரா. மலையப்பசாமி] [2002 ஏப்ரல் 22

அகில இந்திய அளவில் அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் மூன்று மாநிலங்களில் தமிழகம் ஒன்றாக இல்லை. மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் போன்ற மூன்று மாநிலங்களில்தான் அரிசி உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அரிசி உற்பத்தித் திறனிலும் தமிழகம் பின்தங்கி உள்ளது. வருகின்ற ஆண்டுகளிலாவது, இந்நிலை மாற, வேளாண்மைத் துறை கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன். உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் உயர்த்தும் ஒரு வேளாண் வளர்ச்சியைத்தான் நாங்கள் பசுமைப் புரட்சி என்று கருதுகிறோம். தமிழகம் ஒரு பசுமைத் தாயகமாக மாறி இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக மாற பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக இருக்கிறது. அம்மாதிரியான வளர்ச்சி அடைவதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக 15 அம்ச சிறப்பு வேளாண்மைக் கொள்கைகளை இம்மாமன்றத்திலே விவரிக்க விரும்புகின்றேன்.

மானாவாரி நிலங்களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கவும், சூழ்நிலைகளுக்கேற்ப புதிய பயிர் சுழற்சித் திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட வேண்டும். தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களுக்கான மாற்றுப் பயிர்த் திட்டம் காண வேண்டும். உயர் விளைச்சல் இரகங்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப மாநிலத்தின் இயல்பான விவசாயம் பாதிக்காதவாறு நீர் ஆதாரங்களைப் பெருக்குவதோடு காவிரி நீர் கண்காணிக்கப்பட வேண்டும். விவசாயத்திற்கு தொழில் துறை அந்தஸ்து வழங்கி முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதைவிட, உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும். நாடு முழுவதும் அக்ரி கிளினிக்குகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். கரும்பு விவசாயிகள் இனியும் கண்ணீர் விடாமல் அவர்கள் வாழ்வு இனித்திட அரசு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

தரிசு நில மேம்பாட்டு திட்டம் துரிதமாக அமல் செய்யப்படுவதுடன் அவற்றில் பொருளாதார ரீதியாக லாபம் தரக்கூடிய சாகுபடியை வலியுறுத்த வேண்டும். பூச்சிமருந்துகளின் உபயோகத்தைக் குறைக்கும் வகையில் பயோடெக்னாலஜியை புகுத்தி சாகுபடிச் செலவைக் குறைக்க வேண்டும். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு, தங்களது விளைபொருட்களை தாங்களே விலை நிர்ணயம் செய்யும் உரிமை நிலைப்படுத்தப்பட வேண்டும்.



2002 ஏப்ரல் 22] [திரு. அ.இரா. மலையப்பசாமி]

பிற்பகல் 1-00

பெருமழையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளுக்கு மேலும் ரூ.50 கோடி தந்துதவி, சம்பந்தப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டும். மேற்படி பகுதிகளில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்கள், சம்பந்தப்பட்ட விவசாயிகள்மீது கருணையுடன் நடந்துகொள்ள, அரசு விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும். வயதான விவசாயக் கூலிகளுக்கான மாதாந்திர நிதி உதவி உள்ளிட்ட எல்லாத் தரப்பு விவசாயிகளின் சீரான வாழ்க்கைக்கு அரசு ஏற்பாடு செய்து தர வேண்டும். விவசாயிகளுக்குக் கிடைக்கும் ஒரே சலுகை இலவச மின்திட்டம். ஆகவே, இலவச மின்சாரத் திட்டத்தை எக்காரணம் கொண்டும் இரத்து செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, மின் திருட்டைக் குறைத்தாலே, இலவச மின் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

ஆண்டுதோறும் நாட்டில் ரூ.4000 கோடி பெறுமானமுள்ள விவசாய உற்பத்திப் பொருட்கள் யாருக்கும் பயன்படாமல் வீணாவது தவிர்க்கப்படவேண்டும். குறைந்தபட்சம் வட்ட ரீதியான குளிர்பதனச் சேமிப்பகங்கள் அரசு சார்பில் அமைக்கப்படும்போது தமிழகத்தின் பொருளாதாரம் செழிப்படைவது உறுதி. இதனால் highly perishable commodities வகையைச் சார்ந்த தக்காளி போன்றவற்றில் திடீரென்று ஏற்படும் விலை மாற்றத்தைத் தவிர்ப்பதோடு, விவசாயிக்கும் நல்ல இலாபம் கிடைக்க வழி செய்யலாம். இது வேலையில்லாமல் தவிக்கும் விவசாயப் பட்டதாரிப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் தீர்வாக அமையும்.

அத்தியாவசிமான அரசு விதைப் பண்ணை நிலையங்கள் குறிப்பாக செங்கம் விதைப் பண்ணை நிலையம் போன்றவை நல்லமுறையில் செயல்பட முடியாமல் திணறிக் கொண்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சோர்வுற்றிருக்கும் வேளாண் துறையினருக்கு economic cultivation, economic plants ஆகியவை குறித்த தொழில்நுட்ப ரிதியான பயிற்சிகளை வழங்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் அரசு வேளாண்மை அதிகாரி என்கிற முறையில் மேற்படி பயிற்சி பொருளாதார ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் அமைவது அவசியம் என்றும் கருதுகிறேன்.

மூலிகை போன்ற வாய்ப்புள்ள விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்ய, தனித் தீர்வு காணும் வகையில், அரசு Agri Export Consortium அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கொடிய நோயான புற்றுநோய்க்கு அரிய மருந்தாகும் வின்க்ரிஸ்டின் ஆகியவை சுடுகாட்டுமல்லி என்று அழைக்கப்படும் நித்தியகல்யாணியிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. தற்போது குஜராத்தில் இதற்கான தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குஜராத்திற்கு சளைத்த மாநிலம் அல்ல என்று நம்புகிறோம். TIIC, TIDCO போன்ற அரசுத் துறையைச் சார்ந்த தொழிலுக்கு நிதி வழங்கும் பிரிவுகளில் தொழில்நுட்பக் கலந்தாலோசகர்களைக் கொண்டு முறைப்படி வகுப்புகள் நடத்தப்பட்டு இயற்கை மருந்துகள் தயாரிப்பில் கவனம் கிளம்ப ஆவன செய்ய வேண்டும். இதுவரை, இப்பிரிவில் கேரள மாநிலமே முன்னால் நிற்கிறது. மேற்படி தொழிலகங்கள் அமைக்க மத்திய அரசின் தேசிய தோட்டக் கலை வாரியம், National Horticulture Board 20 சதவிகித மானியம் வழங்கி வருகிறது. அதை தமிழ்நாடு இன்னும் முழுமையாக பயன்படுத்த முடியாத நிலையிலே இருக்கிறது. இதை முழுவதும் அனுபவிக்கும் மாநிலமாக மஹாராஷ்டிரா இருந்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்த விரும்பி உள்ள தோட்டக்கலை வளர்ச்சி வாரியம் மூலமாக இதை நிறைவேற்ற வலியுறுத்துகிறேன். ஆத்தூர், ஒட்டன்சத்திரம், ஈரோடு போன்ற பகுதிகளில் மூலிகைச் சாகுபடி இடைத்தரகர்களால் சீரழிக்கப்படுவதால் கண்வலிக்கிழங்கு, கோலிஸ்கிழங்கு ஆகிய பயிர்களைப் பயிரிட்டு வரும் விவசாயிகள் நசுக்கப்படுவதால் வேளாண் பொருளாதார நிபுணர்களைக் கொண்டு மேற்படி பிரச்சினையைச் சீர்செய்ய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உலக வர்த்தகச் சட்டமான W.T.O.-வின் கெடுபிடிகளைக் கடுமையாக எதிர்ப்பதுடன், கூடவே நமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதித் தரத்திற்கு தயார்படுத்தவும், விவசாயிகளை வழிப்படுத்தவும் விவசாயத் துறை முடுக்கிவிடப்பட வேண்டும்.

சரியாகக் கணிக்கப்படாத திட்டங்களை வேளாண்மைத் துறை செயல்படுத்தக்கூடாது என்பதற்கு எண்ணெய் பனைத் திட்டமே ஒரு முன்னுதாரணம். இச்சூழலில் மாட்டிகொண்ட விவசாயிகளை மீட்டுத் தர அரசு புதிய முகங்கொள்ள வேண்டும்.



இயற்கை விவசாயத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிக்க, மூட்டு வலிக்கு முடக்கத்தான், எலும்பு முறிவிற்கு வச்சிரவள்ளி என ஓலைச் சுவடிகளோடு நின்றுபோன தமிழ்ச் சிகிச்சை முறைகள், தகவல்களாகப் பரவ, வேலையில்லா சித்தா பட்டதாரிகளுக்கும் அவற்றின் சாகுபடி முறைகளைப் பரப்ப, வேலையில்லா வேளாண் பட்டதாரிகளும் நியமனம் பெறவேண்டும்.

அகோரின் என்கிற மருந்துப் பொருள் உள்ள சாதாரண வசம்பு, ஏறக்குறைய 70 வருடங்களாக கர்நாடக மாநிலத்தில் உள்ள தும்கூரில் தொழில் பயிராக உள்ளது. கேரளாவில் காட்டு இஞ்சி, ஒரு தொழில் பயிராக உள்ளது. இதுபோன்ற பயிர்களைத் தமிழகத்திலே வளர்த்து நல்ல மானிய விலையிலே அதை விவசாயிகள் பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலை நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து, இத்தகைய சிகிச்சைகளைப் பெற 3 இலட்சம் வெளி நாட்டவர்கள் கடந்த ஆண்டு விசாவிற்கு விண்ணப்பித்திருக்கும் இக் காலகட்டத்தில், கொல்லிமலை, குற்றாலம், கொடைக்கானல் போன்ற வாய்ப்புள்ள கோடை வாசஸ்தலங்களில் அரசு சிகிச்சைக் குடில்களை அமைக்கவும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இது மறுபடியும் வேலையில்லாத சித்தா மருத்துவப் பட்டதாரிகளுக்கு ஒரு பெரும் வாய்ப்பாய் அமையும். மேற்படி சிகிச்சை முறைகளில், கேரளாவே இதுவரை முன்னிலையில் இருந்து வருகிறது. இத்துறையில் நாம் ஏன் ஒரு தனி வளர்ச்சி காணக் கூடாது?

தென்னைப் பயிரைச் சுத்தமாக அழித்துவரும் செம்பான் சிலந்தியை—ஈரியோபைட்—அழிக்க, விஞ்ஞானிகள் பல வழிகளில் முயன்றும் இயலாமையே எஞ்சி உள்ளது. காயில் பால் வைக்கும் தருணம், இச் சிலந்தி தாக்குவதால் கள் இறக்குவது ஒன்றுதான் தீர்வு என்பதும் முடிவாகி உள்ளது. கள் இறக்கும்போது, உணவு கிடைக்காது சிலந்தி இனம் அழிந்து விடும். மேலும் பொள்ளாச்சி, உடுமலை, கோவை ஆகிய பகுதிகளில் பச்சோளின் எண்ணெய் பிரிக்கும் தொழிற்சாலைகளை அமைத்து தென்னை விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ.30,000 வரை இலாபம் தரக்கூடிய பச்சோளி, கச்சோளம் போன்ற மூலிகைப் பயிர் சாகுபடிகளை ஊடுபயிராக ஊக்கப்படுத்தினால், தமிழகத்தின் தொழில் வளமும், நிதி வளமும் பெருகும் என்று இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.146 கோடி ஒதுக்கி விவசாயிகளின் கூட்டுறவுச் சங்க கடன் சுமையைக் குறைத்த அரசை, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மனதாரப் பாராட்டுகிறோம். தரிசு நில மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றினை அறிவித்த அரசினையும் பாட்டாளி மக்கள் கட்சி பாராட்டுகிறது. அதேசமயம் அறிவிப்போடு நின்று விடாமல், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை வேகமாகச் செயல்படுத்த இதுவே நல்ல தருணம் என்பதையும் சுட்டிக்காட்டுவதுடன் சிறிய விவசாயிகளுக்கு அரசின் நிலங்களை ஒப்படைத்து அவர்களை ஒருங்கிணைத்து modern technique மூலமாக செயல்படுத்தலாம்.

வாய்ப்பளிக்கும்பட்சத்தில், எனது தொகுதியான கபிலர் மலைத் தொகுதியில் தொழில் நுட்பச் செறிவுடன், இதுகுறித்த முன்னோடித் திட்டத்தையும் செயல்படுத்த நாங்கள் தயாராக உள்ளோம். தரிசு நிலங்களை economic cultivation என்று வகைப்படுத்தப்படும் லாபகரமான சாகுபடிக்கு உட்படுத்த, வழிவகை செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உலக அளவில் அங்கீகாரம் பெற்ற இயற்கை வேளாண்மையை, International Federation of Organic Agriculture Movements அமைப்பு மூலமாக முந்திரி போன்ற பயிர்களை வளர்க்க விதிகளை ஏற்படுத்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆர்கானிக் முந்திரிக்கு தற்போதைய ஐரோப்பிய சந்தை, பட்டுக் கம்பளம் விரிப்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மேலும் shifting cultivation என்று கூறப்படும் வேளாண் முறையில், அழிந்து வரும் வன வளத்தை மீட்கும் பொறுப்பையும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மூலமாகச் செயல்படுத்த இம்மாமன்றம் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேளாண்மைத் துறையின்மூலம் செயல்படுத்தும் 'நவபரா' திட்டத்திற்கு தமிழகத்தில் சுமார் 84 இடங்களில் தலா 21 இலட்சம் ரூபாய் வீதம், 17.64 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள்பற்றி அரசு தீவிரமாக விசாரித்து, இதில் யாராவது தவறு செய்து இருந்தால், அவர்கள் மீது தகுந்த கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் நவபரா திட்டம்பற்றிக் கொடுத்த ஊழல் புகார் மனுவை விசாரிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மானியங்கள், ஆண்டு முடிவில் அறிவிக்கப்படுவதால், அவற்றைச் செயல்படுத்துவதில் பல





குளறுபடிகள், ஊழல்கள் நடைபெறுகின்றன. ஆண்டின் ஆரம்பத்திலேயே திட்டங்கள் மற்றும் மானியங்களை அறிவிக்க வேண்டும். மரவள்ளிக் கிழங்கிற்கு வேளாண்மைத் துறை மூலம் 'செஸ்' வசூல் செய்வதை இரத்து செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர் மலைத் தொகுதியில் உள்ள ராஜாவாய்க்காலையும், அதன் கிளை வாய்க்கால்களான மோகனூர் வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால்களையும் புனரமைத்தால் விவசாயம் செழிக்கும்; வறண்ட பகுதியிலும் பசுமை பரவும். மேற்படி வாய்க்கால்களால் ஏற்படும் இனக் கலவரம் போன்ற சமுதாயப் பிரச்சினைகளுக்குச் சுமுகமாய்த் தீர்வு காண முடியும் என்பதையும் இந்நேரம் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை எனக்குச் செய்து கொடுத்தால், எனது தொகுதி மக்கள் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக்கிரமிப்பிற்கு ஆளாகி உள்ள நீராதாரங்களை மீட்கும் பணியில் அரசு, கட்சி வேறுபாடின்றி தலையிடவும்...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி, முடித்து விடுங்கள். நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** முடிந்துவிட்டது, ஒரு நிமிடம்.... இந்த நேரத்தில் பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் வேளாண் பல்கலைக் கழகத்திற்கும், வேளாண் துறைக்கும் உள்ள நிச்சயமற்ற உறவு பணிமுறைகளைக் கண்காணித்துச் செப்பனிட, கண்காணிப்புக் குழு ஒன்றை அரசு அமைப்பதுடன், புதிய கண்டுபிடிப்புகள், செயலாக்கங்களைக் குறித்த விளக்கங்களைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் எப்போதும் தெரியப்படுத்த வேண்டும். பணப் பயிரான தர்ப்பூசணி, வாழை போன்ற பயிர்கள் வேகமாகப் பரவி மெதுவாகச் சீரழிந்து வரும் இந்நிலையில், இவற்றைக் கச்சாப் பொருட்களாகக் கொண்டு செயல்படும் பழச்சாறு, கூழ் தயாரிப்பு ஆலைகளை நிறுவ வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், பரமத்தி வேலூரில் உள்ள அரசு மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாக உயர்த்தியும்,

என்.எச்.7-ல் இருப்பதால் விபத்துச் சிகிச்சை மையம் ஒன்றையும் அதில் ஆரம்பிக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

மோகனூரில் இயங்கி வரும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் செயல்பாடுகளைச் சீரமைப்பதுடன், நாமக்கல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று பெயர் மாற்றம் செய்யவும் கேட்டுக்கொள்கிறேன்.

கற்றுத் தெளிந்துள்ள பெண்ணினத் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ள தமிழகத்தில் உள்ள எனது கபிலர்மலைத் தொகுதியில் மகளிர் கல்லூரி அமைக்கவும் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தேசிய நெடுஞ்சாலையில் (என்.எச்.7) கரூர், நாமக்கல், மாவட்டங்களை இணைக்கும் பழைய பாலத்திற்கு அருகில், புதியதாக ஒரு பாலம் கட்டப்பட வேண்டும்.

மோகனூருக்கும், வாங்கலுக்கும் இடையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள தரை வழிப் பாலத்தை விரைவாகக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். 15 ஆண்டுகளுக்குமுன் பரமத்தியில் கட்டியுள்ள பழைய பாலத்திற்குச் சுங்கம் வசூலிப்பதை உடனடியாக நிறுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சோளசிறாமணிக்கும், பாசூருக்கும் தரை வழிப் பாலம் கட்டப்பட்டால் வியாபாரக் களத்தில், மும்முரமாய் உள்ள ஈரோடும், நாமக்கல்லும் வெகுவாய் இணையும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். வெற்றிலைச் சாகுபடி ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் வெற்றிலைச் சாகுபடியைச் செய்துவரும் பரமத்தி வேலூரிலேயே அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். பரமத்தி வேலூரில் சீரும் சிறப்புடன் நன்றாக இயங்கி வரும் பால் குளிரூட்டும் நிலையத்தின் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் பால் சேகரிப்புக் குழுக்களை வேறு தலைமையிடத்திற்கு மாற்றும் எண்ணத்தை அரசு கைவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இறுதியாக, தாராளமயமாக்கல் கொள்கையால் அதிக பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் நமது வேளாண் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது சார்பாகவும், கபிலர்மலை தொகுதி மக்கள்



சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தமிழக மக்களின் வாழ்வாகவும், தொழிலாகவும் வேளாண்மை இருந்து வருகிறது; தமிழ்நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் கிராமங்களில் வாழ்கின்றார்கள்; எனவே, கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால்தான் தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும்" என்று தொடக்கத்திலே இந்த விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கின்றார்கள். மாற்றுக் கருத்துக்கு இங்கே இடமில்லை. ஆனால் நான் இதை சற்று மாறுபட்ட கோணத்திலேயிருந்து பார்க்கவே விரும்புகின்றேன்.

1980-81 ஆம் ஆண்டுகளிலே, வேளாண்மை உற்பத்தியானது, மாநில மொத்த உற்பத்தியில் 25 சதவிகிதமாக இருக்க, 20 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2000 ஆண்டிலே இது 17 சதவிகிதமாகக் குறைந்து, 8 சதவிகிதம் குறைவாக இருந்து இருக்கின்றது. இதைப் பார்க்கின்றபொழுது, ஏதோ வேளாண்மை வளர்ச்சி குறைந்துவிட்டது என்று நோக்கத் தோன்றலாம். ஆனால், இத்தகையதொரு வளர்ச்சிதான் ஒரு மாநிலத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமானால், அமைய வேண்டுமென்ற கருத்தை நான் இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எந்த ஒரு வளர்ந்த நாட்டினுடைய பொருளாதார விகிதத்தைப் பார்த்தாலும், வேளாண்மைத் துறையின் விகிதம் அதில் குறைவாகவும், தொழில் துறை மற்றும் பணித் துறைகளின் விகிதம் அதிகமாகவும் இருக்கும். அத்தகையதொரு வளர்ச்சி முறையில்தான் இன்றைக்குத் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதைப் போன்று தமிழகம் முன்னேற வேண்டும்; மற்ற மாநிலங்களிலிருந்து இது முதன்மைப்பட வேண்டுமென்றால், இந்த வழி சரியானதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அதேநேரத்திலே, தமிழகத்திலே சிறு, குறு விவசாயிகள் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். குறைக்கப்பட வேண்டுமென்றால், அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இங்கே நான்

சொல்லவில்லை. இந்தச் சிறு, குறு விவசாயிகள், அதிகமான விவசாயப் பரப்பினைக் கொண்டிருந்தால்தான், அவர்களது விவசாயம் வளம் உள்ளதாகவும், நலம் உள்ளதாகவும், பயன் உள்ளதாகவும் அமையும் என்ற கருத்தினை இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்காக, இந்த அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்றும் கூறிக்கொள்ள விருப்பப்படுகின்றேன்.

இந்த அரசு, 4 சதவிகிதம், அதாவது வேளாண்மை வளர்ச்சியை 4 சதவிகிதமாக உயர்த்துவோம் என்றும், 1996-2001 ஆம் ஆண்டுகளிலே இது 2.72 சதவிகிதமாக இருந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இதற்கான ஆக்கப் பணிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். அதில் ஒன்றுதான், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று நான் கருதுகின்றேன். அருமையான ஒரு திட்டத்தை, மிகச் சிறப்பாக அறிமுகப்படுத்தியிருக்கின்றீர்கள். இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தின் வேளாண்மையை, இந்திய வேளாண்மை வரைபடத்தில் நிச்சயமாக வைக்கும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. நான் மத்திய அரசில் அதிகாரியாக இருந்தபோது, இதுபோன்ற ஒரு திட்டத்தை ஆந்திர மாநிலத்திலே, ஒரு சிறிய அளவிலே 50 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே, அங்கே பலன் தருகின்ற பழ மரங்களை வைக்கவேண்டுமென்று ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி, அந்தத் திட்டமானது இன்றைக்கு ஆந்திர மாநிலத்தை அதிகமான முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது என்று அங்கேயிருந்து கிடைக்கின்ற செய்திகள் மூலமாக நான் அறிய முடிகிறது. இன்றைக்கு 20 இலட்சம் ஹெக்டேர், அதாவது 50 இலட்சம் ஏக்கர் நிலத்தை நீங்கள் மேம்படுத்தப்போவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். சிறப்பான திட்டம் இது. ஆனால், மிகவும் கவனமாகச் செயல்படுத்த வேண்டிய திட்டமாக இருக்கின்றது. சற்றுத் தவறினால்கூட களங்கம் கற்பித்து விடுவார்கள். இந்தத் தவறு நடந்தது; இதற்காகத்தான் இந்தத் திட்டம் வந்தது; அங்கே தவறு நடந்தது; அதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று கூறுகின்ற வாய்ப்புகள் ஏற்படும் என்ற காரணத்தால் நான் இந்த அரசை வேண்டி, விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை மிக ஜாக்கிரதையாக நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

அன்று ஒருநாள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே பதில் அளிக்கின்றபோது, இது சிறு விவசாயிகள்



செய்யக்கூடியதல்ல என்றும், இதைப் பொதுவாக Corporate Sector-கள் மூலமாகவோ அல்லது சற்றுப் பணத்தைக் கொண்டுவந்து கொட்டி, இந்தத் தரிசு நில மேம்பாட்டைச் செய்யக் கூடியவர்கள் மூலமாகவோ செய்தால்தான் பயனடையும் என்ற கருத்தை இங்கே எடுத்து வைத்தார்கள். அதைச் சிறு விவசாயிகளும் செய்யக்கூடும் என்ற ஒரு கருத்து எனக்கு இருக்கிறது. இன்றைக்கு நீங்கள் 50 இலட்சம் ஏக்கர் என்று சொல்கிறீர்கள். 20 இலட்சம் ஹெக்டேர் என்ற நிலத்தைச் சொல்கிறீர்கள். இதில் பாதி நிலத்தை நீங்கள் சொன்னபடி பணம் செலவு செய்து மேம்படுத்தக்கூடியவர்களுக்குக் கொடுக்கலாம். மீதி பாதி 10 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை சிறு விவசாயிகளுக்கு, சிறு வேளாண்மை செய்கின்றவர்கள் என்றுகூடச் சொல்லமாட்டேன். வேளாண்மையில் கூலி வேலை செய்பவர்களுக்கு, அதாவது, நிலம் இல்லாதவர்களுக்கு, குறைந்தபட்சம் ஒரு ஹெக்டேர் என்ற அளவிலே கொடுத்தால் ...

பிற்பகல் 1-15

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி பல மாமன்ற உறுப்பினர்கள் ஒரு தவறான கருத்தையே கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதனை மேலும் விளக்கிக் கூற விரும்புகிறேன். மொத்தம் தமிழ்நாட்டிலுள்ள 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தில், 3 இலட்சம் ஹெக்டேர் அளவுதான் ஏறக்குறைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதுதான் அரசுக்குச் சொந்தமான revenue land. மீதமுள்ள ஏறக்குறைய 17 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களெல்லாம் private patta land - ஆகத்தான் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலும் சிறிய விவசாயிகள்தான் அந்தத் தரிசு நிலங்களை வைத்திருக்கிறார்கள். 5 ஏக்கர், 10 ஏக்கர், 15 ஏக்கர். இந்த அளவில் நிலப் பரப்புடைய land holdings-ஐ தனியார் சிறு விவசாயிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அங்கே அவர்களுக்குப் போதுமான வசதிகள் இல்லாததால், ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நிலங்களெல்லாம் தரிசு நிலங்களாகவே கிடக்கின்றன. எந்தவிதமான சாகுபடியும் அங்கே நடைபெற முடியவில்லை. ஆகவே அரசு, எப்படி இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியுள்ளது என்றால், ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன், அரசுக்குச் சொந்தமான revenue land, தரிசு நிலம் என்று சொன்னால், பெரிய Corporate Houses—பெரிய தொழிலதிபர்கள்—100 ஏக்கர் முதல் 1000

ஏக்கர் வரை அல்லது அதற்கு மேலும்கூட எடுத்துக்கொள்ளத் தயாராக இருந்தால், அவர்களுக்கு ஒரு long lease, 30 ஆண்டுகள் lease என்ற அளவில் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அப்படி தரிசு நில மேம்பாட்டைச் செய்வதற்கு முன்வருபவர்கள் எல்லோருக்குமே தொடர்ச்சியாக contiguous piece-ஆக, ஒரே தொடர்ச்சியாக 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. அதற்கு வேறு ஒரு திட்டத்தையும் இந்த அரசு வைத்திருக்கிறது. ஒரு பெரிய தொழில் நிறுவனம் முன்வந்து ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தை எடுத்துக் கொண்டு அதை மேம்படுத்துகிறோம் என்று அவர்கள் அதைச் செய்ய முன்வந்தால், அந்த ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு 300 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் என்றே வைத்துக்கொள்வோம். அதற்கு அரசுடன் அவர்கள் தனியாக ஒப்பந்தம் போட்டுக்கொள்வார்கள். அந்த 300 ஏக்கர் நிலத்தை அவர்களுக்கு long lease-ல் விடும். ஆனால் மீதியுள்ள 700 ஏக்கர், பல சிறிய விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா நிலமாக இருந்தால், அதாவது ஒவ்வொரு விவசாயிக்கும் 5 ஏக்கர், 10 ஏக்கர், 20 ஏக்கர் என்ற அளவில் அவர்களுக்கெல்லாம் சொந்தமான நிலம், இந்த 700 ஏக்கருக்குள் வரும் என்று சொன்னால், அவர்களையெல்லாம் ஒன்றாக இணைத்து, அவர்களுடன் இந்தத் தொழில் நிறுவனத்தைத் தனித்தனியாக ஒப்பந்தம் போட வைத்து, இவர்கள் நில்த்தைக் கொடுப்பார்கள்; அவர்கள் அதை மேம்படுத்துவார்கள். இலாபத்தை இருவருமே பங்கு போட்டுக் கொள்வார்கள். இப்படிப்பட்ட திட்டத்தைத்தான் கொண்டுவர இந்த அரசு உத்தேசித்துள்ளது. ஆகவே, சிறிய விவசாயிகளும் இதனால் பயனடைவார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, explanation, ஒரு விளக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, கேட்கட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறிய விவசாயிகளுக்கு உதவும் திட்டத்தைச் சொன்னார்கள். மத்திய அரசுகூட I.W.D.P. என்று வைத்திருக்கிறார்களே, அதற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அவர்கள் கொடுக்கிற நிதியை இதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? Integrated Waste Land Development Programme, மத்திய



அரசிலே கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் 20 கோடி வாங்கியிருக்கிறார்கள். அந்தமாதிரி அதன்மூலமாக இதற்காக நிதிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அந்தத் திட்டத்திற்கும், இந்தத் திட்டத்திற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றி இந்த அவையிலே விளக்கிச் சொல்லியிருக்கிறேன். Waste Land Development-க்காக மத்திய அரசு நிதி கொடுக்கிறது. ஆனால், மிகவும் குறைந்த அளவில்தான் மத்திய அரசு நிதி கொடுக்கிறது. இருபது இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தையும் மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு கொடுக்கின்ற நிதி போதாது. அதனால்தான் தனியாரையும் இதில் இணைக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** என் சிந்தைக்கேற்ற சிறப்பான விளக்கத்தை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய எண்ணத்திலும் இதுதான் இருந்தது. இதைச் சொல்லத்தான் நான் வந்தேன். The Hon. Chief Minister has pre-empted me on this particular issue. Thank you, very much. இந்த 10 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் தனிப்பட்டவர்கள் நிலமாக இருக்குமென்று கூறியிருக்கிறீர்கள். அப்படி இருந்தால் நல்லது. இந்தத் தரிசு நில மேம்பாட்டிற்காக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட எழுந்து சொன்னார், மத்திய அரசிலே திட்டங்கள் இருக்கின்றன என்று. அந்தத் திட்டமானது 25 சதவிகிதம் மானியமாகவும் 25 சதவிகிதத்தைப் பயனாளி கொண்டுவரவும், மீதியிருக்கிற 50 சதவிகிதத்தை வங்கிகளிலேயிருந்து கடனாகப் பெற்றும் நிலத்தை மேம்படுத்துவதற்கு மத்திய அரசிடம்கூட இதற்குத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தினை, இந்த அரசு சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னபோது இந்த நிலங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களிடமும் ஏழை விவசாயிகளிடமும் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இங்கே ஒரு கருத்தை நான் சொல்ல விருப்பப்படுகிறேன். அரசின் உட்பாட்டுக்குள் இருக்கின்ற இந்தத் தரிசு

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 ஏப்ரல் 22

நிலங்கள் எல்லாம் எனக்குத் தெரிந்தமட்டில் நான் ஒன்றிரண்டு இடங்களிலே சென்று பார்த்தேன். அது புறம்போக்கு நிலம் என்று சொல்வார்கள். அங்கு சென்று பார்த்தால் அதில் வேறு யாரோ இருந்து கொண்டிருப்பார்கள். இந்த நில ஆவணங்கள் மூலமாக எவை எல்லாம் அரசாங்கத்திடம் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது, இந்தத் திட்டத்தைத் தொடங்குகின்ற காலத்திலே செய்யவேண்டிய ஒரு தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

நேற்று, நான் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த போது ஒரு நல்ல கருத்தை அங்கே சொல்லிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர்ப் பற்றாக்குறையைக் குறித்து குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடப் போகிறது என்றும், எதிர்காலத்தில் 14 சதவிகித வருமானத்தைக் குடிநீருக்காகட்டும் நாம் செலவு செய்யவேண்டிய ஒரு காலம் வரப்போகிறது என்றும், அந்தச் செய்தியிலே சொன்னார்கள். குடிநீருக்கே இந்த நிலை என்றால், பாசன நீருக்கு என்ன நிலை ஏற்படும் எதிர்காலத்திலே என்று நாம் ஐயுற வேண்டிய நிலை இங்கே இருக்கிறது. நிலத்தடி நீரை நாம் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் மிகக் கடினமான காலங்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கொங்கு மண்டலம் ஒரு பாலைவனமாக மாறக்கூடும் என்றும், திண்டுக்கல் பகுதியிலே 10, 15 அடி ஆழத்திலே கிடைத்துக் கொண்டிருந்த தண்ணீர், இன்றைக்கு பல நூறு அடிகளுக்குக் கீழே சென்றுவிட்டது என்றும், திருப்பூரில் ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர்ப் பஞ்சத்தால் அங்கே நூற்பாலைகள் எல்லாம் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன என்றும், இந்தியாவில் இருக்கின்ற மிகப்பெரிய நகரங்களிலே சென்னையில்தான் அதிகமான அளவிற்கு இந்த நீர்மட்டம் குறைந்திருக்கிறது என்பதையும் ஒரு மத்திய நிறுவனத்தினுடைய கணிப்பு கூறியிருந்தது. ஆக, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், டெல்டா பகுதியிலே இருக்கின்ற நிலங்கள், அவைதான் நமக்கு உணவைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அங்கு பாசனத்திற்குக் காவிரி நீர் நடுவர்மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்துவதைத் தவிர, வேறு வழியே இல்லை என்ற கருத்து எனக்கு ஆழமாக இருக்கிறது. இதில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், தன்னுடைய விளக்க உரையின்போது நீண்ட ஒரு உரையையே நிகழ்த்தினார்கள். எந்த அளவுக்கு இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறதென்றும், அதை எப்படியெல்லாம் பெற இருக்கிறோம் என்றும் இங்கே உள்ளங்கை நெல்லிக்கனியாக எடுத்துவைத்தார்கள். அவ்வப்போது மாண்புமிகு முதல்வர்கூட இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப்



2002 ஏப்ரல் 22] [திரு. கு. ஜெயக்குமார்]

போகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சமயத்திலே ஏற்பட்ட வாதத்திலே ஒரு கருத்து இங்கே நிலவியது. அந்தநேரத்தில் தேசிய இயக்கத்தைச் சார்ந்த நாங்கள், எங்களுடைய கருத்தை எடுத்துவைக்க வாய்ப்புக் கேட்ட மாத்திரத்திலேயே அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. எங்களுடைய கட்சியின் தலைவர், மாண்புமிகு திருமதி யசோதா அவர்கள்கூட, ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று எழுந்தபோது அவருக்கு அந்த விளக்கம் அளிப்பதற்கு இங்கே வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், ஒரேயொரு கருத்தை மட்டும் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

காவிரிநீர்ப் பிரச்சினையின்போது, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எந்த அளவுக்கு அதை அணுகினார்கள் என்றும், அன்றைய காலகட்டத்திலே இருந்த அரசியல் சூழ்நிலையின் காரணமாக, என்ன நிகழ்வுகள் எல்லாம் நடந்தன என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த எங்களுக்கு, அது, அன்று சற்று வருத்தமாக இருந்தது. இன்றும் அந்த நெருடல் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அன்றைக்கு இந்த அவையிலே எடுத்து வைக்கப்பட்ட கருத்துத் தொக்கி நின்றது. இது ஏதோ இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி அன்றைக்குத் தமிழக அரசைப் பணிய வைத்தார்கள் என்பதைப் போன்று இருந்தது. அன்றைக்கு இந்திய அரசியலிலே மகா சக்தியாக இயங்கிக் கொண்டிருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அத்தகைய ஒரு நிலை இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள், நான் இந்திரா காந்தி அம்மையார் என்று அவர்களைக் குறிப்பிடுவது கிடையாது, அன்னை இந்திரா என்றுதான் குறிப்பிடுவேன் என்று. நானும் ஒரு செய்தியைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இல்லத்திலே அவர்கள் அலுவலக மேஜைமீது அருமைத் தலைவி இந்திரா காந்தி அம்மையாருடன், தான் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தைத்தான் வைத்திருக்கிறார்கள் என்ற ஒரு மிக இனிமையான செய்தியை நான் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அன்றைக்கு இருந்த நிலையில், அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையில், இந்தக் காவிரிநீர்ப் பிரச்சினையில், அன்றைக்கு தேவராஜ் அர்ஸ் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அன்றைய நிலையைப் பொறுத்தமட்டில், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தேவராஜ் அர்ஸ் அவர்களுக்குச் சாதகமாகச் செயல்பட வேண்டும் என்றோ,

அல்லது தமிழகத்திற்குச் சாதகமாகச் செயல்பட வேண்டும் என்றோ ஒரு நிலையை எடுக்கவில்லை. அன்றைய நிலையைப் பொறுத்தமாத்திரத்தில், மாநிலங்களுக்குள்ளாக நல்ல ஒரு உறவு முறை இருக்க வேண்டும். இன்றைக்குக் கூட இங்கு தொழில் துறை இருக்கிறது; விவசாயத் துறை இருக்கிறது. இந்த இரண்டு துறைகளுக்குள்ளாக, ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அந்தக் கருத்து வேறுபாட்டினை நீதிமன்றத்திற்குச் சென்று தீர்த்துக் கொள்ளக்கூடாது. அமர்ந்து பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசு ஆணையும்கூட.

அன்றைக்கு நாட்டிற்கே பிரதமரான இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அதைத்தான் நாடினார். இரண்டு முதல்வர்களிடமும் நான் இன்று பிரதமராக இருக்கின்றேன். எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்று துடிக்கின்றேன், என்னுடைய உடம்பிலே இருந்து சிந்துகின்ற ஒவ்வொரு துளி இரத்தமும் இந்த நாட்டின் உணர்வுகளைத் தட்டி எழுப்புவதற்காக பயன்படும் என்று கூறிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அன்றைக்கு இரண்டு மாநிலங்களும் ஒரு சுமுகமான நிலையில் இருக்க வேண்டும், நட்புறவோடு இருக்க வேண்டும், நட்புப் பரவ வேண்டும். மாநிலங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டாம். ஆகவே இந்த வழக்கை நீங்கள் நீதிமன்றத்திலே இருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற ஓர் எண்ணத்திலேதான் சொல்லி இருப்பாரேயொழிய, அன்றைக்கு அரசியலில் இருந்த அந்தச் சூழ்நிலையை நிச்சயமாகப் பயன்படுத்தி இருக்கமாட்டார்கள் என்று கருதுகின்றேன். அந்தக் கோணத்திலே நீங்கள் யாரும் இதை சொல்லவில்லை என்றே நான் எடுத்துக்கொள்கிறேன். அப்படித்தான் அது இருக்க வேண்டும். நாட்டிற்காக உயிர் கொடுத்த அந்தத் தலைவர் ஒவ்வொரு குடிமக்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்பது வரலாறு கண்ட உண்மை. நீங்கள் உங்கள் கண்களை மூடிக் கொண்டு இந்திய வரைபடத்தை சற்றுப் பாருங்கள். சற்று நேரம் சிந்தித்து கண்களை மூடி இந்திய வரைபடத்தைப் பார்த்தால், அங்கே Indira is India; India is Indira என்ற வாசகத்திற்கு இணங்க இந்திரா காந்தி அம்மையாருடைய முகம்தான் அந்த இந்திய வரைபடத்தின் நடுவே தெரியும் என்ற கருத்தை உங்கள் மத்தியிலே விட்டு. இன்றைக்கு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.



**திரு. கு. ஜெயக்குமார்:** ஐயா, நான் முதல்முறையாகப் பேசுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களோடு அவையினுடைய நேரம் முடிகிறது. நீங்கள் முடிக்காவிட்டால் முடித்துவிடுவோம்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இன்றைக்கு, தோட்டக்கலை விளைபொருட்களிலே, 30 சதவிகிதம் விவசாயி கஷ்டப்பட்டு பயிர் செய்து வந்தாலும், அதைத் தேக்கி வைக்கின்ற முறை, சரியாக இல்லாத காரணத்தால், இவை சேதமாகிக் கொண்டிருக்கின்றன. எனவே குளிர்பதனக் கிடங்குகளை, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒன்றை ஏற்படுத்தினால் கணிசமான அளவு நாம் இந்த காய்கனிகளை சேகரிக்க முடியும் என்றும், இது ஏற்றுமதியைப் பெருக்கும் என்றும் வருமானத்தை விவசாயிகளுக்குப் பெருக்கும் என்றும் கூறிக் கொள்கிறேன். உலக வர்த்தக மையமானது இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்ற பல விதிமுறைகளின்மூலம் நமக்கு வாய்ப்புகளும் இருக்கின்றன; சவால்களும் இருக்கின்றன. இந்தச் சவால்களை எல்லாம் நாம் சரியாக சந்தித்தால் அது நல்ல ஒரு வாய்ப்பாக அமையும் என்று கூறி, இதற்காக வேண்டி இஸ்ரேல் நாட்டினுடைய தொழில் நுட்ப முறையை நாம் பயன்படுத்தி, ஹாலந்து நாட்டினுடைய வியாபார முறையையும் நாம் பயன்படுத்தினால், அரசு அறிவித்து இருப்பது போன்று ஓசூரிலே ஏற்படுத்த இருக்கிற அந்த மலர் நிலையத்தின் மலர்கள் மற்றும் காய்கறி, பழ வகைகளையும் நாம் ஏற்றுமதி செய்து நல்ல வருமானத்தை விவசாயிகளுக்கு பெற்றுத்தர முடியும்.

அதுமட்டுமல்ல. நல்ல மருந்துப் பயிர் வகைகளுக்கெல்லாம் இன்றைக்கு ஏற்றுமதி செய்வதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த மருந்து பயிர் வகைகளைக் குறித்து ஒன்றைச் சொல்ல வேண்டும். நம்முடைய நாட்டிலே தயாரிக்கப்படுகின்ற பாசுமதி அரிசியினுடைய காப்புரிமையானது, நம்மிடத்திலே இல்லை. அமெரிக்காவிடம் இருக்கிறது. அதற்கு 'டெக்ஸ்மதி' என்று பெயர் வைத்து, அவர்கள் patent செய்து வைத்திருக்கிறார்கள். அதுபோன்று நம் நாட்டிலுள்ள இந்த வேளாண்மைச் செல்வங்களை எல்லாம் வேறு யார் யாரோ patent செய்கின்ற அளவிற்கு அனுமதிக்காமல், இந்த மருந்து வகைகள் போன்றவற்றையெல்லாம் நாம் patent செய்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல மாண்புமிகு தலைவர் அனுமதிக்க வேண்டும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. ஒரு மணித்துளிக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையின்போது சொன்னார்கள். இந்தத் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்காக சிறப்பான திட்டம் S.C.P. என்று ஒன்று இருக்கிறது. அந்த S.C.P. -யின்படி—Special Component Plan என்று சொல்வார்கள். அதன்படி—ஒவ்வொரு துறையும் நிதிநிலையில் பணத்தை ஒதுக்கி அவர்களுக்குத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று. மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொத்த வேளாண்மைத் திட்ட மதிப்பானது 603 கோடி இருக்க, அதில் 16 திட்டங்களுக்கு மட்டுமே S.C.P.-யின் அடிப்படையிலே நீங்கள் 2.2 சதவிகிதம்தான் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றீர்கள். கொடுக்கப்பட வேண்டியது கிட்டத்தட்ட 19 சதவிகிதம் இருக்க, அதாவது 114 கோடி கொடுக்க வேண்டிய இடத்திலே 14 கோடியை மட்டும்தான் கொடுத்திருக்கின்றீர்கள். இது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை மறுதலிப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. தயவுசெய்து, நீங்கள் இதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மத்திய அரசானது Ethanol என்பதனை—கரும்பிலேயிருந்தும், சேகோ தொழிற்சாலைகளிலேயிருந்து வருகின்ற கழிவுப் பொருள்களிலேயிருந்து வருகின்ற Ethanol என்பதனை—பெட்ரோலோடு கலந்து அதை எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்று இன்றைக்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். கரும்பை அதிகமாகப் பயிர் செய்கின்ற நம்முடைய தமிழகம், மரவள்ளிக் கிழங்கையும் அதிகமாகப் பயிர் செய்கின்றது. எனவே, நம்முடைய தமிழ்நாட்டில், இவை இரண்டையும் பயன்படுத்தி Ethanol என்ற எரிபொருளை நாம் தயாரித்தால் பெருவாரியாக நாம் அன்னியச் செலவாணியைக் காப்பாற்ற முடியும். பிரேசில், சுவீடன் போன்ற நாடுகளில் 40 சதவிகிதம் அளவுக்கு பெட்ரோலிலே Ethanol கலக்கப்படுகிறது. நம்முடைய அரசானது இப்போது 5 சதவிகிதம் கலந்தால் போதும் என்று சொல்லியிருக்கிறது. இந்த 5 சதவிகித அன்னியச் செலவாணி மிச்சமே. பெரும் சாதனையாக அமையும்.



அதில் தமிழகத்தின் பங்கு கணிசமாக இருக்கும். இதை நாம் செய்ய வேண்டும் என்று கூறி, இங்கே எல்லோரும் "சுதேசி-சுதேசி" என்று எதை எதையோ, எதை சுதேசி என்று தெரியாமல் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த மதுபானங்கள் என்று வருகிறபோது மட்டும் விதேசி ஆகிவிடுகின்றோம். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. விதேசி என்றால் வெளிநாட்டுச் சரக்கு. நம்முடைய நாட்டிலே இன்றைக்கு சுமார் 4 இலட்சம் பனை மரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பனை மரங்கள் 7 கோடி இருக்கின்றன. தென்னை மரங்கள் 2 கோடி இருக்கின்றன. இன்றைக்கு தென்னை எந்த நிலையிலே இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவீர்கள். அது ஒருவகையான நோய்க்கு உட்பட்டு தென்னை சாகுபடியானது இன்றைக்கு ஒரு சரியான நிலையிலே இல்லாமல் இருக்கிறது. இந்தத் துறையிலே குறைந்தது 5 இலட்சம் பேர் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த வேலை செய்து கொண்டிருக்கின்றவர்கள் தவறு செய்கின்றார்கள் என்பதற்காக இன்றைக்கு 12 கோடி ரூபாய் அளவிற்கு அவர்கள்மீது அபராதம் விதிக்கப்படுகின்றது என்று ஒரு கருத்துக் கணிப்பு கூறுகின்றது. அதாவது "சாறு" இறக்குபவர்கள், "கள்" இறக்கியதாக அவர்கள்மீது வழக்குத் தொடரப்படுகின்றதே, அதனால் அரசாங்கத்திற்கு 12 கோடி வருமானம் என்று கூறப்படுகின்றது. எந்த அளவுக்கு இது உண்மை என்று தெரியாது. இதனை ஒரு கருத்துக் கணிப்பைப் பார்த்து நான் தெரிந்து கொண்டேன். இன்றைக்கு இதைத் தவிர்த்து, கள் குடிப்பதையும், கள்ளுக்கு மதுவிலக்கு அளிப்பதையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமானால், ஒரு புள்ளிவிவரக் கணக்கைப் போட்டுப் பார்த்ததன்படி 280 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருமானமாக வரும் என்பதும், இன்றைக்கு எந்தெந்த சரக்குகளையோ சாப்பிட்டு மக்கள் என்னவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், இது உங்கள் கருத்தா, உங்கள் கட்சியினுடைய கருத்தா?

**திரு.கு.ஜெயக்குமார்:** என் கருத்தாகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். ஏன் என்றால் இந்தக் கருத்தை நான் என் கட்சியினுடைய தலைவர்களிடம் இன்னும் கலந்தாலோசிக்கவில்லை. நாட்டிற்கு நல்லது எது செய்வதாக இருந்தாலும் அதை எடுத்துச் சொல்வதில் தயக்கம் காட்டக் கூடாது என்ற அளவிலே ....

[2002 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகாத்மா காந்தி வாழ்க. (சிரிப்பு)

**திரு. கு. ஜெயக்குமார்:** மகாத்மா காந்தி வாழ்ந்த நாட்டில் இன்றைக்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அவைத் தலைவர் அறிவார்கள். நாட்டின் பெயருக்கு இழுக்காக எவையெல்லாம் நடக்க வேண்டுமோ, அவை, அங்கே குஜராத்திலேதான் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஜெயக்குமார், பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெக. வீரபாண்டியன், அவர் பேசி முடித்துவிடட்டும். பிறகு... (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஆகவே, இன்றைக்கு ஏதேதோ சரக்கைச் சாப்பிட்டால் கண் பார்வை போய்விடுகிறது. மருத்துவ ஆராய்ச்சியின்படி கள்ளைச் சாப்பிட்டால் கண் பார்வை நன்றாக இருக்கும் என்று, சர்க்கரை வியாதி நீங்கும் என்று, மஞ்சள் காமாலையும் போகும் என்று ஆக பல நல்ல வழிமுறைகள் எல்லாம் இருக்க, இதை அரசு ஆலோசித்தால் நலமாக இருக்குமென்று கூறி இன்றைக்கு வேளாண்மைத் துறையையே ஆட்டுவிக்கப் போவது, bio-tech engineering. இங்கே அறிக்கையிலேகூட சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாக்கியத்தோடு பேசி முடியுங்கள்.

பிற்பகல் 1-35

**திரு. கு. ஜெயக்குமார்:** இந்த bio-tech engineering முறையை மரபணு மாற்றும் முறையில் ஆராய்ச்சியை இந்த அரசு வேகமாக செயல்படுத்தினால், தமிழகம் இதில் மிகவும் முன்னேற்றம் அடையும் என்பதைக் கூறி, கடைசி கருத்தாக என்னுடைய நாமக்கல் தொகுதியானது—நாமக்கல் மாவட்டமானது — எதற்காகவோ தெரியவில்லை; வேளாண்மைத் துறையினால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.



2002 ஏப்ரல் 22] [திரு. கு. ஜெயக்குமார்]

மிகவும் வறண்ட பகுதி. நிலத்தடி நீர் பல நூறு அடிகளாக கீழே இருக்கின்ற இடம். ஆனால், நாமக்கல் மாவட்டத்தில் இதுவரையில்—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சற்று கவனிக்க வேண்டும்—அங்கே அரசு விதைப்பண்ணை கிடையாது. உழவர் பயிற்சி நிலையம் எதுவும் கிடையாது. விவசாயம் தொடர்புடைய ஆய்வகம் எதுவும் கிடையாது. வேளாண்மைக் கல்லூரியோ, ஆராய்ச்சி மையமோ, அறிவியல் மையமோ எதுவும் இல்லை. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் கிடையாது. டானிடா உதவித் திட்டம் எதுவும் இல்லை. பாசன மேம்பாட்டுத் திட்டம் கிடையாது. விதைப் பரிசோதனை நிலையம் எதுவுமே கிடையாது. ஆக கிடையாது என்பதனுடைய பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. வறண்டு கிடக்கின்ற மாவட்டம நாமக்கல் மாவட்டம். அந்த நாமக்கல் மாவட்டத்தின்மீது தயவுசெய்து மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களின் கனிவு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் பிறந்தது ஓரிடம். இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருப்பது ஓரிடம். மதுராந்தகத்திலே இருக்கின்ற சர்க்கரை ஆலையானது மூடப்பட்டுக் கிடக்கின்றது. ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் அதிலே வேலை செய்து இன்றைக்கு வேலையில்லாமல் நடுத் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் தங்களுடைய கரும்பினை, ஆலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது எல்லாம் மதுராந்தகத்திலே மூடப்பட்டிருக்கின்ற அந்த சர்க்கரை ஆலையை தயவுசெய்து நீங்கள் செயல்படுத்த வேண்டும். உங்கள் காலத்திலே செயல்படாவிட்டால் அது எந்தக் காலத்தில் செயல்படப் போகிறது? தயவுசெய்து அதற்கு ஒரு சரியான முடிவை நீங்கள் எடுத்து அங்கேயிருக்கின்ற அந்த மக்களுடைய துயரைத் துடைக்க வேண்டும். அந்தக் குடும்பங்கள் வாழ வேண்டும். அதற்கு நீங்கள் வழிவகுக்க வேண்டுமென்று கூறி நல்வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்றபோது மீண்டும் குறுக்கிட வேண்டாம் என்பதற்காகத்தான் நான் இதுவரையில் குறுக்கிடவில்லை. அவர் பேசுகின்றபோது—காவிரி

நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் இருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது பற்றி இங்கே குறிப்பிட்டார். நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1972-ல் உச்ச நீதிமன்றத்தில் காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக இருந்த வழக்கை அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொன்னதன்பேரில்தான், வற்புறுத்தியதன் பேரில்தான், வழக்கை வாபஸ் பெற்றார் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அன்றைக்குச் சுட்டிக்காட்டினார். அதற்கு அன்றைக்கு மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஆட்சேபம் தெரிவித்தார். அப்போது நிதியமைச்சருக்கு ஆதரவாக நான் பேசினேன். நானும் அதே கருத்தைத்தான் சொன்னேன். நடந்த சரித்திரத்தை, நடந்த வரலாற்றை மாற்றியமைக்க முடியாது. அன்றையதினம் — 1972-ல் உச்ச நீதிமன்றத்தில் இருந்த வழக்கை அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் வாபஸ் பெற்றார். அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொன்னதன்பேரில்தான் வாபஸ் பெற்றார் என்றுதான் நானும் கூறினேன். அப்போது அதற்கு என்னென்ன காரணங்கள் என்பதைச் சொல்லப் போக, விவாதம் எங்கெங்கோ சென்றது. அப்போது உரிமை மீறல் பிரச்சினை எல்லாம் எழுந்து அதன்பிறகு நீங்கள் ஒரு தீர்ப்பைக் கூறிவிட்டீர்கள். ஆனால், பதிய வைக்க வேண்டிய ஒரு கருத்தை பதிய வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இப்போது சொல்கிறேன். அன்றையதினம் உரிமை மீறல் பிரச்சினை பற்றி இங்கே பேசியபோது, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்களும் அதே கருத்தைத்தான் சொன்னார். அன்றையதினம், அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொன்னதன்பேரில்தான், அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்டிருந்த வழக்கை வாபஸ் பெற்றார் என்று குறிப்பிட்டார். அந்த கருத்தை இன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் கூறியிருக்கிறார். ஆகவே, காரணம் எதுவாக இருந்தாலும், ஒன்று தெளிவாகிறது. அதை இங்கே பதிய வைக்க விரும்புகிறேன். 1972-ல் காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் இருந்த வழக்கை அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூறியதன்பேரில்தான் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் வாபஸ் பெற்றார். இதை யாராலும் மறுக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதியா, அல்லது திரு. பொன்முடியா என்பதை நீங்களே முடிவு பண்ணுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதும் உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் சொன்னதும் உண்மைதான். ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காக அன்னை இந்திராவினுடைய பேச்சைக்கேட்டு வழக்கை வாபஸ் பெற்றது உண்மைதான். ஆனால், வாபஸ் பெறுகின்றபோதே ஒரு நிபந்தனையோடு, எப்போது இருந்தாலும் மீண்டும் வழக்குத் தொடருவோம் என்ற நிபந்தனையோடுதான் அது வாபஸ் பெறப்பட்டது.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் உண்மை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை இந்திரா காந்தி அவர்கள் என்ன காரணத்திற்காக வழக்கை வாபஸ் பெறச் சொல்லியிருந்தாலும், அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அதை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடாது என்றுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக எண்ணுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் அந்த வழக்கை வாபஸ் பெற்றதால், அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் தமிழகத்திற்குத் தீங்கிழைத்துவிட்டார் என்றுதான் நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இளம்வழுதி, நீங்கள் காரண காரிய விளக்கங்களுக்குள்ளே போகாதீர்கள். அதாவது, அன்றைய, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திரா காந்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு திரும்பப் பெறப்பட்டது என்பதை அன்றைய முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார். அதைத்தான் நம் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அதை யாரும் மறுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அதுதான். ஆனால், அவர் சொன்ன பிறகும்கூட, அனைத்துக் கட்சியையும் கூட்டி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றுதான் அது திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் உண்மை. ஆகவே, பிரச்சினை அது அல்ல. உரிமை மீறல் பிரச்சினை கொடுத்தது, இந்திரா காந்தி அம்மையார் சொன்னார் என்பதற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறல் பிரச்சினை ஒன்றும் இல்லை; அதற்குச் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் (குறுக்கீடுகள்) உரிமை மீறல் பிரச்சினைக்குச் சம்பந்தமில்லை இது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு பாட்டாளி கட்சியினுடைய தலைவர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு மணி அவர்களும் இங்கே பேசுகிறபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறபோது இலவச மின்சாரத் திட்டத்தை இரத்து செய்துவிட்டதாகக் கூறினார்கள். இது உண்மைக்குப் புறம்பான தகவல் ஆகும். பொதுவாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைச் சொல்லும்போது யாருமே எதிர்க்கவில்லையே? அதுதான் எனக்கும் பெரிய ஆச்சரியமாக இருந்தது. இரத்து செய்யவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொல்லும்போது நான் அவையில் இல்லை. பிறகுதான் இந்த விவரங்கள் எனக்குத் தெரிய வந்தது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்லக் கூறியிருக்கிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** இன்றைக்கு, குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தளவில் 85 சதவிகிதத்திற்கு மேல் உள்ளவர்கள் சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் ஆவார்கள். எந்தக் காலத்திலுமே இலவச மின்சாரம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கிறபோது இரத்து செய்யப்படவில்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாறாக பெரும் பணக்கார விவசாயிகளுக்கு மட்டும், அதுவும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 100 ரூபாய் மட்டுமே கட்டணம் விதிக்க அப்போது முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்டது என்றாலும், அது என்றைக்குமே அமல்படுத்தப்படவில்லை என்பதோடு, அதற்குப் பிறகு அது இரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதையும இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவோடு சொல்லிக்கொள்வதோடு, அதற்காக எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம். கருணாநிதி கொண்டு வந்த திட்டம்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ... (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** திருத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானே வாக்கியத்தைத் திருத்திவிடுகிறேன். முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கொண்டு வந்த திட்டம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு.... (குறுக்கீடுகள்) மாண்புமிகு.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்கிறார் (குறுக்கீடுகள்) வேறு என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பரிதி, உட்காருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** நான் திருத்திக் கொள்வதாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன செய்தார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துதான் இதிலே ரொம்ப முக்கியம் இப்போது.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லப்போகிற கருத்துதான் முக்கியம்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. அவர்கள் பெயர் சொல்லி அழைக்கலாம்.... (குறுக்கீடுகள்) பெயர் சொல்லி அழைக்கலாம்; நாங்கள் ஏதாவது சொன்னால் மட்டும் பாய்கிறார்களே, என்ன அர்த்தம்? இதற்கெல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம். இந்த சலசலப்பிற்கு நாங்கள் அஞ்ச மாட்டோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதை வேறு யாரிடமாவது வைத்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, சொல்ல வேண்டிய கருத்திற்கு வாருங்கள்.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பெரும் பணக்காரர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் இந்தத் திட்டம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** அந்தத் திட்டம் முன்னாள் முதலமைச்சர் அவர்களால் பணக்காரர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும்கட்சி உறுப்பினர்கள் இருக்கையிலே அமருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** பாட்டாளி மக்கள் கட்சி ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி கையைக் காட்டிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) கையை நீட்டிப் பேசுவது முறையல்ல. இதேமாதிரி இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது வரும். கையை நீட்டிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** பாட்டாளி மக்கள் கட்சி.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் விளக்கம் சொல்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும் வாதாடியது பணக்கார விவசாயிகளுக்கு மட்டுமே என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சொல்லுங்கள். மணி அவர்கள் பேசும்போது...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பணக்காரர்களுக்கு மாத்திரம் அல்ல. அன்று அறிவிப்பு வந்த உடனே அதற்குக் குரல் கொடுத்தது பாட்டாளி மக்கள் கட்சி. எதிர்க்கட்சி வரிசையிலே எல்லாக் கட்சிகளும் இருந்தன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் இப்போது அமைச்சர் சொல்லக்கூடிய விளக்கம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சர் அவர்கள் பணக்காரர்களுக்கு மாத்திரம் வாதாடியதாக சொல்கிறார். அப்படியானால் ஏழைகளுக்கு அல்ல என்று பொருள் வருகிறது. அதை ஒரு குத்தலாகவும் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்ன விளக்கம் என்னவென்றால். . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூற முற்பட்டபோது இங்கே ஏகப்பட்ட ரகளை ஏற்பட்டதால் அவர் சொன்ன விளக்கம் தெளிவாகப் புரியவில்லை என்று கருதுகிறேன். ஒன்றை நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். 1991 முதல் 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது எந்த ஒரு காலகட்டத்திலும் சிறிய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் இரத்து செய்யப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் இரத்து செய்யப்படுகிறது என்று எந்த அரசாணையும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1992-ல் ஓர் அரசாணை அளிக்கப்பட்டது. அப்போது பெரிய விவசாயிகளுக்கு மட்டும் ஒரு flat rate tariff of Rs.100 per Horse Power per annum, அதாவது ஓர் ஆண்டுக்கு ஒரு Horse Power-க்கு 100 ரூபாய் என்று ஒரு கட்டணம் வசூலிப்பதாக ஓர் அரசாணை வழங்கப்பட்டது. 2-6-1992 தேதியிட்ட அரசாணை வழங்கப்பட்டது. அப்போது அந்த அரசாணை அமல்படுத்தப்படவில்லை. பெரிய விவசாயிகளிடமிருந்து எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படாமல் 8-7-1992 அன்றே அந்த அரசாணை திரும்பப் பெறப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஏதோ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டதாகவும், தி.மு.க.வும், பா.ம.க.வும் அன்றைக்குப் போராடியதால்தான் அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டது என்பது போலவும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியது சரியல்ல. அப்படி எதுவும நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மணி அவர்கள் போராடியதாக இங்கே தெரிவித்தார். பெரிய விவசாயிகளுக்காகத்தான் அவர்கள் போராடினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல வந்தார் என்று சொன்னால், சிறிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்பட்டு வந்தது. அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார். பின்னர் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சரானபோது எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்தார். ஆக சிறிய விவசாயிகள் மட்டுமல்ல, பெரிய விவசாயிகள், பணக்கார விவசாயிகளுக்குக்கூட இலவச மின்சாரம் என்று திரு. கருணாநிதி அவர்கள் அறிவித்தார். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தினார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே அப்படி ஒரு செய்தி நடைபெறவில்லை, போராட்டம் இல்லை என்று முதலிலே சொன்னார்கள். பிறகு ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போராட்டம் இல்லை என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) அரசாங்கத்தின் சார்பிலே எல்லோருக்கும் இரத்து செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்தார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. அறிவிப்பு வந்ததும் உண்மை. போராடியதும் உண்மை. போராடிய பிறகு அந்த உத்தரவை திரும்பப் பெற்றதும் உண்மை. அதிலே மாற்றமில்லை. அப்படிப் போராடியதற்காக அவர்கள் உத்தரவைத் திரும்பப் பெற்று மீண்டும் ஆணை பிறப்பித்ததற்கு அப்போது நன்றியும் சொன்னோம். அது ஒன்றும் பெரிய விஷயமாக, விவகாரமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் நாங்கள் என்ன தெளிவுபடுத்த விரும்புகிறோம் என்று சொன்னால் ஏழை எளிய சிறிய விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற வகையில் எந்தக் காலகட்டத்திலும் அவர்களுக்கு இலவச மின்சாரம் நிறுத்தப்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 22

மேலும், தி.மு.க. உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது இலவச மின்சாரத் திட்டத்தையே திரு. கருணாநிதி அவர்கள்தான் கொண்டு வந்தார் என்று இங்கே பேசினார். அதாவது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகின்ற திட்டத்தையே திரு. கருணாநிதி அவர்கள்தான் கொண்டு வந்ததாகப் பேசினார். அதுவும் தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த (மேசையைத் தட்டும் ஒலி) காலத்திலேயே சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்தான் வழங்கப்பட்டு வந்தது. அன்றைக்கு பெரிய விவசாயிகளுக்கு ஒரு சிறிய கட்டணம் வசூலிக்கப்பட்டது. திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 1991 ஆம் ஆண்டில் பெரிய விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசம் என்று அறிவித்தார். அதற்காகத்தான் 1992 ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பெரிய விவசாயிகளிடமிருந்து ஒரு ஆண்டுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 100 ரூபாய் என்று flat rate tariff வசூலிக்க வேண்டுமென்று ஒரு அரசாணையை வெளியிட்டோம், 1992 ஆம் ஆண்டில். ஆனால் ஒரு மாதத்திற்குள்ளாகவே, அந்த அரசாணையையும் வாபஸ் பெற்றுவிட்டோம். ஆகவே, பெரிய விவசாயிகளிடமிருந்துகூட எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-04-2002) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

137. திரு. அ. பால்ராஜ், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களை, துணைத் தலைவராகவும் மற்றும் திரு. ஒ.எம். சந்திரசேகர் அவர்களை (தற்போதைய தலைமை நீதிபதி, பாண்டிச்சேரி), சென்னை, தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றத்தின் நீதித் துறை உறுப்பினராகவும் நியமித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]



2002 ஏப்ரல் 22]

138. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 16-7-2001 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

139. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

140. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

141. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2001-2002)

142. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

143. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2002)

144. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை. (2001-2002)

145. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை. (2001-2002)

146. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

147. மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

148. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண் 5 - 2002-2003 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.





## இணைப்பு

(83 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மை கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### அத்தியாயம்-1

### முகவுரை

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்கின்ற குறளுக்கு ஏற்ப உலகுக்கு அச்சாணி போல் செயல்பட்டு வரும் விவசாயிகளின் வாழ்வு செழிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி செயல்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் வாழ்வாகவும், தொழிலாகவும் வேளாண்மை இருந்து வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 70 விழுக்காடு மக்கள் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால்தான் தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும்.

வெள்ளத்துக்கும் வறட்சிக்கும் இடையே மிகப்பெரிய போராட்டத்தைத் தமிழக விவசாயிகள் சந்திக்கும் நிலையிலே பருவ மழை மாறும்போதெல்லாம் அவர்களின் வாழ்வும் தரிசாக மாறிவிடுகிறது. இந்த ஆண்டு பருவம் தவறிப் பெய்த மழையால் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்க ரூ.48.1 கோடி உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டது.

இப்படிப்பட்ட இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து, விவசாயிகளைப் பாதுகாக்கவும், வளர்ந்து வரும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும்—வேளாண் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும்—தரத்தையும் மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையின்படி தமிழகத்தில் ஐந்து ஆண்டுகளில் 20 இலட்சம் எக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டு

[2002 ஏப்ரல் 22

தற்போது 10 மாவட்டங்களில் 1,35,905 ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டக் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை முடிவு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களில் தோட்டக் கலைப்பயிர்கள், வேளாண் காடுகள், மருத்துவப் பயிர்கள், எரிசக்திக்குத் தேவையான மரங்கள், தீவனப் பயிர்கள் போன்ற வர்த்தகப் பயிர்களை விளைவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை சார்ந்த தொழில்கள் மற்றும் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் தொழில்கள் போன்றவற்றுக்கு இவை ஊக்கமளிப்பதாக இருக்கும்.

தமிழ்நாட்டில் வேளாண்மை ஒரு திருப்பு முனையினைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஒரு பக்கம் அடிப்படைத் தேவையில் அரிசியை அதிகம் விளைவித்து வெற்றியைக் கண்டிருக்கிறோம். அதேநேரத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரின் நுகர்திறன் அதிகரிக்கவில்லை. திறன்மிக்க விவசாயப் பணிகளின் மூலம் இடுபொருள் பயன்திறன் பெருகவும், இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன் கொள்ளவும் திட்டமிடப்பட்டது. எனவே பண்ணை உற்பத்தித் திறன் தொடர்ந்து நிலைத்திருக்கும் வகையில் அதிகரிக்கச் செய்யவும் ஒவ்வொரு மழைத்துளியைச் சேமிக்கவும், குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக அளவு உற்பத்தி செய்திடவும் தொடர் பசுமைப் புரட்சி என்கின்ற கோட்பாட்டினை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று அறிவித்து அதை முனைப்புடன் செயல்படுத்தியும் வருகிறார்கள்.

மேலும் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு எந்த ஒரு தனிப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் இல்லை என்பதை உறுதி செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நோக்கமாகும்.

1996-2001 ஆம் ஆண்டில் வேளாண்மை வளர்ச்சி ஆண்டிற்கு 2.72 விழுக்காடாக இருந்தது. இதனை 10-வது நிதிக்காலத்தில் (2002-2007)



)02 ஏப்ரல் 22]

ஆண்டிற்கு 4 விழுக்காடாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நல்ல பாசன மேலாண்மை மூலமும், தரிசு நில மேம்பாட்டின் மூலமும், விளை நிலத்தை அதிகப்படுத்த முடியும். தேவையான வானிலை தகவல்கள், விற்பனை மற்றும் வேளாண்மை தகவல்கள் மூலம் உற்பத்தித் திட்டங்கள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருவாய்க்கான உத்தரவாதங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய முடியும்.

1980-81ஆம் ஆண்டில் மாநிலத்தின் உற்பத்தி வளர்ச்சியில் (Domestic Products) 25 விழுக்காடு அளவிற்கு வேளாண்மை பகிர்ந்து கொண்டது. இதுவே 1999-2000-ல் 17 விழுக்காடாகக் குறைந்துள்ளது. 1981ஆம் ஆண்டில் 60 இலட்சமாக இருந்த வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2001ஆம் ஆண்டில் 86.65 இலட்சமாக உயர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு அதிக வருவாய் தரக்கூடிய வணிகப் பயிர்களை விளைவிக்க பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அளிப்பதன் மூலமும் வேளாண் விளைபொருட்களை மதிப்பூட்டுவதன் மூலமும் விவசாயிகளின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியும்.

More Yield, More Employment

More Income, with Low Cost and No Cost

என்ற அடிப்படையில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக தோட்டக்கலை உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், பதப்படுத்தி மதிப்புக் கூட்டி, அவற்றை விற்பனை செய்வதற்கும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (Mission for Horticulture Development) ஒன்று அமைக்கப்படும். இவ்வியக்கம்

1. சொட்டு நீர் மூலம் நீர்வளப் பாதுகாப்பு.

2. தோட்டக்கலை விளைபொருட்களை அறுவடைக்குப்பின் பாதுகாத்து விற்பனை செய்தல்.

3. வேளாண் பொருளாதார ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தை ஏற்படுத்துதல்.

4. பயிரிடுவதிலிருந்து விற்பனை செய்யும் வரை தோட்டக்கலை மேம்பாட்டின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

[2002 ஏப்ரல் 22

உலக வர்த்தக இயக்கத்தின்கீழ் வர்த்தக சுதந்திரம் வாய்ப்புகளுக்கும் வால்களுக்கும் வழிவகை செய்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் பாருட்கள் உள்ளூர் உற்பத்தியை அச்சுறுத்துவதாக உள்ளது. தேசமயம் மாநிலத்தில் வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ாய்ப்புகள் அதிகம் உள்ளன.

எதிர்காலத்தில் பண்ணை மற்றும் பண்ணைசாரா தொழில்களை மம்படுத்தி, வேலைவாய்ப்புத் திறனை அதிக அளவில் உருவாக்கி, ராமப்புற மக்களின் வருவாயை உயர்த்தி, உணவு ஆதாரங்களைப் பருக்கி, விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதே வருங்காலத்தின் காள்கை எனக் கொண்டு செயல்பட வேண்டும்.

"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு"

மிக்க பொருள் வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத்தக்கதாய், கடில்லாததாய், மிகுதியாய் விளைபொருள் தருவதே நாடாகும் என்ற ள்ளுவரின் கூற்றுக்கேற்ப தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு தலைமைச்சர் அம்மா அவர்களின் அரசு அயராது பாடுபடும்.

## கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

002-2003-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

2002-2003 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
ரூபாய் ஆயிரத்தில்

| | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|
| னியக் கோரிக்கை அனுமதித்தது | 5,99,76,82 | 3,69,86 | 6,03,46,68 |
| ாத்தத் தொகை சாட்டியது | 3 | - | 3 |

| கணக்குத் தலைப்புகள் | 2000-01 கணக்குகள் | 2001-02 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-02 திருத்த மதிப்பீடு | 2002-03 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| )1 பயிர்ப் பாதுகாப்பு | 3,47,60,84 | 4,16,24,88 | 3,17,71,61 | 3,30,10,85 |
| )2 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 52,32,44 | 84,75,85 | 80,45,27 | 83,79,19 |
| 5 வேளாண்மை ஆராய்ச்சியும், கல்வியும் | 66,99,57 | 63,03,30 | 62,86,15 | 61,30,53 |



2002 ஏப்ரல் 22]

| கணக்குத் தலைப்புகள் | 2000-01 கணக்குகள் | 2001-02 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-02 திருத்த மதிப்பீடு | 2002-03 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 32,71,55 | 36,93,69 | 33,75,85 | 34,53,16 |
| 2501 ஊரக வளர்ச்சிச் சிறப்புத் திட்டங்கள் | 3,93,80 | 9,71,81 | 7,16,31 | 9,71,18 |
| 2551 மலைப் பகுதிகள் | 10,60,91 | 15,79,24 | 11,39,92 | 12,83,32 |
| 2702 சிறு பாசனம் | 10,27,42 | 13,43,53 | 9,39,74 | 10,34,02 |
| 2705 பாசனப் பகுதி மேம்பாடு | 28,79,08 | 31,21,06 | 39,90,07 | 48,97,79 |
| 3435 உயிரின வாழ்க்கைச்சூழலும் சுற்றுச்சூழலும் | - | 1 | - | - |
| 3451 தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள் | 3,49,37 | 3,85,28 | 3,76,52 | 3,95,55 |
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 6,79,18 | 4,23,09 | 5,79,68 | 3,69,84 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வி குறித்த மூலதனச் செலவு | 26,17 | 1 | 1 | - |
| 4435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 4,09 | - | - | - |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | - | - | 72,27 | 2 |
| 6401 பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | - | - | 12,06,33 | - |
| 6402 மண்வள, நீர்வளப் பாதுகாப்புக்கான கடன்கள் | - | 2 | - | - |
| 6551 மலைப் பகுதிகளுக்கான கடன்கள் | - | 3 | - | - |
| 7610 அரசுப் பணியாளர் முதலியோருக்கான கடன்கள் | 96.57 | - | - | - |

[2002 ஏப்ரல் 22

## கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

2002-03 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| கணக்குத் தலைப்புகள் | | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 0501 தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 13,70,04 | .. | 13,70,04 |
| 0502 வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 3,08,89,99 | 8 | 3,08,90,07 |
| 0503 வேளாண்மை விற்பனை இயக்ககம் | அனுமதித்தது | 23,42,95 | .. | 23,42,95 |
| 0504 விதைச்சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | .. | 1 |
| | அனுமதித்தது | 7,64,79 | .. | 7,64,79 |
| 0505 தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | .. | 1 |
| | அனுமதித்தது | 43,31,01 | 2 | 43,31,03 |
| 0506 வேளாண்மைப் பொறியியல் | சாட்டியது | 1 | .. | 1 |
| | அனுமதித்தது | 1,44,13,48 | 3,69,76 | 1,47,83,24 |
| 0507 வேளாண் பொறியியல் மற்றும் பணிகள் கூட்டுறவு இணையகம் | அனுமதித்தது | 14,56 | .. | 14,56 |
| 0508 வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 58,50,00 | .. | 58,50,00 |
| மொத்தம் | சாட்டியது | 3 | .. | 3 |
| | அனுமதித்தது | 5,99,76,82 | 3,69,86 | 6,03,46,68 |



2002 ஏப்ரல் 22]

## அத்தியாயம் 2

### வேளாண்மை

பருவ நிலை மற்றும் பயிர் விவரம்

(மில்லி மீட்டரில்)

| பருவம்/மாதம் | இயல்பான மழை | பெய்த மழை 2000 | பெய்த மழை 2001 | வேறுபாடு (விழுக்காடு) இயல்பு மழையுடன் | வேறுபாடு (விழுக்காடு) கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|
| கோடை (மார்ச்-மே 2001) | 136.5 | 77.9 | 118.5 | -13 | +52 |
| தென்மேற்குப் பருவம் (ஜூன்-செப்டம்பர் 2001) | 307.6 | 314.5 | 260.0 | -15 | -17 |
| வடகிழக்குப் பருவம் (அக்டோபர்-டிசம்பர் 2001) | 438.7 | 335.6 | 379.4 | -14 | +13 |
| குளிர்காலம் (ஜனவரி-பிப்ரவரி 2002) | 42.2 | 27.3 | 70.0 | +66 | +156 |
| **மொத்தம்** | **925.0** | **755.3** | **827.9** | **-10.4** | **+10** |

தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் ஆண்டில் மார்ச் முதல் பிப்ரவரி முடிய உள்ள காலத்தில் பெற வேண்டிய 925 மி.மீ மழையளவிற்கு -10.4% குறைவாக அதாவது 827.9 மி.மீ மழையே பெறப்பட்டது. கோடையில் 13.0% குறைவாகவும், தென்மேற்குப் பருவத்தில் -15.0% குறைவாகவும் வடகிழக்குப் பருவத்தில் -14.0% குறைவாகவும், குளிர்காலத்தில் 66% கூடுதலாகவும் மழை பெறப்பட்டது. தென்மேற்குப் பருவத்தில் 13 மாவட்டங்களும், வடகிழக்குப் பருவத்தில் 15 மாவட்டங்களும், 20% குறைவாகவே மழை பெற்றன. இதனால் கார் பருவத்தில் கரும்பு தவிர பிற பயிர்களில் குறைவான சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. எனினும், நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு தற்போது கடந்த ஆண்டு சாகுபடி அளவை ஏறக்குறைய அடைந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 62 டி.எம்.சி என்ற அளவு இருந்தபோதே கர்நாடகாவிலிருந்து வரையறுக்கப்பட்ட நீர் கிடைக்கும் என நினைத்து குறித்த காலத்தே அணை திறக்கப்பட்டது. எனினும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் முறையே 59% மற்றும் 44.3%

குறைவாகவே நீர் பெறப்பட்டது. இதனால், குறுவை இயல்பு சாகுபடி பரப்பான 2.07 இலட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ள இயலவில்லை 1.30 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சிறிது கூடுதலாகும்.

எதிர்பாராத விதமாக தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 1-2-2002 முதல் 3-2-2002 வரை பெறப்பட்ட பெருமழையின் காரணமாக அறுவடைப் பருவத்திலிருந்த நெல், பயறு வகைகள், நஞ்சை தரிசு பருத்தி, நிலக்கடலை மற்றும் கரும்புப் பயிர்கள் பெரும் சேதத்திற்குள்ளாகின. 31-3-2002 வரையில் 1.32 இல. எக்டேர் நெல். 1.58 இல. எக்டேர் பயறு வகைகள் மற்றும் 0.05 இல. எக்டேர் இதரப் பயிர்களின் பரப்பு முழு சேதமடைந்ததாகக் கணிக்கப்பட்டு 457728 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 41.405 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் 2001-2002ஆம் ஆண்டின் பயிர் சாகுபடி பரப்பு விவரம் வருமாறு:—

| பயிர் | 2001-2002 பரப்பு (இல.எக்டேர்) | | 2001-2002 உற்பத்தி (இல.மெ.டன்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| அரிசி | 22.00 | 21.100 | 80.50 | 73.000 |
| சிறு தானியங்கள் | 15.00 | 10.916 | 16.00 | 11.497 |
| பயறு வககைள் | 10.00 | 9.771 | 6.50 | 3.686 |
| மொத்த உணவு தானியங்கள் | 47.00 | 41.787 | 103.00 | 88.183 |
| எண்ணெய் வித்துக்கள் | 12.54 | 9.621 | 19.77 | 14.251 |
| பருத்தி (இல.பொதிகள்) | 3.00 | 1.800 | 6.50 | 3.350 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 3.140 | 37.00 | 34.590 |

**2002-2003 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு**

2002-2003 ஆம் ஆண்டுகளில் சாதகமான பருவ நிலையினைக் கருத்தில் கொண்டும், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட செயற்குழுவில்





டுத்த முடிவின்படியும் 2002-2003 ஆம் ஆண்டு இலக்கு பின்வருமாறு ர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| வ. எண் | பயிர் | பரப்பு (இல.எக்டேர்) | உற்பத்தி இலக்கு (இலட்சம் டன்) |
|---|---|---|---|
| 1 | அரிசி | 22.00 | 80.50 |
| 2 | சிறு தானியங்கள் | 11.00 | 13.00 |
| 3 | பயறு வகைகள் | 10.00 | 6.50 |
| 4 | மொத்த உணவு தானியங்கள் | 43.00 | 100.00 |
| 5 | எண்ணெய் வித்துக்கள் | 10.86 | 17.87 |
| 6. | பருத்தி (இலட்சம் பேல்கள்) | 3.00 | 6.13 |
| 7 | கரும்பு (வெல்லமாக) | 2.75 | 34.40 |

**டுபொருள் திட்டங்கள்**

*ான்று பெற்ற விதைகள்*

தமிழகத்தில் தரமான விதைகளை விநியோகித்திட மாநில விதைக் கழகம் இல்லை. எனவே, வேளாண்மைத் துறை தற்போதுள்ள உள்ளமைப்பு வசதிகளைக் கொண்டு விவசாயிகளின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வதில் முதல் பொறுப்பு வகிக்கிறது. விதை உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டம் மூன்றடுக்குகளாக செயல்பட்டு வருகிறது. இதில் வல்லுநர் விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டபின் 39 அரசு விதைப் பண்ணைகள் 6 மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகள் மற்றும் வம்பனில் உள்ள ஒரு தனி பயறு பண்ணை மூலம் ஆதார விதைகளாக பெருக்கம் செய்யப்பட்டு பின் இந்த ஆதார விதைகள் விவசாய நிலங்களில் சான்று விதைகளாக பெருக்கம் செய்யப்படுகின்றன. சான்று விதைகளின் தரத்திற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மாநிலத்தில் இயங்கும் 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இச்சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும்

28.500 மெ.டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இவ்விதைகள் விவசாயிகளுக்கு மாநிலம் முழுவதுமுள்ள 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. விவசாயிகளின் முழுத் தேவையினையும் துறையால் பூர்த்தி செய்ய இயலாவிடினும், தரமான சான்று விதைகள் பயிர் சாகுபடி பரப்பிற்கு குறிப்பிட்ட சதவிகிதம் வழங்கப்பட்டு அதன்மூலம் விவசாயிகளுக்கிடையே விதை பரிமாற்றம் செய்ய வகை செய்கிறது.

2002-2003 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் விதை மாற்று விகிதம் பின்வருமாறு:

| வ. எண் | பயிர் | மாநில அரசு பின்பற்றும் விதைமாற்று விகிதம் | மத்திய அரசு பரிந்துரைக்கும் விதைமாற்று விகிதம் |
|---|---|---|---|
| 1 | அ. நெல் | 17 | 17 |
| | ஆ. சிறு தானியங்கள் | 7 | .. |
| 2 | பயறு வகைகள் | 12.50 | 11 |
| 3 | பருத்தி-மானாவாரி | 10 | 15 |
| | பருத்தி-இறவை | 15 | 15 |
| 4 | நிலக்கடலை | 5 | 3 |
| 5 | எள் | 15 | 10 |
| 6 | சூரியகாந்தி | 50 | 50 |
| 7 | ஆமணக்கு | 30 | 20 |
| 8 | சோயாமொச்சை | 20 | .. |

2001-2002 ஆம் ஆண்டின் விதை கொள்முதல், விநியோக இலக்கு சாதனை மற்றும் 2002-2003 ஆம் ஆண்டின் திட்டம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-





(அலகு மெ.டன்கள்)

| பயிர் | இலக்கு 2001-2002 | சாதனை | 2002-2003ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|
| (அ) கொள்முதல் | | | |
| நெல் | 18000 | 17806 | 18000 |
| சிறு தானியங்கள் | 400 | 400 | 400 |
| பயறு வகைகள் | 2600 | 1651 | 2600 |
| எண்ணெய் வித்துக்கள் | 11913 | 4258 | 8800 |
| பருத்தி | 375 | 205 | 375 |
| (ஆ) விநியோகம் | | | |
| நெல் | 18000 | 18799 | 18000 |
| சிறு தானியங்கள் | 400 | 404 | 400 |
| பயறு வகைகள் | 2600 | 1513 | 2600 |
| எண்ணெய் வித்துக்கள் | 11913 | 4202 | 8800 |
| பருத்தி | 375 | 174 | 375 |

**உரங்கள்**

தழை, மணி, சாம்பல் சத்துக்களைத் தரவல்ல இரசாயன உரங்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதில்லை. இவ்வுரங்களுக்கு அதிக தேவையிருப்பதைக் கருத்தில் கொண்டு இத்தகைய உரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தினைக் கண்காணிப்பதும், தரம், விலை மற்றும் வழங்கலைக் கட்டுப்படுத்துவதும் துறையின் முக்கிய பொறுப்பாகிறது. இதனால் உரக்கட்டுப்பாட்டு ஆணை மற்றும் அதன் விதிகளை அமல்படுத்தவும் இடுபொருள் பிரிவு இத்துறையில் இயங்குகிறது. பேரூட்டங்களைச் சரியான விகிதத்தில் வழங்குவதுடன், உயிர் உரங்கள் போன்றவை விரிவாக்கம் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றன. மேற்கூறிய நோக்கத்தினை அடைய பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

**உர விநியோகம்**

2001-2002 ஆம் ஆண்டின் இரசாயன உர விநியோகம் மற்றும் 2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டம் வருமாறு:

(இல.மெ.டன்கள்)

| சத்துக்கள் | இலக்கு 2001-2002 | சாதனை | 2002-2003ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|
| தழை | 5.25 | 5.22 | 5.30 |
| மணி | 2.25 | 2.03 | 2.30 |
| சாம்பல் | 2.10 | 2.24 | 2.11 |
| மொத்தம் | 9.60 | 9.49 | 9.71 |

**நுண்ணூட்ட உரக் கலவை-உற்பத்தி மற்றும் விநியோகம்**

எண்ணெய் வித்துக்களை, பயறு வகைகள் மற்றும் சிறுதானிய வகைப்பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் நுண்ணூட்டச் சத்துக்களை உற்பத்தி செய்து வழங்க குடுமியான்மலையில் இயங்கிவரும் நுண்ணூட்ட உரக் கலவை தயாரிக்கும் மையம் ஆண்டு தோறும் 1250 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவையினைத் தயாரித்து விநியோகித்து வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 1023 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டும் 1250 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்து வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிங்க் சல்பேட் உரம் விநியோகித்தல்**

2002-2003 ஆம் ஆண்டில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 80.000 எக்டேர் நிலத்தில் 2.000 மெ.டன் சிங்க் சல்பேட் உரத்திற்கு 25 விழுக்காடு (கிலோவிற்கு ரூ.5 வீதம்) ரூ.100 இலட்சம் மானிய ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகள் பயனடைவார்கள்.

**இயற்கைப் பண்ணையம்**

தமிழகத்தில் அளவிற்கதிமாக இரசாயன உரங்களை உபயோகித்ததால் மண்ணின் மக்குத் தன்மை குறைந்ததாலும் நாட்டில் வேளாண் சுற்றுச்சூழலில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாகவும் இயற்கைப்





பண்ணையும் முன் எப்போதும் இல்லாத' அளவிற்கு அதிமுக்கியத்துவம் பெற்று வருகிறது. தரமான மக்கு எரு, உயிர் உர உபயோகம், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉர உபயோகம் போன்றவை சாகுபடி செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த பயிர்ச்சத்து மேலாண்மைத் தொழில் நுட்பத்திற்காகவும் பரிந்துரைக்கப்படுகின்றன. வேளாண் துறை உயிர் உரம் மற்றும் பசுந்தாளுர உற்பத்தி, விநியோகத்தில் பெரும்பங்காற்றுவதுடன் விவசாயிகளை கம்போஸ்ட் மற்றும் தொழுஉர உபயோகத்தினை அதிகப்படுத்த ஊக்கப்படுத்தியும் வருகிறது. இயற்கைப் பண்ணையத்தினை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

**உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம்**

கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கும் உயிர் உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுதோறும் 1400 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களின் தரத்தைக் கண்காணிக்க, உயிர் உரதரக்கட்டுப்பாடு ஆய்வகம் திருச்சியில் இயங்கி வருகிறது. வழங்க உள்ள உயிர் உரங்களின் விவரம் வருமாறு:

| வ.எண். | பெயர் | வழங்கவுள்ள அளவு (மெ.டன்) |
|---|---|---|
| 1. | ரைசோபியம் | 280 |
| 2. | அசோஸ்பைரில்லம் | 800 |
| 3. | பாஸ்போ பேக்டீரியம் | 320 |
| மொத்தம் | | 1400 |

2001-2002 ஆம் ஆண்டில் 1427 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டும் 1400 மெ.டன் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தழை உரத்தை தரவல்ல நீலப்பச்சைப் பாசி மற்றும் அசோலா போன்றவை விவசாயிகள் உபயோகிப்பதை துறை ஊக்குவித்தும் வருகிறது. வயல் வெளிகளில் இவற்றை வளர்ப்பதால் பயிருக்கு அளிக்கப்படும் தழை உரத்தினை ஓரளவு குறைக்கலாம். அசோலா, நீலப்பச்சைப் பாசி போன்றவை காற்றிலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிறுத்தி பயிருக்குத் தரவல்லவை.

[2002 ஏப்ரல் 22

ஆண்டுதோறும் 500 மெடன் நீலப்பச்சைப் பாசி மற்றும் 500 மெடன் அசோலா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்**

மண்ணின் மக்கு அளவினை அதிகரிக்க பசுந்தாள் உரத்தினைப் பயிர்செய்து அந்நிலத்திலேயே மடக்கி உழுவதற்கு அல்லது வெட்டி பசுந்தழை உரமாகப் பயன்படுத்த ஆண்டிற்கு 90 மெடன் பசுந்தாள் உர விதைகள் ரூ.9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து 25 ழுக்காடு மானியத்தில் இலாப/நட்டமற்ற நோக்கத்துடன் விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 60.35 மெடன் பசுந்தாளுர விதைகள் ரூ. 9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, 54.422 மெடன்கள் விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் 125 மெடன்கள் கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட உள்ளன.

**பயிர் பாதுகாப்பு**

வேளாண். சூழலின் இயற்கை சமநிலை பாதிக்காதவண்ணம் பயிர்களை பூச்சி நோய்களிலிருந்து பாதுகாத்திட தற்போது பூசசிக்கொல்லி மருந்துகளை குறைந்த அளவே உபயோகித்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்திடும் முறை விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. பூச்சி நோய் கண்காணிப்பு, உயிரியல் கொல்லிகள் உபயோகித்தல், உயிரியல் காரணிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு போன்ற பயிர் பாதுகாப்பு முறைகளுக்கு உந்துகை அளிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் சமநிலை பாதுகாக்கப்படுகிறது. இதற்காக பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

**பூச்சி நோய் கண்காணிப்பு**

பொருளாதார சேதநிலை துல்லியமாக கணிக்கப்பட்டு, பூச்சிநோய் தாக்குதலிலிருந்து மீளவும் உரிய பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பூச்சி நோய் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக முன்தேர்வு செய்யப்பட்ட 7356 இடங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து விவசாயிகளுக்கு



2002 ஏப்ரல் 22]

முன்னறிவிப்பு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு முறை 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**பயிர் மற்றும் பயிர் பாதுகாப்பு**

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரசாயன பூச்சிக்கொல்லி உபயோகத்தினை தேவையின் அடிப்படையில் குறைந்த அளவே உபயோகித்திட வேண்டும். தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு துறைமூலம் நடைபெறும் வர்த்தகத்தினைக் குறைத்திடவும் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் காரணிகள் விநியோகத்திற்கு முக்கியத்துவம் அளித்திடவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. மேலும் விவசாயிகளுக்குத் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்க தனியார் பூச்சி மருந்துக் கடைகளிலிருந்தும் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களிடம் இருந்தும் 13682 பூச்சி மருந்து மாதிரிகள் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு 9 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டு தரமற்ற பூச்சி மருந்துத் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் மீதும் போலி பூச்சி மருந்துகள் தயாரிப்பாளர்கள் மீதும் பூச்சி மருந்துச் சட்டம் 1968-ன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் 41.796 இலட்சம் எக்டேர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 26.205 இலட்சம் எக்டேர் பரப்பிலும் மற்றும் விதை நேர்த்தி 21.954 இலட்சம் எக்டேர் பரப்பிலும் 2001-2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

இத்திட்டத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குவதோடு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், குறிப்பாக நெல் மற்றும் பருத்தி உழவர் வயல்வெளிப் பள்ளிகள் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குறைந்த செலவில் அதிக உற்பத்தி செய்வதும் அதே நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளால் ஏற்படும் தீமைகளான சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு, நச்சுப்படிவு, பூச்சிகளின் மறு உற்பத்தி போன்றவற்றைத் தடுப்பதாகும். மத்திய சார்புத் திட்டங்களான தானிய உற்பத்தித் திட்டம், மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம், எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பருத்தி தொழில்நுட்பவியல் குழு 2 ஆகியவற்றின் மூலமாக

[2002 ஏப்ரல் 22

பின்வரும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது:

| வ. எண் | திட்டம் | பொருள் குறியீடு | சாதனை |
|---|---|---|---|
| 1. | தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் மற்றும் பயிற்சி (எண்கள்) | 1674 | 1386 |
| 2. | பருத்தி தொழில்நுட்பவியல் குழு 2 திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 40 | 40 |
| 3. | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டேர்) | 533 | 513 |
| 4. | எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுக்காப்புத் திட்ட செயல்விளக்கம் (எக்டேர்) | 4000 | 3920.66 |

இந்த அணுகுமுறை 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**பயறு வகைகளில் உழவர் வயல்வெளிப் பள்ளி**

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் தொழில் நுட்பங்களைப் பின்பற்ற, விவசாயிகளுக்கு வயல்வெளிப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 100 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு விவசாய வயல்வெளிப் பள்ளிகள் ரூ.6.5 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நீலகிரி மாவட்டம் தவிர அனைத்துப் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

*உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் மாநில ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம்.*

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இத்திட்டப் பயனை முழுமையாக அடைய இவற்றை உற்பத்தி செய்து அளிப்பது அவசியமாகிறது. இதற்காக 8 உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையங்களும், 49 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களும், 2 மாநில ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்களும் டிரைக்கோகிராமா, டிரைக்கோடர்மாவிரிடி,



2002 ஏப்ரல் 22]

என்பி வைரஸ், சூடோமோனாஸ் ஃப்ளூரோசன்ஸ் போன்ற காரணிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. இவற்றின் மூலம் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும். பரப்பு விவரம் வருமாறு:

| | பயிர்/பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை | பரப்பு (எக்டேர்) குறியீடு | சாதனை | 2002-2003-க்கான குறியீடு (எக்டேர்) |
|---|---|---|---|---|---|
| விநியோக விவரம்: | | | | | |
| 1. | டிரைக்கோகிராமா (கரும்பு, இடைக்கணுப்புழு) | 21 | 10500 | 11984 | 10500 |
| 2. | பெத்திலிட்ஸ், பிரகோனிட்ஸ், யூலோபிட்ஸ் (தென்னை கருந்தலைப்புழு) | 19 | 10250 | 10050 | 10250 |
| 3. | என்பிவி (பருத்தி காய்புழு) | 3 | 1500 | 1504 | 1500 |
| 4. | என்பிவி (மணிலா சிகப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடீனியா) | 4 | 480 | 366 | 480 |
| 5. | பச்சை மஸ்கார்டின் பூஞ்சாணன் (குப்பிகள்) (தென்னை காண்டாமிருக வண்டு) | 2 | 10000 | 10005 | 10000 |
| 6. | டிரைக்கோகிராமா (பருத்தி, நெல், பயறு வகை மற்றும் மணிலா) | 10 | 60000 | 63000 | 60000 |

இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் மேற்கண்டவாறு உற்பத்தி செய்து விநியோகித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**தென்னை மேம்பாட்டுத் திட்டங்கள்.**

தமிழ்நாட்டில் தற்போது 3.04 இலட்சம் எக்டேர் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு எக்டேரில் 12000 தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. தென்னை சாகுபடி கடந்த ஆண்டுகளில் விரைவாகப் பரவி வந்தது. உச்சக்கட்ட அளவினை அடைந்துவிட்டபடியினால் தற்போது தென்னை பரப்பினை மேலும் அதிகரிக்க வாய்ப்பு குறைவாக உள்ளது. அதற்கு மாறாக காய்ப்பில்லாத மரங்களை அகற்றி, அதற்கு புதிய கன்றுகள்

நாட்டின் சாகுபடித் தொழில் நுணுக்கங்களை மேற்கொண்டும் உற்பத்தியினை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. நெட்டை மற்றும் நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென 26 தென்னை நாற்றங்கால்களும் மற்றும் இரண்டு தாய்மரத் தோட்டங்களும் பராமரிக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெட்டைக் கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ.12 எனவும், நெட்டை X குட்டைக் கன்றுகள் ரூ.20 எனவும் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2001-2002 ஆம் ஆண்டு தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆண்டு இலக்கு, சாதனை மற்றும் 2002-2003-க்கான இலக்கு ஆகியவை பின்வருமாறு:

அலகு இலட்சம் எண்கள்

| வ. எண் | இனங்கள் | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் | | | |
| | அ) நெட்டை | 13.50 | 8.63 | 9.00 |
| | ஆ) நெட்டை குட்டை | 8.00 | 6.07 | 6.00 |
| | **மொத்தம்** | **21.50** | **14.70** | **15.00** |
| 2. | தென்னங்கன்றுகள் விநியோகம் | | | |
| | அ) நெட்டை | 10.08 | 9.16 | 6.75 |
| | ஆ) நெட்டை X குட்டை | 6.30 | 5.81 | 4.90 |
| | **மொத்தம்** | **16.38** | **14.97** | **11.65** |

### பருத்தி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை தரமான விதைகள் வழங்குவதன் மூலமும் நிலையான விரிவாக்கம் மூலமும் அதிகரிப்பதே ஆகும். நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான இலக்கு சாதனை மற்றும் 2002-2003 ஆம் ஆண்டிற்கான குறியீடு விவரங்கள் வருமாறு:





| வ. எண் | இனங்கள்/அலகு | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | உயர் மற்றும் வீரிய இரக சாகுபடி பரப்பு (இல.எக்.) | 3.00 | 1.800 | 2.37 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 6.50 | 3.350 | 6.13 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3750 | 2052 | 3550 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 3750 | 1743 | 3550 |
| 5. | விதைகொள்முதல் (நிதி ரூ. இலட்சம்) | 78.62 | 74.698 | 78.62 |
| 6. | என்.பி.வி.நச்சுயிரி (விநியோகம் (எக்) | 1500 | 1504 | 1500 |
| 7. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (ரூ. இலட்சம்) | 0.60 | 0.538 | 0.60 |

### மாநில பருத்திக் குழு

பல்வேறு உற்பத்தி மற்றும் நுகர்வோர் அபிவிருத்திக் குழுக்களை தேசிய அளவில் அமைத்து பருத்தி சாகுபடியினை வணிக ஒப்பந்த பண்ணையத்தின் மூலம் ஊக்குவித்து அதன் மூலம் பருத்தி சாகுபடியினை புதிய பகுதிகளில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் மாநில பருத்திக் குழு அரசால் அமைக்கப்பட்டது. மாநில பருத்திக் குழுவிற்கு வேளாண் அரசு செயலரைத் தலைவராகவும், வேளாண்மை, தோட்டக்கலை, ஜவுளி, விதைச்சான்றுத் துறை, மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தென்னிந்திய நூற்பாலை உரிமையாளர்கள் சங்கம், தென்னிந்திய பருத்தி சங்கம், மத்திய பருத்திக் கழகம், டான்பெட், தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியோரை உறுப்பினர்களாகவும் அரசு நியமித்துள்ளது. இக்குழுவிற்கு உதவுவதற்கு வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்ட ஓர் அடிப்படைக் குழுவினையும் அரசு அமைத்துள்ளது.

[2002 ஏப்ரல் 22

**கரும்பு அபிவிருத்தித் திட்டம்**

செயல்விளக்கங்கள் மற்றும் பல விரிவாக்க முறைகள் மூலம் கரும்பு பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டு இலக்கு, சாதனை மற்றும் 2002-2003 ஆம் ஆண்டு இலக்கு விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | இனகங்கள்/அலகு | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | பரப்பு (இல.எக்) | 2.75 | 3.14 | 3.00 |
| 2. | உற்பத்தி (இல.மெ.டன் (வெல்லமாக) | 37.00 | 34.59 | 37.00 |
| 3. | செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் (எண்) | 575 | 575 | 575 |

இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**2002-2003 ஆம் ஆண்டிற்கான கரும்பு பயிரிடுதல் மற்றும் அதன் விளைச்சல்:-**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2002-2003 ஆம் ஆண்டிற்கு சுமார் 2,25,000 ஏக்கர் கரும்பு அரவைக்காக பதிவு செய்யப்படவுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 70.00 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படவுள்ளது. ஆனால், 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில் சுமார் 74.50 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படுமெனவும், இதே காலத்தில் சராசரி கரும்பு விளைச்சல் ஹெக்டேர் ஒன்றுக்கு 80 மெட்ரிக் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் சர்க்கரை ஆலைகள் 2001-2002 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 122 இலட்சம் டன் கரும்பும், 2002-2003 ஆம் ஆண்டு பருவத்தில் 125 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தில் பெறப்படும் சராசரி விளைச்சலைக் காட்டிலும் குறைவாக விளைச்சல் பெறப்படும் ஆலைப்பகுதிகளில் கரும்பு அபிவிருத்தி நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்று, சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டு, விளைச்சலை அதிகப்படுத்தி



2002 ஏப்ரல் 22]

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் இதற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்முறைத் திட்டம் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்க்கரைக் கட்டுமானமும் மேம்படும்.

**சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் மகசூலை அதிகரிக்க செயல் திட்டம்**

தற்போதுள்ள ஏக்கருக்கு 31 டன்கள் கரும்பு மகசூலை 2004-2005 பருவத்தில் 40 டன்களாக உயர்த்துவதற்கும், சர்க்கரைக் கட்டுமானத்தை தற்போதுள்ள 9.3 விழுக்காடு நிலையிலிருந்து 10 விழுக்காட்டிற்கும் ஆலைகளின் அரவை பயன்பாட்டுத் திறனை 100 விழுக்காடு (76 இலட்சம் டன்கள்) அடைவதற்கும் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இலக்கினை அடைவதற்கு பின்வரும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது :

1. அதிக சர்க்கரைச் சத்து இரகங்களை அதிக அளவில் பயிரிடுதல்;
2. கட்டுக் கோப்பு சாகுபடி முறைகளைச் செயல்படுத்துதல்;
3. உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து நிர்வாகங்களை மேம்படுத்துதல்;
4. நீர் நிர்வாகத்தை மேம்படுத்துதல்;
5. உயிரின உரங்கள் பயன்படுத்துதல்;
6. ஆலை அழுக்கினை உயிர் உரமாகவும் மண்புழு கழிவு உரமாகவும் மாற்றி பயன்படுத்துதல்.

**சர்க்கரைக் கட்டுமானமும் அதிக சர்க்கரைச் சத்துள்ள இரகங்களும்**

ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதில், அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு ரகங்கள் முக்கிய பங்குவகித்து உற்பத்திச் செலவினை குறைக்கின்றன. 2001-2002 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு வகையறாக்களை சுமார் 50 விழுக்காடு அளவிற்கு அரவை செய்யவுள்ளன. 2002-2003 அரவைப் பருவத்தில் அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு வகையறாக்கள் அரவை 70 விழுக்காடு அளவிற்கு உயருமென்றும் தற்போதுள்ள கட்டுமானம் 9.5 விழுக்காட்டைக் காட்டிலும் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 9.75 விழுக்காடாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 2002-2003 அரவைப்

பருவத்தில், தற்போது அரவை செய்யப்படவுள்ள கரும்பின் அளவான 70.00 இலட்சம் டன் கரும்பினை அதிகரித்து மொத்தம் 74.50 லட்சம் டன்கள் அரவை செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**கரும்பு பயிரிட சொட்டு நீர்ப்பாசனம்**

நீர்வளம் தற்போது அரிதாகி விட்டதாலும் வழக்கமான நீர்ப்பாசன முறைகளால் அதிக அளவு தண்ணீர் உபயோகப்படுத்துவதால், தண்ணீரைச் சேமித்து அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் முறையைப் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக அடுத்து வரும் மூன்று பருவங்களில் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகள் உள்ளிட்டு 1,000 ஏக்கர் அளவில் மத்திய அரசின் "சுபாக்ஸ்" திட்டத்தின்கீழ் இதற்கான மானியத்தினைப் பெற்று சொட்டு நீர்ப் பாசன வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வருடம் | சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| 2002-2003 | 300 |
| 2003-2004 | 300 |
| 2004-2005 | 400 |
| மொத்தம் | 1000 |

**உயிர் உரம் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்தின் உபயோகம்**

தாவரங்கள், மண்ணிலுள்ள சத்துக்களை எடுத்துக்கொள்வதற்கு உயிர் உரங்கள் ஊக்குவிக்கின்றன. உயிர் உரங்கள், தாவரங்களுக்கு கிடைக்காத நிலையிலுள்ள சத்துக்களை கிடைக்கும் நிலைக்கு மாற்றி அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிகின்றன.

அசிட்டோபாக்டர் டயஸோட்ரோபிக்ஸ் உயிர் உரம் கரும்பின் மகசூலை கூட்டுவதற்கு பெரிதும் பயன்படுகிறது. இது வான்வெளியிலுள்ள தழைச் சத்தை கரும்புப் பயிருக்குக் கிடைக்கும் வகையில் கிரகித்து வைத்து மாற்றிக் கொடுக்கின்றது. பாஸ்போபாக்டீரியம் உயிர் உரம் கரும்புக்கு கிடைக்காத நிலையிலுள்ள பாஸ்பரஸை மாற்றி கரும்புக்குக் கிடைக்கும்படிச் செய்கிறது. இதனால் இரசாயன உரத் தேவை குறைவதோடு சாகுபடி செலவும் கட்டுப்படுத்தப்பட்டு அதிக மகசூலையும், விவசாயிகளுக்கு அதிக வருமானத்தையும் ஏற்படுத்தித் தருகிறது.



உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள் கரும்பைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. உயிர் உரங்களாகிய அசிட்டோபாக்டர், டயஸோட்ரோபிக்ஸ், பாஸ்போபாக்டீரியம் மற்றும் உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளாகிய கிரானுலோசிஸ் வைரஸ், டிரைகோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி, டிரைகோடெர்மா விரிடி, பிளக்சின் மற்றும் நொமன்டோ போன்றவை தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்தின்கீழ் செங்கல்பட்டில் இயங்கும் பிரதான உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் மூலமாக உற்பத்தி செய்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. தேவைக்கேற்ப எல்லா கரும்பு விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் இதனுடைய உற்பத்தியை தற்போதுள்ள 100 டன் என்ற அளவிலிருந்து 300 டன்களாக உயர்த்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேலும், செங்கல்ராயன் மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் புதிதாக உயிர் உரங்கள் தயாரிக்கும் ஆய்வகங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உயிர் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் சர்க்கரை ஆலைகளில் 30 விழுக்காடு மானியத்தில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

உயிர் உரங்களின் விலை குறைவானது மற்றும் சுற்றுப்புற சூழ்நிலையின் மாசு கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் கரும்பைத் தாக்கும் செவ்வழுகல் நோயைக் கட்டுப்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. இதைச் சரியான முறையில் பயன்படுத்துவதால் மகசூல் மேம்படுகிறது.

**உயிர் உரம் தயாரிப்பு**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் ஆலைக் கழிவு மண் சுமார் 2.00 இலட்சம் டன்களாகும். வடிப்பகங்களில் கிடைக்கும் ஆலைக்கழிவு நீர் (Spent Wash) மற்றும் சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கழிவு மண் (Press mud) கொண்டு உயிர் கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் மட்டுமே வடிப்பகங்கள் உள்ளன. ஆலையிலிருந்து பெறப்படும் சுமார் 25000 டன்கள் ஆலைக் கழிவு மண் உயிர் கலப்பு உரமாக மாற்றப்படுகிறது. (அதாவது 11000 டன்கள் உயிர் கலப்பு உரம்) இந்த மொத்த உற்பத்தியும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

**மண்புழு கழிவு உரம்.**

வடிப்பகங்கள் இல்லாத மற்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஆலைக் கழிவு மண்ணைப் பயன்படுத்தி மண்புழு கழிவு உரமாக

[2002 ஏப்ரல் 22

தயாரிக்கப்படுகிறது. மண்புழு கழிவு உரம் கரும்பு மகசூல் உற்பத்தியிலும் சர்க்கரையின் கட்டுமானத் தரத்தை அதிகப்படுத்துவதிலும், நிலத்தைப் பண்படுத்துவதிலும் நிலத்தின் ஈரத் தன்மையைப் பாதுகாக்கும் திறனை அதிகப்படுத்துவதிலும் பயன்படுத்தப்படுகிறது. திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இத்திட்டத்தை இதர ஆலைகளிலும் நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலைக் கழிவு மண்ணுடன் உயிர் உரத்தைக் கலந்து ஊட்டமேற்றிய கழிவு மண்ணாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அனைத்து சர்க்கரை ஆலைகளும் இத்திட்டத்தை மேற்கொண்டு சத்தூட்டப்பட்ட கழிவு மண்ணை விவசாயிகளுக்கு விநியோகித்து கரும்பின் தரத்தையும் மகசூலையும் உயர்த்தவுள்ளன.

**கரும்புக்கு மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயித்தல் மீதான நீதிப்பேராணை மனுக்கள்**

2001-2002 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட மைய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை, டன் ஒன்றுக்கு ரூ.620.50 ஆகும். மேலும் ஒவ்வொரு 0.1 விழுக்காடு கட்டுமானத்திற்கும் டன் ஒன்றுக்கு ரூ.7.30 வீதம் விலை அதிகரித்து வழங்கப்படுகிறது. கரும்பு கொள்முதல் செய்த 14 நாட்களுக்குள் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும். 2000-2001ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 8.5 விழுக்காடு கட்டுமானம் சர்க்கரை கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.775 ஆகவும் 10 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 எனவும் வழங்க வேண்டுமென மாநில அரசு பரிந்துரை விலையாக அறிவித்தது.

1998-99ஆம் ஆண்டு மாநில அரசு அறிவித்த கரும்பு விலையை எதிர்த்து தனியார் சர்க்கரை ஆலைகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை தாக்கல் செய்துள்ளனர். இதன்மீது சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து 1998-99ஆம் ஆண்டிலிருந்து



2002 ஏப்ரல் 22]

மாநில அரசு பரிந்துரை செய்த விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டும் என மாநில அரசு வற்புறுத்தக்கூடாது என இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. இத்தடை ஆணை 2000-2001 வரை நீட்டிக்கப்பட்டது. எனினும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைவிட கூடுதலாகவே தனியார் சர்க்கரை ஆலைகள் 5A விலையில் முன்பணமாக வழங்கி வருகின்றன. தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சங்கம் மேற்படி நீதிப் பேராணை மனுவை உச்ச நீதி மன்றத்திற்கு மாற்ற வேண்டியும், ஏற்கெனவே இப்பொருள் சம்பந்தமாக நிலுவையிலுள்ள சிறப்பு அனுமதி மனுவையும் (Special Leave Petition) சேர்த்து பொதுவான வழக்காக விசாரணை மேற்கொள்ள வேண்டியும் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது. இதுசம்பந்தமாக உச்ச நீதிமன்றம் விவசாயச் சங்கங்களுக்கு அறிவிப்பு (Notice) அனுப்பிட அறிவுறுத்தியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

**அதிக கரும்பு விலை குறைவான சர்க்கரை விலை மற்றும் நிதி இழப்பு**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம் 1994-95 அரவை பருவத்திலிருந்து 1999-2000 அரவைப் பருவம் வரை தொடர்ந்து அதிக அளவில் குறைந்து வந்துள்ளது. அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு இரகமான கோ.க. 671 செவ்வழுகல் நோயின் தாக்கத்தால் இந்த இரகம் பயிர் செய்வது கைவிடப்பட்டதன் காரணமாக சர்க்கரைக் கட்டுமானம் குறைந்து வந்துள்ளது. பெரும்பாலான ஆலைகளில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் உள்ளதாலும், சம்பளம், கூலி மற்றும் வட்டி உட்பட செலவுகள் அதிகமாகியுள்ள காரணத்தாலும், குறைவான சர்க்கரைக் கட்டுமானம், வட்டி உட்பட அதிகமான செலவினம், அதிக கரும்பு விலை மற்றும் சர்க்கரை விலையின் வீழ்ச்சி போன்ற காரணங்களால் உற்பத்திச் செலவு அதிகமாகி, ஆலைகள் தொடர்ச்சியாக பெரும் நிதி இழப்பை அடைந்து வருகின்றன.

கரும்பின் கொள்முதல் விலை மற்றும் உற்பத்திச் செலவு, அதிகமான போதிலும் அந்த உயர்விற்கேற்றாற்போல், சர்க்கரையின் சராசரி விலை அதிகரிக்கவில்லை. 1993-94ஆம் ஆண்டை அடிப்படையாக எடுத்துக்கொண்டால் கரும்பின் விலை 55 விழுக்காடு உயர்ந்திருந்தும், லெவி சர்க்கரையின் விலை 12 விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதிலும் சர்க்கரை இருப்பு அதிகமாக தேங்கியதால் சர்க்கரை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு அதனைத் தொடர்ந்து ஆலைகளின் வட்டிப் பளுவும் அதிகமாகி உள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகள் 1993-94 பருவம் வரை இலாபத்தில் இயங்கிக்கொண்டிருந்தன. ஆனால் 1994-95 முதல், கரும்புக்காக அதிக கொள்முதல் விலை கொடுத்தல், சர்க்கரையை இருப்பில் சேமித்து வைப்பதற்கான செலவு, சர்க்கரை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதிகமான செலவு மற்றும் வட்டிச் சுமை ஆகியவற்றால் ஆலைகள் பெருத்த இழப்பு அடையத் தொடங்கின. 2000-2001 ஆம் ஆண்டு வரை 19 சர்க்கரை ஆலைகளின் மொத்த இழப்பு ரூ.810.90 கோடியாகும். 2001-2002-ல் எதிர்பார்க்கப்படும் இழப்பு ரூ.174.24 கோடியும் சேர்த்து மொத்த இழப்பு ரூ.985.14 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த பெருத்த இழப்பினால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு 2000-2001 பருவத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய மாநில அரசு பரிந்துரை விலையிலும் 2001-2002 பருவத்தில் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை வழங்குவதிலும் அதிகமாக நிலுவை உள்ளது.

**கரும்பு மேல்வரி வசூல் மற்றும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்**

மாநில அரசால் செயல்படுத்தப்படும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் கரும்பு போக்குவரத்து எளிதாக இருக்கவும் சீராக சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை ஏற்றிச் செல்லவும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949-ன்படி உள்ளூர் பகுதியைத் தவிர வெளியிலிருந்து ஆலைகளுக்கு அரவைக்காக கொண்டு வரும் கரும்பின் மீது கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ.5 வீதம் வசூலித்து, இந்நிதி கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த ஐந்தாண்டுகளின் கரும்பு மேல்வரி வசூலிக்கப்பட்ட விவரம், சாலைப் பராமரிப்புக்கு மேற்கொண்ட செலவு விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :



| வருடம் | கரும்பு மேல்வரி வசூலித்தது (ரூபாய் இலட்சத்தில்) | புதிய சாலைகள் அமைக்க (ரூபாய் இலட்சத்தில்) | சாலையின் நீளம் (கி.மீ.) | பராமரிப்பு பணி செய்ய (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தச் செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1996-97 | 630.29 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 | 393.98 | 411.30 | 34.900 | 475.12 | 886.42 |
| 1998-99 | 522.22 | 258.80 | 25.050 | 324.58 | 583.38 |
| 1999-2000 | 654.25 | 338.78 | 31.170 | 200.40 | 539.18 |
| 2000-2001 | 997.29 | 500.07 | 59.000 | 199.76 | 699.83 |
| 2001-2002 | 853.05 | 187.72 | 40.70 | 47.49 | 235.21 |

**உழவர் பயிற்சி நிலையங்கள்**

காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தருமபுரி, பவானி, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம் ஆகிய 12 இடங்களில் இயங்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக விவசாயிகள் பண்ணை மகளிர் மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சியளித்து அதன்மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கிராம அளவிலான அடிப்படைப் பயிற்சியும், களப்பயிற்சி செயல்விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மேலும் பண்ணைச் செய்திகள் வானொலி மற்றும் தினசரிகள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. வருடந்தோறும் உழவர் தினவிழா நடத்தப்பட்டு, விவசாயிகள் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள இதர வல்லுநர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் பயனடைய வழிவகுக்கிறது. மற்றும் விவசாயிகள் ஆண்டுதோறும் சுற்றுலாவாக ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் வயல்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்து அனுபவம் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் சுமார் 40,000 விவசாயிகள் பயனுறுகின்றனர்.

[2002 ஏப்ரல் 22

2001-2002 ஆம் ஆண்டு இலக்கு, சாதனை மற்றும் 2002-2003ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன பின்வருமாறு :

| வ. எண் | இனம்/அலகு | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | ஆண்/பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 264 | 264 | 264 |
| 2. | உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 120 | 120 | 120 |
| 3. | களப்பயிற்சி மற்றும் இரண்டாம் நிலை செயல்விளக்கம் (எண்) | 1320 | 1320 | 1320 |
| 4. | வயல்வெளிச் செயல் விளக்கம் (எண்) | 528 | 528 | 528 |
| 5. | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | 21.65 | 15.12 | 22.30 |

**மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்**

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம் மாநில அளவிலான பயிற்சி நிலையம் மேலாண்மை நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு வேளாண் துறையின்கீழ் பணியாற்றி வரும் விரிவாக்க அலுவலர்கள் மேன்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட, நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மாநில அளவிலான இப்பயிற்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள், இதர அரசுத் துறை மற்றும் இதர நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

உலக வங்கி நிதியுடன் செயல்பட்டு வந்த தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் 30-9-1998 உடன் முடிக்கப்பட்டுவிட்டதால் இத்திட்டம் மாநில அரசின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.75,000 செலவில் 550 அலுவலர்கள் பயிற்சி பெற்றனர்.



2002 ஏப்ரல் 22]

2001-2002ஆம் ஆண்டிற்கான சாதனை மற்றும் 2002-2003ஆம் ஆண்டிற்கான பயிற்சி விவரம் வருமாறு :

| வ.எண். | பயிற்சி விவரம் | பயிற்சி பெற்ற அலுவலர் எண்ணிக்கை. | 2002-03 இலக்கு |
|---|---|---|---|
| 1. | வேளாண் விரிவாக்க மைய மேலாண்மை (எண்) | 150 | 150 |
| 2. | வேளாண் விரிவாக்க மையப் பராமரிப்பு (எண்) | 150 | 150 |
| 3. | கணிப்பொறிப் பயிற்சி (எண்) | 100 | 200 |
| 4. | கேள்-காண் சாதனங்கள் கையாளுதல் பற்றி பயிற்சி (எண்) | 150 | 150 |

2002-2003 ஆம் ஆண்டில் 650 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு**

மண்ணின் தன்மை, அதன் பௌதீக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவற்றைக் கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக்கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து சர்வதேசத் தரத்திற்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் தயாரித்து பல்வேறு வகையான உபயோகங்களுக்குப் பயன்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் இந்த அமைப்புகளில் 2001-2002 ஆம் ஆண்டு இலக்கான 1.10 இல. எக்டேரில், 1.14 இல. எக்டேர் பரப்பில் விரிவான வகையீட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டும் 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் விரிவான மண் வகையீட்டுப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**களர் உவர் நிலச் சீர்திருத்தம்**

களர் உவர் நிலச் சீர்திருத்தம் செய்யும் நோக்குடன் தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் ஆண்டிற்கு 4000 ஏக்கர் பரப்பில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 3918 ஏக்கர் பரப்பில், களர், உவர் நிலங்கள்

[2002 ஏப்ரல் 22

சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வரும் 2002-2003ஆம் ஆண்டிலும் 4000 ஏக்கர் பரப்பில் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**மண் பரிசோதனை நிலையங்கள்**

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து குறிப்பான உரப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் 8.42 இலட்சம் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இந்த ஆய்வகங்கள் களர், உவர் மண் பகுதிகளுக்குச் சீர்திருத்த ஆலோசனை வழங்குதல், கிராம அளவிலான மண் வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர் தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம், கருத்துக் காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உரத்தொழில் நுட்பங்களைப் பரப்புவதில் நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் உறுதுணை புரிகின்றன. பரிசோதனைத் தரத்தை துல்லியமாக்கவும் பரிசோதனைக்கூட ஆய்வாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கவும் குடுமியான்மலையில் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

இலக்கிடப்பட்ட 8.42 இலட்சம் மண் மாதிரிகளில் 6.74 இலட்சம் மாதிரிகள் 2001-2002 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 2002-2003ஆம் ஆண்டிலும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 5.54 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் மூலம் 2.88 இலட்சம் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உரப் பரிசோதனை நிலையங்கள்**

ஆண்டொன்றுக்கு 17,220 உர மாதிரிகள் 14 உரப் பரிசோதனைக் கூடங்கள் மூலம் தரப் பரிசோதனை செய்யப்படுகின்றன. இவை இத்துறையின் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவால் அமலாக்கப்படும். 1985 ஆம் ஆண்டின் உரக்கட்டுப்பாட்டு ஆணை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் தரமான இரசாயன உரங்களை விநியோகிக்க வழி வகுக்கிறது.

உரக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர்கள், சில்லறை மற்றும்



2002 ஏப்ரல் 22]

மொத்த உர விற்பனை மையங்கள், உர உற்பத்திக் கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகளை எடுக்கின்றனர்.

2001-2002ஆம் ஆண்டு இலக்கிடப்பட்ட 17220 மாதிரிகளுக்கு 17345 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டிலும் ஆய்வு செய்ய இலக்கிடப்பட்டுள்ளது.

**பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்**

பூச்சிக்கொல்லி மருந்துச் சட்டம் மற்றும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்த சில்லறை மற்றும் மொத்த விற்பனைக் கூடங்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு மாநிலத்தில் இயங்கும் 9 பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வக நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் 16236 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டில், 16672 மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. 2002-2003ஆம் ஆண்டிலும் 16236 மாதிரிகள் ஆய்விட இலக்கிடப்பட்டுள்ளது.

**பயிர் விளைச்சல் போட்டி**

உயர் வேளாண் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தியை உயர்த்த பயிர் விளைச்சல் போட்டி மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய பயிர் விளைச்சல் போட்டி திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வருமாறு:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| இதர பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

[2002 ஏப்ரல் 22

மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலாப் பயிர்களுக்கு ரூ.100 ஆகவும் மற்றும் இதரப் பயிர்களுக்கு ரூ.50 ஆகவும் மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலாப் பயிர்களுக்கு ரூ.50 ஆகவும், இதரப் பயிர்களுக்கு ரூ.25 ஆகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை மாநில அளவில் 454 விவசாயிகளும், மாவட்ட அளவில் 1562 விவசாயிகளும் பதிவு செய்தனர். 2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம்**

1985 முதல் 1999 வரை மாநிலம் முழுவதும் அமலில் இருந்த விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு பதில் "தேசிய வேளாண்மை காப்பீடு" எனும் புதிய திட்டத்தை கரீப் 2000 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் உணவு தானியங்கள் மட்டுமல்லாமல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பிற வணிகப் பயிர்களுக்கும் செயல்படுத்தப்படும். இதன்படி கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்கப்படும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு காப்பீட்டுக் கட்டணத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும். இத்தொகையினை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்கும்.

இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**நீர் வள ஆதார அமைப்பு-பாசன வேளாண்மை தீவிர திட்டம்**

தமிழக அரசு நீர்வள ஆதார அமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.807.49 கோடி தொகையினை உலக வங்கி நிதியுதவியுடன் பாசன ஆதாரங்களை நவீனமயமாக்கும் எண்ணத்துடன் பொதுப் பணித் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது. பாசன ஆதாரங்கள் மேம்படுத்தப்பட்டவுடன் அவற்றை இயக்கவும் பேணவும் அதன் முழுப் பயனையும் பெற நீர்வள ஆதார அமைப்பின்கீழ் அமைக்கப்படவுள்ள விவசாயிகள் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

விவசாயிகள் பாசன நீரை சிக்கனமாகவும் திறம்பட உபயோகிக்கவும் பயிற்சியளிக்கப்பட வேண்டும். உயர் உற்பத்தியினை விவசாயிகள் துணையோடு சிக்கன நீர் உபயோகம் மூலம் அடையப்பெற வேண்டும். இதற்காக பாசன வேளாண்மை தீவிர திட்டம் வேளாண்மைத் துறையால் பொதுப் பணித் துறை அளிக்கும் ரூ.267.05 இலட்சம் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 22]

இத்திட்டத்தின்கீழ், உழவர் பயிற்சி மையத்தின் மூலம் நீர் மேலாண்மை, பயிர் உற்பத்தி தொழில்நுட்பம், பயிர் சுழற்சி பயிற்சி போன்றவையும், உழவர் பயிற்சி நிலையத்தை வலுப்படுத்த ஒரு கணினியும், 400 எண்கள் 10 எக்டேர் செயல்விளக்கம் அமைத்தல் போன்றவையும் செயல்படுத்தப்படுகின்றன.

இந்திட்டத்தை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டது. ஆணை அரசு ஆணை எண் 219, பொதுப் பணித் (டபிள்யு, ஆர்.1) துறை, நாள் 17-4-2001 அன்று வழங்கப்பட்டது. இதுவரை 200 பாசனச் சங்கங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு 150 இடங்களில் 10 எக்டேர் நிருபணத் தளை அமைத்து வழங்கப்பட்ட ரூ.267.05 இலட்சத்தில், ரூ. 66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் மார்ச் 2002-ல் முடிவடைந்துள்ளது.

**வீரிய ஒட்டு நெல் பரவலாக்கும் திட்டம்**

வீரிய ஒட்டு நெல் இரகங்களைப் பிரபலப்படுத்தவும், உயர்விளைச்சல் இரகங்களுக்கு மாற்று இரகங்களை ஏற்பாடு செய்யவும், உயர் உற்பத்தி காணவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒட்டுரக நெல் உபயோகத்தை பரவலாக்கவும் அதன் மூலம் அரிசி உற்பத்தியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 2001-2002ஆம் ஆண்டின் குறியீடு 800 எக்டேருக்கு 790 எக்டேரில் சாதனை அடையப்பட்டுள்ளது. 2002-03ஆம் ஆண்டிலும் வீரிய ஒட்டு நெல் பரவலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்**

ஆதிதிராவிட விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பயன்கள் அவர்களைச் சென்றடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களில், 25 முதல் 30 சதவிகிதம் வரை சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதற்கான தனி கணக்குத் தலைப்பும், வரவு-செலவுக் கணக்குகளும் உள்ளன. 2001-2002ஆம் ஆண்டில் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களும் நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரங்கள் வருமாறு:

[2002 ஏப்ரல் 22

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு | சாதனை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் | 138.537 | 103.021 |
| 2 | பயறு விதைப் பெருக்கமும் விநியோகமும் | 116.54 | 114.400 |
| 3 | எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம் | 145.42 | 136.23 |
| 4 | விதைப் பெருக்குத் திட்டம் | 491 | 520.400 |
| 5 | பயிர் மற்றும் பயிர் பாதுகாப்பு | 24.38 | 25.916 |
| 6 | எண்ணெய் வித்து உற்பத்தி உயர்த்துதல் | 232.73 | 174.428 |
| 7 | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் | 45.525 | 35.058 |
| 8 | தென்னை மேம்பாட்டுத் திட்டம் | 12.59 | 12.201 |
| 9 | எண்ணெய்ப் பனை மேம்பாட்டுத் திட்டம் | 44.86 | 38.08 |
| 10 | கரும்பு மேம்பாட்டுத் திட்டம் | 11.40 | 8.336 |
| 11 | நெல், சிறுதளை விநியோகத் திட்டம் | 8.00 | 8.100 |
| 12 | சிறுதானிய சிறுதளை விநியோகத் திட்டம் | 0.884 | 0.889 |
| 13 | வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் | 6.347 | 6.347 |
| 14 | தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம் | 3.45 | 3.444 |
| 15 | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம் | 327.228 | 155.71 |
| 16 | தேசிய பயறு மேம்பாட்டுத் திட்டம் | 28.325 | 26.71 |
| | மொத்தம் | **1637.216** | **1369.27** |

**பேரியல் மேலாண்மை வேளாண் திட்டம்-மத்திய சார்புத் திட்டம்**

1-4-2000 முதல் மத்திய அரசு முன் செயல்படுத்தி வந்த திட்ட அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு பேரியல் மேலாண்மை அணுகுமுறையின்கீழ் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியது. இதன்படி மாநில அரசுகளால் பயிர்/மண்டல தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட செயல்திட்டங்களின் அடிப்படையில் திட்டங்களைச் செயல்படுத்தும் அணுகுமுறை கையாளப்பட்டது. தொழில்நுட்பவியல் குழு திட்டங்களைத் தவிர, பேரியல் மேலாண்மையின்கீழ் மாநில அரசால் தயாரிக்கப்பட்ட 6 திட்டங்கள் தொகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மத்திய அரசின் பங்கான 90 சதவிகிதத்தில் 80% மானியமாகவும், 20% மாநில அரசுக்குக் கடனாகவும்



2002 ஏப்ரல் 22]

அளிக்கிறது. பின்வரும் திட்டங்கள் பேரியல் மேலாண்மையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தானிய அபிவிருத்தித் திட்டம்**

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்த திட்டம் மத்திய அரசின் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தொகுக்கப்பட்டு 2000-2001ஆம் ஆண்டு முதல் தானிய அபிவிருத்தித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித்திறனைவிட உற்பத்தித்திறன் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 140 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் விதை விநியோகம், செயல்விளக்கம், உயிர் உர உற்பத்தி, ஜிப்சம் விநியோகம், நுண்ணூட்ட சத்துக்கள் விநியோகம், விளம்பரம் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இனவாரியாக 2001-2002 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | சான்றுபெற்ற விதை விநியோகம் (மெட்ன்) | 14039 | 7000.99 | 280.780 | 140.020 |
| 2 | சிறுதானிய விதை விநியோகம் | 337.068 | 297.32 | 13.483 | 11.893 |
| 3 | வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம் | 2280 | 1861 | 22.800 | 18.608 |
| 4 | உற்பத்தி தொழில் நுட்ப நிருபணம் | 831 | 862 | 20.765 | 21.549 |
| 5 | உயிர் உரங்கள் விநியோகம் | 25000 | 28004 | 11.250 | 12.602 |
| 6 | ஜிப்சம் விநியோகம் | 4000 | 3566 | 20.000 | 17.828 |
| 7 | நுண்ணூட்ட சத்து விநியோகம் | 11000 | 8893 | 8.910 | 7.115 |
| 8 | ஐபிஎம் செயல் விளக்கம் | 1674 | 1396 | 100.435 | 83.753 |
| 9 | விளம்பரம் | | | 24.439 | 12.873 |
| 10 | சில்லறைச் செலவினம் | .. | .. | 10.806 | 8.231 |
| | மொத்தம் | .. | .. | **513.367** | **334.471** |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2002 ஏப்ரல் 22

### பயிற்சி

நெல் மற்றும் கரும்புப் பயிர்களில் நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கற்பிக்கவும், விரிவாக்கப் பணியாளர்கள் கரும்புப் பயிர் தொடர்பான நவீன தொழில்நுட்ப அறிவுபெற மாநில அளவிலான பயிற்சி போன்றவை இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

2001-2002ஆம் ஆண்டு இலக்கு சாதனை விவரம் வருமாறு :—

| வ. எண் | பயிற்சி | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | உழவர் பயிற்சி (நெல்) | 414 | 330 | 20.685 | 16.503 |
| 2 | உழவர் பயிற்சி (கரும்பு) | 160 | 159 | 9.05 | 7.709 |
| 3 | மாநில அளவிலான பயிற்சி (கரும்பு) | 4 | 4 | 0.50 | 1.429 |
| | மொத்தம் | | .. | 30.235 | 25.641 |

### பண்ணை இயந்திரமாக்கும் திட்டம்

பேரியல் மேலாண்மையின்கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், விசை உழுவைகள் 30 குதிரைத்திறன் டிராக்டர்கள், கதிரடிப்பான்கள், நெல் நாற்று நடும் இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள், கரும்பு கரணை நடும் கருவி போன்றவை மானிய விலையில் அளிக்கப்படுகின்றன. சிறு விவசாயிகள் காலத்தே பண்ணை வேலைகளை ஆற்ற உதவும் வகையில், விவசாய வேலைகள் முழு வீச்சில் உள்ள ஆட்பற்றாக்குறை தோன்றும் முக்கிய பருவ காலங்களில் பயன்படுத்தும் நோக்கில் வழங்கப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டிற்கான இலக்கு, சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | கருவிகள் | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | விசை உழுவைகள் | 821 | 569 | 246.578 | 170.711 |
| 2 | 30 குதிரைத்திறன் டிராக்டர்கள் | 43 | 43 | 13.005 | 13.005 |
| 3 | நெல் நாற்று நடும் இயந்திரம் | 6 | 6 | 1.858 | 1.858 |
| 4 | கதிரடிப்பான்கள் | 38 | 38 | 3.816 | 3.816 |
| 5 | நெல் அறுவடை இயந்திரம் | 24 | 24 | 2.477 | 2.477 |
| 6 | கரும்பு கரணை நடும் கருவி | 50 | .. | 5.000 | .. |
| | மொத்தம் | | | 272.734 | 191.867 |



2002 ஏப்ரல் 22]

### கரும்பு மேம்பாட்டுத் திட்டம்

கள செயல்விளக்கம், ஒட்டுண்ணிவிடுதல் போன்ற இனங்களோடு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. மத்திய அரசு செயல்படுத்தி வந்த கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சித் திட்டத்தினை 2000-2001ஆம் ஆண்டு முதல் பேரியல் மேலாண்மை திட்டப் பிரிவின்கீழ் செயல்படுத்தி வருகிறது.

2001-2002ஆம் ஆண்டில் இனவாரியாக பொருள், நிதி இலக்கு மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | களசெயல் விளக்கம் (எண்.) | 367 | 365 | 18.350 | 18.231 |
| 2 | ஒட்டுண்ணி விடுதல் (எக்) | 11070 | 9410 | 2.207 | 1.963 |
| 3 | சில்லறைச் செலவினம் | .. | .. | 3.845 | 3.845 |
| | மொத்தம் | .. | .. | 24.402 | 24.039 |

2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

### தென்னை மேம்பாட்டுத் திட்டம்

மைய அரசு, தென்னை மேம்பாட்டிற்கென கீழ்க்கண்ட இனங்களை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டம் பேரியல் மேலாண்மை திட்ட செயல்திட்டத்தின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. இத்திட்ட இலக்கு, சாதனை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | உரம் மற்றும் பயிர்பாதுகாப்பு (இல. எண்.) | 15.305 | 15.137 | 122.516 | 121.089 |
| 2 | நுண்ணூட்டச் சத்து விநியோகம் (இல. எண்.) | 1.21 | 1.043 | 29.877 | 30.941 |
| 3 | ஊடுபயிர் சாகுபடி (எக்டேர்) | 734.5 | 736.5 | 1.467 | 1.470 |
| 4 | ஒட்டுண்ணி உற்பத்தி (இலட்சம் எண்) | 16.00 | 9.91 | 2.520 | 1.798 |
| | மொத்தம் | .. | .. | 156.380 | 155.298 |

[2002 ஏப்ரல் 22

## மத்திய அரசு சார்புத் திட்டங்கள்

### தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்

தொழில்நுட்பக் குழுமத் திட்டத்தின்கீழ்வரும் இத்திட்டம், கோவை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், விதை சிறுதளை இனம் (100 விழுக்காடு மத்திய அரசு செலவினம்) தவிர, மீதமுள்ள இன செலவினங்களை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2001-2002ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | வயல்விளக்கம் (எண்) | 856 | 856 | 8.560 | 8.560 |
| 2 | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்) | 30 | 30 | 1.800 | 1.800 |
| 3 | விவசாயிகள் பயிற்சி (எண்) | 31 | 31 | 1.550 | 1.550 |
| 4 | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் (4 மாவட்டங்கள்) | .. | .. | 0.800 | 0.800 |
| 5 | விளம்பரம் (4 மாவட்டங்கள்) | .. | .. | 0.550 | 0.549 |
| 6 | இதர செலவினங்கள் (4 மாவட்டங்கள்) | .. | .. | 0.480 | 0.479 |
| 7 | விதை சிறுதளை செயல் விளக்கம் இரகம் மற்றும் வீரிய ஒட்டு இரகம் | 700 | 700 | 0.400 | 0.400 |
| | மொத்தம் | .. | .. | **14.140** | **14.138** |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.



2002 ஏப்ரல் 22]

### தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்

மத்திய அரசின் தொழில்நுட்பக் குழுமத் திட்டத்தின்கீழ் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்ட மொத்த செலவினத்தை 75:25 என்ற விகிதத்தில், மத்திய அரசும் மாநில அரசும் பங்கேற்கின்றன. தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பண்ணை மூலம் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, விவசாயப் பயிற்சி மற்றும் நீர் மேலாண்மை போன்ற இனங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மாநிலத்தின் பருப்பு வகைகள் தேவைக்கும், கிடைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய சுமையைக் குறைக்கவும், தேவையான உற்பத்தி உயர்வை அடையவும் இத்திட்டம் வழிவகுக்கும்.

இனவாரியாக 2001-2002ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி சாதனை விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | கருவிதை கொள்முதல் (குவி) | 140 | 99 | 7.00 | 5.169 |
| 2 | ஆதார விதை உற்பத்தி (குவி) | 800 | 1036 | 4.00 | 5.502 |
| 3 | விதை கிராமம்/சான்றுவிதை உற்பத்தி (குவி) | 8400 | 9224 | 42.00 | 42.816 |
| 4 | பெருவிளக்கப் பண்ணை (எக்) | 533 | 559 | 8.00 | 8.007 |
| 5 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்) | 533 | 513 | 8.00 | 7.647 |
| 6 | பயிற்சிகள் (எண்) | 13 | 13 | 2.00 | 1.910 |
| 7 | நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (எக்) | 8000 | 16897 | 4.00 | 4.317 |
| 8 | நுண்ணூட்ட சத்துக்கள் விநியோகம் (எக்) | 1000 | 1894 | 2.00 | 1.808 |

[2002 ஏப்ரல் 22

| வ. எண். | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 9 | பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் (எண்) | 429 | 561 | 6.00 | 5.664 |
| 10 | விதைநேர்த்தி 50 ரூ. மானியம (எக்) | 2000 | 24748 | 2.00 | 1.868 |
| 11 | தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் (எண்) | 92 | 79 | 10.00 | 9.176 |
| 12 | ஜிப்சம் விநியோகம் (எக்) | 2260 | 7330 | 11.30 | 11.026 |
| 13 | என்.பி.வி.விநியோகம்(எக்) | 800 | 780 | 2.00 | 1.877 |
| 14 | பணியாளர் சம்பளம் | .. | .. | 5.00 | .. |
| | மொத்தம் | | | **113.30** | **106.787** |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**பருத்தி தொழில்நுட்பவியல் குழுத் திட்டம்**

பருத்தி உற்பத்தி அதிகரிப்பு, பருத்திப் பயிர்ப்பாதுகாப்பு, அறுவடைத் தொழில்நுட்பங்கள் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப விளக்கம் போன்றவைகளை பருத்தி விளையும் மாவட்டத்திற்கு வழங்குதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென மொத்தம் ரூ.556.50 இலட்சம் ஒதுக்கி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு, பருத்தி தொழில்நுட்பக் குழுமத் திட்டம் என்கிற புதிய திட்டத்தினை, முன் செயல்படுத்திய தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பதிலாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

2001-2002ஆம் ஆண்டு மத்திய அரசின் ரூ. 366.75 இலட்ச நிதி ஒப்பளிப்புடன் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர, பிற மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இனவாரியாக ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம் வருமாறு:



2002 ஏப்ரல் 22]

| வ. எண் | இனம் | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | சான்று பெற்ற விதை விநியோகம் ரூ.1000/குவிண்டால் | 1000 | 697.30 | 10.00 | 6.965 |
| 2 | செயல்விளக்கம் ரூ.2500/எக்டேர் | 400 | 426 | 10.00 | 9.991 |
| 3 | விரிவாக்க பணியாளர் பயிற்சி ரூ.15000/பயிற்சி | 10 | 10 | 1.50 | 1.500 |
| 4 | விவசாயிகள் பயிற்சி ரூ.10000/பயிற்சி | 50 | 50 | 5.00 | 5.000 |
| 5 | பூச்சி நோய் கண்காணிப்பு (மாவட்டங்கள்) | 10 | 10 | 25.00 | 25.000 |
| 6 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம் மற்றும் பயிற்சி ரூ.5000/ பயிற்சி | 40 | 40 | 34.00 | 33.090 |
| 7 | இனக்கவர்ச்சி பொறி விநியோகம் ரூ.500/எக்டேர் | 3000 | 8567 | 15.00 | 14.927 |
| 8 | உயிர் காரணிகள் விநியோகம் ரூ.300/எக்டேர் | 3000 | 3262 | 9.00 | 8.956 |
| 9 | கையால் இயக்கப்படும் தூவுவான் மற்றும் தெளிப்பான்கள் விநியோகம் ரூ.700/எண் | 500 | 1351 | 3.50 | 7.700 |
| 10 | விசைத் தெளிப்பான் மற்றும் தூவுவான் ரூ.1500/எண் | 500 | 413 | 7.50 | 6.095 |
| 11 | உயிரியல் கட்டுப்பாட்டுக் கூடம் ரூ.100 இலட்சம்/கூடம் | 3 | .. | 200.00 | .. |
| 12. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவி விநியோகம் | | | | |
| | அ) ரூ.10000/எக்டேர் | 150 | 144 | 18.75 | 18.725 |
| | ஆ) ரூ.15000/எக்டேர் | | | | |
| 13 | சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் விநியோகம் ரூ.25000/எக்டேர் | 50 | 42 | 12.50 | 9.383 |
| 14 | இதர செலவினங்கள் | | | 15.00 | 14.134 |
| | மொத்தம் | | | **366.75** | **161.466** |

2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2002 ஏப்ரல் 22

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்**

மைய அரசு சார்புத் திட்டமான இத்திட்டத்தின் செலவினை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாகவும், முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதன் மூலமும், எண்ணெய்வித்துக்கள், உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும், இம்மாநிலத்தில் எண்ணெய்வித்து உற்பத்தியினை உயர்த்தும் வகையில் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.626.70 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு, 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.602.018 இலட்சம் செலவிடப்பட்டது.

2001-2002 ஆம் ஆண்டில் இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | வல்லுநர் விதை உற்பத்தி (குவி) | 867 | 723.47 | 13.00 | 11.044 |
| 2 | ஆதாரவிதை உற்பத்தி (குவி) | 4400 | 3482.40 | 22.00 | 15.692 |
| 3 | விதைக் கிராமம் (குவி) | 10000 | 8847.42 | 50.00 | 37.921 |
| 4 | சான்றுவிதை விநியோகம் (குவி) | 12500 | 20011.07 | 100.00 | 97.569 |
| 5 | சிறுதளை விநியோகம் (எண்) | 3500 | .. | .. | .. |
| 6 | உள்ளமைப்பு வசதிகள் | .. | .. | 5.00 | 5.000 |
| 7 | பெருவிளக்கப் பண்ணை அமைத்தல் (எக்) | 750 | 1247 | 15.00 | 14.383 |
| 8 | விதை நேர்த்தி (எக்) | 20000 | 31818 | 20.00 | 19.960 |
| 9 | நுண்ணுயிர் விநியோகம் (எக்) | 40000 | 55084.06 | 20.00 | 19.911 |
| 10 | ஒருங்கிணைந்த பண்ணை பாதுகாப்பு நிருபணம் (எண்) | 4000 | 3920.66 | 60.00 | 59.708 |
| 11 | ஜிப்சம் விநியோகம் (எண்) | 32000 | 38487.75 | 160.00 | 159.950 |
| 12 | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 100 | .. | 2.00 | .. |
| 13 | பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் விநியோகம் (எண்) | 857 | 856 | 12.00 | 11.812 |



2002 ஏப்ரல் 22]

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 14 | நுண்ணூட்டச் சத்து விநியோகம் (எண்) | 12500 | 19481.37 | 25.00 | 24.869 |
| 15 | உழவர் பயிற்சி (எண்) | 200 | 200 | 30.00 | 30.00 |
| 16. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 318 | 292 | 39.70 | 37.118 |
| 17 | சம்பளம் மற்றும் இதர செலவினம் | .. | .. | 53.00 | 57.081 |
| | மொத்தம் | .. | .. | **626.70** | **602.018** |

2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம்**

மத்திய அரசு சார்புத் திட்டமாக, மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சமையல் எண்ணெய்த் தேவையை மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 6 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யும் வகையில் 900 கன்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் எண்ணெய் பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செய்யும் ஆலைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் எண்ணெய்ப்பனை சட்டமொன்றும் இயற்றப்பட்டுள்ளது.

தவிர, ரூ.400 இலட்சம் செலவில் ஒரு எண்ணெய் பிழியும் மாதிரி அலகு நிறுவ திட்டமிடப்பட்டு, காவேரி பாமாயில் நிறுவனத்திற்கு அரியலூர் மாவட்டத்தில் ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டச் செலவில் ரூ.240 இலட்சம் மத்திய அரசு வழங்கும், மீதமுள்ள தொகையை காவேரி பாமாயில் நிறுவனம் ஏற்கும்.

[2002 ஏப்ரல் 22

2001-2002 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டத்திற்கு முக்கிய நடவடிக்கைகள் (எக்டேரில்) முதல் தவணை மானியம் | 1000 | 895.37 | 30.00 | 26.86 |
| | இரண்டாவது தவணை மானியம் | 1100 | 771.95 | 26.40 | 17.70 |
| 2 | பரப்பு விரிவாக்கம் (எக்) | 1100 | 771.95 | 77.00 | 54.01 |
| 3 | அலுவலர், விரிவாக்கப் பணியாளர் மற்றும் எண்ணெய்ப்பனை உற்பத்தியாளர் பயிற்சி | 180 | 157.00 | 1.00 | 1.00 |
| 4 | விளம்பரம் மற்றும் விரிவாக்கம் | .. | .. | 3.00 | 1.66 |
| 5 | இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்புச் செலவு (எக்) | 1653 | 972.53 | 48.53 | 23.91 |
| 6 | சொட்டுநீர்ப் பாசனம் (எக்) | 75 | 61 | 4.23 | 3.39 |
| 7 | சம்பளம் | | | 1.21 | - |
| | மொத்தம் | | | **191.37** | **128.53** |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், 20 பேர் அடங்கிய குழுக்களாக நம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்று, வெளி மாநிலங்களில் வேளாண் திட்டங்களையும், சடைப்பிடிக்கப்படும் தொழில் நுட்பங்களையும் நேரில் கண்டு சாகுபடி முறைகளை அறிந்து கொள்ளவும், விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென போக்குவரத்துச் செலவினமாக ஒரு குழுவிற்கு ரூ.50,000 வீதம், மத்திய அரசால் வழங்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 22]

2001-2002ஆம் ஆண்டில், 20 பேர் அடங்கிய மூன்று குழுக்கள் உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு பயிர் சாகுபடி முறையை அறிய சென்று வந்துள்ளன.

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தென்னை வளர்ச்சி வாரியம் கொச்சி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்**

கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கும் 100 விழுக்காடு நிதி உதவியுடன், தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தென்னை நெற்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ.4000-மும் இரண்டாம் ஆண்டில் ஆண்டுக்கு ரூ.4000-மும் மொத்தம் எக்டேர் ஒன்றுக்கு ரூ.8000 மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை, தென்னை நடுவோர்க்குத் தேவையான கன்றுகள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும், இரண்டாவது ஆண்டில் பராமரிப்புச் செலவுகளுக்கும் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்ட செலவினமாக ரூ.62.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டது.

**தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணைய முறை**

முழுமையான மத்திய அரசு நிதியுதவிடன் செயல்படும் இத்திட்டத்திற்கான நிதியுதவி, தென்னை அபிவிருத்தி வாரியம் மூலமாக வழங்கப்படுகின்றது. முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னை மரங்களை அகற்றுதல், மாதிரி விதைப்பண்ணை அமைத்தல் மற்றும் இயற்கை உரம் தயாரித்தல் போன்ற இனங்கள், தென்னை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. தவிர, தனியார் தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு கன்றுகள் உற்பத்திக்கு ஊக்கம் தர திட்டம் உள்ளது.

[2002 ஏப்ரல் 22

இனவாரியாக 2001-2002 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனை பின்வருமாறு:

| வ. எண். | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | முதிர்ந்த நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல் (எண்) | 25000 | 25000 | 62.50 | 62.50 |
| 2 | செயல்விளக்கம் அமைத்தல் (எக்டேர்) | 75 | 73 | 13.13 | 12.74 |
| 3 | இயற்கை உரம் தயாரித்தல் | 45 | 45 | 9.00 | 9.00 |
| | மொத்தம் | | | **84.63** | **84.24** |

2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும்.

**நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி**

இத்திட்டத்தினை மத்திய மாநில அரசுகள் 50:50 நிதிப் பங்கீட்டுடன் செயல்படுத்தி வருகின்றன. கொச்சியிலுள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் வேலூர் மாவட்டம், நவ்லாக்கில் நெட்டை குட்டைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 2001-2002ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடும் செலவினமும் பின்வருமாறு:-

| பொருள் (இலட்சம் எண்கள்) 2001-2002 ஆம் ஆண்டு இலக்கு | சாதனை | நிதி (இலட்சம் ரூபாய்) ஒதுக்கீடு 2001-2002 | செலவினம் |
|---|---|---|---|
| 1.00 | 0.69 | 24.61 | 23.75 |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

**தென்னையில் ஈரியோபைட் செம்பான் பூச்சிக் கட்டுப்பாடு**

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உதவியுடன் தென்னையில் தோன்றும் ஈரியோபைட் செம்பான் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, வேர் மூலம் திரவ வடிவ நுண்ணூட்டச்சத்து செலுத்த, விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது. தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி வழங்கும் நிதியுதவியுடன் திட்டம் செயல்படுத்தப்படும்.



2002 ஏப்ரல் 22]

**மத்திய அரசு முழு நிதியுதவி பெறும் திட்டங்கள்**

*நெல் மற்றும் சிறு தானிய சிறுதளைகள் திட்டம்*

மத்திய அரசின் திட்டமான இத்திட்டத்தின் முழுச் செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதளைப் பைகள் விவசாயிகளுக்கு 90 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 10 ஆண்டுகட்கு உட்பட்ட புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விரைவாக விவசாயிகளிடையே பரவச் செய்யவும், வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்புத் தன்மையைத் தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் சிறுதளைப் பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

2001-2002 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1 | நெல் | 70000 | 72209 | 26.660 | 26.636 |
| 2 | சிறுதானியங்கள் | 12150 | 12348 | 2.946 | 2.946 |

2002-2003ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

*தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் (டானிடா உதவியுடன்)*

டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன், அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டமாகச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் சென்னை நீங்கலாக, இதர மாவட்டங்களில் ரூ.33.92 கோடி ஒதுக்கீட்டுடன் 68,900 பண்ணை மகளிரை எட்டாண்டுகளில் பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிறு மற்றும் மிகச்சிறு விவசாயப் பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயக் குடும்பங்களின் உணவு உற்பத்தியை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில், பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகியவை

[2002 ஏப்ரல் 22

திட்ட முக்கிய நோக்கங்களாகும். 2001-2002 ஆம் ஆண்டு முதல் ஊதியம் மற்றும் படிகள் செலவினம் முழுவதுமாக மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.648.894 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு ரூ.511.575 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பொருள் மற்றும் நிதி இலக்கு, சாதனை மற்றும் 2002-2003ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன வருமாறு:-

| வ. எண் | இனம் | 2001-2002 இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்பப் பயிற்சி | 370 | 339 |
| 2 | சக பண்ணை மகளிர் பயிற்சி | 370 | 313 |
| 3 | குழு நிலைப்படுத்தும் பயிற்சி | 370 | 350 |
| 4 | குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி | 370 | 350 |
| 5 | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு | 56 | 55 |
| 6 | தொழில் முனைவோர் பயிற்சி | 112 | 112 |
| 7 | நிதி ரூ. இலட்சத்தில் | 648.894 | 511.575 |

2002-2003 ஆம் ஆண்டிற்கான இலக்கு

| வ.எண் | இனம் | இலக்கு (எண்களில்) |
|---|---|---|
| 1 | தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி | 370 |
| 2 | சக பண்ணை மகளிர் பயிற்சி | 310 |
| 3 | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு | 56 |
| 4 | குழு உறுதிப்படுத்தும் பயிற்சி | 370 |
| 5 | குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி | 310 |
| 6 | நிதி (ரூ. இலட்சத்தில்) | 571.030 |



2002 ஏப்ரல் 22]

## அத்தியாயம் 3

**தோட்டக்கலை**

தமிழகத்தில் நிலவிவரும் பல்தாவர சூழ்நிலை, பல்வேறு வகையான தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்ய உகந்ததாக உள்ளது. தோட்டக்கலைப் பயிர்களில் பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலைப் பயிர்கள், மலர்கள், கிழங்கு வகைகள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள், காளான் ஆகியவை அடங்கும். தமிழ்நாட்டில் நிலவும் மாறுபட்ட தட்பவெப்ப நிலைகள் மேற்கூறிய பயிர்களை சாகுபடி செய்ய ஏற்றதாக உள்ளது. தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளுக்கு அதிக வருவாய் தருவதோடு பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பினையும், ஊட்டச் சத்துப் பாதுகாப்பினையும், உணவு பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களையும் வழங்குகிறது. தோட்டக்கலை விளைபொருட்கள் ஏற்றுமதி மூலம் கணிசமான அந்நியச் செலவாணியையும் பெற முடிகிறது.

2000-2001 ஆம் ஆண்டில் நிலப் பரப்பில் பழங்கள் 2.40 இலட்சம் எக்டேராகவும், காய்கறிகள் 2.15 லட்சம் எக்டராகவும், நறுமணப் பயிர்கள் 1.81 இலட்சம் எக்டேராகவும், மலைப்பயிர்கள் 1.98 இலட்சம் எக்டேராகவும், மலர்கள் 0.19 இலட்சம் எக்டேராகவும் இருந்தன. மொத்த உற்பத்தியில் பழங்கள் 62.38 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 59.13 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 3.26 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப்பயிர்கள் 7.33 இலட்சம் மெட்ரிக் டன்களும், பூக்கள் 1.51 இலட்சம் மெட்ரிக் டன்களும் ஆக இருந்தன.

2001-2002 ஆம் ஆண்டில் பழங்களின் உற்பத்தி அளவு 63.65 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், காய்கறிகள் 60.90 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.33 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலைப்பயிர்கள் 7.48 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலர்கள் 1.57 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும் இருந்தன. 2002-2003 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மதிப்பீடு, பழங்கள் 68.92 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 66.00 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 3.64 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப்பயிர்கள் 8.16 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலர்கள் 1.73 இலட்சம் மெட்ரிக் டன்களும் ஆகும்.

[2002 ஏப்ரல் 22

**தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்**

வேளாண்மைத் துறையின் வளர்ச்சி இயந்திரமாக அண்மை ஆண்டுகளில் தோட்டக்கலை உருவாகி வருகிறது. காய்கறிகள், கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும், பதப்படுத்தி மதிப்புக் கூட்டி அவற்றை விற்பனை செய்வதற்கும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் ஒன்று அமைக்கப்படும். புன்செய் தோட்டக்கலை, சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீர்வளப்பாதுகாப்பு, தோட்டக்கலை விளைபொருட்களை அறுவடைக்குப்பின் பாதுகாத்து விற்பனை செய்வதற்காக வேளாண் பொருளாதார ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து தனிக் கவனம் செலுத்துவதுடன், பயிரிடுவதிலிருந்து விற்பனை செய்யும் வரை தோட்டக்கலை மேம்பாட்டின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து செயல்படுவது ஆகியவை இவ்வியக்கமுறை செயல்பாடுகளில் அடங்கும்.

**2002-2003 ஆம் ஆண்டிற்கான முக்கியக் கொள்கைகள்:—**

1. தரிசு நிலங்களை, நுண்பாசன வசதிகளுடன் தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்வதின் மூலம் மேம்படுத்துதல்.

2. சிறந்த உர மேலாண்மை மற்றும் பல்தாவர சூழ்நிலைகளைப் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்.

3. ஆண்டு முழுவதும் காய்கறிகளை உற்பத்தி செய்து சந்தைகளில் தொடர்ந்து காய்கறிகளை கிடைக்கச் செய்தல்.

4. அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்களை கையாளச் செய்து தோட்டக்கலை விளைபொருட்கள் வீணாவதைத் தடுத்தல்.

5. உழவர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் நவீன சாகுபடி தொழில்நுட்பங்களை அறிந்திடச் செய்ய பயிற்சி அளித்தல்.

6. இயற்கை வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்தி, அதன் மூலம் இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளால் ஏற்படும் அழிவுகளை நீக்கி சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துதல்.



2002 ஏப்ரல் 22]

7. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தரமான செடிகளை அதிக அளவு உற்பத்தி செய்து விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

8. தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் உயரிய தொழில் நுட்பங்களையும், நுண்பாசன முறைகளையும் அதிக அளவில் கடைப்பிடிக்கச் செய்து தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்து தரமான விளைபொருட்களைப் பெறச்செய்தல்.

9. வணிக மலர்கள் மற்றும் கொய்மலர்கள் சாகுபடிக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, வெளிநாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்தல்.

கீழ்க்கண்ட மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளன :—

**அ. மாநிலத் திட்டங்கள்**

**I. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

*அ. பரப்பு விரிவாக்கத் திட்டம்*

இத்திட்டத்தின் குறிக்கோளானது பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலர்கள் மற்றும் ஏற்றுமதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்திடவும், புதிய விஞ்ஞான தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்து உற்பத்தித் திறனை அதிகரித்திடச் செய்வதுமாகும். இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடிகள், விதைகள், உயிர் உரங்கள், தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக பழங்கள் மற்றும் நறுமணப் பயிர்களில் ஒரு எக்டேர் வரையிலும், காய்கறி மற்றும் மலர் சாகுபடியில் 0.5 எக்டேர் வரையிலும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ. 322.19 இலட்சம் ஒதுக்கீட்டில் 26620 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் 27413 எக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு ரூ.322.334 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.333.22 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (ஆ) சிறப்புக் கூறுகள் திட்டம்

தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்திட ஊக்குவித்தல் மூலம், ஆதி திராவிடர் பிரிவினைச் சார்ந்த விவசாயிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தச் செய்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம், விலையில் 50 விழுக்காடு மானியத்தில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள், உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 11.80 இலட்சம் மதிப்பீட்டில் 1800 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 11.80 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (இ) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

மாநிலத்தில் 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளின் மொத்த பரப்பு 2593 எக்டேராகும். இப்பண்ணைகளில் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் இப்பண்ணைகள் "மாதிரி செயல் விளக்கப் பண்ணைகளாக" செயல்படுவதுடன், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும் நல்குகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 75.111 இலட்சம் தோட்டக்கலை நடவுச் செடிகள் உற்பத்தி செய்ய ரூ. 556.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 77.737 இலட்சம் நடவுச் செடிகள் ரூ. 523.06 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 658.16 இலட்சம் மதிப்பீட்டில் 100 இலட்சம் நடவுச் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (ஈ) தோட்டக்கலைப் பயிற்சி மையம் - மாதவரம் மற்றும் குடுமியான்மலை

குடுமியான்மலையில் உள்ள தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஒவ்வோர் ஆண்டும், துறையில் உள்ள களப் பணியாளர்களான உதவி வேளாண்மை அலுவலர்கள்/வயல் விளக்க அலுவலர்கள் ஆகியோருக்குத் தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியில் உயரிய தொழில்நுட்பங்கள் பற்றிய உள்ளீட்டுப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதனால் களப் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவும், தரமும் மேம்பாடு அடைகிறது. ஒவ்வொரு





ஆண்டும் 40 மாணவர்களுக்கு ஈராண்டு பட்டயப்படிப்பு மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில், 600 துறை அலுவலர்களுக்கும், 40 மாணவர்களுக்கும் பயிற்சி அளித்திட ரூ.0.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது. 2002-20003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட ரூ. 1.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### (II) ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தில், அப்பகுதியிலுள்ள வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை, அருநூத்து மலை, பச்சை மலை மற்றும் கல்ராயன் மலை, நாமக்கல் மாவட்டத்தில் கொல்லி மலை, திருச்சி மாவட்டத்தில் பச்சை மலை, தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, விழுப்புரம் மாவட்டத்தில் கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஒரு ஏக்கர் பரப்பளவில் பல்லாண்டு பழப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு தரம் வாய்ந்த நடவு பழச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் இலவசமாக ஆதிவாசி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 1050 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு ரூ. 17.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. இதேபோன்று, 2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்திட ரூ. 104.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (III) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுப்பதும் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் இரு முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் கோவை, ஈரோடு, மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்ய ஏதுவாக விவசாயிகளுக்குத் தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள் வேளாண் கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் 50 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1440 எக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டம்

தீட்டப்பட்டு ரூ. 148.347 இலட்சம் செலவிடப்பட்டு 1440 எக்டேர் பரப்பு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 165.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**(IV) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட ஏதுவாக ஆண்டு பயிர்கள் சாகுபடியிலிருந்து நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான தேயிலை, காபி, பழப் பயிர்கள், மர நறுமணப் பயிர்கள் மற்றும் இதர பொருளாதாரப் பயிர்களுக்கு மாற்றும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றது. 10 விழுக்காட்டிற்கும் குறைவான மலைச் சரிவுப் பகுதிகளில் காய்கறிகள் உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் விவசாயிகளுக்கு மானிய விலையில் அவை விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டு ரூ. 299.236 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 193.59 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 312.27 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(V) திண்டுக்கல் மாவட்டத்தில் மலை வாழை சாகுபடியினை புத்துயிர்ப்பு செய்யும் திட்டம்**

பழனி மலைப் பகுதியில் "முடிக்கொத்து" நச்சுயுரி நோயினால் அழிந்த பாரம்பரியம் மிக்க மலை வாழை சாகுபடியினை மீண்டும் சாகுபடிக்குக் கொணருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலாம் ஆண்டில் நோயற்ற தாய்ச் செடிகளைத் தேர்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நச்சுயுரி நோய் தாக்காத தாய்ச் செடிகள் உயரிய தொழில்நுட்பங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு பின்னர் திசு வளர்ப்பு முறையில் இனவிருத்தி செய்யப்படுகிறது. இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட திசுக்கன்றுச் செடிகள் பூச்சி நோய் தாக்காதவாறு கண்காணிப்புடன் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 54.50 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை





ரூ. 15.00 இலட்ச மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**(VI) ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

2001-2002 ஆம் ஆண்டில் தரிசு நிலங்களில் நடவுப் பணியை மேற்கொள்ள 15 இலட்சம் தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்ய வேண்டி அரசு ரூ. 1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம், முதல் பகுதியாக 2002 ஆம் ஆண்டில் திருநெல்வேலி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருவண்ணாமலை, சேலம், வேலூர், திருச்சி, தேனி, இராமநாதபுரம் மற்றும் நாமக்கல் ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. 2003 ஆம் ஆண்டிற்குத் தேவையான இரு மடங்கு அதிக நடவுச் செடிகளை உற்பத்தி செய்ய 2002 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை மேம்படுத்துதல்**

2001-2002-ல் 19 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சொட்டுநீர் பாசன முறையை நிறுவி பாசன வசதியைப் பெருக்கிட ரூ. 50.00 இலட்சம் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் இரு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு டிராக்டர்கள் வாங்க ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பணிகள் 2001-2002ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன.

**மத்திய அரசு சார்புத் திட்டங்கள்**

**(I) ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய வேண்டி முந்திரிப் பயிரின் பரப்பினை அதிகப்படுத்துதல், நலிவடைந்துள்ள தோட்டங்களில் மறுநடவு செய்து புத்துயிர் ஊட்டுதல் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதலேயாகும். முந்திரி பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக உயர் தொழில்நுட்பங்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், உயர் விளைச்சல் தரும் விருத்தாசலம்-1,2 மற்றும் 3 இரகங்களின் முந்திரி ஒட்டுக் கன்றுகள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 336.290 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 332.10 இலட்சம் செலவினம்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 245.00 இலட்சம் மதிப்பீட்டில இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### (II) ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் நறுமணப் பயிர்களின் பரப்பு, மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் இத்திட்டத்தின் மூலம், மிளகு, மஞ்சள் மற்றும் மிளகாய் போன்ற நறுமணப் பயிர்களின் தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்கும் பொருட்டு, செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 336.920 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ. 320.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### (III) ஒருங்கிணைந்த வெப்ப, வறட்சி மற்றும் குளிர் மண்டல பகுதி பழ அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பழப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதாகும். இத்திட்டத்தில் தரமான உயர் விளைச்சல் இரக நடவுச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. பழ உற்பத்தியை அதிகரிப்பதற்காக கூடுதல் பரப்பில் ஒவ்வொர் ஆண்டும் பல்வேறு பழப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படுகின்றன. விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப சாகுபடி மற்றும அறுவடைக்குப் பிந்தைய செயல்முறை பற்றிய பயிற்சி வழங்கப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டில் ரூ. 174.867 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ரூ. 174.867 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 215.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### (IV) வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்

நவீன தொழில்நுட்ப சாகுபடி முறைகளின் மூலம் வணிக மலர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்க இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. "மாதிரி





மலர் மையம்" ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் திசு வளர்ப்புச் செடிகள் உற்பத்தி குறித்து செயல் விளக்கங்கள் செய்து காட்டப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டில் ரூ. 57.15 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 55.65 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### (V) ஒருங்கிணைந்த கோகோ அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் கோகோ உற்பத்தி மற்றும் அதன் உற்பத்தித் திறனை அதிகரித்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் உயர் விளைச்சல் இரக கோகோ நடவுச் செடிகளைக் கொண்ட செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு சாகுபடி நுணுக்கங்கள் விவசாயிகளுக்கு கற்பிக்கப்படுகின்றன. கோகோவின் சாகுபடிப் பரப்பை அதிகரிப்பதற்காக மானிய விலையில் நடவுச் செடிகள் விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002-ம் ஆண்டிற்கு ரூ. 6.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 5.28 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### (VI) காய்கறி, வேர் மற்றும் கிழங்கு பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

காய்கறிகள், வேர் மற்றும் கிழங்குப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். புதிய இரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு இத்திட்டத்தில் நடவுப் பொருட்கள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைக் கொண்ட சிறுதளைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 51.230 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ. 49.87 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 48.60 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### (VII) காளான் வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் தரமான காளான் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் நவீன

[2002 ஏப்ரல் 22

முறையில் காளான் சாகுபடி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 7.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ. 7.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**(VIII) ஒருங்கிணைந்த மூலிகைப் பயிர்கள் மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழகத்தில் முக்கிய மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், செயல் விளக்க மற்றும் விதை உற்பத்தித் திடல்கள் விவசாயிகளின் வயல்களில் அமைக்கத் தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 12.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 13.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**(IX) பசுமைக் குடில்கள் அமைத்தல் மற்றும் நறுமணப் பயிர்கள் உலரவைத்தல்**

இத்திட்டம், குறைந்த மதிப்பீட்டு பசுமைக் குடில் அமைப்பதற்கு ஒரு அலகிற்கு 40 விழுக்காடு மானியமாக அதிகபட்சம் ரூ. 40,000 வழங்குவதன் மூலம் செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பிற இனங்களான நறுமணப் பயிர்களின் விளைபொருட்களை உலர்த்த பாலித்தீன் விரிப்புகள் வழங்கி விளைபொருட்களின் தரம் பேணப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டு ரூ. 40.58 இலட்சம் இத்திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 40.18 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 30.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.



2002 ஏப்ரல் 22]

## அட்டவணை-1

### தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

பரப்பு - எக்டேரில்
உற்பத்தி - டன்களில்
உற்பத்தித் திறன் - டன்/எக்டேர்

| வ.எண் | விவரம் | 1995-1996 | 1996-1997 | 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பழங்கள் | | | | | | |
| | பரப்பு | 194709 | 194987 | 210660 | 221391 | 223470 | 240000 |
| | உற்பத்தி | 4912945 | 3855807 | 5033080 | 4508714 | 3858053 | 6237700 |
| | உற்பத்தித் திறன் | 25.23 | 19.78 | 23.89 | 20.4 | 17.26 | 25.99 |
| 2 | காய்கறிகள் | | | | | | |
| | பரப்பு | 157665 | 169380 | 193130 | 185800 | 201810 | 215000 |
| | உற்பத்தி | 3956661 | 4001723 | 5079505 | 4257717 | 4890373 | 5913000 |
| | உற்பத்தித் திறன் | 25.09 | 23.67 | 26.3 | 22.9 | 24.23 | 27.5 |
| 3 | நறுமணப் பயிர்கள் | | | | | | |
| | பரப்பு | 142750 | 160001 | 157022 | 170776 | 178320 | 181000 |
| | உற்பத்தி | 190958 | 223718 | 249078 | 265119 | 318812 | 326000 |
| | உற்பத்தித் திறன் | 1.34 | 1.4 | 1.58 | 1.6 | 1.79 | 1.8 |
| 4 | மலைப் பயிர்கள் | | | | | | |
| | பரப்பு | 178511 | 182707 | 186527 | 191160 | 213325 | 198200 |
| | உற்பத்தி | 585155 | 602793 | 649192 | 675620 | 725802 | 733300 |
| | உற்பத்தித் திறன் | 3.28 | 3.3 | 3.48 | 3.5 | 3.4 | 3.7 |
| 5 | மலர்கள் | | | | | | |
| | பரப்பு | 14843 | 15856 | 16788 | 17315 | 17620 | 19000 |
| | உற்பத்தி | 81642 | 95136 | 117516 | 129871 | 136568 | 151000 |
| | உற்பத்தித் திறன் | 5.50 | 6.00 | 7.00 | 7.50 | 7.75 | 7.95 |

## மாநில தோட்டக்கலைப் பண்ணைகள்

| வ.எண் | மாவட்டம் | பண்ணை பெயர் | இடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அ.தோ.ப. | மாதவரம் | 5.76 |
| 2 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | ஆத்தூர் | 12.24 |
| 3 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | விச்சந்தாங்கல் | 22.96 |
| 4 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேல்கதிர்பூர் | 42.12 |
| 5 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேல்ஒட்டிவாக்கம் | 20.36 |
| 6 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | பிச்சிவாக்கம் | 40.43 |
| 7 | கடலூர் | அ.தோ.ப. | நெய்வேலி | 40.48 |
| 8 | கடலூர் | அ.தோ.ப. | விருத்தாசலம் | 10.53 |
| 9 | திருவண்ணாமலை | அ.தோ.ப. | தகரக்குப்பம் | 34.40 |
| 10 | வேலூர் | அ.தோ.ப. | கூடப்பட்டு | 10.40 |
| 11 | வேலூர் | அ.தோ.ப. | நவ்லாக் | 84.45 |
| 12 | சேலம் | அ.தோ.ப. | ஏற்காடு | 10.12 |
| 13 | சேலம் | மா.ப.ப. | கருமந்துறை | 419.77 |
| 14 | சேலம் | அ.தோ.ப. | மணியார்குண்டம் | 100.00 |
| 15 | சேலம் | கா.வி.உ.மை. | கருமந்துறை | 5.49 |
| 16 | சேலம் | அ.தோ.ப. | கருமந்துறை | 39.35 |
| 17 | சேலம் | அ.தோ.ப. | முள்ளுவாடி | 48.20 |
| 18 | சேலம் | அ.தோ.ப. | சிறுமலை (அருனூத்து மலை) | 8.10 |
| 19 | நாமக்கல் | அ.தோ.ப. | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | அ.தோ.ப. | படசோலை | 28.14 |
| 21 | தருமபுரி | அ.தோ.ப. | திம்மாபுரம் | 9.89 |
| 22 | தருமபுரி | அ.தோ.ப. | ஜீனூர் | 122.38 |
| 23 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | ஆனைக்கட்டி | 12.00 |
| 24 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | கல்லார் | 8.72 |
| 25 | கரூர் | அ.தோ.ப. | முதலைப்பட்டி | 23.96 |
| 26 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | குடுமியான்மலை | 118.68 |
| 27 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | வல்லத்திராக்கோட்டை | 521.20 |
| 28 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | நாட்டுமங்கலம் | 53.02 |
| 29 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | ஆடுதுறை | 8.80 |
| 30 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | மருங்குளம் | 10.58 |





| வ.எண். | மாவட்டம் | பண்ணை பெயர் | இடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 31 | தேனி | அ.தோ.ப. | பெரியகுளம் | 9.31 |
| 32 | திண்டுக்கல் | அ.தோ.ப. | கொடைக்கானல் | 5.16 |
| 33 | திண்டுக்கல் | பிரையன்ட் பூங்கா | கொடைக்கானல் | 8.30 |
| 34 | திண்டுக்கல் | அ.தோ.ப. | தாண்டிக்குடி | 5.45 |
| 35 | திண்டுக்கல் | அ.தோ.ப. | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 36 | திண்டுக்கல் | அ.தோ.ப. | சிறுமலை | 202.47 |
| 37 | விருதுநகர் | அ.தோ.ப. | பூவாணி | 9.57 |
| 38 | விருதுநகர் | அ.தோ.ப. | திருவில்லிபுத்தூர் | 46.27 |
| 39 | சிவகங்கை | அ.தோ.ப. | தேவகோட்டை | 81.20 |
| 40 | சிவகங்கை | அ.தோ.ப. | நேமம் | 38.77 |
| 41 | நீலகிரி | அ.தோ.ப. | பர்லியார் | 6.25 |
| 42 | நீலகிரி | அ.தோ.ப. | காட்டேரி | 18.96 |
| 43 | நீலகிரி | அ.தோ.ப. | குன்னூர் | 4.05 |
| 44 | நீலகிரி | பழவியல் நிலையம் | குன்னூர் | 6.52 |
| 45 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா | குன்னூர் | 12.14 |
| 46 | நீலகிரி | அ.தோ.ப. | தொட்டபெட்டா | 4.00 |
| 47 | நீலகிரி | அ.தோ.ப. | தும்மனட்டி | 9.80 |
| 48 | நீலகிரி | அ.தோ.ப. | விஜயநகரம் | 14.40 |
| 49 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா | உதகை | 22.00 |
| 50 | நீலகிரி | அ.தோ.ப. | நஞ்சநாடு | 85.18 |
| 51 | நீலகிரி | அ.தோ.ப. | தேவாலா | 80.00 |
| 52 | திருநெல்வேலி | அ.தோ.ப. | குற்றாலம் | 14.89 |
| 53 | கன்னியாகுமரி | அ.தோ.ப. | கன்னியாகுமரி | 12.80 |
| 54 | கன்னியாகுமரி | அ.தோ.ப. | பேச்சிப்பாறை | 6.07 |
| | மொத்தம் | | | **2593.04** |

அ.தோ.ப. அரசு தோட்டக்கலைப் பண்ணை
மா.ப.ப. மாபெரும் பழப் பண்ணை
கா.வி.உ.மை. காய்கறி விதை உற்பத்தி மையம்

[2002 ஏப்ரல் 22

# அத்தியாயம்-4

## வேளாண்மைப் பொறியியல்

**பார்வை**

தமிழ்நாட்டை, ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கச் செய்ய, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதிபூண்டிருப்பதாக அறிவித்துள்ளார். இத்தொலைநோக்கினை எய்திட 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**இயக்கம்**

நிலம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு என்பது வேளாண்மைப் பொறியியல் துறையின் அடிப்படைப் பணியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில், இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் இலக்குகளை எட்டிட "நிலம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு இயக்கம்" என்ற வகையில் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்திட வேளாண்மைப் பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்தல்.

ஒவ்வொரு துளி நீரையும் சேமித்து, விவசாயம் பெருக்குதல்.

வேளாண்மைக்குத் தேவையான பாசன நீருக்கு வழி வகுத்தல்.

நிலம் மற்றும் நீர் ஆதாரத்தைப் பாதுகாப்பதன் மூலம் உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு.

வேலைவாய்ப்புகளை உருவாக்கி வாழ்வாதாரப் பாதுகாப்பளித்தல்.

**உத்திகள்**

நிலம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ்க்காணும் செயல்திட்டங்கள் நீர்வடிப்பகுதி மேலாண்மை மற்றும் பாசன நீர் மேலாண்மை ஆகிய தொழில் நுட்ப உத்திகள் மூலம் எய்தப்படும்:-

**நீர்வடிப் பகுதி மேலாண்மை**

மண் அரிமானத்தைத் தடுத்தல், மண் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல்.

மழை நீர் வீணாகாமல் தேக்கிவைத்து தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பண்ணை அளவிலான நீர் சேகரிப்பை ஊக்குவித்தல்.



2002 ஏப்ரல் 22]

மண் அரிப்பிலிருந்து நிலங்களைப் பாதுகாத்து, மேலும் தரிசு நிலங்கள் உருவாகிடாமல் தடுத்து, நிலத்தின் தன்மைக்கேற்றவாறு நில உபயோக முறைகளை அறிமுகப்படுத்துதல்.

கிராமக் குளங்கள், ஊரணிகள், கோயில் குளங்கள் மற்றும் பாரம்பரியம் மிக்க நீர் ஆதாரங்களைச் சீர் செய்தல்.

மண் அரிப்பினால் ஏற்படும் வண்டல் மண் மூலம் மாசுபடிதலைத் தடுத்தல்.

**பாசன நீர் மேலாண்மை**

குறைந்த நீர் உபயோகம் மற்றும் சமவிகித நீர் பகிர்மானம் மூலம் விளைச்சலைப் பெருக்குதல்.

பாசனப் பகுதிகளில் உழவர் சங்கங்கள் ஏற்படுத்தி நிலையான நீர் மேலாண்மை ஏற்படுத்துதல்.

கிணற்றுப் பாசன வசதிகளை உருவாக்குவதுடன் பாசன வசதிகளை மற்றும் தற்போது உள்ள கிணற்று பாசன வசதிகளை நிலைநிறுத்துதல்.

கிணற்றுப் பாசனம் மூலம் பாசனம் பெறக்கூடிய தென்னை, கரும்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறையைப் பயன்படுத்தி, நீர் வளத்தைப் பாதுகாத்து, பாசன வசதி பெருக்கி உற்பத்தியை அதிகரித்தல்.

**செயல் திட்டங்கள்**

மேற்குறிப்பிட்ட உத்திகள், மாநில திட்டங்கள், மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள், எஸ்.ஜி.எஸ்.ஒய்., எஸ்.ஜி.ஆர்.ஒய்., பி.எம்.ஜி.ஒய். மற்றும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கவிருக்கும் நிதி ஆதாரங்களின் மூலம் செயல் திட்டங்களாக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

**உழவர்களின் பங்கேற்போடு கூடிய நீர்வடிப்பகுதி மேம்பாடு**

தமிழ்நாட்டில் 32.50 இலட்சம் எக்டேர் நிலங்கள் மானாவாரி நிலங்களாக உள்ளன. இவைதான் சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மற்றும் பருத்தி வகைப் பயிர்களை உற்பத்தி செய்ய ஆதாரமாக விளங்குபவை. 1949 ஆம் ஆண்டு முதல், நிலம் மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகள் பஞ்ச நிவாரணப் பணிகளாக

[2002 ஏப்ரல் 22

துவக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. நாளடைவில் மண்வளப் பாதுகாப்பு திட்டமாக செயல்படத் தொடங்கியது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில். இத்திட்டத்திற்கு புதிய வடிவம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உழவர்களின் ஒருமித்த பங்கேற்போடு மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுத்திடவும், மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாத்திடவும் மற்றும் மழை நீரைச் சேகரிக்க ஏதுவாகவும் வடிவமைக்கப்படும்.

**வளர்ச்சியை நோக்கிய புதிய அணுகுமுறை மற்றும் இலக்கு**

டானிடா உதவியுடன் செயலாக்கப்பட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் பெற்ற வெற்றிகளின் அடிப்படையிலும், பிப்ரவரி 2002-ல் நடைபெற்ற தென்மண்டல அளவிலான "நிலம் மற்றும் நீர்வள மேலாண்மை மூலம் வாழ்வாதாரப் பாதுகாப்பு" என்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலும், இந்தப் புதிய அணுகுமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பங்கேற்பு அணுகுமுறை**

சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள பயனாளிகளை திட்டமிடல், செயலாக்கல், பராமரித்தல் மற்றும் எதிர்கால பயனைப் பகிர்தல் போன்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் ஈடுபடச் செய்திட, பங்கேற்பு அணுகுமுறையில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் கட்டமைப்புகளுக்கு தாங்கள் உரிமையுடையவர்கள் என்ற உணர்வுகளை ஏற்படுத்த இந்த அணுகுமுறை வழிவகுக்கும். திட்டச் செலவையும், பயனையும் பயனாளிகள் பகிர்ந்து கொள்ள இந்த அணுகுமுறை வழி வகுக்கும். இந்த பங்கேற்பு அணுகுமுறையில் விரிவான செயல் திட்டங்களை குறிப்பிட முடியாவிட்டாலும், பங்கேற்பு முறையின் தேவையினை நிறைவேற்ற ஆண்டு வாரியான செயல் திட்டங்கள் உருவாக்கப்படும். மகளிர் மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கு இத்திட்ட செயலாக்கத்தில் ஈடுபட சிறப்புக் கவனம் செலுத்தப்படும். தொழில் நுட்ப ஆலோசனை வழங்கி திட்டம் செயலாக்கத்திற்கு வகை செய்தல் வேளாண்மைப் பொறியியல் துறையின் பணியாகும். கிராம அளவில் கட்டமைப்புகளை தாமே உருவாக்கவும், பராமரிக்கவும், சமுதாயத்தின் திறனை வெளிக்கொணர வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படும். குறைந்த செலவில், உழவர்களால் எளிமையாக செயல்படுத்தப்படும் விதத்தில் பணிகள் வடிவமைக்கப்படும். தனியார் மற்றும் பொது நிலங்களில், நிலம் பயன்பாடு திறம்பட



2002 ஏப்ரல் 22]

மேற்கொள்ளப்படும் வகையில் பயிற்சி அளிக்கப்படும். வேளாண் வளர்ச்சி அல்லது விவசாயிகளின் குடும்ப வளர்ச்சியினை எட்டிடுவதை நோக்கமாகக் கொண்டு, குறைந்த செலவில் இப்புதிய அணுகுமுறையில் முயற்சி மேற்கொள்ளப்படும். விவசாயக் குடும்ப மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் பல தொழில் நுட்பங்கள் இதில் அடங்கும். அவற்றுள் நிலம் மற்றும் நீர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு, தோட்டக்கலை வளர்ச்சி மூலம் மேற்கொள்ளக்கூடிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி விளக்கும் புன்செய் பகுதி சிறு விவசாயிகள், குறு விவசாயிகளின் சமூகப் பொருளாதாரத்தை உயர்த்த உறுதுணையாக அமையும். விரைவாக இலக்கினை எய்த வேண்டும் என்ற அவசரமான அணுகுமுறையிலிருந்து மாறுபட்டு, புதுமையானதாகவும், பங்கேற்பை ஊக்குவிப்பதாகவும் உள்ளதால் மிதமாகத் துவங்கி சீராகச் செயல்படும்.

**நீர்வடிப் பகுதி வளர்ச்சி செயல் திட்டம்**

மண்ணின் ஈரப்பதம் காத்தல், மண் அரிமானம் தடுத்தல், வீணாக ஓடும் நீரைச் சேமித்தல் பண்ணையளவில் மழைநீர் சேகரித்தல் மற்றும் வங்கிகள் உதவியுடன் தனியார் நிலங்களில் தேவையான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் இப்புதிய நீர்வடிப்பகுதி வளர்ச்சிச் செயல் திட்டத்தில் அடங்கும். நிலத்திறன், மண்ணின் தன்மை, மண்ணின் ஆழம், நிலத்தடி நீர் இருப்பு மற்றும் விவசாயிகளின் தேவைகள் முதலியனவற்றை ஒவ்வொரு நுண்ணிய நீர்வடிப் பகுதி திட்டமும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும். நீர்வடிப் பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டும் அன்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் இதர சார்புள்ள துறைகளிடம் உள்ள தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றும் செயல் திட்டம் வடிவமைக்கப்படும்.

**பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு சிறப்புக் கவனம்**

காரம் மற்றும் அமிலத் தன்மையுள்ள நிலங்களில் இந்தப் புதிய அணுகுமுறை சிறப்புக் கவனம் செலுத்தும். கரிசல் மண் பகுதிகளின் பிரச்சினைகளான வடிகால் பிரச்சினைகள், வறட்சி நிலை ஆகியவற்றிற்கு, ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் செயல்திட்டம் வகுக்கப்படும். இத்தகைய பகுதிகளில் மழைநீரைச் சேகரித்து, நிலத்தடி நீர்வளம் பெருக்க சிறப்புத் தொழில் நுட்ப செயல்முறைகள் பின்பற்றப்படும்.

[2002 ஏப்ரல் 22

**மலைப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு**

கொல்லி மலை, ஏற்காடு மலை, கல்ராயன் மலை, அருனூத்து மலை, பச்சை மலை, ஜவ்வாது மலை மற்றும் சித்தேரி மலைப் பகுதிகளில் உள்ள மலைவாழ் விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தி வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்துவதற்கு ஒருங்கிணைந்த மலைப் பகுதி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். மலைவாழ் விவசாயிகள் நிலங்களில், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், அரசாங்கச் செலவிலேயே செய்யப்படும். வேலைவாய்ப்பை ஏற்படுத்தியும் பயிர் விளைச்சலில் கூடுதல் உற்பத்தியினை அடைவதன் மூலமாக இந்தத் திட்டம் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பாதுகாப்பாக அமையும்.

**வைகை ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு**

பெரிய நீர் நிலை ஆதாரங்களில் வண்டல் படிதல் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இது கொள்ளளவைக் குறைப்பது மட்டுமின்றி, அதன் பயன் மற்றும் ஆயுளையும் குறைக்கும். நீர் நிலையில் வண்டல் படிவதால், அவற்றின் கொள்ளளவு, பாசனப் பகுதி, மின்சக்தி உற்பத்தி ஆகியவற்றை அச்சுறுத்துவதாக உள்ளது. தமிழகத்தில் 33 நீர்நிலைகள் வண்டல் படிதல் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதில் 50%-க்கு அதிகமாக இரு நீர் நிலைகளிலும், 30%-க்கு அதிகமாக 8 நீர்நிலைகளிலும் கொள்ளளவு குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில், 33%-க்கு அதிகமாக நீர்வடிப் பகுதி வண்டல் படிந்துள்ளது. நீர்த்தேக்கங்களில் வண்டல் படிதல் பின்வரும் விழுக்காடு அடிப்படையில் உள்ளது:

22 நீர்த் தேக்கங்களில் ஆண்டிற்கு அதன் கொள்ளளவில் 0.5% குறைவாக

4 நீர்த் தேக்கங்களில் ஆண்டிற்கு 0.5 முதல் 1.0% வரையிலான கொள்ளளவு

4 நீர்த் தேக்கங்களில் ஆண்டிற்கு 1 முதல் 2% வரையிலான கொள்ளளவு

3 நீர்த் தேக்கங்களில் 2% கொள்ளளவு

நீர் வடிப் பகுதிகளில் மண் அரிமானம் மற்றும் முறையில்லா நிலப் பயன்பாடே வண்டல் படியக் காரணம். வண்டல் படிதலைக் குறைக்கும் பொருட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள வைகை நீர்பிடிப்புப் பகுதியில் பல்வேறு மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 22]

அகில இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு மதிப்பீட்டுக் குழுமம், வைகை நீர் பிடிப்புப் பகுதியில், முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 40 நீர்வடிப் பகுதிகளில் 26 சிறு நீர்வடிப் பகுதிகளுக்கு மண் மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகளைச் செய்ய இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவைகளில் 23 நீர்வடிப் பகுதிகளின் பணிகள் நிறைவுற்று தன்னிறைவு பெற்றுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் 11 நீர்வடிப் பகுதிகளுக்கு ஒப்புதல் பெறப்படும். இந்தப் பணிகளுக்கு 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்படும். இந்தக் கடன், பணிமுடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, வட்டியுடன் பத்து ஆண்டு சம தவணைகளாக வசூலிக்கப்படும். பத்தாவது திட்டக்காலத்தில், தென்பெண்ணையாறு நீர்வடிப் பகுதியை இத்திட்டத்தில் சேர்க்க இந்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

**மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தில் மண் மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகள்**

கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தில் மண் மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்படும். பயனாளிகளிடமிருந்து 10 விழுக்காடு பங்குத்தொகையும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பழங்குடியினரிடமிருந்து 5 விழுக்காடு பங்குத்தொகையும் பெறப்பட்டு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. சமுதாயப் பணிகளுக்கும் 5 விழுக்காடு பங்குத்தொகை, பயனாளிகளிடமிருந்து பெறப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில், ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதியின் அணுகுமுறையினால், தேர்வு செய்யப்பட்ட நீர்வடிப் பகுதிகளில், வியக்கத்தக்க வளர்ச்சிக்குப் பாதுகாப்புப் பணிகள் வழிவகுப்பதாக அமைந்துள்ளன.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மண் மற்றும் நீர் பாதுகாப்புப் பணிகள்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு, மிகவும் பாதிக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், நிலச்சரிவு தடுப்புப் பணிகள், நீர்வழித் தடங்கலை ஒழுங்குபடுத்தும் பணிகள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டப் பணிகள் 50 விழுக்காடு மானியத்துடனும் 50 விழுக்காடு கடனாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

பணி முடிந்து இரண்டு ஆண்டு கழித்து, கடன் தொகையானது வட்டியுடன், பத்து ஆண்டுத் தவணையாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

**நீர்வடிப் பகுதி மற்றும் தரிசுநில மேம்பாட்டுப் பணியில் தொலையுணர்வு தொழில்நுட்பத்தின் பங்கு**

வேளாண்மைப் பொறியியல் துறையில் இயங்கும் தொலையுணர்வுப் பிரிவு, நீர்வடிப் பகுதி மற்றும் தரிசுநில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளத் தேவையான தகவல்களை அளித்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மண்டல நிலை மற்றும் மாவட்ட வாரியாக உள்ள நீர்வடிப் பகுதிகளில் வரைபடம் முதலியவைகளைக் கொண்டு பல துறைகள், நீர்வடிப் பகுதிகளைப் பிரித்தாய்வு செய்து, முன்னுரிமைப் படுத்திட அறிக்கைகளை பயன்படுத்துகின்றன. இந்தப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் தொலையுணர்வு மையத்துடன் இணைந்து திண்டுக்கல் மாவட்டத்தில் 1:50000 என்ற அளவில், 5000 எக்டேர் நிலப்பகுதிக்கு புவியியல் தகவல் அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. மாநில நிலப் பயன்பாட்டுக் குழுமம் நில நீர்வடிப் பகுதி வரைபடத்தைத் தயாரிக்கும் பணியினை வேளாண் பொறியியல் துறையிடம் வழங்கியுள்ளது. இந்த வரைபடம் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மண்ணின் பரிமாணத்தை (Soil profile) அளிக்கும் மாநில நில பயன்பாட்டுக் குழுமம், நில நீர்வடிப்பகுதி வரைபடத்தை "CDROM" என்ற கணினி தொழில்நுட்ப யுக்தியுடன் அளிக்கும் பொறுப்பை வழங்கியுள்ளது. இந்தப் பணி நடைபெற்று வருகிறது. தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் அறிக்கை (GIS) உத்தியுடன், பெரம்பலூர் மாவட்ட நில மற்றும் இயற்கைச் சூழல் (Ecological) மதிப்பீட்டினைச் செய்யும் பொறுப்பையும் நில பயன்பாட்டுக் குழுமம் வழங்கியுள்ளது செயற்கைக்கோள் மூலம் பெறப்படும் தகவல்கள் மற்றும் கிராம வரைபடங்கள் மூலம் மண் அரிமானம் மற்றும் கனிமச் சுரங்கத்தினால் பாதிப்புக்குண்டான நிலங்களின் வரைபடம் 1:10000 என்ற அளவு விகிதத்தில் தயாரிக்கப்படும். இந்தத் தகவல்கள், கனிமச் சுரங்கத்தினால் பாதிப்புக்குண்டான நிலங்களைச் சீராக்கி, சுற்றுச் சூழலை மேம்படுத்த உதவிடும்.

**டானிடா உதவியுடன் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டப் பணிகள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், 120 கிராமங்களில் 42,500 எக்டேர் நிலப் பரப்பில் ரூ. 4172.44 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டுள்ளது.



இத்திட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டது:—

1. தரம் இழந்த நிலப் பகுதிகளில், (திறமையுடன்) நிலப் பயன்பாட்டைச் செய்ய பயிற்சி அளித்தல்.

2. மானாவாரிப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் வனப் பயிர்கள், பயிர் செய்யச் செய்வதுடன், நிலப் பாதுகாப்புடன் நிரந்தர நீர் ஆதாரத்தைப் பாதுகாக்கச் செய்தல்.

3. முன்னுரிமைக்குட்பட்ட இடங்களில், குறுகிய மற்றும் நீண்ட கால வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் குடும்ப வருவாயைப் பெருக்குதல்.

5-8-1994-ல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், மார்ச் 2001 வரை ரூ. 3098.492 இலட்சம் செலவில் 31669 எக்டேர் பரப்பளவில் செயலாக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.386.097 இலட்சம் செலவில் 3232 எக்டேர் நிலப்பரப்பில் பணி முடிந்துள்ளது. இந்தத் திட்டம் 2003 மார்ச்சில் முடிவடையும். இதற்கு முன் முடிவுற்ற பணிகளுக்கான பராமரிப்புப் பணிகள் 2002-2003-ல் மேற்கொள்ளப்படும்.

**பாசன நீர் மேலாண்மை**

**பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சம பங்கீட்டின் அடிப்படையில் (50:50) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காவிரி பாசனப் பகுதி, கீழ்பவானி திட்டம், பரம்பிக்குளம்—ஆழியார் திட்டம், அமராவதி நீர்தேக்கத் திட்டம், கோதையார்—சித்தார் பட்டணங்கால் திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், பெரியார் வைகை திட்டம், சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டம் மற்றும் தாமிரபரணி நீர்த்தேக்கத் திட்டம் முதலிய பகுதிகளில் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. கீழ்பவானித் திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் முதலியன முடிவடைந்துள்ளன. மீதமுள்ள திட்டங்கள், மத்திய அரசு அங்கீகரித்துள்ள கால அளவிற்குள் முடிவடையும். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம், தொப்பையார் திட்டம் மற்றும் பாலாறு—பரந்தலாறு திட்டம் போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசு சமீப காலத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

[2002 ஏப்ரல் 22

**பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் உட்கூறுகள்**

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் முக்கிய மூன்று உட்கூறுகள் (Components) உள்ளன.

1. பண்ணை மேம்பாட்டுத் திட்டம்
2. சுழற்சி முறை நீர்ப் பாசனம்
3. விவசாயிகள் பங்கேற்பு

மேலும் கார மற்றும் அமிலத் தன்மை உள்ள நிலங்களைச் சீராக்கும் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயலாக்கிட உள்ளது. மதகிற்குக் (Sluice) கீழுள்ள நிலங்களுக்குப் பாசன நீர் மேலாண்மைக் கொள்கையை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை பண்ணை மேம்பாட்டுப் பணியில் கீழ்க்குறித்துள்ளவாறு கட்டுமான வசதிகளை மேற்கொள்கிறது.

| கட்டுமான வசதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. சிமெண்ட் வாய்க்கால்கள் | நீர் ஓட்ட நேரத்தைக் குறைத்தல், வீணாக நிலத்துக்குள் நீர் ஊடுருவலைத் தடுத்தல். |
| 2 புதிய பண்ணை வாய்க்கால்கள் | ஒவ்வொரு வயலுக்கும் நீரைக் கொண்டு செல்ல வழிவகுத்தல். |
| 3 கட்டுமானத் தொட்டிகள் மற்றும் பகிர்மானத் தொட்டிகள் | தேவைக்கேற்ப நீரைப் பிரித்து பகிர்ந்து அளித்து நீர்ப் பயன்பாட்டை எளிதாக்குதல். |
| 4. சரிவுக் கட்டுமானங்கள் | இரு வயல்களுக்கிடையே 0.30 மீட்டருக்கு மேல் மட்டம் கூடும்பொழுது நீரோட்டத்தினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்தல், வாய்க்கால்களில் நீர் தேங்குவதைத் தடுத்தல். |
| 5. படுகை அணை கட்டுதல் (Bed dams) | உயர்மட்டத்தில் உள்ள நிலங்களுக்கு தடுப்பு மூடிகளைப் (Shutter) பயன்படுத்தி நீரை உயர்த்திப் பாசன வசதி செய்தல். |



2002 ஏப்ரல் 22]

10.97 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ள பாசனப் பகுதிகளில், 31-3-2002 வரை, 12 பாசனப் பகுதி திட்டங்களில் ஏறத்தாழ 8.74 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுழற்சிமுறை நீர்ப்பாசனம் அல்லது வாரபந்தி என்பது, குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்தில் நீரைப் பகிர்ந்து பாசனம் செய்வது ஆகும். இந்தச் சுழற்சி முறை பாசனத்திற்கான கால அட்டவணை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்று, விவசாயிகளிடம் ஒப்படைப்பு செய்தபின் தயாரித்து அளிக்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டில், கீழ்பவானித் திட்டம் மற்றும் காவிரிப் பாசனப் பகுதித் திட்டம் மற்றும் பெரியார்-வைகை பாசனத் திட்டம் ஆகிய பகுதிகளில் முதன்முதலாக நீர் சுழற்சி முறை பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இன்றுவரை ஒன்பது பாசனப் பகுதி திட்டங்களின் மூலம் 7.04 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை**

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை செயலாக்குவதற்கு விவசாயிகளின் பங்கேற்பு முக்கியமானது. பயிர்களின் தேவைக்கேற்ப, சரியான நாளில் சரியான நேரத்தில், சரியான அளவு நீர், சரியான இடத்திற்குப் பகிர்ந்தளிக்க விவசாயிகள் பங்கேற்பு அவசியம். இவற்றில் கடந்த இருபது ஆண்டுகளாக வேளாண்மைப் பொறியியல் துறை அரும்பணி ஆற்றி வருகிறது. முழுவீச்சில் நடந்து வரும் பங்கேற்பு அணுகுமுறை, விவசாயச் சங்கங்களுக்குப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் அப்பணிகளைப் பராமரிக்கும் பொறுப்பை அளித்ததன் மூலம் பங்கேற்பு பாசன மேலாண்மையைத் திறம்பட ஆக்கியுள்ளது.

விவசாயிகள் ஒருமித்த செயல்பாட்டினை நெறிப்படுத்த மூன்று அடுக்குச் சங்கம் அமைக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

| | | |
|---|---|---|
| மதகு அளவில் | - | விவசாயிகள் சங்கம் |
| பிரிவுக் கால்வாய் அளவில் | - | விவசாயிகள் சபை (Council) |
| திட்ட அளவில் | - | விவசாயிகள் பேரவை (Federation) |

**விவசாயச் சங்கங்கள்**

நடைபெற்று வரும் திட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள விவசாயச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் விவரங்கள் :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | விவசாயச் சங்கங்களின் எண்ணிக்கை | விவசாயக் கூட்டமைப்பு களின் எண்ணிக்கை | பரப்பு (எக்டேரில்) | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | காவிரிப் பாசனப் பகுதி திட்டம் | 291 | 2151 | 184400 | 149298 |
| 2 | கீழ்பவானி திட்டம் | 44 | 2774 | 81400 | 63427 |
| 3 | பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் | 93 | 1420 | 121154 | 69880 |
| 4 | கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் | 13 | 183 | 7828 | 7955 |
| 5 | அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் | 26 | 175 | 8031 | 5758 |
| 6 | கோதையார்-சித்தார் பட்டணங்கால் திட்டம் | 27 | 242 | 21392 | 32965 |
| 7 | பெரியார்—வைகைத் திட்டம் | 38 | 904 | 65857 | 34548 |
| 8 | சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் | 15 | 238 | 10009 | 12386 |
| 9 | தாமிரபாணி நீர்த்தேக்கத் திட்டம் | 2 | 12 | 603 | 1276 |
| | **மொத்தம்** | **549** | **8099** | **500674** | **377493** |

இதுவரை பதிவு செய்யப்பட்ட 549 சபைகளில், 401 விவசாயிகளின் சபைகளுக்கு (Farmers' Councils) கட்டுமானப் பராமரிப்புக்காக, செயல்பாட்டு மானியம் ரூ. 1146.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



| வ. எண் | திட்டத்தின் பெயர் | வருடம் | மொத்தப் பரப்பு | மார்ச் 2002 முடிய: பண்ணை மேம்பாட்டுப் பணிகள் — செயல் பரப்பு | மீதம் | பண்ணை மேம்பாட்டுப் பணிகள் — செயல் பரப்பு | மீதம் | மொத்த செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காவிரி பாசனப் பகுதி | 1982-83 | 634400 | 513208 | 1221192 | 362341 | 272059 | 17292.39 |
| 2 | பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம் | 1985-86 | 174553 | 132946 | 41607 | 125933 | 48620 | 8501.45 |
| 3 | அமராவதி நீர்த்தேக்க திட்டம் | 1995-96 | 22386 | 19404 | 2982 | 19184 | 3202 | 1688.14 |
| 4 | கோதையார்-சித்தார் பட்டணங்கால் திட்டம் | 1995-96 | 36836 | 29353 | 7483 | 27081 | 9755 | 2471.82 |
| 5 | தாமிரபரணி ஆற்றுப் படுகைத் திட்டம் | 1999-2000 | 34846 | 7417 | 27429 | 4017 | 30829 | 599.46 |
| 6 | தொப்பையாறு திட்டம் | 2001-2002 | 2233 | 353 | 1880 | - | 2233 | 25.69 |
| 7 | கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டம் | 2001-2002 | 4343 | 438 | 3905 | — | 4343 | 28.15 |
| 8 | பாலாறு பொறந்தலாறு திட்டம் | 2001-2002 | 7405 | 393 | 7012 | — | 7405 | 28.30 |
| 9 | கீழ்பவானித் திட்டம் | 1982-83 | 83974 | 77745 | 6229 | 76426 | 7548 | 4016.79 |
| 10 | பெரியார்-வைகைத் திட்டம் | 1981-82 | 69532 | 68092 | 1440 | 65328 | 4204 | 1025.95 |
| 11 | கம்பம் பள்ளத் தாக்குத் திட்டம் | 1994-95 | 8099 | 7750 | 349 | 7611 | 488 | 766.29 |
| 12 | சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டம் | 1984-85 | 18127 | 16405 | 1722 | 16375 | 1752 | 576.31 |
| 13 | தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக அமைப்பு | | | | | | | 170.58 |
| | மொத்தம் | .. | **1096734** | **873504** | **223230** | **704296** | **392438** | **37191.32** |

[2002 ஏப்ரல் 22

**குழாய்க் கிணறுகள் மூலம் கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்துதல்**

கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், ஏற்கெனவே பாசனத்தில் உள்ள நிலங்களுக்கு பாசனத்தை நிலை நிறுத்துதல், நிலம் மற்றும் நிலத்தடி நீரின் அத்தியாவசியப் பயனை அதிகரிக்க நிலத்தடி நீர் சேமிப்பை ஏற்படுத்துதல், குழாய்க் கிணறு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழகம் இன்று நீர் பற்றாக்குறையால் நிலத்தடி நீரைப் பெரிதும் நம்பியுள்ளது. புதியதாக குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஏற்கெனவே வறண்டுவிட்ட கிணறுகளுக்கு புத்துயிர் அளித்தல் முதலியன இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன. நீர் ஆய்வுக் கருவிகள், மின்னனுக் கருவிகள் மூலம் விவசாயிகளுக்கு கிணறுகள் அமைக்கும் இடத்தை தேர்வு செய்திட, வேளாண் பொறியியல் துறையில் 22 நீர் ஆய்வுக் கருவிகளும், 3 மின்னனுக் கருவிகளும் உள்ளன. ஆழ்துளைக் கருவிகள், கைத்துளைக் கருவிகள், பாறை வெடிக் கருவிகள், நீள்துளைக் கருவிகள், காற்றமுத்தக் கருவிகள் போன்றவை விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் புதிதாக குழாய்க் கிணறு அமைக்கவும், திறந்த வெளிக் கிணற்றில் பக்கவாட்டில் துளையிட்டு புதுப்பிக்கவும் வழங்கப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறை சிறுபாசனக் கருவிகளைப் பராமரித்து, விவசாயிகளுக்குத் தேவைப்படும் காலங்களில் வழங்கி உதவுகிறது.

**சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனங்கள்**

கிணற்றுப் பாசனத்தில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறைகள் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. கிணற்றுப் பாசனப் பரப்பு சீராக கூடுதலாகிக் கொண்டுள்ளது. மொத்த பாசனப் பரப்பில் கிணற்றுப் பாசனம் 48 விழுக்காடு உள்ளது. 57 விழுக்காடு நிலங்களில் இரண்டாம் முறையாக கிணறுகள் மூலமாகவே பாசனம் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் 1.45 இலட்சம் குழாய்க் கிணறுகளும் 16.37 இலட்சம் திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. சாதாரண பாசனத்தின் மூலம் ஏற்படக்கூடிய நீர் இழப்பு மற்றும் நீர் உபயோகத் திறன் இழப்பு, ஆகியன சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன வாயிலாக



2002 ஏப்ரல் 22]

குறிப்பிடத்தக்க வகையில் நீரின் இழப்பு குறைந்துள்ளன. தமிழ்நாட்டில் 1986 ஆம் ஆண்டில் சிக்கன நீர்ப் பாசன முறையில் பயனடைந்து வந்த நிலப் பரப்பு 294.45 எக்டேர் மட்டுமே. ஆனால் 2001-ல் 56,649 எக்டேராக இது உயர்ந்துள்ளது.

**வேளாண்மையில் இயந்திரம்**

விவசாயத்திற்கு கொண்டுவரப்படாத நிலங்களை விளை நிலங்களாக மாற்ற, விவசாயிகளுக்கு உழுவைப் பணிகளை மேற்கொள்ள உழுவை சாதனங்கள், கருவிகள் மற்றும் கதிரடிக்கும் கருவியைத் தந்து வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது. இம்மாதிரியான நிலங்களை விளை நிலங்களாக மாற்ற 122 மண் தள்ளும் இயந்திரங்கள், மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன. இது தவிர 122 உழுவை இயந்திரங்கள், நான்கு கதிரடிக்கும் கருவிகள் உழுவை மற்றும் மற்ற பணிகளுக்காகத் தேவையான கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன.

**கண்ணால் காண்பதே நம்பிக்கையூட்டும்**

நவீனமயமாக்கப்பட்டுள்ள வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் விளம்பரப்படுத்தி, பிரசித்தியடையச் செய்ய, வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் பதனிடும் பிரிவு, பண்ணை இயந்திரப் பிரிவு, மண்டல ஆராய்ச்சி மையம், உழுவை மற்றும் வேளாண் கருவிகள் உற்பத்தியாளர் இவர்களுடன் கூட்டாக நான்கு விவசாயிகள் விழிப்புணர்வு முகாமை வேளாண்மைப் பொறியியல் துறை நடத்தியுள்ளது. இவை விவசாயிகள் மத்தியில் பண்ணை இயந்திரப் பயன் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்று 2002-2003 நிதியாண்டில் 150 ஒன்றிய மையங்களில் விழிப்புணர்வு முகாமை வேளாண்மைப் பொறியியல் துறை ஏற்பாடு செய்து, மத்திய அரசு திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகள் மத்தியில் பண்ணை இயந்திரங்களை (Farm Mechanisation) அறிமுகப்படுத்த உள்ளது. துறையின் செயல்திட்டங்களின் தொகுப்பு அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 22

## வேளாண்மைப் பொறியியல் துறை திட்ட செயலாக்கத்தின் ஒரு கண்ணோட்டம்

செயல்-பரப்பு எக்டேரில் நிதி - ரூபாய் இலட்சத்தில்

| வ. எண் | திட்டங்கள் | அலகு | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | **அ. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :** | | | | |
| 1 | சமவெளிப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு | செயல் | 50000 | 82043 | 50000.00 |
| | | நிதி | 1475.36 | 1172.79 | |
| 2 | பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு | செயல் | 602 | 646 | 600 |
| | | நிதி | 92.90 | 92.90 | 92.90 |
| 3 | வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு | செயல் | 4502 | 4473 | 2000 |
| | | நிதி | 622.76 | 547.06 | 320.00 |
| 4 | மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு | செயல் | 3797 | 3904 | 3717.00 |
| | | நிதி | 346.08 | 330.34 | 355.59 |
| 5 | மலைப்பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு | செயல் | 6335 | - | - |
| | | நிதி | 326.56 | 20.95 | 352.88 |



2002 ஏப்ரல் 22]

ஆ. பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் :

காவிரி, பரம்பிகுளம், ஆழியார், கோதையார்-சித்தார் பட்டணங்கால், தாமிரபரணி, கிருஷ்ணகிரி, தொப்பையாறு மற்றும் பாலாறு பொறந்தலாறு திட்டங்களில் பாசனப் பகுதி மேன்மைத திட்டம்.

| வ. எண் | திட்டங்கள் | அலகு | 2001-2002 இலக்கு | 2001-2002 சாதனை | 2002-2003 இலக்கு |
|---|---|---|---|---|---|
| 1 | பண்ணை மேம்பாட்டுப் பணிகள் | செயல் | 43250 | 41864.37 | 56.510 |
| | | நிதி | 3912.03 | .. | 4202.55 |
| 2 | சுழற்சி முறைப் பாசனம் | செயல் | 99700 | 100416.38 | 116.550 |
| | | நிதி | 299.1 | 291.85 | 349.65 |
| | **இ. நுண்ணிய நீர்ப் பாசனம்** | | | | |
| | சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனங்கள் | செயல் | 6550 | 18,570 | 18.000 |
| | | நிதி | 1798.25 | 1393.53 | 1978.25 |
| | **ஈ. வேளாண்மையில் இயந்திரங்கள் :** | | | | |
| | அ. மண்தள்ளும் இயந்திரம், உழுவை இயந்திரம் மற்றும் கதிரடிக்கும் கருவிக்கான வாடகை | | | | |
| | 1. நிலம் சமன் செய்தல் | செயல் | 181000 | 87779 | 185800.00 |
| | 2 இயந்திர சாகுபடி | செயல் | 113200 | 89084 | 113200.00 |
| | ஆ. மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளின் செயல் விளக்கம் | செயல் | .. | .. | 150.00 |
| | உ. சிறு பாசனம் (குழாய் கிணறுகள்) | செயல் | 5000 | .. | 5000 |
| | **ஊ. டானிடா உதவியுடன் விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்** | | | | |
| 1 | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்- திட்டம் 2. | செயல் | 3150 | 3232 | 280.11 |
| | | நிதி | 420.17 | 386.097 | |
| 2 | ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டம் | செயல் | .. | .. | .. |
| | | நிதி | 106.09 | 48.94 | .. |

[2002 ஏப்ரல் 22

## அத்தியாயம் 5

### நீர்வடிப்பகுதி மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழகம் 130 இலட்சம் எக்டேர் நிலம் கொண்டதாகும். இதில் 16.5% காடாகவும் 3.5% வறண்ட நிலமாகவும், 15.1% வேளாண்மை அல்லாத காரணங்களுக்காக பயன்படுத்துதலும், 43.3% வேளாண்மைக்காகவும் பயன்படுகிறது. மீதமுள்ள நிலத்தில் 2.7% பயிரிடத்தக்க தரிசாகவும், 1.2% மேய்ச்சல் தரிசாகவும், 1.8% பல்வேறு வகையான மரப்பயிர்களுக்காகவும், 7.4% தீற்காலிக தரிசாகவும், 8.5% வேறு வகையான தரிசாகவும் உள்ளது. பயிரிடத்தக்க தரிசு, தற்காலிக தரிசு மற்றும் வேறு வகையான தரிசு நிலங்கள் மொத்தம் 18% கொண்டதாகும். இது மொத்த நிலப்பரப்பில் 24 இலட்சம் எக்டேர் ஆகும். இந்நிலங்கள் பயிரிடத்தக்க நிலங்களாக இருப்பினும் நீர் மற்றும் மற்ற வளங்கள் குறைவினால் பயிரிடப்படாமல் இருக்கின்றன. மேற்படி நிலங்கள் போக 40 இலட்சம் எக்டேர் நிலம் மழையை நம்பி ஒரு போகம் விளையக்கூடிய நிலமாக உள்ளது.

மத்திய, மாநில நிதி உதவியுடன் மற்றும் வெளி நிறுவன உதவியுடன் தரிசு மற்றும் மானாவாரி நிலங்கள் நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் மேம்படுத்த தற்போது பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்கள் குறித்த விவரங்கள் அட்டவணை-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் 165360 எக்டேர் நிலங்களை மேம்படுத்துவதற்காக இத்திட்டங்களுக்கு அட்டவணை-II மற்றும் அட்டவணை-III-ல் கண்டவாறு ரூ. 147.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை அணுகுமுறையில் இந்த தரிசு மற்றும் மானாவாரி நிலங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. "நீர்வடிப்பகுதி" என்பது ஒரு சிறிய நிலப்பரப்பில் பெய்யும் நீர், ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் வழியச் செய்யும் நிலப்பரப்பாகும். இந்நீர்வடிப்பகுதிகள் பரப்பளவில் சிறிய மற்றும் பெரிய நீர்வடிப்பகுதிகளாக வேறுபட்டிருக்கும். முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட பகுப்பாய்வில் இருந்து இந்த நிலங்கள் மேம்படுத்தும் பணி ஓர் ஆண்டுக் காலத்தில் செய்து முடிக்க இயலாது என்று தெரியவந்துள்ளது. எனவே நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் தரிசு நில மேம்பாட்டுப்பணி பல்வேறு திட்டங்கள் மூலம் மூன்று முதல் ஐந்தாண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்படுகிறது. முதலாம் ஆண்டு சமுதாய அமைப்பு, பயிற்சி அளித்தல் போன்ற பணிகளும், மண் வளப்பாதுகாப்பு, மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகள் இரண்டாம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 22]

### விரிவான தரிசு நிலத்திட்டம் (மாநில அரசின் நிதி உதவியுடன்)

ஆகஸ்டு 2001-ல் நிதி வரவு செலவு அறிக்கையில், விரிவான தரிசு நிலத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் விளைநிலமாக மாற்றப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் அடுத்த ஐந்தாண்டுகளில் மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பை மையமாகக் கொண்ட சிறிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணுகுமுறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. உயர்ந்த தரம் கொண்ட மழை கிடைக்க வாய்ப்புள்ள தரிசு நிலங்களில் மருந்துச்செடிகள், வாசனை தரும் செடிகள் மற்றும் பழத் தோட்டங்கள் அமைக்க பயன்படுத்தப்படும். சற்று வளம் குறைந்த நடுத்தரம் கொண்ட நிலங்களில் பாரடைஸ் மரம், ஜெட்ரோ போன்ற உண்பதற்காகவும், எரிபொருளாகப் பயன்படும் எண்ணெய் வித்துக்கள் வளர்க்கப் பயன்படும். தரம் குறைந்த தரிசு நிலத்தில் எரிபொருள் தரக்கூடிய சீமைக்கருவேல மரங்களும் மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் சவுக்கு மரங்களும் பயிர் செய்யப்படும். இத்திட்டம் மக்கள் பங்கேற்பு தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும். இதனால் ஐந்தாம் ஆண்டு முடிவில் சுமார் 10 இலட்சம் கிராம மக்கள் பயன் அடைவர்.

மேற்சொன்ன நோக்கத்தை அடைவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது அதன் விவரம் வருமாறு:

(i) நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பங்கேற்பு அணுகுமுறையில் 18.5 இலட்சம் எக்டேர் நிலம் மேம்படுத்தப்பட உள்ளது. இதில் மழை குறைந்த வேளாண்மை மற்றும் பழமரங்கள் உண்டாக்கப்பட உள்ளன.

(ii) கூட்டாண்மை நிறுவனங்கள் (Corporate Sector) மூலம் சொட்டு நீர்/தெளிப்பு நீர் மற்றும் பல வசதிகளுடன் கூடிய பழத்தோட்டங்கள் ஒரு இலட்சம் எக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட உள்ளது.

(iii)0.5 லட்சம் எக்டேர் உவர் மண் கொண்ட நிலங்கள் சீர்செய்து விளை நிலங்களாக மேம்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 1,485 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மிகப்பெரிய அளவில் முதலீடு தேவைப்படுவதால் இத்திட்டத்திற்கு வெளி நிறுவனங்களின் நிதி உதவி தேவைப்படுகிறது.

6. வெளி நிறுவனங்களின் நிதி உதவி பெறுவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகலாம். இதற்கிடையில் மாநில அரசின் நிதி உதவியுடன் சுமார் 56,000 எக்டேர் தரிசு நிலம் உள்ளடக்கிய இரண்டு இலட்சம் எக்டேர் நீர்வடிப்பகுதி நிலத்தில் மேம்பாட்டு பணி ஆரம்பிக்கப்படும். 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ. 25 கோடி அனுமதிக்கப்பட்டது. ஐந்து ஆண்டு காலங்களில் ஒவ்வொரு நீர்வடிப் பகுதியும் மேம்படுத்தப்படும்.

இணைப்பு IV-ல் உள்ளவாறு பத்து மாவட்டங்களில் 28 வட்டங்களில் 55,000 எக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் பொறுப்பில் அமர்த்தப்படுவார். இவர் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையை செயல்படுத்துவார். மேலும் வேளாண் பொறியியல், வேளாண்மை, தோட்டக்கலை, வனம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவார். இத்திட்டத்திற்கானப் பயிற்சிக் கையேடு தயாரிக்கப்பட்டது. அரசு நிறுவனங்களைச் சேர்ந்த திட்டச் செயலாக்க முகமை கண்டறியப்படும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்படும். அவர்கள் விவசாயிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மக்கள் பங்கேற்புடன் நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்வர். முதல்கட்ட நடவடிக்கைகளுக்காக ரூ. 12 கோடி, 10 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 2002 முதல் தேர்வு செய்யப்பட்ட நீர்வடிப்பகுதிகளில் மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணிகளும், மரங்கள் நடும்பணியும் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளன. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தேவைப்படும் வேளாண் காடுகள், தோட்டக்கலை, மற்றும் தீவனப் பயிருக்குத் தேவைப்படும் மரக்கன்று இனங்களை பரிந்துரை செய்துள்ளது. இதன் அடிப்படையில் தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி), தோட்டக்கலை ஆணையர் மற்றும் மாவட்ட அலுவலர்கள் இதுகுறித்து மேலும் ஆலோசனை செய்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவைப்படும் மரக்கன்றுகளின் தேவையை நிர்ணயித்தனர்.

வேளாண் காடுகளுக்குப் பயன்படும் 54 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய ரூ. 1 கோடி வனத் துறைக்கு வழங்கப்பட்டது. 12.63





கோடி பழமரக் கன்றுகள் உற்பத்தி செய்ய தோட்டக்கலைத் துறைக்கு ரூ. 1.50 கோடி வழங்கப்பட்டது. இத்துறைகள் நாற்றங்கால் பண்ணைகளை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாடு முகமையை (TAWDEV) சங்கமாக் பதிவு செய்ய அரசாணை வெளியிடப்பட்டு சங்கப்பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாடு முகமைக்காக முதற்கட்டமாக ரூ.2 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கம் வெளி நிதியுதவியினை ஆதாரமாகப் பெற்று நீர்வடிப் பகுதி திட்டங்களை நிறைவேற்றும்.

2002 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிக்காக ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வஇபதி) 1972-73 முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வடிப் பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவைகளை சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் சீற்றத்தைக் குறைத்தும், நிலவளம் மேலும் சீர்கெடாமல் தவிர்த்தும் அப்பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் கிராம மக்களுக்கு வேளாண்மை சாரா பிற வேலை வாய்ப்புகளைப் பெருக்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. தற்பொழுது இத்திட்டம் 16 மாவட்டங்களில் 80 ஒன்றியங்களில் மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் திருத்திய வழிகாட்டி 2001-ன்படி செயல்படுத்தப்படுகிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படும் மாவட்டங்களின் வரைபடமும், மாவட்டங்கள் மற்றும் ஒன்றியங்களின் பெயர்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கான செலவை 31-3-1999 வரை மைய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்று வந்தன. 1-4-1999 முதல் மைய அரசு மாநில அரசுகளின் பங்கு முறையே 75:25 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 31-3-2000 வரை ஒரு

[2002 ஏப்ரல் 22

எக்டேருக்கான செலவு ரூ.4000 ஆகவும், திட்டக் காலம் நான்காண்டுகளாகவும் இருந்ததை 1-4-2000 முதல் ஒரு எக்டேருக்கான செலவு ரூ.6000 ஆகவும், திட்டக்காலம் ஐந்தாண்டுகளாகவும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

முதல் அணியில் இத்திட்டம் 16 மாவட்டங்களிலுள்ள 80 ஒன்றியங்களில் 297 நீர்வடிப் பகுதிகளில் 1995-96 முதல் 1999-2000 வரை ரூ.5,920.25 இலட்சம் செலவில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் சீர்செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1,48,911 எக்டேர் ஆகும்.

நான்கு, ஐந்து மற்றும் ஏழாம் அணிகளில் ஒப்பளிக்கப்பட்ட நீர்வடிப் பகுதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்ட விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| அணியும் திட்ட காலமும் | நிதிப்பங்கீடு | நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு | 31-3-2002 வரை விடுவிக்கப் பட்ட தொகை | 31-3-2002 வரை செலவு |
|---|---|---|---|---|---|
| நான்காம் அணி (1998-99 முதல் 2001-02 வரை) | 50:50 | 103 | 2060.00 | 1066.00 | 869.70 |
| ஐந்தாம் அணி (1999-2000 முதல் 2002-03 வரை) | 75:25 | 299 | 5980.00 | 2077.00 | 1328.35 |
| ஏழாம் அணி (2001-02 முதல் 2005-06 வரை) | 75:25 | 61 | 1830.00 | 274.50 | மத்திய அரசின் பங்குத் தொகை டிசம்பர் திங்கள் 2001-ல் தான் விடுவிக்கப் பட்டது |
| **மொத்தம்** | | **463** | **9870.00** | **3417.50** | **2198.05** |



2002 ஏப்ரல் 22]

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

நிலைப்படுத்துதல், சமபங்கு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாத்தல் போன்ற பரந்த குறிக்கோள்களைக் கடைப் பிடிக்கும் வாயிலாக, கிராமப் பகுதிகளில் வாழும் மக்களில் குறிப்பாக ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் சமுதாயத்தில் இதர நலிந்தோர்களின் தேவைக்கேற்றவாறு, விறகு, தீவனம், பயிர், மரத்தேவை மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் நிலவள ஆதாரங்கள் துறையின் மானியத்தில், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் இத்திட்டத்திற்கான செலவை ஒரு எக்டேருக்கு ரூ. 4,000 என்ற வீதத்தில் மத்திய அரசு 100 சதவிகித மானியமாக அளித்து வந்தது. 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திட்டச் செலவு ஒரு எக்டேருக்கு ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டு, செலவினங்களை மத்திய அரசும், மாநில அரசும் 11:1 என்ற விகிதாச்சாரத்தில் (ரூ. 5500:500) பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்துவதற்கு 1994-95 முதல் 2000-01 வரை மத்திய அரசு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது:-

**1994-95 - 2000-01** ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | மாவட்டம் | வட்டாரம்/ நீர்வடிப்பகுதி | திட்டப் பரப்பு | திட்ட மதிப்பீடு | 31-3-02 வரை மைய அரசால் விடுவிக்கப் பட்ட தொகை | 31-3-02 வரை செலவழிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை | காளையார்கோவில் | 3073 | 284.73 | 255.39 | 224.52 |
| 2. | ஈரோடு | குதியாலத்தூர் | 4000 | 343.93 | 337.38 | 330.83 |
| 3 | வேலூர் | பொன்னையாறு | 5000 | 296.04 | 278.12 | 295.09 |
| | | **மொத்தம்** | **12073** | **924.70** | **870.89** | **850.44** |

### 1997-98 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. திண்டுக்கல் | சாணார்பட்டி | 5090 | 200.00 | 199.16 | 186.54 |

### 1999-2000 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | வட்டமலைக்கரை | 9058 | 362.32 | 157.82 | 121.06 |
| 2 சேலம் | ஆலத்தூர் | 5000 | 200.00 | 89.15 | 34.11 |
| 3 நாமக்கல் | சேந்தமங்கலம் | 5105 | 204.20 | 91.23 | 15.52 |
| 4 தேனி | வைகை, மஞ்சளாறு, சுருளியாறு | 5156 | 206.24 | 92.71 | 58.95 |
| 5. கரூர் | கடவூர் | 11606 | 464.24 | 206.45 | 32.54 |
| 6. விருதுநகர் | வெம்பக்கோட்டை | 5300 | 212.00 | 94.57 | 13.32 |
| 7. இராமநாதபுரம் | நயினார் கோயில் | 5060 | 202.04 | 50.60 | - |
| 8. திருநெல்வேலி | நாங்குநேரி, இராதாபுரம் | 10000 | 400.00 | 60.00 | 50.71 |
| 9. கடலூர் | காருலர் | 5580 | 223.20 | 54.86 | 47.73 |
| | **மொத்தம்** | **61865** | **2474.24** | **897.39** | **373.94** |

**2000-01 ஆம் ஆண்டில் மத்திய அரசு 9 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-**

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டம் | மானாவாரி நீர்வடிப்பகுதி | திட்டப் பரப்பு | திட்ட மதிப்பீடு | 31-3-02 வரை மைய அரசால் விடுவிக்கப் பட்ட தொகை. | 31-3-02 வரை செலவழிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. மதுரை | அலங்காநல்லூர் | 5100 | 306.00 | 42.00 | - |
| 2 பெரம்பலூர் | பெரம்பலூர், அரியலூர் திருமானூர், செந்துறை | 10000 | 600.00 | 82.50 | 1.19 |
| 3 திருச்சிராப் பள்ளி | தாத்தையங்கார் பேட்டை | 12100 | 726.00 | 99.83 | 5.36 |
| 4 புதுக்கோட்டை | அறந்தாங்கி | 11684 | 701.10 | 96.46 | - |
| 5. தருமபுரி | அரூர் | 9500 | 570.00 | 78.38 | 9.68 |
| 6 ஈரோடு-2 | மூலனூர், தாளவாடி | 5529 | 331.74 | 45.61 | 0.80 |
| 7. சிவகங்கை-2 | சிவகங்கை, மானாமதுரை, திருப்புவனம். | 10000 | 600.00 | 82.50 | 10.58 |
| 8. திண்டுக்கல்-2 | வேடசந்தூர் | 10045 | 602.70 | 123.05 | 73.28 |
| 9. தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திருச்செந்தூர் | 7500 | 450.00 | 61.88 | 3.26 |
| | **மொத்தம்** | **81458** | **4887.54** | **712.21** | **104.15** |



2001-2002 ஆம் ஆண்டு மேற்படி ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தேனி, கரூர், நாமக்கல், திண்டுக்கல், கோயம்புத்தூர், தருமபுரி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 49,112 எக்டேர் நிலத்தை ரூ. 2.950.05 இலட்சத்தில் மேம்பாடு செய்ய மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டது. மத்திய அரசு விதித்துள்ள தரத்தின்படி மேற்படி கருத்துருக்களுக்கு திருத்திய கருத்துருவைத் தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி தேனி, கரூர், திண்டுக்கல், கோயம்புத்தூர், தருமபுரி, இராமநாதபுரம், விழுப்புரம், வேலூர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 65,943.34 எக்டேர் நிலத்திற்கு ரூ. 3577.55 இலட்சத்தில் மேற்படி கருத்துருவை திருத்தம் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இதுவரை கரூர், நாமக்கல், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள நான்கு திட்டங்களுக்கு ரூ. 1400.18 இலட்சம் செலவில் 23,343 எக்டேர் நிலப்பரப்பை மேம்படுத்த ஒப்புதல் அளித்து முதல் தவணையாக ரூ.96.13 இலட்சம் மேற்படி நான்கு மாவட்டங்களுக்கு விடுவித்துள்ளது.

### தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசினர் நிதியுதவியோடு 1990-91 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இரு முக்கிய நோக்கங்களாக உற்பத்தியை நீடித்து நிலை நிறுத்தலும், சுற்றுச் சூழலை சமப்படுத்துவதாகும். தமிழ்நாட்டில் 84 நீர்வடிப் பகுதிகளில் கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

திட்ட மொத்த மதிப்பீட்டில் 90 விழுக்காடு மத்திய அரசு பங்காகவும், 10 விழுக்காடு மாநில அரசுப் பங்காகவும் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. நடப்பாண்டு 2001-2002-க்கு அனுமதிக்கப்பட்ட

[2002 ஏப்ரல் 22

தொகை ரூ.17.19 இலட்சத்துடன் கடந்த ஆண்டு செலவாகாமல் நிலுவையில் இருந்த தொகை ரூ. 450.952 இலட்சத்தையும் சேர்த்து ரூ.2169.992 இலட்சம் திட்டச் செயலாக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2001-2002 ஆம் ஆண்டு தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் திருத்தப்பட்ட 'வாராசா' (WARASA) நெறிமுறைப்படி திறமை ஊக்குவிப்பு நிலையை அதிகரிக்க 9 முன்னோடி நீர்வடிப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் கந்திலி, திருச்செங்கோடு, அந்தியூர், வத்தலகுண்டு, கடையம்பட்டி, வேப்பூர், கிருஷ்ணகிரி, காரமடை மற்றும் சாக்கோட்டை. மேற்படி திட்டத்திற்கு, இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் உதவி வேளாண்மை இயக்குநர்களுக்கு ஐதராபாத்திலுள்ள, மேனேஜ் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டது. 'மாநில நீர்வடிப் பகுதி குழு', 'மாவட்ட நீர்வடிப் பகுதிக் குழு' மற்றும் மாவட்ட இணைப்பு முகமை' ஆகியவை அரசு ஆணை (வே.துறை) 105, நாள் 15-4-02-படி அறிவிக்கப்பட்டு, 2002-2003-ல் புதிய நெறிமுறைப்படி நீர்வடிப்பகுதியை தேர்வு செய்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயலாக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2002-03 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணிகள் விவரம் | 2001-02ஆம் ஆண்டு இலக்கு | 2001-02ஆம் ஆண்டு சாதனை (31-3-2002 முடிய) |
|---|---|---|---|
| 1 | அடிப்படைச் செயல்பாடுகள் | 635.257 | 549.014 |
| 2 | சாகுபடிக்குகந்த நிலச் செயல்பாடுகள் | 312.166 | 297.326 |
| 3 | வீட்டுத் தோட்டங்கள் | 14.969 | 19.086 |
| 4 | வீடுகளில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | 129.330 | 136.707 |
| 5 | சாகுபடிக்கு ஒவ்வாத நிலச் செயல்பாடுகள் | 176.819 | 157.144 |
| 6 | வடிகால்களின் மேம்பாடு | 357.077 | 329.502 |
| 7 | கால்நடை பராமரிப்புப் பணிகள் | 93.382 | 88.226 |
| | மொத்தம் | **1719.000** | **1577.005** |



2002 ஏப்ரல் 22]

## அட்டவணை I

### தரிசு நிலம் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | மொத்த வட்டாரங்களின் எண்ணிக்கை | திட்டவாரியாக வட்டாரங்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வஇபதி | தேமா.நீ. பதி | ஒ.த.நி. மே.தி. | மே.வி.ம. வி.நி.த. இமேதி | மா.வளர் க.தும நிதி | மாநில நிதி த.நி. திட்டமேதி |
| 1 | தருமபுரி | 18 | 14 | 4 | 1 | | 12 | .. |
| 2 | சிவகங்கை | 12 | 7 | 3 | 3 | | .. | .. |
| 3 | தூத்துக்குடி | 12 | 8 | .. | 2 | | 6 | .. |
| 4 | வேலூர் | 20 | 6 | 9 | 2 | | 14 | 3 |
| 5 | திண்டுக்கல் | 14 | 3 | 8 | 2 | | 14 | 2 |
| 6 | பெரம்பலூர் | 4 | 2 | 7 | 1 | | 2 | .. |
| 7 | புதுக்கோட்டை | 13 | 4 | 1 | 1 | | 1 | 2 |
| 8 | சேலம் | 20 | 5 | 7 | 1 | | 10 | 3 |
| 9 | திருவண்ணாமலை | 18 | 1 | 9 | .. | | 10 | 2 |
| 10 | ஈரோடு | 20 | .. | 7 | 3 | | 2 | .. |
| 11 | கோயம்புத்தூர் | 19 | 5 | 4 | 2 | | 2 | .. |
| 12 | நாமக்கல் | 15 | 3 | 7 | 1 | | 2 | 4 |
| 13 | கரூர் | 8 | 2 | 5 | 1 | | 2 | .. |
| 14 | மதுரை | 13 | .. | 2 | 1 | | 6 | .. |
| 15 | இராமநாதபுரம் | 11 | 7 | .. | 1 | 7 | . | 1 |
| 16 | விருதுநகர் | 11 | 7 | 1 | 1 | | 2 | .. |
| 17 | அரியலூர் | 6 | 4 | .. | 2 | | .. | .. |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 1 | 4 | 2 | | 7 | 4 |
| 19 | திருநெல்வேலி | 19 | 1 | 2 | 2 | 12 | 3 | 4 |
| 20 | காஞ்சிபுரம் | 13 | .. | .. | .. | | .. | .. |
| 21 | விழுப்புரம் | 22 | .. | 2 | .. | | 6 | .. |
| 22 | திருவள்ளூர் | 14 | .. | .. | .. | | 3 | .. |
| 23 | தஞ்சாவூர் | 14 | .. | .. | .. | | .. | .. |
| 24 | கடலூர் | 13 | .. | 1 | 1 | | 4 | .. |
| 25 | தேனி | 8 | .. | 1 | 1 | | 5 | 3 |
| 26 | சென்னை | 0 | .. | .. | .. | | .. | .. |
| 27 | நாகப்பட்டினம் | 11 | .. | .. | .. | | .. | |
| 28 | கன்னியாகுமரி | 9 | .. | .. | .. | | 2 | .. |
| 29 | நீலகிரி | 4 | .. | .. | .. | | 1 | .. |
| 30 | திருவாரூர் | 10 | .. | .. | .. | | .. | .. |
| | மொத்தம் | **385** | **80** | **84** | **31** | **19** | **116** | **28** |

## அட்டவணை II

### 2001-2002 ஆம் ஆண்டில் தரிசு நிலம் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவி

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | டேனிடா மற்றும் ஜப்பான உதவிகள் | மொத்தம் | நிதி ஆதாரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | [illegible] | 864.875 | 410.125 | - | 1275.000 | மைய அரசு மற்றும் மாநில அரசு 75:25 (1-4-99 முதல்) |
| 2 | [illegible] | 743.00 | .. | - | 743.00 | மைய அரசு 100 விழுக்காடு 1-4-2000 முதல் மைய மாநில அரசுகளின் பங்கு முறையே 11:1 |
| 3 | [illegible] | 1419.304 | 157.7 | - | 1577.005 | மைய அரசு மற்றும் மாநில அரசு 90:10 |
| 4. | [illegible] பகுதி-1 |  | 194.644 | 247.728 | 442.372 | டேனிடா மற்றும் மாநில அரசு |
|  | பகுதி-2 |  | 7.915 | 27.304 | 35.219 |  |
| 5. | [illegible] |  | 820.00 | 7380.00 | 8200.00 | ஜப்பான் நாட்டு உதவிகள் மற்றும் மாநில அரசு 90:10 |
| 6 | [illegible] | .. | 2500.000 |  | - 2500.000 | மாநில அரசு 100 விழுக்காடு |
|  |  | **3027.179** | **4090 384** | **7655.032** | **14772.595** |  |

## அட்டவணை III





### 2001-2002 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2001-2002 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பு (எக்டேரில்) |
|---|---|---|
| 1 | மைய அரசின் உதவியுடன் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம். | 29588 |
| 2 | ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 12383 |
| 3 | தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி திட்டம் | 44485 |
| 4 | வெளிநாட்டு உதவி விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 3654 |
| 5 | மரம் வளர்ப்புத் திட்டம் (விவசாயத் துறையால் செயலாக்கப்படுவது) | 75250 |
|  | மொத்தப் பரப்பு | **1,65,360** |

## அட்டவணை IV

### 2001 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்ட நீர் வடிப்பகுதிகள்

(பரப்பு எக்டேரில்)

| வ. எண் | மாவட்டம் | வட்டம் | கிராமத்தின் பரப்பு எண்ணிக் கையில் | நீர்வடிப் பகுதி பரப்பு | தரிசு நிலம் தோரா யமாக | பயிர்செய்ய உத்தேசித் துள்ள நிலப்பரப்பு |
|---|---|---|---|---|---|---|
|  | சேலம் | 1. தாரமங்கலம் | 37 | 7704 | 2262 |  |
|  |  | 2. ஓமலூர் | 39 | 5877 | 2731 |  |
|  |  | 3. குளத்தூர் | 34 | 19853 | 5331 |  |
|  |  | துணைகூட்டல் | 110 | 33434 | 10524 | 7000 |
| 2. | நாமக்கல் | 1. நாமக்கல் | 6 | 5865 | 1527 |  |
|  |  | 2. மோகனூர் | 7 | 5178 | 1493 |  |
|  |  | 3. எருமைப்பட்டி | 6 | 3074 | 1425 |  |
|  |  | 4. பாரமதி | 6 | 5454 | 1312 |  |
|  |  | துணைகூட்டல் | 25 | 19571 | 5757 | 5000 |

[2002 ஏப்ரல் 22

(பரப்பு எக்டேரில்)

| வ. எண் மாவட்டம் | வட்டம் | கிராமத்தின் பரப்பு எண்ணிக்கையில் | நீர்வடிப் பகுதி பரப்பு | தரிசு நிலம் தோராயமாக | பயிர்செய்ய உத்தேசித்துள்ள நிலப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| 3. வேலூர் | 1. காவேரிப்பாக்கம் | 15 | 9722 | 5082 | |
| | 2. நெமிலி | 3 | 2516 | 1722 | |
| | 3. பேராணாம்பேட் | 20 | 10827 | 4117 | |
| | துணைக்கூட்டல் | 38 | 23065 | 10921 | 6000 |
| 4. புதுக்கோட்டை | 1. பொன்னமராவதி | 19 | 8586 | 2525 | |
| | 2. அன்னவாசல் | 22 | 11992 | 2524 | |
| | துணைக்கூட்டல் | 41 | 20578 | 5049 | 4500 |
| 5. திருச்சிராப்பள்ளி | 1. வையம்பட்டி | 7 | 7261 | 1751 | |
| | 2. மணப்பாறை | 6 | 4607 | 1784 | |
| | 3. மருங்காபுரி | 7 | 4348 | 1209 | |
| | 4. தொட்டியம் | 9 | 8203 | 2318 | |
| | துணைக்கூட்டல் | 29 | 24419 | 7056 | 6500 |
| 6. இராமநாதபுரம் | 1. கமுதி | 24 | 10501 | 3159 | |
| | துணைக்கூட்டல் | 24 | 10501 | 3159 | 2500 |
| 7. திருநெல்வேலி | 1. பாளையங்கோட்டை | 12 | 6730 | 2000 | |
| | 2. மானூர் | 13 | 12784 | 3700 | |
| | 3. மேலநீலிதநல்லூர் | 9 | 9650 | 2470 | |
| | 4. ஆலங்குளம் | 6 | 4476 | 2020 | |
| | துணைக்கூட்டல் | 40 | 33640 | 10190 | 8000 |
| 8. திண்டுக்கல் | 1. நிலக்கோட்டை | 4 | 6033 | 2551 | |
| | 2. தொப்பம்பட்டி | 5 | 7505 | 2607 | |
| | துணைக்கூட்டல் | 9 | 13538 | 5158 | 4500 |
| 9. தேனி | 1. ஆண்டிப்பட்டி | 7 | 6706 | 1380 | |
| | 2. பெரியகுளம் | 4 | 3655 | 1380 | |
| | 3. மயிலாடும்பாறை | 3 | 1668 | 840 | |
| | துணைக்கூட்டல் | 14 | 12029 | 3600 | 3500 |
| 10 திருவண்ணாமலை | 1. தண்டராம்பட்டு | 16 | 15267 | 6060 | |
| | 2. ஆரணி | 14 | 10520 | 54626 | |
| | துணைக்கூட்டல் | 30 | 25787 | 11521 | 7500 |
| 10 மாவட்டங்கள் | 28 வட்டங்கள் | 360 | 216562 | 72935 | 55000 |



2002 ஏப்ரல் 22]

## அத்தியாயம்-6

### வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971-ல் ஆரம்பிக்கப்பட்டது. வேளாண் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்து, பண்ணை விளைச்சலையும், நாட்டின் வேளாண் உற்பத்தியையும் பெருக்குவதே வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மிகவும் சீரிய முறையில் செய்து வருகின்றது. இப்பல்கலைக் கழகத்தின் பணிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**கல்வி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 10 கல்லூரிகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - கோவை, மதுரை, கிள்ளிகுளம், திருச்சிராப்பள்ளி

வேளாண்மைப் பொறியியல் கல்லூரி - கோவை மற்றும் குமுளூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - கோவை மற்றும் பெரியகுளம்

வன இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மேட்டுப்பாளையம்

மனை இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மதுரை

வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், வேளாண்மைப் பொறியியல், மனையியல் மற்றும் உணவுப் பொருள் பதஞ்செய்தல் நுட்பம் ஆகியவற்றில் இளமறிவியல் பட்டப்படிப்பும், மேலும் 22 துறைகளில் மூதறிவியல் பட்டப்படிப்பும், 20 துறைகளில் முனைவர் ஆராய்ச்சிப் படிப்பும் இப்பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது.

[2002 ஏப்ரல் 22

இளமறிவியல் பட்டப்படிப்பில் 440 மாணவர்களும், மூதறிவியல் பட்டப்படிப்பில் 342 மாணவர்களும், முனைவர் பட்டப்படிப்பில் 148 மாணவர்களும், 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். மொத்த மாணவர்களில் 46 விழுக்காடு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர் சேர்க்கையில் அனைத்திந்திய போட்டித் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு இளமறிவியல் பட்டப்படிப்பில் 10 விழுக்காடு இடமும் மூதறிவியல் பட்டப்படிப்பில் 15 விழுக்காடு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இளமறிவியல் பட்டப்படிப்பு மாணவர்கள் கிராமப்புற உண்மை நிலைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அவர்கள் 3 மாத காலத்திற்கு கிராமத்திலேயே ஊரகச் செயல் அலுவலகக் கல்வி பெற்று வருகிறார்கள். வேளாண்மைத் தொழில் பற்றிய சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, மாணவர்கள் நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வேளாண்மையைச் சார்ந்த தொழிற்சாலைகளில் இருவாரங்கள் அனுபவ ரீதியில் பயின்று வருகின்றனர். மாணவர்களின் செயல் திறமையை மேம்படுத்தி "வணிக வேளாண்மை" என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு அதில் அவர்கள் விருப்பப்படும் பிரிவில் செயலாற்றுவதே உண்மையானது என்ற நறிக்கோளுடன் ஓர் அரையாண்டு செய்தொழில் பயிற்சி பெற்று திறமையினை வளர்த்துக் கொள்கின்றனர்.

அகில இந்திய அளவிலான இளநிலை கல்வி நிதிக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினால் நடத்தப்பட்ட தேர்வில் 2001-2002 ஆம ஆண்டு இப் பல்கலைக்கழக மாணவர்கள் 55 பேர் இளநிலைக் கல்வி உதவி பெற்றும், 77 மாணவர்கள் இடங்களைப் பெறும் மேற்படிப்புத் தொடர தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**வேளாண்மை ஆராய்ச்சி**

இப் பல்கலைக்கழகத்தின் ஒரு முக்கியப் பணி வேளாண்மை ஆராய்ச்சியாகும். பல்வேறுபட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை, அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள்:



2002 ஏப்ரல் 22]

| நிதி உதவி வழங்குவோர் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| இந்திய அரசு | 37 | 629 |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | 170 | 2,091 |
| மாநில அரசு நிறுவனங்கள் | 45 | 261 |
| தனியார் நிறுவனங்கள் | 24 | 362 |
| அயல்நாட்டு நிறுவனங்கள் | 160 | 2,100 |
| இதர நிறுவனங்கள் | 30 | 371 |

இந்திய வேளாண்மை தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் சுமார் 15.67 கோடி ரூபாய் நிதியுதவியில் 67 திட்டங்களை இப்பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கடின உழைப்பால் இவ்வாண்டு (2002) பொங்கல் பரிசாக 11 புதிய பயிர் இரகங்களும், 6 பண்ணைக் கருவிகளும் வெளியிடப்பட்டுள்ளன. நெல்லில் ஆடுதுறை (ஆர்) 46 மற்றும் டிகேஎம். (ஆர்) 12, வீரிய ஒட்டு மக்காச்சோளத்தில் கோஎச் (எம்) 4, காராமணியில் கோ(சிபி) 7, நிலக்கடலையில் கோ (ஜி.என்) 5, தென்னையில் ஏஎல் ஆர்(சிஎன்)1, பிரெஞ்சு அவரையில் ஊட்டி (எஃப்பி) 2, கத்தரியில் பிபிஐ(பி)1, மரவள்ளியில் கோ(டிபி) 4, கொத்தமல்லியில் கோ(சிஆர்) 4, மற்றும் ஊட்டி (பிஎம்) 2 என்ற மொட்டுக் காளானும், மேலும் வேளாண் மக்களின் வேலைப்பளுவைக் குறைத்து பணியை எளிதில் செய்ய ஆறு புதிய வேளாண் கருவிகளான பேராக்கலப்பை, குத்து விதைப்பு இணைப்புக் கருவி, புல் சீரமைக்கும் இயந்திரம், எளிதாகத் தூக்கிச் செல்லக்கூடிய காற்றாடி, சாண எரிவாயு, குஞ்சு வளர்க்கும் கருவி மற்றும் நெல் உமி வெப்ப எரிவாயுக் கலன் உருவாக்கப்பட்டன. மேற்படி பயிர் இரகங்களும் வேளாண் கருவிகளும் பொங்கல் பரிசாக ஜனவரி 6, 2002-ல் தமிழ்நாடு உழவர் பெருமக்களின் நலனுக்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

நெல் உற்பத்தியைப் பெருக்கிட வீரிய ஒட்டு நெல் இரகங்கள் உருவாக்கும் ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வீரிய ஒட்டு நெல் விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்காக கோவை வீரிய ஒட்டு நெல் 2 மற்றும் ஆடுதுறை வீரிய ஒட்டு நெல் 1 ஒட்டு நெல் விதைகள் 125 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் ஒட்டு வீரிய விதை நெல் உற்பத்திக்கு ஏற்ற இடங்கள் என அறியப்பட்டுள்ளன.

53-106—18

[2002 ஏப்ரல் 22

கரும்பில் சிகப்பு அழுகல் நோய் அதிக சேதத்தை விளைவித்து வருகிறது. இந்நோயைத் தாங்கி வளரக்கூடிய உயர் விளைச்சல் கரும்பு இரகங்களைக் கண்டுபிடிப்பதற்காக ரூபாய் 2.7 கோடி செலவில் தமிழ்நாடு அரசின் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது.

தென்னையில் சிலந்திப் பூச்சியின் தாக்குதலைத் தவிர்க்க ஒரு சீரிய ஆராய்ச்சி வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, ஒருங்கிணைந்த கட்டுப்பாடு முறை மற்றும் உயிர் பூச்சிக்கொல்லி என்ற ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நவைக்கேற்ப, தேவையான அளவு, தேவைப்பட்ட உரங்களை பயிர்களுக்குத் தேவையான நேரத்தில் இடுவதற்காக ஒருங்கிணைந்த பயிர் ஊட்டச் சத்துக்கள் இடும் முறைகளை இப்பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. உயிர் உரங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நம் விளைநிலங்களில் மூன்றில் இரண்டு பங்கு, மானாவாரியாக இருந்து வருகின்றது. ஆதலின் மானாவாரி சாகுபடிக்குச் சம்பந்தமான ஆராய்ச்சிகள் அருப்புக்கோட்டையிலும், கோவில்பட்டியிலும் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன. மானாவாரிக்கு ஏற்ற பருத்தி, பயறு, சிறுதானியங்கள், தோட்டக்கலைப் பயிர்கள், மரச்செடிகள் ஆகியவற்றில் புதிய இரகங்கள் கண்டுபிடிப்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மழை நீர் சேமிப்பு மற்றும் திறம்பட உபயோகிக்கும் முறை, ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் புதிய பயிர்களை சாகுபடிக்கு அறிமுகப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்கள் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் நீர் நிர்வாகம், நீர்ப்பாசன முறை, மண் மற்றும் ஈரம் காத்தல் போன்ற ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

உயிர் நுட்ப ஆராய்ச்சிகள் மூலம் மரபணு மாற்றி நோய், பூச்சிகள் தாக்காத இரகங்கள் கண்டுபிடிப்பில் முனைந்துள்ளது. வாழைக்கன்றுகள், கரும்புக்கன்றுகள் ஆகியவை திசு வளர்ப்பு மூலம் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பயிர் சாகுபடிச் செலவுகள், விளைபொருள் விற்பனை, உள்ளீட்டுப் பொருட்களின் விற்பனை, வேளாண் சார்புத் தொழில் நிர்வாகம் பற்றிய பல ஆராய்ச்சிகளும் நடந்துவருகின்றன.

தோட்டக்கலைப் பயிர்களில் ஆராய்ச்சிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் சாகுபடி செய்வதன் மூலம் உற்பத்தியை உயர்த்திடலாம்.



2002 ஏப்ரல் 22]

மூலிகைச் செடிகள் பூங்காக்கள் ஏற்காடு, கோவை மற்றும் பெரியகுளம் போன்ற இடங்களில் திறக்கப்பட்டு, மூலிகைப் பயிர்கள் மற்றும் அதுசம்பந்தப்பட்ட பொருட்களின் ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் வனச் செல்வங்களைப் பெருக்கவும், பாதுகாக்கவும், வன ஆராய்ச்சிகள் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் சீரிய முறையில் நடந்து வருகின்றது. சவுக்கு, தைலமரம், தேக்கு மற்றும் பாரடைஸ் மரம் போன்ற மரங்கள் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைத் தந்து வருகின்றது. நீர்பிடிப்புப் பகுதி மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வேளாண்மைக் கல்லூரிகளின் ஆய்வுகளின் முடிவுகள் உறுதுணையாக உள்ளன.

கோவை மற்றும் குமுளூரில் உள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரையில் 109 பண்ணைக் கருவிகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்கருவிகளுக்கு விவசாயிகளிடையே தற்சமயம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

**வல்லுநர் விதை உற்பத்தி**

விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் இரக விதைகள் தட்டுத் தடங்கலின்றி கிடைக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அரசு வேளாண்மைத் துறையுடன் சேர்ந்து, விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. வல்லுநர் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வ. எண் | பயிர் | உற்பத்திக் குறியீடு 2001-2002 | | | விநியோகம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | துறை | தனியார் | மொத்தம் | துறை | தனியார் | மொத்தம் |
| 1 | நெல் | 25,800 | 37,400 | 63,200 | 27,024 | 51,095 | 78,119 |
| 2 | சிறுதானியங்கள் | 142 | 115 | 257 | 304 | 173 | 477 |
| 3 | பயறு வகைகள் | 11,671 | 1,450 | 13,121 | 12,036 | 2,188 | 14,224 |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 88,784 | 15,550 | 1,04,344 | 85,933 | 17,082 | 1,03,015 |
| 5 | பருத்தி | 638 | 210 | 848 | 567 | 325 | 892 |
| 6 | கால்நடைப் பயிர்கள் | 16 | 105 | 121 | 16 | 105 | 121 |
| 7 | காய்கறிப் பயிர்கள் | 70 | 430 | 500 | 81 | 522 | 603 |
| | **மொத்தம்** | **1,27,121** | **55,260** | **1,82,391** | **1,25,961** | **71,490** | **1,97,451** |

**வேளாண்மை விரிவாக்கம்**

வேளாண் கல்வி மற்றும் ஆய்வுகள் மூலம் வெளிவரும் கண்டுபிடிப்புகள் விவசாயிகளிடம் சென்றடையவும், வேளாண்மைத் துறையின் மூலம் உழவர்களுக்குச் சென்றடையச் செய்யவும் இப்பல்கலைக்கழகத்தின் வேளாண் விரிவாக்க கல்வி இயக்ககம் மிகவும் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது. ஒரு தகவல் தொடர்பு மையம், 8 வேளாண் அறிவியல் நிலையங்கள், 5 பயிர் மருத்துவ மையங்கள், ஒரு பயிற்சி மையம் ஆகியவை இந்த இயக்ககத்தின்கீழ் வேளாண் விரிவாக்கப் பணிகளை தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் செயல்படுத்துகிறது.

வானொலிப் பள்ளி, தொடர்தூரக் கல்வி, கேள்காண் நாடாப் பாடங்கள் தயாரித்தல், உழவர்களுக்கும், வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், உழவர் தின விழா மற்றும் கிராமக் கூட்டங்கள் நடத்துதல், ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல், உழவர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளைக் கூறுதல் மற்றும் சில விரிவாக்கப் பணிகளை இந்த இயக்ககம் மேற்கொண்டு வருகிறது.

இதுவரையில் 36 கேள்காண் நாடாக்கள், 4 வானொலிப் பாடங்கள் மற்றும் 8 பாடத்திட்டங்கள் தொலைதூரக் கல்வி மூலம் கற்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 684 பயிற்சிகள், 465 செயல் விளக்கங்கள், 194 கிராமக் கூட்டங்கள், 1,490 தொழில் நுட்ப ஆலோசனைகள், 93 கருத்துக் காட்சிகள் மற்றும் 78 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் தொழில்நுட்பச் செய்திகள் ஒலிபரப்பப்பட்டன.

**ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். வேளாண்மையில் புதிய தொழில்நுட்பங்களை உழவர்கள் ஒருங்கிணைந்து கடைப்பிடிப்பதன் வாயிலாகக் கிராமங்களை முன்னேற்றமடையச் செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற மையங்கள் ஒவ்வொன்றும் இரண்டு கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டன. இதுவரை 125 கிராமங்கள் பல்கலைக்கழகத்தின் வாயிலாக ஏற்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உழவர் தின விழா மற்றும் வேளாண் கருத்தரங்கு**

மாநில அளவிலான உழவர் தின விழா மற்றும் வேளாண் கருத்தரங்கு 2002 ஜனவரி மாதம் 3-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை கோயம்புத்தூரில்



உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இதில் இப்பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் பல்வேறு துறைகள், தமிழக அரசின் வேளாண்மை மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகளான புதிய பயிர் வகைகளையும், வேளாண் கருவிகளையும் ஜனவரி 6-ல் வெளியிட்டார்கள். மூலிகைப் பயிர்கள், ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாகம், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் மதிப்பூட்டப்பெற்ற வேளாண் பொருட்கள் என்ற தலைப்புகளில் வேளாண்மை தொழில்நுட்பக் கருத்தரங்குகள் நடைபெற்றன. இவ்விழாவில் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட உழவர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

**எதிர்காலத் திட்டங்கள்**

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கொள்கை அறிக்கைப்படி சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 55.98 இலட்சம் செலவில் ஐந்து திட்டங்கள் செயல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

1. ஏடிடீஆர்எச் 1 மற்றும் கோஆர்எச் 2 வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்தி.

2. தென் மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டிற்கு தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் ஆராய்ச்சி செய்தல்.

3. அறுவடைக்குப் பின் பொருட்கள் பதப்படுத்துதல்.

4. காய்ப்புழு தாக்காத வீரிய ஒட்டு பருத்தி இரகங்கள் கண்டுபிடித்தல்.

5. புதிய வீரிய ஒட்டு நெல் இரகங்கள் கண்டுபிடித்தல்.

இந்தத் திட்டங்களால் வேளாண் உற்பத்தி உயர்ந்து சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் நிச்சயம் உயரும்.

மேலும் நெல், நெல் தரிசில் பயறு சாகுபடி, கரும்பு உற்பத்தி, மிளகாய் உற்பத்தி, தரிசு மற்றும் மானாவாரி நிலங்கள் மேம்பாடு, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவைக்கேற்ற மதிப்பூட்டப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்ற 25 வகையான திட்டங்கள் 2002-2003 ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 22

வேளாண்மை ஆராய்ச்சித் தகவல் தொடர்பு அமைப்பு

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை ஆராய்ச்சி தகவல் தொடர்பு அமைப்பு. ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கணினியின் உதவிக்கொண்டு வேளாண் ஆராய்ச்சி முறைகளை மேம்படுத்தவும், தொகுப்பதற்கும், சேகரிக்கவும், சேமிப்பதற்கும், மேலும் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இத்தகவல்களைப் பயன்படுத்தவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளிடையேயும் மற்றும் துறைகளுக்கிடையேயும் • தேசிய அளவிலும் மற்றும் உலக அளவிலும் வேளாண்மை ஆராய்ச்சித் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண் அறிவியல் கண்டுபிடிப்புகளை அனைவரும் கண்டறியும்வண்ணம் மென்தட்டு, இணையம் மற்றும் மின் அஞ்சல் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த வசதியை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இந்த வேளாண்மை ஆராய்ச்சித் தகவல் தொடர்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 7

### விதைச் சான்றளிப்பு

வேளாண்மை உற்பத்திக்கு விதை அடிப்படையான இடுபொருளாகும். வேளாண்மையில் நிரந்தர உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கு விதை முக்கிய பங்கு வகிக்கின்றது. உழவர்களின் நலன் காக்க ஒரு வலுவான விதை உற்பத்தி மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுத் திட்டம் மிகவும் அவசியமான ஒன்று. போதிய அளவு தரமான விதைகள் உரிய விதைப்புக் காலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்கச் செய்யலாம். உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதற்காக இத்துறை விதைச் சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப் பரிசோதனை மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.



2002 ஏப்ரல் 22]

**விதைச் சான்றளிப்பு**

இம்மாநிலத்தில் விளைவிக்கப்படும் விதைகளின் தரத்தினைக் காக்கும் பொருட்டு, மைய அரசின் விதைகள் சட்டம் 1966 மற்றும் விதை விதிகள் 1968 ஆகியவற்றின் அடிப்படையில் விதைச் சான்றுப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. விதைச் சான்றளிப்பு என்பது வயல் நிலையிலும் விதையிலும் நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன், புறச்சுத்தம், இனச்சுத்தம் மற்றும் விதை நலம் ஆகியவற்றை பேணிக் காப்பதற்கு உண்டான ஒழுங்குமுறை நடவடிக்கையாகும். தமிழகத்தில் சான்று விதை உற்பத்தி 1980 ஆம் ஆண்டுகளில், 18,000 மெட்ரிக் டன்களாக இருந்தது, எட்டாவது ஐந்தாவது, திட்டத்தின் இறுதியில் 24,452 மெட்ரிக் டன்களாக அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரித்து 2000-2001-ம் ஆண்டில் 42,811 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. சான்று விதை உற்பத்தியானது கடந்த பத்து ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரித்துள்ளபோதிலும் மொத்த விதைத் தேவையில் 10 சதம் மட்டுமே பூர்த்தி செய்யப்படுகிறது.

தற்போதைய விதைகள் தேவையில் 16 விழுக்காடு விதைகள் மட்டுமே சான்றளிக்கப்படுகின்றன. அதில் 10 விழுக்காடு சான்று விதைகளும், 6 விழுக்காடு உண்மைநிலை விதைகளாகும். விதைத் தேவைக்கும் விதை உற்பத்திக்கும் இடையே அதிக இடைவெளி காணப்படுகிறது. சான்று விதை மொத்த உற்பத்தி அதிகரிப்பில், தனியார்களின் சான்று விதை உற்பத்தி பயனுள்ளதாக அமைந்தது என்பது கடந்த ஆண்டுகளின் உற்பத்தி செயலாக்கத்திலிருந்து தெரிய வந்துள்ளது.

**விதை ஆய்வு:**

தரமான விதை உற்பத்தியில் கவனம் செலுத்தும் அதேநேரத்தில் உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியதும், அதை உழவர்கள் பயன்படுத்தச் செய்ய வேண்டிய விதை விநியோகத்தினை செயல்படுத்துவதும் முக்கியமானதாகும். விதை ஆய்வுத்திட்டத்தின் அடிப்படை நோக்கமே உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகள் தரமானதாக இருப்பதை முறைப்படுத்துவதாகும். விதைகள் ஆய்வுப் பிரிவின் பணிகளானது, விதைகள் சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டு ஆணை 1983

[2002 ஏப்ரல் 22

ஆகியவற்றின் அடிப்படையில் தரமான விதைகள் விநியோகிக்கப்படுவதை ஒழுங்குபடுத்தலாகும்.

இத்திட்டத்தில் மாநிலத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யப்பட்டு விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து அறிவிக்கையிடப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு, அதன்மூலம் தரமுள்ள விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட வகை செய்யப்படுகிறது. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக்குறைவான விதை விநியோகம் காணப்படும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டு தவறுகள் செய்தவர்கள்மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் விதைத் தரக் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் விதை ஆய்வுப் பிரிவால் வழங்கப்படுகின்றன.

விதை விற்பனை நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதைகளுக்கு தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்வது, வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க அவசியமாகும். விதை விற்பனை நிலையங்கள் அதிகரித்து வந்தாலும், ஒரு விதை விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆய்வு 1990-91-ல் இருமடங்காக இருந்தது. 2000-2001 ஆம் ஆண்டில் ஐந்து மடங்காக உயர்ந்துள்ளது.

**விதைப் பரிசோதனை**

விதைகளின் தரத்தை அறிய விதைப் பரிசோதனை செய்யப்படுகிறது. அறிவிக்கையிடப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வு நிலையத்தில், மேற்கொள்ளப்படும் இப்பரிசோதனையில் முளைப்புத்திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற ரக கலவன்கள் கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டு சட்டப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. தமிழகத்தில் தற்சமயம் அறிவிக்கப்பட்ட எட்டு விதைப்பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை வருடத்திற்கு 42,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யும் திறன் கொண்டுள்ளன. விதைப் பரிசோதனை நிலையங்களில்



2002 ஏப்ரல் 22]

சான்று விதை மற்றும் ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமின்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்து, விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

2000-2001-ம் ஆண்டில் விதை மாதிரிகளின் பரிசோதனை எண்ணிக்கை 63,283 ஆக உயர்ந்துள்ளது.

விதைகளின் இனத்தூய்மையை அறிய பயிர் வளர்ப்புப் பரிசோதனை விதைச் சான்று இயக்ககத்தில் உள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம் பாளையம் பண்ணையிலும் செய்யப்படுகிறது. இப்பரிசோதனையானது தாயாதி பருத்தி, வீரிய பருத்தி, ஆதாரநிலை பருத்தி, வீரிய ஆமணக்கு ஆகிய பயிர் விதைகளின் சான்றளிப்புக்கு முன்னதாகச் செய்யப்படுகிறது. விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

**பயிற்சி:**

இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலமாக கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

*ஆற்றுப்படுத்தும் பயிற்சி:* இத்துறையில் புதிதாக பணியேற்கும் அலுவலர்களுக்கு விதைச் சான்று நடைமுறை, வயல் ஆய்வுகள், பயிர் ரக குணாதிசயங்கள் கண்டறிதல், விதைச்சுத்தி, விதை மாதிரி எடுத்தல், சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

*புத்தூட்டப் பயிற்சி:* இத்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு புதிய விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.

*விதை உற்பத்தியாளர் பயிற்சி:* விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் வெகுவாக வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளும் அடங்குவர்.

*விதை விற்பனையாளர் பயிற்சி:* விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக்காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும் விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதை ஒழுங்குமுறைச் சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு பயிற்சிகளின்கீழ் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 26,990 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கத் தொகையான ரூபாய் 767.02 இலட்சத்தில், ரூ.731.34 இலட்சம் செலவிடப்பட்டது. ரூ.108.29 இலட்சம் வருவாயாகப் பெறப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு செலவின நிதியாக ரூ.753.98 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அவ்வாண்டிற்கான எதிர்நோக்கு வருவாய் ரூ.110.00 இலட்சமாகும். 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.850.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.152.91 இலட்சம் வருவாயாகப் பெறப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் - 8

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

விவசாயிகளை சந்தை விலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களிலிருந்து பாதுகாக்கவும், மேம்பாடான விற்பனை வசதிகளை அவர்களுக்கு வழங்குவதுமே, தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987-ன் நோக்கமாகும். இச்சட்டத்தில் விற்பனைக் குழுக்கள் வேளாண்மை விளை பொருட்களைக் கண்டறிந்து அவற்றினை அறிவிக்கை செய்தல் மற்றும் வாணிப நடவடிக்கையினை ஒழுங்குபடுத்த முக்கியமான மையங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தோற்றுவித்தல் ஆகியன வரையறுக்கப்பட்டுள்ளன.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை**

தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறையானது 1977 ஆம் ஆண்டு முதல் தனித் துறையாக அமைக்கப்பட்டது. கூடுதல் பொறுப்புகளை இத்துறைக்கு வழங்கி இத்துறையின் பெயர் 2001 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையென பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



துறையின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

1. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் வாங்குவது மற்றும் விற்பது ஆகிய செயல்களை ஒழுங்குபடுத்துவது மற்றும் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கேற்ற விலையினையும், நுகர்வோர்கள் தங்களின் பணத்திற்குரிய சரியான மதிப்பிலான விளைபொருட்களைப் பெறவும் உறுதி செய்தல்.

2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவில் விளைபொருட்களை வணிக முறையில் தரம் பிரித்து நல்ல விலை கிடைத்திட உதவுதல்.

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரத்தினை அதிகரிக்கவும் மற்றும் அவற்றை முழுமையாக உபயோகப்படுத்திக்கொள்ளவும் விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணி மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், புள்ளியியல் கணக்கெடுப்பு, விற்பனைக் கூடங்களை மேம்படுத்துல் போன்றவற்றை மேற்கொள்ளுதல்.

4. நுகர்வோர் பயன்பெறும் வகையில் வேளாண் பொருட்கள், கால்நடைகள் மற்றும் வனப் பொருட்கள் மூலம் கிடைக்கும் பொருட்கள் போன்றவற்றுக்கு அக்மார்க் தரம் அளித்தல்.

5. வேளாண்மை ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்துவதன் மூலம் வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி பற்றிய திறன்களை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பத் தகவல்கள் மற்றும் சர்வதேச சந்தை விலை பற்றிய செய்திகளை அறிவித்தல்.

6. சேமிப்பில் ஏற்படும் நட்டங்களைக் குறைக்க நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய குளிர் கிட்டங்கிகளை அமைத்தல்.

**விற்பனைக் குழுக்கள்**

தமிழகத்தில் 16 விற்பனைக் குழுக்கள் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக, இதர மாவட்டங்களை உள்ளடக்கி இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்திற்கென விற்பனைக் குழு அமைத்திட அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. விளைபொருட்கள் விற்பனையில் விவசாயிகளுக்கு மேலும் சேவை புரிந்திடவும், நிர்வாக வசதிகளுக்காகவும் சென்னை மாவட்டம் நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும்

விற்பனைக் குழுக்களை புதியதாக ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

16 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 272 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் விற்பனைக் கூட வளாகத்தில் ஒன்றுகூடி விளைபொருள் வாங்குவது, விற்பது போன்ற பல செயல்களை முறைப்படுத்தி, மறைமுக ஏல முறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு, தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விற்பனைக் குழுக்கள், விளைபொருள் மதிப்பில் 1 சதவிகிதத்தினை விற்பனைக் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிக்கின்றன. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அளிக்கும் சேவைகள்**

சரியான எடை, கிட்டங்கி வசதி, வங்கி வசதிகள், உடனடி பணம் பட்டுவாடா, அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதிகள், வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், பணப் பட்டுவாடா செய்திட வசதி, தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

2001-2002 ஆம் ஆண்டு வரை விற்பனைக் குழு வாரியாக செய்து கொடுக்கப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



**விளை பொருட்கள் அறிவிக்கை**

முக்கிய விளைபொருட்களின் வாணிபத்தை ஒழுங்குபடுத்திட இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**வணிகமுறை தரம் பிரிப்பு**

விவசாயிகளின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் ஒரு புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பணி கிராமங்களிலுள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கும் மேற்கொள்ளப்படுகிறது. இம்மையங்கள் 'அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில்நுட்ப மையம்' என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பப் பணிகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

**விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதிகள்**

சிறு/மிகச்சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் அதிகபட்சம் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.50,000 வரை பொருளீட்டுக் கடனாகப் பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. மீதமுள்ள நாட்களுக்கு 12 விழுக்காடு முதல் 14.5 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

**வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதிகள்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விளைபொருட்களைக் கொண்டு வரும் விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட பின்னர், விவசாயிகளுக்கு உடனடியாக பணப் பட்டுவாடா செய்திடும் வகையில், வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்படுகின்றது. கொள்முதல் செய்யப்படும்

[2002 ஏப்ரல் 22

விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் ஒரு இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்படுகின்றது. அதிகபட்சமாக 3 மாத காலத்திற்கு பொருட்களை இருப்பு வைத்திட வசதி செய்து தரப்பட்டுள்ளது. பொருளீட்டுக் கடன் தொகையின்மீது 14.5 விழுக்காடு முதல் 16 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்படுகின்றது.

### தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்:

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு ஒரு மெட்ரிக் டன் அல்லது அதற்குமேலாக விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.50,000/- வரை மானியம் வழங்கப்படும். உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் நியமிக்கும் நபர் அல்லது இறந்தவரின் சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு இத்திட்டத்தின்படி, மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற, தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், நபரொன்றுக்கு வருடமொன்றுக்கு தவணைக் கட்டணமாக ரூ.10/-ஐ உரிய விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகின்றன.

### அக்மார்க் தரம் பிரிப்பு

நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டிய நோக்கத்திற்காக, தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம் பிரிப்பின்கீழ் மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களும் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் தரம் பிரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு அக்மார்க் முத்திரைச்சீட்டுகள் உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் நிதியாண்டில் திண்டுக்கல், தென்காசி, தருமபுரி மற்றும் சித்தோடு ஆகிய நான்கு அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த அரசு ரூ.12.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டு மேற்குறிப்பிட்ட மாநில அக்மார்க் ஆய்வகங்களில் பொருத்தப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 22]

### தொடர் குளிர்பதன வசதி ஏற்படுத்துதல்

அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி வசதி போதிய அளவு இல்லாத காரணத்தினால் தோட்டக்கலை விளை பொருட்களில் 30 முதல் 32 விழுக்காட்டிற்கு மேல் இழப்பு ஏற்படுகின்றது. தோட்டக்கலை விளைபொருட்களின் தரங்களை நன்கு பாதுகாத்திட குளிர்பதன வசதி ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றது. தோட்டக்கலை விளைபொருட்களில் ஏற்படும் சேதாரத்தினைக் குறைப்பதற்கும் அவற்றின் மதிப்பினைக் கூட்டவும் போதிய குளிர்பதன சேமிப்பு வசதிகள் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. போதிய அளவில் குளிர்பதன சேமிப்பு வசதிகளை ஏற்படுத்துவது, தமிழ்நாடு தோட்டக்கலை விளைபொருட்கள் ஏற்றுமதியில் ஒரு முக்கிய இடத்தினை வகிக்கும். தமிழ்நாட்டில் தேவைக்கேற்ப குளிர்பதன வசதிகள் இல்லாமையைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைப்பதுடன், குளிரூட்டும் வசதியினை உடைய வாகனங்களைக்கொண்டு வயலிலிருந்து குளிர்பதனக் கிட்டங்கிக்கும், குளிர்பதனக் கிட்டங்கியிலிருந்து இறுதி அங்காடிக்கும் விளைபொருட்களைக் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினைச் செயலாக்குவதினால் தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்படும் சேதத்தினைக் குறைப்பதுடன், விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைத்திடவும் வழிவகை ஏற்படுகின்றது. இத்தொடர் குளிர்பதன வசதிகள் தமிழ்நாட்டில் தனியார் மூலமாக அமைக்கப்படும்.

### உணவு பதப்படுத்துதல்

உணவு பதப்படுத்தும் தொழில்கள் அத்தியாவசியமான பண்ணைத் தொழில் தொடர்புகளுடன் கூடிய வேளாண் வளர்ச்சிக்கு உதவுவதுடன், வேளாண் விளைபொருட்களின் தரத்தினை உயர்த்துகிறது. மேலும் விவசாயிகளுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினை அளிப்பதுடன் அவர்களுக்குக் கிடைக்கும் வருவாயினை அதிகரித்திடவும் வழிவகை செய்கின்றது.

உணவு பதப்படுத்தும் தொழிலில் தனியாரின் பங்கினை ஊக்குவிக்கும் நோக்கில், மைய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகம், கீழ்க்கண்ட இரண்டு மாதிரிகளின் அடிப்படையில் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் அடங்கிய உணவுப் பூங்கா அமைக்க உதவுகிறது:

[2002 ஏப்ரல் 22

அ. தொழிற்பேட்டை மாதிரியான உணவுப் பூங்கா ஒன்று ரூபாய் 11.65 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டத்தில் தனியார் துறையின் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஆ. பஞ்சாப் மாநிலத்தில் அமைந்துள்ளது போன்று அனைத்து பொதுவான வசதிகள் கொண்ட உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து 50 கி.மீ. சுற்றளவில் அமைத்து செயல்படுத்துதல்; இதுபோன்ற உணவு பதப்படுத்தும் பூங்கா அமைப்பதற்கு குறைந்த முதலீடே தேவைப்படுவதினால், சிறிய அளவிலான வேளாண பதப்படுத்தும் மையங்கள் மற்றும் விவசாயிகள் குறைந்தபட்ச முதலீட்டில் பயன் பெற ஏதுவாகும். இம்மாதிரியான உணவு பதப்படுத்தும் பூங்காவினை, தமிழ்நாட்டில் தனியார் அல்லது விற்பனைக் குழு மூலமாக ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

**ஓசூரில் மலர் ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரில் உயர் ரக மலர் ஏற்றுமதி ரூபாய் 30 கோடி அளவிலும், உள்நாட்டு விற்பனை ரூபாய் 15 கோடி அளவிலும் நடைபெற்று வருவதனைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIDCO) தனியார் நிறுவனமான டேன்ப்ளோரா கூட்டமைப் பூங்கா (TANFLORA) Infrastructure Park Limited) கூட்டாக இணைந்து, ஏற்றுமதி மூலமான விற்பனையை அனைத்து தொழில்நுட்ப மற்றும் விற்பனை வசதிகளையும் உள்ளடக்கிய 50 புதிய மலர் மையங்களுடன் கூடிய ஒரு மலர் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 24.85 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. இதற்கென மைய அரசின் நிறுவனமான அபீடா (APEDA) ரூபாய் 3.50 கோடி நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) நியமிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்:**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள் வருமாறு:

**1. விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்



2002 ஏப்ரல் 22]

கூடங்களின் மூலமாக வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

**2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்**

திருச்சியை மையமாகக் கொண்டு வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைக் குழுப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின்மூலம் தாம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழுப் பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**3. கட்டுமானப் பணிகள்**

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், உலரக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் விற்பனைக் கடைகள், பணப் பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**4. விற்பனை வளர்ச்சி நிதி**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்கு அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு விற்பனை வளர்ச்சி நிதியாக விற்பனைக் குழு வளர்ச்சி செயல்பாடுகளுக்கான பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரம் போன்றவற்றிற்காகவும், மீதமுள்ள 50 விழுக்காடு தொகை வாரிய நிர்வாகப் பணிகளுக்காகவும் செலவிடப்படுகிறது.

53-106—19

[2002 ஏப்ரல் 22

## அட்டவணை - 1

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சோதனைச்சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மையம் விவரங்கள்

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | துணை விற்பனைக் கூடங்கள் | சோதனை சாவடிகள் | ஊரகக் கிட்டங்கிகள் | வணிக முறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 14 | 1 | 2 | 5 | 7 | - | - |
| 2. | வேலூர் | 12 | - | - | 4 | 6 | - | - |
| 3. | திருவண்ணாமலை | 16 | - | - | 7 | 10 | - | - |
| 4. | கடலூர் | 10 | 1 | - | 5 | 6 | - | - |
| 5. | விழுப்புரம் | 18 | - | - | 7 | 13 | 1 | - |
| 6. | சேலம் | 19 | - | - | 2 | 6 | - | - |
| 7. | தருமபுரி | 16 | - | 2 | 4 | 5 | - | - |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 5 | - | 12 | 2 | 3 | - |
| 9. | ஈரோடு | 25 | 6 | 1 | 7 | 10 | 2 | 1 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 19 | 2 | 4 | 10 | 4 | — | |
| 11. | தஞ்சாவூர் | 29 | - | 2 | 7 | 5 | - | - |
| 12. | புதுக்கோட்டை | 10 | - | 1 | 2 | 2 | — | |
| 13. | மதுரை | 21 | - | - | 8 | 7 | 1 | - |
| 14. | இராமநாதபுரம் | 20 | - | 1 | 10 | 6 | 1 | - |
| 15. | திருநெல்வேலி | 19 | - | - | 13 | 6 | 3 | - |
| 16. | கன்னியாகுமரி | 6 | - | 2 | 5 | 2 | - | - |
| | **மொத்தம்** | **272** | **15** | **15** | **108** | **96** | **11** | **1** |



2002 ஏப்ரல் 22]

## அட்டவணை-2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி கிட்டங்கி | ஊரகக் தனைக் கூடம் | பரிவர்த் களம் | உலர் யிகள் ஒய்வறை | விவசா வசதி | சுகாதார வசதி | குடிநீர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 7 | -- | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2. | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3. | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4. | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5. | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6. | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | - | 4 | 3 |
| 7. | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9. | ஈரோடு | 14 | 12 | 8 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11. | தஞ்சாவூர் | 12 | 12 | 7 | 20 | 9 | 8 | 11 | 11 |
| 12. | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13. | மதுரை | 14 | 1 | 8 | 10 | 16 | 4 | 10 | 12 |
| 14. | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15. | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16. | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| | **மொத்தம்** | **167** | **129** | **108** | **194** | **158** | **68** | **171** | **143** |

[2002 ஏப்ரல் 22

## அட்டவணை-3

## விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

### 1. காஞ்சிபுரம்

1. காஞ்சிபுரம்
2. திருத்தணி
3. திருவள்ளூர்
4. செங்குன்றம்
5. மதுராந்தகம்
6. உத்திரமேரூர்
7. பொன்னேரி
8. திருக்கழுக்குன்றம்
9. சுங்குவார்சத்திரம்
10. பள்ளிப்பட்டு
11. ஊத்துக்கோட்டை
12. அச்சிறுப்பாக்கம்
13. கும்மிடிப்பூண்டி
14. நசரத்பேட்டை

### 2. வேலூர்

1. வேலூர்
2. திருப்பத்தூர்
3. ஆற்காடு
4. அரக்கோணம்
5. வாணியம்பாடி
6. காவேரிப்பாக்கம்
7. குடியாத்தம்
8. கலவை
9. அம்மூர்
10. காட்பாடி
11. ஆம்பூர்
12. திமிரி

### 3. திருவண்ணாமலை

1. திருவண்ணாமலை
2. ஆரணி
3. வந்தவாசி
4. சேத்துப்பட்டு
5. செய்யார்
6. போளூர்
7. செங்கம்
8. புதுப்பாளையம்
9. வானாபுரம்
10. வேட்டவலம்
11. தெள்ளார்
12. மங்கல மாமண்டூர்
13. தேசூர்
14. பெரணமல்லூர்
15. தூசி
16. கீழ்பெண்ணாத்தூர்.

### 4. கடலூர்

1. விருத்தாசலம்
2. கடலூர்
3. பண்ருட்டி
4. திட்டக்குடி
5. காட்டுமன்னார்கோயில்
6. சிதம்பரம்
7. குறிஞ்சிப்பாடி
8. சேத்தியாதோப்பு
9. ஸ்ரீமுஷ்ணம்
10. புவனகிரி

### 5. விழுப்புரம்

1. திண்டிவனம்
2. திருக்கோவிலூர்
3. உளுந்தூர்பேட்டை
4. விழுப்புரம்
5. சின்னசேலம்
6. கள்ளக்குறிச்சி
7. செஞ்சி
8. தியாகதுர்கம்
9. சங்கராபுரம்
10. திருவெண்ணெய்நல்லூர்
11. மணலூர்பேட்டை
12. அவலூர்பேட்டை
13. மரக்காணம்
14. விக்ரவாண்டி
15. அனந்தபுரம்
16. வளத்தி
17. மூங்கில்துறைப்பட்டு
18. கிளியனூர்



2002 ஏப்ரல் 22]

### 6. சேலம்

1. சேலம்
2. ஆத்தூர்
3. நாமக்கல்
4. ராசிபுரம்
5. திருச்செங்கோடு
6. சங்ககிரி
7. கொங்கணாபுரம்
8. கொளத்தூர்
9. வேலூர்
10. மேச்சேரி
11. வாழப்பாடி
12. தம்மம்பட்டி
13. நாமகிரிப்பேட்டை
14. தலைவாசல்
15. ஓமலூர்
16. காடையம்பட்டி
17. கங்கவல்லி
18. கருமந்துறை
19. சோளக்காடு

### 7. தருமபுரி

1. தருமபுரி
2. கிருஷ்ணகிரி
3. ஓசூர்
4. தெலமங்கலம்
5. பாலக்கோடு
6. பெண்ணாகரம்
7. போச்சம்பள்ளி
8. காவேரிப்பட்டினம்
9. ஊத்தங்கரை
10. அரூர்
11. பாப்பிரெட்டிபட்டி
12. கொளத்தூர்
13. பர்கூர்
14. ராயக்கோட்டை
15. தென்கனிக் கோட்டை
16. பாப்பாரப்பட்டி

### 8. கோயம்புத்தூர்

1. திருப்பூர்
2. அவினாசி
3. சேவூர்
4. அன்னூர்
5. காரமடை
6. கோயம்புத்தூர்
7. சூலூர்
8. பல்லடம்
9. உடுமலைப்பேட்டை
10. ஆனைமலை
11. பொள்ளாச்சி
12. மலையடிப் பாளையம்
13. நெகமம்
14. கிணத்துககடவு
15. தொண்டாமுத்தூர்
16. மடத்துக்குளம்
17. பெதப்பம்பட்டி
18. பொங்கலூர்

### 9. ஈரோடு

1. ஈரோடு
2. அவல்பூந்துறை
3. கொடுமுடி
4. சிவகிரி
5. சித்தோடு
6. பவானி
7. பூதப்பாடி
8. அந்தியூர்
9. மைலம்பாடி

### 10. திருச்சிராப்பள்ளி

1. ஜெயங்கொண்டம்
2. கரூர்
3. அரியலூர்
4. மணப்பாறை
5. ஆண்டிமடம்
6. துறையூர்
7. பெரம்பலூர்
8. லால்குடி
9. திருச்சிராப்பள்ளி

### 11. தஞ்சாவூர்

1. அதிராமப்பட்டினம்
2. அம்மாப்பேட்டை
3. பூதலூர்
4. கும்பகோணம்
5. மதுக்கூர்
6. ஒரத்தநாடு
7. பட்டுக்கோட்டை
8. பாபநாசம்
9. பேராவூரணி

[2002 ஏப்ரல் 22

**9. ஈரோடு—தொடர்ச்சி**

10. கவுந்தப்பாடி
11. கோபி
12. நம்பியூர்
13. வெள்ளக்கோவில்
14. சத்தியமங்கலம்
15. புஞ்சைபுளியம்பட்டி
16. தாளவாடி
17. பெருந்துறை
18. குன்னத்தூர்
19. காங்கேயம்
20. வெள்ளாங்கோவில்
21. தாராபுரம்
22. மூலனூர்
23. அலங்கியம்
24. முத்தூர்
25. எழுமாத்தூர்

**10. திருச்சிராப்பள்ளி—தொடர்ச்சி**

10. தொட்டியம்
11. மணச்சநல்லூர்
12. குளித்தலை
13. துவரங்குறிச்சி
14. இரும்பூதிபட்டி
15. சின்னதாராபுரம்
16. புள்ளம்பாடி
17. தாத்தையங்கார் பேட்டை
18. மேலணைக்குழி
19. அரும்பாவூர்

**11. தஞ்சாவூர்—தொடர்ச்சி**

10. தஞ்சாவூர்
11. வல்லம்
12. திருப்பனந்தாள்
13. வலங்கைமான்
14. பாப்பாநாடு
15. கீவலூர்
16. கொரடாச்சேரி
17. குத்தாலம்
18. மன்னார்குடி
19. மயிலாடுதுறை
20. நாகப்பட்டினம்
21. பூந்தோட்டம்
22. செம்பனார்கோவில்
23. சீர்காழி
24. வேதாரண்யம்
25. வடுவூர்
26. குடவாசல்
27. திருப்பூண்டி
28. திருவாரூர்
29. திருத்துறைப்பூண்டி

**12. புதுக்கோட்டை**

1. ஆலங்குடி
2. அறந்தாங்கி
3. புதுக்கோட்டை
4. கந்தர்வகோட்டை
5. ஆவுடையார்கோவில்
6. கீரனூர்
7. கீரமங்கலம்
8. பொன்னமராவதி
9. இலுப்பூர்
10. காம்பக்குடி

**13. மதுரை**

1. தேனி
2. திண்டுக்கல்
3. திருமங்கலம்
4. ஒட்டன்சத்திரம்
5. உசிலம்பட்டி
6. பழனி
7. நத்தம்
9. கம்பம்
9. வத்தலகுண்டு
10. மேலூர்
11. போடிநாயக்கனூர்
12. சின்னமனூர்

**14. இராமநாதபுரம்**

1. விருதுநகர்
2. இராஜபாளையம்
3. சாத்தூர்
4. அருப்புக்கோட்டை
5. ஸ்ரீவில்லிபுத்தூர்
6. வத்திராயிருப்பு
7. வெம்பக்கோட்டை
8. சிவகங்கை
9. திருப்புவனம்
10. மானாமதுரை
11. சிங்கம்புணரி
12. காரைக்குடி



2002 ஏப்ரல் 22]

**13. மதுரை—தொடர்ச்சி**

13. மதுரை
14. கோபால்பட்டி
15. டி. கல்லுப்பட்டி
16. வாடிப்பட்டி
17. வடமதுரை
18. ஆண்டிப்பட்டி
19. வேடசந்தூர்
20. உத்தமபாளையம்
21. பெரியகுளம்

**14. இராமநாதபுரம்—தொடர்ச்சி**

13. இளையான்குடி
14. தேவகோட்டை
15. இராமநாதபுரம்
16. பரமக்குடி
17. கமுதி
18. திருவாடனை
19. இராசசிங்கமங்கலம்
20. முதுகுளத்தூர்

**15. திருநெல்வேலி**

1. கோவில்பட்டி
2. சங்கரன்கோவில்
3. தூத்துக்குடி
4. புதூர்
5. கடம்பூர்
6. கழுகுமலை
7. தென்காசி
8. அம்பாசமுத்திரம்
9. வள்ளியூர்
10. ஸ்ரீவைகுண்டம்
11. திருநெல்வேலி
12. விளாத்திகுளம்
13. கடையநல்லூர்
14. திசையன்விளை
15. பாவூர் சத்திரம்
16. திருவேங்கடம்
17. எட்டையபுரம்
18. சிவகிரி
19. ஆலங்குளம்

**16. கன்னியாகுமரி**

1. ஈத்தாமொழி
2. வடசேரி
3. களியக்காவிளை
4. திங்கள் சந்தை
5. குலசேகரம்
6. தொடுவட்டி

[2002 ஏப்ரல் 22

## அட்டவணை - 4

## தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|
| 1. சென்னை | சென்னை (வடக்கு), (தெற்கு) மற்றும் முதன்மை ஆய்வகம் |
| 2. வேலூர் | வேலூர் |
| 3. கடலூர் | பண்ருட்டி |
| 4. தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1, திருச்சிராப்பள்ளி-2 |
| 6. கரூர் | கரூர் |
| 7. மதுரை | மதுரை-1, மதுரை-2 |
| 8. தேனி | தேனி |
| 9. திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10. விருதுநகர் | விருதுநகர் |
| 11. திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12. தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13. கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14. சேலம் | சேலம் |
| 15. தருமபுரி | தருமபுரி |
| 16. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17. ஈரோடு | பெருந்துறை, ஈரோடு 1, 2, காங்கேயம் 1, 2 வெள்ளக்கோவில், சித்தோடு |



2002 ஏப்ரல் 22]

## அத்தியாயம் - 9

## மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

### அ. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோ.ஃபெட்)

தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் அதனுடைய சார்புச் சங்கங்கள் (மாவட்ட மற்றும் வட்டார அளவில்) 1972 ஆம் ஆண்டு பிரிவு 9 தமிழகக் கூட்டுறவுச்சங்கம் சட்டம் 57, 1961-ன்படி நிறுவப்பட்டது. விவசாய விளைபொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு வேளாண் பணிகளை இயந்திரமயமாக்கும் எண்ணத்தோடு, இந்த இணையமும் அதன் சார்புச் சங்கங்களும் கீழ்க்கண்டவாறு விவசாயிகளுக்குச் சேவை செய்து வருகின்றன :

1. விவசாயக் கருவிகளை வாடகைக்கு விடுதல்.

2. விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை வழங்குதல் மற்றும் பழுது பார்த்தல்.

3. விவசாய வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குதல்.

4. உரம், பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சான மருந்துகள் விநியோகம் செய்தல்.

5. அரசால் செயல்படுத்தப்படும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் மற்றும் கதவு சன்னல்கள் தயாரித்து வழங்குதல்.

**1. விவசாய இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்**

அ) இணையம் வாடகைக்கு வழங்கும் கருவிகள்

1. ஐந்து டிராக்டர்கள் மற்றும் பத்து புல்டோசர்கள்.

2. ஒருங்கிணைந்த நெல் அறுவடை இயந்திரம் இரண்டு மற்றும் டிராக்டருடன் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரம் இரண்டு.

3. விவசாயத்திற்கும் குடிநீருக்காக ஆழ்துளையிடுதலுக்கும் ஒரு ஆழ்துளைக் கருவி.

4. ஒரு நாற்று நடும் கருவி.

*ஆ) சார்புச் சங்கங்கள் வாடகைக்கு விடும் கருவிகள் விவரம்*

சார்புச் சங்கங்கள் 10 டிராக்டர் டோசர்களும் 190 டிரைலர்கள் டிராக்டர்களும் 81 பவர் டில்லர்களும் உள்துளைக் கருவி ஒன்றும், 4 பாறை உடைக்கும் இயந்திரங்களும் மற்றும் 50 ஆயில் என்ஜின்களும் கொண்டுள்ளது.

**2. விவசாயிகளின் இயந்திரங்கள் சீராக்கும் பணி மற்றும் விவசாயக் கருவிகள் சீராக்கும் பணி மேற்கொள்ளுதல்**

மொத்தம் 191 வட்டார மையங்களில், 118 வட்டார மையங்களில் விவசாயக் கருவிகள் தயாரிக்கத் தேவையான கருவிகள் உள்ளன. 12 மாவட்டச் சங்கங்களில் பழுது களையவும் மற்றும் விவசாயக் கருவிகள் தயாரிக்கவும் தேவையான இயந்திரங்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டு உள்ளன.

*டீசல் பங்க்குகள் உள்ள இடம்*

| | |
|---|---|
| 1. மாதனூர் | வேலூர் மாவட்டம் |
| 2. கடலூர் | கடலூர் மாவட்டம் |
| 3. மணல்மேல்குடி | புதுக்கோட்டை மாவட்டம் |

**3. முன்னேறிய விவசாயக் கருவிகள் மற்றும் கைக்கருவிகள் தயாரித்தல்**

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் விவசாயப் பல்கலைக்கழகம் உருவாக்கிய நவீன கருவிகளை சார்புச் சங்கங்கள் தயாரித்து வழங்குகின்றன.

**4. வேளாண் இடு பொருட்கள் விநியோகித்தல்**

உரம், பூச்சிக்கொல்லி மருந்து, பூஞ்சான மருந்து மற்றும் தொழு உரம், ஜிப்சம் போன்றவற்றை சார்புச் சங்கங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்கின்றன.

**5. ஆழ்துளையிடுதல்**

ஆழ்துளையிடும் திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் மாவட்டங்களில் 2001-2002 ஆம் ஆண்டு இணையம் செய்த பணிகள் :





| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. திருவள்ளூர் | 30.40 |
| 2. காஞ்சிபுரம் | 20.95 |
| 3. திருவண்ணாமலை | 83.57 |
| 4. விழுப்புரம் | 05.20 |
| 5. பெரம்பலூர் | 14.35 |
| 6. திருச்சி | 57.20 |
| 7. புதுக்கோட்டை | 57.40 |
| 8. திண்டுக்கல் | 2.85 |
| 9. மதுரை | 9.42 |
| 10. தேனி | 24.30 |
| 11. இராமநாதபுரம் | 65.70 |
| 12. திருநெல்வேலி | 34.25 |
| 13. கோயம்புத்தூர் | 21.32 |
| 14. ஈரோடு | 58.25 |
| 15. சேலம் | 19.56 |

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின் விற்பனை நிலையங்கள் பின்வரும் மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன :

| | |
|---|---|
| 1. விழுப்புரம் | 5. திருவண்ணாமலை |
| 2. திருச்சி | 6. மதுரை |
| 3. திருவள்ளூர் | 7. திருநெல்வேலி |
| 4. காஞ்சிபுரம் | 8. ஈரோடு |

விற்பனை மையங்கள் மூலம் பின்வரும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன:

[2002 ஏப்ரல் 22

1. இந்தியா மார்க்—2 கைப்பம்புகள்
2. கைத் தெளிப்பான்கள் மற்றும் விசைத் தெளிப்பான்கள்
3. ஜி.ஐ. பைப்புகள் பல்வேறு அளவுகளில்
4. பி.வி.சி. பைப்புகள் பல்வேறு அளவு மற்றும் கொள்ளளவு
5. மின் மோட்டார் மற்றும் அதன் உபகரணங்கள்
6. விவசாயக் கைக் கருவிகள் மற்றும் கடப்பாறை, மண்வெட்டி கொந்தாளம்
7. தார்ப்பாலின்
8. பேட்டரிகள்

**ஆ. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்)**

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) எண்ணெய்வித்துத் திட்டங்களை இம்மாநிலத்தில் செயற்படுத்த தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் 1981-இல் தோற்றுவிக்கப்பட்டது. எண்ணெய்வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கி, எண்ணெய் மற்றும் எண்ணெய் சார்ந்த பொருட்களின் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகளின் வருவாயை அதிகரித்து, அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையில் மாற்றம் கொண்டு வருவதே இவ்விணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

டான்காப் இணையம் விருத்தாசலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள எண்ணெய் பிழியும் ஆலைகளை 1984-85ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடமிருந்து (டான்பெட்) வாங்கியது. எனினும், இவ்விணையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், எதிர்காலத்தில் இதனை இலாபகரமாக இயக்க வாய்ப்புகள் ஏதுமில்லை என்பதாலும் தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் 1983 பிரிவு 137 இன்கீழ் டான்காப் நிறுவன செயல்பாடுகள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மைத் துறை ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 22]

**இ. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மைய அரசு வெளியிட்ட கொள்கை சான்றுரைப்படி வேளாண்மை செயல்முறை திறனை மேம்படுத்த முக்கிய விளையுத்தியாக செயல்பட வேண்டி மாநில வேளாண்மைத் தொழில்கள் கழகம் அமைக்கப்பட்டது.

இக்கழகம் தொடர்ந்து பல ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வந்தது. மேலும் இக்கழகத்தை தோற்றுவிக்க முக்கிய நோக்கமான செயல்பாடுகள் தற்போதைய சூழ்நிலைக்கு பொருந்தாதவையாகிவிட்டன. எல்லா வழிமுறைகளிலும் விரிவாக பரிசீலித்ததில், இக்கழக செயல்பாடுகளை மூடிவிடுவதென முடிவெடுக்கப்பட்டது.

**ஈ. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்)**

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், தொடக்கக் கூட்டுறவுச் சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 18-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் இந்நிறுவனத்தின் தனி அலுவலராகவும், கூட்டுறவுத் துறையினைச் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ஒருவர் இதன் மேலாண்மை இயக்குநராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

சங்கத் துணை விதிகளின்படி இக்கூட்டுறவு நிறுவனத்தின் தலையாய நோக்கம் தோட்டக்கலைப் பயிர்கள் அபிவிருத்தி மற்றும் தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளமைப்பு வசதிகளான இடுபொருட்கள், போக்குவரத்து வாகன வசதிகள், குளிர்பதனக் கிடங்கு வசதிகள் மற்றும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குத் தேவையான சந்தை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதாகும். இச்சங்கம் தோட்டக்கலைத் துறைக்கென செயல்படும் ஒரு கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கமானது

தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களுக்கும் தேவையான இடுபொருட்கள் மற்றும் சாதனங்களை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்தில் தற்பொழுது 3718 நபர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். அவர்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.72 இலட்சமாக உள்ளது. இந்நிறுவனம் 1997-98-ல் ரூ.39.58 இலட்சங்களுக்கும், 1998-99-ல் 85.86 இலட்சங்களுக்கும், 1999-2000-ல் ரூ. 105.29 இலட்சங்களுக்கும், 2000-2001-ல் ரூ.36.19 இலட்சங்களுக்கும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்பொழுது இந்நிறுவனம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக கடனுதவியுடன் தமிழ்நாட்டில் ரூ.4.70 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து மலர்கள், காய்கறி மற்றும் பழங்களை அவர்களது விளை நிலத்திலிருந்தே கொள்முதல் செய்து இடைத்தரகர்களைத் தவிர்த்து நியாயமான விலையில் நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வதாகும். இத்திட்டத்தின் கீழ் அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.188.00 இலட்சங்கள் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் காய்கறிகள் மற்றும் பழங்கள் கொள்முதல் செய்து, விநியோகிக்க, கொள்முதல் மையங்கள் மற்றும் சில்லறை அங்காடிகள் அமைக்கப்படுகின்றன.

தற்போது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பையிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரத்திலும், சேலம் மாவட்டத்தில் ஒரு கொள்முதல் மையமும் மொத்தம் மூன்று கொள்முதல் மையங்கள் அமையப்பெற்று செயல்பட்டு வருகின்றன. இவற்றில் படப்பை மற்றும் ஒட்டன்சத்திரம் கொள்முதல் மையங்களில் ரூ.13.14 இலட்சம் மதிப்பில் உள்நுழை குளிர்பதன அறை அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் சென்னை, திண்டுக்கல் மாவட்டங்களில் இதுகாறும் 17 சில்லறை விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டு தரமான காய்கறிகள், கனிகள் நுகர்வோருக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2000-2001ஆம் ஆண்டில் 363.40 மெ.டன் காய்கறிகளும், கனிகளும், 2001-2002 ஆம் ஆண்டில் 347.80 மெ.டன் காய்கறிகளும் கனிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224374.
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.